> அருட்சோதி—அதனைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார்
> சிவசோதி—மேல் நோக்கிய இலிங்கம்.

இதுதான் சிவலிங்கத்தின் உண்மை.

''ஜோதியுள் ஜோதியுள் ஜோதி'

என்பார் இராமலிங்க அடிகளார்.

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பு அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற பஞ்ச கோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகுந்தண்டே, திருக்கோயில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கின்றான். அதுபோல் முதுகெலும்பாகிய வீணா தண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறுதாரங்களையுங் கடந்து, பிரமரந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவசோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலி பீடம் பாசத்தையும், நந்திதேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே, திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

> உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
> வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே
>
> —திருமந்திரம்.

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. ''விறகிற் றீயினன்'' என்கின்றூர் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன், அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின், சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம் பெடுத்து வருகின்ற நாம், இறைவனை மெய் யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய் தீரும்.

கன்றெடுத்து விளவெறிந்து
காலெடுத்து மழைக்குடைந்த காலிகாக்கக்
குன்றெடுத்து மால்விடையின்
கொடியெடுத்து வடிவெடுத்துக்கூறுணுதை
மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்
சாத்தியன்பின் வழிபட் டோர்கள்
இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா
வண்ணமெண்ணம் எய்து வாரே

—சிவரகசியம்.

தெய்வம் ஒன்று :

திருக்கோயில்களில் சிவலிங்கம், தட்சிணு மூர்த்தி, நடராஜர், சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் என்ற பல மூர்த்தி இருப்பினும், அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

நெருப்பு— சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு—அம்பிகை
நெருப்பில் உள்ளசெம்மை—விநாயகர்
நெருப்பில் உள்ள ஒளி—முருகன்

மலர்—சிவபெருமான்
மலரின் வடிவம்—அம்பிகை
மலரின் நிறம்—கணபதி
மலரின் மணம்—மயிலவன்

நூல்— சிவபெருமான்
நூலின் அகலம்— பார்வதி
நூலின் நீளம்— கணேசர்
நூலின் கனம்— குமாரக் கடவுள்

சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி
திடமார் கணநாதன் செம்மை— படரொளி
கந்தவே ளாகும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு. அருள் சக்தி, போர்ச் சக்தி, கோபசக்தி, புருஷ சக்தி.

அருட்சக்தி— பார்வதி
போர்ச் சக்தி— காளி
கோபசக்தி— துர்க்கை
புருஷ சக்தி—விஷ்ணு

அரியலால் தேவியில்லை
ஐயன் ஐயாற னர்க்கே

என்பது அப்பர் திருவாக்கு.

முக்கண்ணன்—முக்கண்ணி
சங்கரன்— சங்கரி
திரிபுரசுந்தரன்—திரிபுரசுந்தரி

என்பதுபோல், அரன்—அரி என வந்தது. ஆகவே, திருமாலின் வழிபாடும் அம்பிகையின் வழிபாடும் ஒன்றெனக் காண்க.

யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனர்தாம் வருவர்
—சிவஞான சித்தியார்.

ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்
—அப்பர்.

திருக்கோயில்களில் காட்சி யளிக்கின்ற துவாரபாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்பது, உள்ளே வழிபடச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகின்றது. இதையே ''ஏகம் ஏவ அத்வீதீயம் பிரம்ம'' என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றே தான்; இரண்டாவது இல்லை என்பது இதன் பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வ பேதம், மூர்த்திபேதம், குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபட வேண்டும்.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல், தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம்; மற்றொன்று வெப்பம்; வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால் தான், மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம்

மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷ்ணத்தால் தான் வாழ்கின்றது. ஒரு சமயம் உடம்பில் சூடு குறையுமானால் சுற்றத்தார் சூழ்ந்து கொள்வார்கள். மருத்துவர் வந்து பார்த்து "Too late' என்று கூறி, அவர் விரும்பியதெல்லாம் கொடுங்கள், என்று சொல்லுவார். ஆகவே, உலகிற்கு வெப்பமும் தட்பமும் மிகமிக இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு. தட்பத்தின் நிறம் பச்சை, எனவே, சிவமூர்த்தி பவளம் போல் மேனியன், திருமால் பச்சை மா மலைபோல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திருமால் ஆழியிடைத் துயிலுகின்றார். சிவாலயத்தில் வெந்த நீற்றையும், விஷ்ணு கோயிலில் தீர்த்தப் பிரசாதத்தையும் வழங்குகின்றார்கள்.

பாதி சிவம், பாதி விஷ்ணு. இந்த தத்துவத்தைச் சிவ மூர்த்தங்கள் இருபத்து ஐந்தனுள், கேசவார்த்த மூர்த்தம் என்பது தெளிவிக்கின்றது, சங்கர நாராயணர் கோவிலும் இதற்குச் சான்று.

தாழ் சடையும் நீள் முடியும் ஒள்மழுவும்
சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்—
வீழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
கிரண்டுருவும் ஒன்றாய் இசைந்து

என்று ஆழ்வார் கூறுகிறார்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருக்குற்றாலம், திருவருணை முதலிய திருத்தலங்களில் உள்ள சிவாலயங்களில் திருமாலும் காட்சி தருகின்றார்.

நம்மிடைப் பலருக்கும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழ முடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம்? என்ற வினாக்கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடை காண முயல்வது முறை.

விலங்குகளும் உண்ணுகின்றன; உலாவுகின்றன; வம்சத்தை வளர்க்கின்றன. மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்றோம்; உறங்குகின்றோம்; மக்களைப் பெறுகின்றோம். இரை விலங்குகட்கும் மனிதர்கட்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து காட்சியளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்றாலேயேதான்.

ஒரு கானகத்தில் விலங்கு மாநில மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் "விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு, அவசியமின்றி அதிகம் செலவழிப்பது அறிவின்மையாகும். அது வருந்தத்தக்கது; கண்டிக்கத்தக்கது" என்று கூறிற்று. இது போல் மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா? என்று சிலர் வினவுவார்கள். மானம் உள்ளவன் ஆடை உடுப்பான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.

மனிதன் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் கழுவாய் உண்டு. நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் கழுவாய் இல்லை.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண் டாம்;
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு
— திருக்குறள்.

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவா யும்உள
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே" (புறநானூறு 34)

எனவே கழுவாய் இல்லாத பாவம் நன்றி கோறல் ஆகும். இதற்கு நேர் மறுதலையாகச் சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும். இந்த உடம்பையும் உறுப்புக்களையும் உள்ளுறை கருவி கரணங்களையும் தந்தவன் இறைவன். கண்ணைக் கொடுத்த இறைவன் கண் தூசு பட்டு மங்காமல் இருக்கும் பொருட்டுக் கண்ணிற்குக் கதவுபோல் இமையும் கொடுத்தான். அந்த இமையின் நுனியில் உரோமங்களையும் அமைத்தான். உணவு உண்கின்ற வாயில் உணவைத் தூள் படுத்தப் (flour Mill) பற்களையும் கொடுத்தான். வாய்க்குள் நுழைகின்ற பொருள் நல்லனவா? அல்லனவா? என்று சோதித்து உள்ளே அனுப்ப வாய்க்கு நேராக இரண்டு காவற்காரர்களைப் போல், இரு நாசி

களை அமைத்தான். உண்ணுகின்ற உணவைப் பல் மெல்லவும், நாவில் நீர் ஊறவும் அமைத்தான். நம்முடைய உடம்பில் எல்லா அவயவங்களிலும் நரம்புகள் உள்ளன. நாவில் மட்டும் நரம்புகள் இல்லை. ஏனோ?

நரம்புள்ள பகுதிகள் சுளுக்கிக்கொள்ளும். நாவில் நரம்பு வைத்திருந்தால் ஒரு நாளுக்கு நூறு முறையாவது சுளுக்கிக்கொள்ளும். விளக்கெண்ணெய் தடவிஉருவ வேண்டிவரும். இறைவன் கருணயினுல் இடையருது பேசுகின்ற நாவை நரம்பின்றிப் படைத்துக் கொடுத்தான். அவன் கொடுத்த நாவினுல் அவனுடைய நாமங்களைச் சொல்லுதல் நன்றி பாராட்டுதலாகும். அவன் கொடுத்த தலையினுல் அப் பரம பிதாவை வணங்குதல் நன்றிக் கடனுகும். வடமொழியில் காலையும் மாலையும் கடவுளை வணங்குவதைச் சந்தியா வந்தனம் என்பார்கள். சம்—செவ்வையாக, தியா—தியானித்து, வந்தனம்—வணங்குவது, சந்தியா வந்தனமாகும். இந்தச் சொல்லைப் பார்க்கினும் ஒரு கோடி மடங்கு பொருளாழம் உள்ளதாகக் கடவுளை வணங்குதற்குக் காலைக் கடன், மாலைக் கடன் என்று தமிழில் ஆன்ருேர் கூறினர். கொடுத்த கடனைத் திருப்பிக் கொடாதது எத்துணைப் பெரிய பாபமாகுமோ, அத்துணைப் பெரிய பாபமாகும் — இறைவனை வணங்காதிருத்தல். ''என் கடன்பணி செய்து கிடப்பதே'' என அப்பர் பெருமான் குறிப்பிடுகின்ருர்.

கருணையே வடிவமாகிய இறைவன், உயிர்களின் மீதுள்ள இரக்கத்தினுல் இந்த உடம்பை வழங்கினுன் என்பதை முன்னர் அறிந்தோம். அவன் தந்த உடம்பினுல் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும். காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பிலுள்ள வெப்பம் தணியும் பொருட்டுக் காவிரியில் நீராடுகின்ருன். அதுபோல் அருட் கடலாயிருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

> ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்
> தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே
> தீயாடும்கூத்தன்

என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச் செய்கின்ருர்.

> வாழ்த்த வாயும் நினைக்கமடநெஞ்சும்
> தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
> சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
> வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.

என அப்பர் பெருமான் இறைவன் நமக்குத் தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்துவிட்டு, அக் கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய்யுங்கள் என்றும் அருளிச் செய்கின்ருர்.

> தலையேநீ வணங்காய் !
> தலைமாலை தலைக் கணிந்து
> தலையாலே பலி தேரும் தலைவனைத்
> தலையே நீ வணங்காய் !

உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதாகும்.

> கற்றதனுலாய பயன் என்கொல்? வாலறிவன்
> நற்ருள் தொழாஅர் எனின்
>
> — திருவள்ளுவர்

இறைவனுடைய திருவடியில் அன்பில்லாதவர் கல்வியின் பெருக்காலும் புலத்தின் முறுக்காலும் நன்மையடைய மாட்டார்.

> சென்றது காலம் சிதைந்த(து) இளமைநலம்
> நின்றதுசா வென்று நினைந்துருகி— மன்றில்
> நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணுமாந்தர்
> படிக்கின்ற நூல்எல்லாம் பாழ்!
>
> — அதிவீரராம பாண்டியர்.

> கற்றதனுற் ருெல்வினைக் கட்டறுமோ
> நல்லகுலம்
> பெற்றதனுற் போமோ பிறவிநோய்—
> உற்றகடல்
> நஞ்சுகந்து கொள்ளருணை நாதனடித்
> தாமரையை
> நெஞ்சுகந்து கொள்ளா நெறி (2)
>
> — அருணகிரியந்தாதி.

ஆதலால், மனிதப் பிறப்புக்கு இறைவழிபாடு இன்றியமையாதது என வுணர்க! ஒரு மாவட்டத்திற்கும் மற்ருெரு மாவட்டத்திற்கும் அரசாங்கத்தார் ஓர் எல்லைக் கல் அமைத்திருப்பதுபோல், விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறைவழிபாடாகும்.

இறைவழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும் இறைவழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர்க.

> எறும்புகடை யானைதலை ஈசனைப் பூசித்துப்
> பெறுங்கதிகண் டுந்தேருர் பேய்கள்— அறிந்த
> உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
> தலகையாய் வைக்கப் படும்.
>
> — முதுமொழிவேல் வைப்பு.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் எறும்பு வழிபட்ட திருவெறும்பூரும், யானை வழிபட்ட திருவானைக்காவும் காட்சிதருகின்றன. எறும்பு முதல் யானை ஈருக எல்லா வுயிர்களும் இறைவனை வழிபட வேண்டும் என்பது போதருகின்றது.

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து அன்புடனும், ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கொடி மரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிராகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதலும், பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி, பிரசாதங்களைப் பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தைக் கீழே சிந்துதலும், ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும், சிவலிங்கத்திற்கும் நந்திதேவருக்கும் இடையே போவதும் மிக்க குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்களை உண்டு. கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறு பிறப்பில் மலைப் பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்தபின் கொடி மரத்தின் அருகிலிருந்து வடதிசை நோக்கி யமர்ந்து மூலமந்திரம் ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாகத் தோத்திரப் பாடல்களை அதிகம் சப்தம்போடாமல் இனிய குரலில் ஓதித் துதிக்க வேண்டும். கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.

விளக்கிட்டார் பேறுசொல்லில்
மெய்ந்நெறி ஞானமாகும்.

— அப்பர்.

கோயிலில் அணைகின்ற விளக்கை அபுத்தி பூர்வமாகத் தூண்டிய எலி, பலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து புகழ் பெற்றது.

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனுய் ஆக்கினையே

— திருவருட்பா.

இனி, நாள்தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்றுகூடிக் காலை அல்லது மாலையில் வழிபடவேண்டும். வீட்டுத் தலைவன் ஒரு பாடலைச் சொல்ல, ஏனையோர் அதனை வழிமொழிந்து சொல்ல இறைவனைக் காதலுடன் வழிபாடு செய்ய வேண்டும். இதனுல் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன் அந்த வீட்டில் தெய்வ கடாட்சமும் திருமகள் விலாசமும் உண்டாகும்.

ஒரு தனி இழையை எளிதில் அறுத்துவிடலாம். பல இழைகள் ஒன்று பட்டுத்திரித்த கயிறு (வடம்), தேரை இழுத்துவிடும். அது போல, பல அன்பர்கள் வாரத்திற்குகொரு நாள் கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்துவிடலாம். முஸ்லீம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்து வேளை தவறுமல் தொழுவதும், கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறு தோறும் ஆண் பெண் அடங்கலும் தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும்போல், இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிக மிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிரார்த்தனைக் கூட்டம் நாள்தோறும் நடத்தி முடிவில் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே ஆத்ம சாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபரநலன்களை எளிதில் பெறுதல் வேண்டும்.

இவ்வாறு திருக்கோயில் வழிபாடு செய்வதற்கு ஏற்ற தெய்வத் தமிழ்ப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றேம். இவைகளை அன்பர்கள் அவசியம் மனப்பாடம் செய்துகொண்டு ஆலய வழிபாடு செய்து பிறவிப் பிணியையொழித்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்களாக.

— — — —

திருவாசகம்

சௌந்தரா கைலாசம்

தெய்வ சிந்தனை தேவையா என்று
ஏளனம் பேசுவோர் இருக்கின் றார்கள்!
உண்டுஒரு கடவுள் உண்டுஎனில் எங்கே?
கொண்டுவா! என்று கூறும் இரணியர்
இன்றும் கூட இருக்கின் றார்களே!
தூணைப் பிளந்து தூய செழுஞ்சுடர்
பாரென முழங்கும் பக்தர்தான் இல்லை!
பக்தியில் முதிர்ந்து பழுத்தால் எந்தச்
சக்தியும் கிடைக்கும்; சாந்தியும் நிலைக்கும்!
பக்திஇல் லாநிலை பரவிடில், தெய்வம்
சக்தி இழந்து சாய்ந்து விடாது;
நாம்தான் தளர்ந்து நலமிழந் திடுவோம்
ஓம்தான் உயிரென உணர்ந்துரு காவிடில்!
நாதனை வாழ்த்துதல் நமக்கா கத்தான்!
சோதனை நீங்கிச் சுகம்கா ணத்தான்!
ஆடியும் ஓடியும் அலைந்தும் இதுவரை
தேடிய(து) என்ன? தெரிந்த தாசுகம்?
வெள்ளியும் பொன்னும் மின்னும் வயிரமும்
உள்ளத்(து) அமைதிக்(கு) உதவுகின் றனவா?
இதற்கு மேலும் எதற்குஎன நினைக்கும்
நிலைக்கு வந்துநாம் நிற்கின் றோமா?
ஆசைக் கனவுகள் அறுபட் டனவா?
ஆனந் தம் வந்(து) அகப்பட் டதுவா?
கனக்கும் இதயக் கவலை ஒழிந்ததா?
மிதக்கும் ஒருதனி மேன்மை வந்ததா?
பசித்தால் புசித்துப் பாயை விரித்துக்
களைத்தால் படுத்துக் கண்அயர்ந் திடவா
மண்ணிலே வந்து மனிதன் பிறந்தது?
என்ன வாழ்விது என்னவாழ் விதுவென
அலுத்துக் கொள்ளவா ஆண்டவன் படைத்தான்?
நினைத்துப் பார்த்திட நேரமா இல்லை?
இறப்பதும் பிறப்பதும் இல்லைநம் கையில்!
நடுவிலே உள்ளது நம்முடைத் தில்லையோ?
முறைப்படி வாழும் முயற்சிவேண் டாவோ?
பொல்லாத ஐந்து புலன்களின் பேச்சைக்
கேட்டு வாழ்க்கை கெட்டிட லாமோ?
எந்த மனிதனும் இணையி லாஒரு
சுகம்பெறத் தானே சுழன்று வருகிறான்?

ஓய்யாது என்றும் ஓடித் திரிவது
தீராப் பெருஞ்சுகம் தேடிப் பெறத்தான்!
தொலைத்த இடத்திலே சுகம்தே டாமல்
நினைத்த இடத்திலே நின்று தேடினால்
பொழுது தானே போகும் வீணாய்!
எந்த இடத்தில் எப்படித் தொலைத்தோம்?
அந்த இடத்தை அறிந்தவர் சிலர்தாம்!
சிதறி அழிவதைச் சிறிதும் கருதா(து)
உதறி எறிந்துவிட்(டு) உயர்ந்தவர் சிலர்தாம்!
பகையது நீங்கிப் பக்தியாம் சந்தனப்
புகையது வளர்த்த புண்ணியர் சிலர் தாம்!
எந்திர ஓசையில் இருந்து விடாமல்
மந்திர ஓசையில் மகிழ்ந்தவர் சிலர்தாம்!
ஏதோ ஐந்து எழுத்தென்(று) இராமல்
ஆதா ரம்என அறிந்தவர் சிலர்தாம்!
காலப் போக்கில் கரையா முழுமுதற்
கோலம் கண்டு குழைந்தவர் சிலர்தாம்!
பிறரும் பெறுகஅப் பேரின் பம்என
அறிந்ததைச் சொல்லி அமைந்தவர் சிலர்தாம்!
மற்றொரு மனிதன் வந்திடு வானோ—நாம்
பெற்றுள நிலைக்கெனப் பெரிதும் கலங்கும்
இந்த உலகினில் எல்லா மனிதரும்
சுகம்பெறும் வழியினைச் சொல்லித் தருகிற
பித்தர்க ளும்சிலர் பிறந்துள் ளார்கள்!
அவர்களுள் ஒருவரே அருள்மணி வாசகர்!
இதயங் களுக்கு இடையிலே பாலமாய்,
உணர்வுகள் போய்வர உதவுவ தற்கு
மொழியென ஒன்று முளைத்தத னாலே
தெளிவுறப் பெற்றோம் திருவா சகத்தை!
முந்தை வினையெலாம் முடிந்திட முன்னாள்
மந்திரி சொன்ன மணிமொழிக் கோவை!
முதிர்ந்த அனுபவ முத்திரை நெடுகப்
பதிந்திருக் கின்ற பரம்பொருட் சாலை!
நித்தியம் என்பதன் நினைவை வளர்த்திடும்
சத்திய வாசகத் தரும தெரிசனம்!
"தாயினும் மிக்க தயவினை, மனிதனே,
நீ இனும் என்கொலோ நினையா திருப்பது?"
என்ற கேள்வியை எழுப்பி, மனிதனை
எழுப்பிட எழுந்த இன்னிசைக் கோபுரம்!
ஊழித் தனிமையில் உதவும்என்(று) ஈசன்
தேடிக் கொணர்ந்த தீந்தமிழ் அமுதம்!
வீழ்த்த இருக்கும் விதியையும் மாற்றி
வாழ்வு கொடுக்கும் வரப்பிர சாதம்!
அமுதெனும் தமிழின் அழகு முழுவதும்
திரண்டிருக் கின்ற திருவா சகநூல்,
எடுத்துப் படிக்கும் இதயத்தை எல்லாம்
தடுத்தாட் கொள்ளும் தகுதி உடையது!
மணிகளை மொழிகளாய் மாற்றிமா ணிக்க

வாசகர் நமக்கு வழங்குவ தெல்லாம்
பிணிகளைப் போக்கிப் பிறவியைக் கடந்து
பேரின் பத்தைப் பெறுவதற் காகவே!
கற்பனை யாகக் கட்டிய கோட்டையின்
அற்புதம் சொல்லி அழைத்திட வில்லை!
விலைபோ காத வெற்றுக் கதையைத்
தலையிலே கட்டும் தந்திர மில்லை!
படிப்படி யாகப் பார்த்ததை மிகவும்
வெளிப்படை யாக விளக்குகின் றாரவர்!
இடரினைப் பரிசாய் எய்திய பொழுதும்
சுடரினை வியந்து சொக்கி இருந்தவர்!
''உரிமையால் சொல்கிறேன் உய்யவை! இல்லையேல்
மரியா தைஇனி வானிலே பறக்கும்''
என்றவர்; நீ,நான் எனும்பே தத்தைக்
கொன்றவர், தெய்வக் கோலம் கண்டவர்!
ஆன்ம நாயகன் ஆரத் தழுவிய
மேன்மையால் அழியா மேனி பெற்றவர்!
அந்தமும் முதலும் ஆனவன் நெருங்கிய
சொந்தமென் றானபின் சுகத்தினுக் கென்ன?
அத்தனைச் சுகத்தையும் அடிகளால் எப்படி
மொத்தமாய்த் தாங்க முடிந்ததோ? ஆகா!
எட்டிரண்(டு) அறியா என்னையும் ஏற்றினை
பட்டிமண் டபமெனப் பாடுகின் றாரவர்!
''ஆண்ட கருணை ஐயனை எண்ணி
உருக நெஞ்சம் உடம்பெலாம் இல்லையே;
கால்முதல் தலைவரை கண்கள் இல்லையே''
எனமிக நினைந்து ஏங்குகின் றாரவர்!
முந்தி எவரோ மொழிந்ததைக் கொணர்ந்து
பந்தியில் எடுத்துப் பரிமாற வில்லை!
எல்லையில் லாத இறைவனின் கருணை
அமுதினைப் பருகி ஆனந் தித்தவர்
தொட்டுத் தொட்டுச் சுவைத்த அருமையைப்
பிட்டுப் பிட்டுப் பிறர்க்(கு)அளிக் கின்றார்!
அருந்திப் பார்த்துவிட்(டு) அற்புதம் எனநமை
விருந்துக்(கு) அழைக்கிறார் 'வெளியூர்'க் காரர்!
ஞான சித்தரின் நல்வழி சென்றால்
தெளிந்து நிற்கலாம் தெய்வம் ஆகலாம்!
அவரைச் சிவமென ஆக்கிய தெய்வம்
என்னை உங்களை ஏன்ஆக் காது?
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகினால்
நடந்தே தீரும் ஞான நாடகம்!
துடிப்பதா இன்னும்நாம் துயரினில் விழுந்து?
படிக்கலாம் மணிமொழிப் பனுவலை உணர்ந்து!
படிக்கப் படிக்கப் பக்திஉண் டாகும்!
பிடிக்கப் பிடிக்கப் பேற்றினை அருளும்!
பெற்றியன் முருகனைப் பெற்றவன்! நம்மைச்
சுற்றிய வினைகளைச் சுட்டெ ரிப்பவன்!
சாம்பலைப் பூசிய சங்கரன் நாமம்
சோம்பலைத் தவிர்க்கும்! சுகத்தைக் குவிக்கும்!

நிம்மதி என்பது நிர்மலன் கோயில்
சந்நிதி யில்தான் சாத்தியம் ஆகும்!
இறைவனைத் தொழுதால் என்ன கிடைக்கும்?
பணம்கிடைத் திடுமா? பதவி நிலைக்குமா?
அப்படிக் கேட்பதில் அர்த்தமே இல்லை.
சிவனைத் தொழுதால் சிந்தை தெளியும்!
அவனை உணர்ந்தால் அமைதி நிலவும்!
பக்தர்க ளுக்கும் பகலிர(வு) உண்டு!
எப்பொழு தும்போல் எல்லாம் நடக்கும்! எனில்
பார்வையில் புதிய பக்குவம் பிறக்கும்!
தொழுதுபார்த் தால்தான் சொல்வது புரியும்
அழுதுபார்த் தால்தான் ஆனந்தம் தெரியும்!
அழுதால் இறைவனை அடையலாம் என்று
சுருக்க வழியினைச் சொல்கிறார் வாசகர்!
அழுதுபார்த் திருக்கிறேன்; ஆண்ட வனைநான்
தொழுதுபார்த் திருக்கிறேன்; சுகம்கண் டிருக்கிறேன்.
பதவியில் பணத்தில் பார்த்தறி யாததை—அவன்
உதவியில் கண்டுநான் உளம்நெகிழ்ந் திருக்கிறேன்.
திருவா சகத்திலே திளைப்பேன்; பேச
ஒருவா சகம்இலாது உட்கார்ந் திருப்பேன்!
விரியும் மோன விளிம்பிலே அலைந்து
திரியும் மனத்தைச் சிலையாய் அமர்த்துவேன்!
திருமுறை உதவும் தெளிவிலே கலந்தால்
மறுமுறை எப்படி மயக்கம்உண் டாகும்?
இங்கும் அங்கும் எங்கும் எதிலும்
தங்கி இருப்பதுஅத் தனிப்பொருள் அலவா?
அனலொடும் புனலொடும் ஐயன் வெளியினில்
தினமிடும் கூத்தொரு திருக்கூத் தல்லவா?
ஓங்கா ரத்தின் உள்ளிருந்து இன்னிசை
பாடு கின்றவன் பாட்டுவிக் கின்றான்;
ஆங்கா ரத்தின் அயல்இருந்(து) என்றும்
ஆடு கின்றவன் ஆட்டுவிக் கின்றான்!
மாங்காட் டரசி மத்தியில் நிலைத்து
வாழு கின்றவன் வாழ்விக் கின்றான்!
பொய்களைக் களைய; புதுவாழ் வருளக்
கைகளைக் கட்டிக் காத்திருக் கின்றான்!
''வினையுளே கிடக்கிறாய்; விழிவிழி அப்பனே
எனையுளே காண்''என எழுப்பிச் சிரிக்கிறான்!
''தினைத்துணை இன்பம் தேடி அலைகிறாய்
அனைத்தெலும்(பு) உள்நெக ஆனந் தம்தர
இங்கிதோ நான்''என இன்குரல் கொடுக்கிறான்!
பிடிக்கப் போனால் பெருமான் ஓடுவான்!
தொழுதிடும் போது துன்பம் கொடுத்து
நழுவிடப் பார்ப்பான் ஞான நாயகன்!
அழுதிட அழுதிட அடிக்கடி கிள்ளுவான்!
காலைப் பிடித்தால் கனிந்து கொஞ்சுவான்!
எங்கே ஓடி எப்படி ஒளிவான்!
காதலால் அவனைக் கட்டிப் போடலாம்!

திருவா சகவழி தேடிப் போனல்
சிக்கெனப் பிடித்துச் சிறைப்ப டுத்தலாம்!
ஆதலால் அன்பரே அருள்மணி வாசகர்
காதலால் நமக்குக் காட்டிய பாதையில்
செல்லுவோம், மகிழ்வில் திளைப்போம், வாழ்வை
வெல்லுவோம் இனிமேல் வெற்றிமேல் வெற்றி
அள்ளுவோம் நாளும் அமைதியை மனத்தில்
கொள்ளுவோம் கூத்தன் திருவடி துணையே.

ஜீவகாருண்யம்

ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கம். அந்த சன்மார்க்கமே கடவுள் வழிபாடு. ஜீவகாருண்யம் விளங்கும் போது அறிவும் அன்பும் உடனுக நின்று விளங்கும். இதனுல் உபகார சக்தி விளங்கும். அதனுல் இறையருள் தோன்றும். அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாக்காது நடத்தலே ஜீவகாருண்யம். அது ஜீவன்களுக்கு மற்ற ஜீவன்களிடத்தில் உண்டாகும் ஆன்மிக ஒருமைப்பாடு. ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் கிட்டும் இன்பமே கடவுள் இன்பம்.

— *வள்ளலார் இராமலிங்க அடிகள்*

இறைவன் திருக்கோயிலில் மட்டும் இருக்கின்றான் என்று எண்ணக் கூடாது. நம் உள்ளத்திலே பிரியாது இருக்கின்றான். அதனால் ‘பிரான்’ என்று இறைவனை அழைக்கின்றோம். எண்ணத்திலும் சொல்லிலும் இறைவன் இருக்கின்றான். ஆதலால் நம் எண்ணங்களும் சொல்லும் செயலும் தூயனவாக இருக்க வேண்டும். அருளறியப் பாவங்கள் செய்தல் கூடாது.

— *திருமுருக கிருபானந்தவாரியார*

இந்து சமயத்தின் உலகளாவிய இனிய இயல்பு

கு.ரா. முருகவேள், M.A., M.O.L

முன்னுரை :

இந்தியப் பெருநாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடு களும் ஆங்காங்கே அமைந்து விளங்கக்காண் கிறோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடுகளுக்கும் இடையே ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று பொலிந்து திகழ்ந்து காணப்படு கிறது. இந்திய மக்களின் புறக்கோலங்களும் பிற வும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப்போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும் பற்பல துறைகளில், மிகவும் வியக்கத் தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர் வும் உடையவராக இருக்கின்றனர்.

கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழி பாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை இறப்பு பிறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என் பன பற்றிய கொள்கைகளிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வரு கின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந் திருக்கக் காண்கிறோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைணவம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம் விசிட் டாத்துவிதம் துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய எத்துணையோ பற்பல தத்துவக்கொள்கைகளும், நமது இந்தியப் பெருநாட்டில் விளங்கி வழங்கி வரு கின்றன. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக்கொண்டு விளங்கி வரும் சிறந்த பொதுமைப் பெருநெறியே, **இந்து சமயம்** ஆகும் என நாம் சுருக்கமாகக் கூறலாம்.

பழமை நலம் :

உலகில் நிலவி வரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ் வது, நமது இந்து மதம். பிற சில சமயங்களைப் போல நமது இந்து சமயமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக் கப்பட்டதன்று. யூதமதம் (கி. மு. 1500-1200), ஷிண்டோமதம் (கி. மு. 660), சொராஸ்ட்ர மதம் (கி.மு. 660), டாவோயிஸம் (கி. மு. 604), சமணம் (கி.மு. 599), பௌத்தம் (கி. மு. 560), கன்ஃபூசியம் (551), கிறித்துவம் (4 கி.பி.), இசுலாமியம் (570 கி. பி.), சீக்கியம் (1469 கி. பி.) என்னும் மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னரால் தோற்றுவிக்கப்பட்டன என்றெல்லாம், வரலாற்று நூல்கள் கூறக் காண் கின்றோம்.

இவ்வாறு காலம் ஏதும் கூறுதற்கு இயலாத நிலையில் வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக நமது இந்து சமயம் விளங்கி வருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபி லோனியா, அசீரியா, பினீசியா, சிறிய ஆசியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளில் ஒவ்வொரு காலத்தில் விளங்கியிருந்த, எத்தனையோ பல மதங்கள் இருந்த இடமும் தெரியாமல் மருங்கற மாய்ந்தொழிந்தன. அவ்வாறு இன்றி, நம் முடைய இந்து சமயம் தொன்றுதொட்டு இன்று காறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறி ஞர் பாலகங்காதர திலகர், பேராசிரியர் எர்மன் ஜேகோபி ஆகிய பெருமக்கள், வானநூற் குறிப்புக்கள் பலகொண்டு கணித்து, வேதகாலம் கி. மு. 4500-க்கு முற்பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்து மதத்தின் பழமை எத்தகையது என்று, யாவரும் இனிது உணரலாம். இத்தகைய சிறந்த தொன்மை

யுடைமை பற்றியே, இந்து மதத்தினைச் 'சநாதன தருமம்' (Perennial Religion) என்று நம் சான்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

''இந்து சமயம்'' என்னும் சொல், நமது பழைய வேதம் உபநிடதம் ஆகமம் புராணம் முதலிய நூல்கள் எதிலும் காணப்படவில்லை என்றும், அஃது அண்மையிற் சில காலமாகவே வழங்கி வருகின்ற வேற்றுப் புலச்சொல் என்றும் ஒரு சிலர் கூறுவது உண்டு. அஃது ஒருவகையில் உண்மையேயாகுமாயினும், அது பற்றி ஏதும் குறையில்லை.

''தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று
தோன்றியன எனும்எவையும் தீதாகா''

என நம் சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவர் ஆகிய உமாபதிசிவம் கூறுவது இங்கு நாம் எண்ணியுணர்தற்கு உரியது.

'கடிசொல் இல்லைக்
காலத்துப் படினே''

என ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலும், இங்கு நாம் பெரிதும் சிந்திக்கத் தகுவதாகும். இச்சொல் அண்மையது ஆயினும் அது குறிக்கும் பொருள் மிக்க தொன்மையுடையதே யாகும் என்பதில் ஐயமில்லை.

பொருள் விளக்கம் :

பண்டைக் காலத்தில், பாரசிகர்கள் கிரேக்கர்கள் முதலிய பிற நாட்டு மக்கள், நம் பாரத நாட்டுச் சிந்து நதியையும், அதனைச் சார்ந்த நிலப்பகுதியையும் (Indus, India, Hindu) இந்து என்று வழங்கி வந்தனர். அதுவே பின்னர்ப் பாரததேசம் முழுமைக்கும் அதன்கண் வாழும் மக்கள் தொகுதியினர்க்கும், அவர்களின் பழக்க வழக்கம் பண்பாடு சமயம் ஆகியவற்றிற்கும் நாளடைவில் வழங்குவதாயிற்று. முதலில் நிலப் பரப்பைக் குறிக்கும் பெயராகவே இருந்த இந்து என்னும் சொல், இன்று இந்தியா என வழங்கப்படும் நம் பாரதநாடு முழுவதற்கும் பொதுவாக உரிய சமயப் பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக விளங்கி வருகின்றது. இச்சொல் அண்மைக் காலத்திலேயே பெருவழக்குப் பெற்றது எனினும், இதனால் குறிக்கப்படும் சமயநெறி தொன்மைவாய்ந்ததாகும். (The name is recent but the religion is ancient.)

(1) இனி, 'இந்து' என்னும் சொல், நம்முடைய பழைய வேதாகம உபநிடதங்கள் முதலியவற்றில் யாண்டும் வரப்பெறவில்லையாயினும், இன்று நம் பாரத தேசத்திலுள்ள சைவம் வைணவம் சாக்தம் சமணம் பௌத்தம் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய பல்வேறு சமய நெறிகளையும் ஒன்றுசேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடுவதற்குரிய ஒரு தொகுதிப் பெயராக (collective noun), 'இந்து சமயம்' என்னும் சொல் பெருவழக்கமாக நிலவி வருகின்றது.

''ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணிபுரிகின்றானோ அவனே இந்து ஆவான்; அவனது சமயமே இந்து சமயம்'' (இம்-இம்சையில், து-துக்கிக்கின்றவன்; இந்து) என்று இதற்குப் பெரியோர்கள் பொருள் கூறுவர்.

(2) இனி, இதற்கு வேறொரு பொருளும் பெரியவர்கள் கூறுவது உண்டு. 'சப்த கல்பதரு' என்னும் புகழ்பெற்ற வடமொழி இலக்கணநூல், 'ஏயம் நிந்தாதி இதி இந்து' எனக் கூறுகின்றது. அதன்படி ''நினைவிலும் சொல்லிலும் செயலிலும் எத்தகைய இழிவும் பிழையும் நேராமல் கருத்ததாகப் புறக்கணித்து ஒழுகுபவன் எவனோ, அவன் இந்து;அவனுடைய சமயமே இந்து சமயம்'' என்பது மற்றொரு வகை விளக்கம். இவ்விருவகைப் பொருள்களும், இந்து மதத்தைப் பின்பற்றி ஒழுகும் மக்களாகிய நாம் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய உயரிய சிறந்த குறிக்கோள்களை உணர்த்துவனவாகத் திகழ்கின்றன. ஆதலின் இப்பொருள் விளக்கங்கள் நாம் பெரிதும் போற்றிப் பாராட்டுவதற்குரியனவாகும்.

பிணக்கு அற்ற பெருஞ்சமயம் :

தமிழ்நாட்டில் தோன்றிய தத்துவ ஞானிகளில் தலைசிறந்த ஒருவரும், சிவஞானசித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவப் பெருநூலை இயற்றியருளியவரும் ஆகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் (கி. பி. 13 நூற்.) சிறந்த சமயம் எது என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ''உலகத்திலுள்ள பல சமயங்களும், அவற்றிற்குரிய பல நூல்களும், தம்முள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மிகவும் மாறுபட்டனவாக உள்ளன. இவற்றுள் சிறந்த சமயம் யாது? சிறந்த பொருள் நூல் யாது? என்று நாம் ஆராய்ந்தால், **எந்தச் சமயத்தையும் நூலையும் இகழாமலும், 'இதுவே சிறந்தது அதுவே தாழ்ந்தது' என்னும் பூசல்கள் இன்றியும் பல்வேறு சமயங்களும் நூல்களும் கூறுகின்ற எல்லா**

உண்மைகளையும் ஏற்றபெற்றி இனிது உடன்பட்டுத் தழுவிக்கொண்டு, அவைகள் அனைத்திற்கும் பொது வானதாய், அவற்றிற்கெல்லாம் ஒருபெரும் நிலைக் களனாகத் திகழும் பரந்து விரிந்த மனப்பான்மை யுள்ள சமயமும் நூலுமே, உண்மையிலேயே சிறந்த ஒருபெரும் சமயமும் நூலும் ஆகும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

''ஓது சமயங்கள்
பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல்
உளபலவும்; இவற்றுள்
யாது சமயம்? பொருள்நூல்
யாது இங்கு? என்னில்
இது ஆகும்; இது அல்லது
என்னும் பிணக்கது இன்றி,
நீதியினால் இவையெல்லாம்
ஓர் இடத்தே காண
நின்றது யாதொரு சமயம்!
அது சமயம்; பொருள் நூல்!''

என அவர் சைவ சித்தாந்தத்தின் சிறப்பைப் பற்றி விதந்து கூறியிருப்பது, இந்து சமயத்திற்கும்கூட, ஒருவகையிற் பெரிதும் ஏற்புடைத்தொன்றே யாகும் எனலாம்.

சர் மானியர் வில்லியம்ஸ் :

இவ்வுண்மையை நன்கினிது வலியுறுத்தி வற் புறுத்தும் முறையில், சர் மானியர் வில்லியம்ஸ் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர், இந்து சமயம் பற்றிக் கூறியிருக்கும் பின்வரும் கருத்துக்கள் இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியன. ''இந்து சமயம், எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்கின் றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக் கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக்கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துல கிற்கும் உரிய இனிய சமயமாக அது திகழ் கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்பட வில்லை.

ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்து விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக்கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக இந்து சமயம் இலங்குகின்றது. அவ ரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து சமயம் உண்மையி லேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற் கும் மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்து சமயம் இணையற்ற தாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவ ஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சிமிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்ல தாக, இந்து சமயம் இனிய பற்பல சிறப்பியல்பு களைத் தன்னிடம் கொண்டுள்ளது.''[1]

அன்னை வசந்தை :

இவ்வாறே இங்கிலாந்தில் தோன்றியவரும், உலகப்புகழ் பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, சார்லஸ் பிராட்லா முதலியவர்களோடு நட்புரிமை கொண்டு பழகிய பெருநாவலரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய திருமதி அன்னை வசந்தை அம்மையார் (Dr. Annie Besant) அவர்கள் கூறியிருப்பதும், இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது. ''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து சமயம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறி வார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக்கூடியதும் ஆகிய சிறந்த சமயம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான்

---

(1) "A Characteristic of Hinduism is its respectivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religious with in its all-embracing arms and even-widening fold. And, in real truth, Hinduism has something to offer which is suited all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has its highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion."

— *Sir Monier Williams*

உணருகின்றேன். அதனை எவ்வளவுக்கெவ்வளவு உணருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக்கொள்ளுகின்றோமோ, அத்தனை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்.''[2]

சர் வில்லியம் ஜோன்ஸ் :

இந்து மதத்தின் பலதிறப் பெருஞ் சிறப்புக்களுள், அதன் தத்துவக் கொள்கைகளும் சிறந்த நூற்பெருக்கமும் குறிப்பிடத்தக்கனவாகும். ''அறுவகைச் சமயங்கள்'' என்னும் தொடர் தொன்று தொட்டு வழங்கி வருவது. சமய தத்துவ நூலாசிரியர்கள், இவ் அறுவகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களில் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டுள்ளனர். எனினும் அறுவகைச் சமயங்கள் அல்லது 'ஷட் தரிசனங்கள்' எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் ஆறுமே, ஏனையவற்றைவிட மிகவும் பழமை வாய்ந்தனவாகும். இவைகளை விளக்கி முறையே அக்கபாதர் கணுதர் கபிலர் பதஞ்சலி ஜைமினி வாதராயணர் என்னும் பெருமுனிவர்கள் நூல்கள் இயற்றியுள்ளனர்.

மிகப்பழைய காலத்திலேயே, நம் இந்திய நாடானது கிரேக்கர் உரோமர் முதலிய மேலைநாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இந்நாடுகள் இந்தியாவுடன் பல பொருள்களைக் கொண்டும் கொடுத்தும் கலந்து உறவாடி மகிழ்ந்தன. ஆதலின், இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்து வியந்த சர் வில்லியம்ஜோன்ஸ் என்னும் பேரறிஞர் ''இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் 'பெரிபடெடிக்' கொள்கையையும், வைசேடிகம் 'ஐயோனிக்' கொள்கையையும், மீமாம்சம் 'பிளேட்டோவின்' கொள்கையையும், சாங்கியம் 'இட்டாலிக்' கொள்கையையும், யோக தத்துவம் 'ஸ்டாயிக்' கொள்கையையும் பெரிதும் ஒத்துள்ளன. இவ்வாற்றால் கௌதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணுதர் தேல்ஸையும் ஜைமினி சாக்ரடீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரஸரையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர்'' என்று ஆராய்ந்து ஒப்பிட்டுக் கூறி மகிழ்கின்றார்[3]. இங்ஙனமே மாக்சுமுல்லர், பெரிடேல்கீத், விண்டர்நிட்ஸ், கிரிஃபித், எட்வின் ஆர்னல்ட், வில்லியம் காரி, ஷோஃபனேர் ரோமைன் ரோலண்ட் முதலிய நூற்றுக்கணக்கான மேலைநாட்டு அறிஞர்கள் பலர், இந்து சமய நூல்களை ஆராய்ந்து வியந்து போற்றிப் பதிப்பித்திருக்கின்றார்கள்.

விக்டர் கசின் :

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது, அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக்கொள்கை நலங்களை நம்முடைய ஐரோப்பிய அறிவு நலனுடன் ஒருங்கு வைத்து ஆராயும்போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலை

---

(2) " After a study of some forty years and more, of great religious of the world, I find none so perfect; none so scientific, none so philosophical, and none so spiritual as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it ; the more you try to understand it, the more deeply will you value it."

Dr. Annie Besant

(3) "Of the philosophical schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the Peripatetic; the second sometimes called Vaisesika, to the Ionic; the two Mimamsas, of which the second is often distinguished by the name Vedanta, to the Platonic; the first Samkhya to the Italic; and the second of Patanjali to the Stoic philosophy; so that Gautama corresponds with Aristotle, Kanada with Thales, Jaimini with Socrates, Vyasa with Plate, Kapila with Phthogoras, and Patanjali with Zeno."

—Sir William Jones.

" According to Greek tradition, Thales, Empedocles, Anaxagora, Democritus and others undertook journeys to Oriental countries in order to study philosophy."

—Prof. A. A. Macdonnell.

யில் இருக்கின்றோம்'' என்று விக்டர் கசின் என்னும் பேரறிஞர் விளம்புகின்றார்.[4]

மாக்சுமுல்லர் :

இங்ஙனமே மாக்சுமுல்லர் என்னும் பேரறிஞரும், ''ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க உரோம யூத தத்துவங்களை மட்டுமே, படித்தால் போதாது. நம்முடைய அகவாழ்க்கை நிறைவானதாகவும், பல நலம் பொதிந்ததாகவும் உலகளாவி விரிந்ததாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடையதாகவும் அமைய வேண்டுமாயின் இந்தியத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது, மிகவும் இன்றியமையாததாகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்த வல்லதாக உள்ளது'' என்று கூறுகின்றார்[5] இவற்றினாலெல்லாம் இந்து சமயத்தின் சிறப்பு இனிது புலனாதல் காணலாம்.

உலகளாவிய இயல்பு :

இந்து சமயத்தின் உலகளாவிய இனிய நல்லியல்பு (The universality), பெரிதும் வியந்து போற்றுதற்குரியதாகத் திகழ்கின்றது. இந்து சமயமும், அதன் பல்வகைப் பண்புநலங்களும், உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத்தீபம்), பார்லி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனா, நடுஆசியா, திபெத்து, பர்மா, சிலோன், சைனா, கொரியா, ஜப்பான் முதலிய பல பகுதிகளிலும், இந்து மதத்தின் பண்பாடுகளும், சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன. கிழக்காசிய நாடுகளில் தேவர்மன், குணவர்மன், உத்திரவர்மன், யசோவர்மன், சஞ்சயன், கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திரசேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தன் முதலிய பல இந்து மதப் பெயர்கள் இன்றளவும் பெருக வழங்கப்பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள போராபுதூர் புத்தர் கோயிலும், (கி. பி. 750-850) கம்போடியாவில் உள்ள அங்கோர்தாம் என்னும் சிவபிரான் கோயிலும் (கி. பி. 800-860), அங்கோர்வாட் என்னும் திருமால் கோயிலும் (கி.பி. 1110-1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றது.

கம்போடியாவில் அங்கோர்ட்வாட் என வழங்கும் ஒரு பெருங்கோயில் திருமாலுக்கென அமைக்கப்பட்டுள்ளது. அதன்கண், இராமாயணம், மகாபாரதம், அரிவம்சம் என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக்காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இராமன் மாயமானைப் பின்தொடர்தல், வாலி, சுக்ரீவப் போர், அசோக வனத்தில் சீதையின் சோக நிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம் செய்தல், தேவர்கள் திருப்பாற்கடல் கடைதல் முதலிய காட்சிகள் மிக பெரிய அளவில் செதுத்தப்பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

ஈலியோடொரஸ் :

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்திய நாட்டில் வந்து தங்கியிருந்து, இந்து மதத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி. மு. 2ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநிலத்தில் பெஸ் நகர் என்னுமிடத்தில், பிராமி எழுத்துக்களில் நிறுவப்பெற்றுள்ள கல்வெட்டுத் தூண் ஒன்றில், ''சுங்கவம்சத்து மன்னனாகிய பகபத்திரன் என்பவனின் அரசவைத் தூதுவனாக அந்தால்கிதாஸ் என்

(4) " When we read with attention, the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, We discover there so many truths, and truth so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race the native land of the highest philosophy."

—*Victor Cousin*

(5) "If Is were to ask myself from what literature, we here in Europe, we who have been natured almost exclusively on the thoughts of Greeks and Romans and of one scemtic race the Jewish, may draw that corrective which is most wanted, in order to make our inner-life more perfect, more comprehensive more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal life-again I should point to India."

Max Muller

னும் கிரேக்க மன்னவனுல் அனுப்பப்பெற்றவ னும், டியோன் என்பவனின் புதல்வனும், தட்ச சீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணு பக்தனும் ஆகிய ஈலியோடொரஸ் என்பவனுல், பரவாசுதேவன் எனப்படும் விஷ்ணு வுக்குரிய புனிதம் மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப் பெற்றுள்ள, இத் தூணுனது நிறுவப் பெற்றது'' என்று காணப்படு கிறது. இதனுல் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் முதலிய பிறநாட்டவர்கள், இந்து மதத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்பு மிக்க செய்தி அறியப்படுதல் காணலாம்.

இராமாயணமும் இலியதமும் :

எகிப்து தேசத்தில், நமது இராமரின் திருப் பெயர் பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின் றது. அந்நாட்டின் வரலாற்று நூல்களில் முதலாம் இராமேசஸ், இரண்டாம் இராமேசஸ் என்னும் பெயர்கள் பல காணப்படுகின்றன. எகிப்து நாட்டிலுள்ள சகாரா என்னும் பாலைநிலப் பெயருக்கும், இராமாயணத்தில் வரும் பகீரத னின் முன்னேர்கள் ஆகிய சகரர் என்பவர்களின் பெயருக்கும் இடையே தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங்காப் பியம் ஆகிய இலியதம் (Iliad) என்னும் காப்பி யத்தின் கதையில் வரும் மாந்தர்களுக்கும் (Characters) இராமாயணம் என்னும் நம் நாட்டு இதி காசத்தில் வரும் மாந்தர்களுக்கும் இடையே, பலதிற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின் றன. இவ்விரு பெரு நூல்களுமே போர் நிகழ்ச்சி யினை அடிப்படைப் பொருளாகக் கொண்டுள்ளன. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்ருெருவன் கவர்ந்துகொண்டு சென்றுவிடும் செய்தி கூறப் படுகின்றது.

கிரேக்க நாட்டின் இலியதம் என்னும் காவி யத்தில் வரும் மெனலஸ் (Menelaus) இராமன் ; ஹெலன் (Helen) சீதை; ஸ்பார்ட்டநகர் (Sparta) அயோத்தி நகரம், இலங்கை (Troy) அகமெம்னன் (Agamemnon) சுக்கிரீவன்; பெட்ராக்ளஸ் (Patroclus) இலக்குவன், நெஸ்ட் டார் (Nastor) ஜாம்பவான்; யுலிஸிஸ் (Ulysses) ஆஞ்சநேயன்; ஹெக்டார் (Hector) இந்திரசித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத்தன்மை இவ்விருபெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின் றது. இன்னேரனைய சான்றுகள் பலவும், இந்து மதத்தின் கருத்துக்கள், கதைகள், கொள்கைகள், உலகின் பல பகுதிகளிலும் சென்று பரவியிருந்த செய்தியினை நுண்ணிதின் எண்ணியுணரப் பயன் படும் இனிய அரிய சான்றுகள் ஆகும் எனலாம்.

கிருட்டினனும் கிறித்துவும் :

எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறும், மேலைநாடுகளிலும் மிகப் பழங் காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயே இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் அமைந்து காணப்படுகின்றது. இரண்டிற்கும் இடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை மிக்குத் திகழ்கின்றது.

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந் தான். இயேசுநாதர், எரோது (Herod) என் னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைத்து வளர்க்கப் பெற்றார். கம்சனைப் போலவே, ஏரோது அரசனும் தனது உயிர்பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரானின் அவதாரம் பற்றிய அறிவிப்பு முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே, ஏரோது அரசனுக்கும் அசரீரியினுல் இயேசுநாத ரின் அவதாரச் செய்தி அறிவிக்கப் பெற்றது. கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்திலே பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good shepherd) என்று போற்று வர். அவ்வாறே கண்ணபிரானும் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனுகப் பசுக்களை மேய்ப்பவ னும் காப்பவனுமாகக் 'கோபாலன்' என்று பெயர் பெற்று விளங்கினுன்; இயேசு மலைச்சொற் பொழிவு (Sermon on the Mount) நிகழ்த் தினுர். கண்ணபிரான் குருக்ஷேத்திரத்தில் தேர்த் தட்டின்மீது இருந்து, பகவத்கீதை (Song Celestral) உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் பலவும் நாம் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.[6]

(6) "The birth stories of Krishna and Jesus have a certain striking resemblances suggestive of mutual borrowing. The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religious of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly and instructive study. The study of the ancestry of ideas is a fertile branch of comparative Religion......"

—*Dr S. Radhakrishnan*

அமெரிக்காவில் இந்து சமயம் :

''திருமாலின் கூர்மாவதாரப் படிமையினை கொண்ராகுவாவிலும், ஆதிசேடனின் கோயிலை மெக்சிகோ நகரின் அருகிலும், வாமனன், இந்திரன் ஆகியோர் படிமங்களை மெக்சிகோ நகரின் தேசீயக் காட்சிச் சாலையிலும் இன்றும் யாவரும் காணலாம். பெருவிய நாட்டுக் கவிதை நூல்கள் ஒவ்வொரு பக்கத்திலும் இராமாயணம், மகா பாரதம் ஆகியவற்றின் இலச்சினைகள் காணப்படுகின்றன. மெக்சிகோ, குவாதமாலா, பெரு, பொலிவியா, ஒண்டுரஸ் முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளில், சிவபிரான் திருமால் விநாயகர் வாமனர் இந்திரன் சூரியன் அனுமன் முதலிய தெய்வங்கள் வழிபடப் பெற்றன. நடுஅமெரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும் இத்தெய்வங்கள் வழிபடப் பெற்றன'' என்று சமன்லால் என்னும் ஆராய்ச்சிப் பேரறிஞர் கூறுகின்றார்.[7]

இந்தியாவில் மட்டுமேயன்றி, இலங்கை, பர்மா, மலேயா, சயாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, அன்னம், திபேத், சைனு முதலிய பிற நாடுகளிலும், இராமாயண வரலாறுகள், இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நாடகங்களிலும் பலவகை விழாக்களிலும் பரவி வரப் படர்ந்து வளர்ந்துள்ளன. சயாம், தாய்லாந்து ஆகிய நாடுகளின் அரசர்கள் சிலரின் பெயர் ஈறுகள், இராமர் என்று உள்ளன. ஜாவாத் தீவின் தலைநகரப் பெயராகிய ஜகர்த்தா என்பது அயோத்தியா என்பதன் திரிபேயாகும்.

ஜாவாத் தீவிலுள்ள பெரம்பானன் தொகுதிக் கோயில்களில், இராமாயண வரலாறு முழுவதும், கண் கவரும் வனப்புமிக்க சிறந்த புடைப்புச் சிற்பங்களாக, ஏராளமாக மிகப்பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. அவைகள் 'கல்லும் சொல்லாதோ கவி' என்பதற்கு ஏற்பக் கல்லில் அமைந்த அழகிய பெருங்காவியங்களாக விளங்குகின்றன.

இராமபிரான் ஜாவாத் தீவின் தேசியத் தலைவராக மதிக்கப்படுகின்றார். சயாமிலுள்ள லோப்பரி என்னும் தலைநகரின் பெயர் லவபுரி என்பதன் சிதைவேயாகும். ஜாவாவின் நடுவில் ஓடும் ஓர் ஆற்றுக்குச் செரயு எனப் பெயர் வழங்குகின்றது. அது கோசல நாட்டில் ஓடிய சரயு என்னும் நதியினது பெயரைத் தழுவியதேயாகும். பாங்காக் என்னுமிடத்திலுள்ள ஒரு கோயிலில் இராமாயண வரலாறு முழுவதும் வெ. வெள்ளித் தகடுகளில் செதுக்கப்பெற்றுப் பதிக்கப் பெற்றுள்ளது.

கம்போடிய அரசர்கள் தம்மைச் சூரிய வம்சத்தில், இட்சுவாகு குலத்தில் உதித்த, இராம பிரானின் வழிவந்தவர்களாகக் கூறிக்கொள்ளுகின்றனர். கம்போடிய நாட்டில் அங்கோர்தாம் என்னும் தலைநகரில் ஆண்டு வந்த யசோவர்மன் என்னும் அரசன் (கி. பி. 980-910), இராம பிரானைப் போன்றவன் என்று புகழப்படுகின்றான். பபுவா எனத் தற்போது வழங்கும் ஏமசிருங்ககிரி என்னும் நகரில் உள்ள கோயிலில், இராமாயணச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. கம்போடியாவில் அங்கோர்வாட் என்னும் இடத்திலுள்ள விஷ்ணுகோயிலிலும், இராமாயணச் சிற்பங்கள் சிற்பல காணப்படுகின்றன.

சம்பா என வழங்கும் தெற்கு அன்னம் நாட்டிலும், இராமாயணக் கதை பெருக வழங்கி வருகின்றது. அந்நாட்டு மக்கள், தங்களை இராம பிரானின் வானர சேனைகளினது சந்ததியில் வந்தவர்கள் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றனர். இங்ஙனமே திபெத்து மக்களும் தங்களைக்குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். சீனுவில், லங்காவதார சூத்திரம், தசரத ஜாதகம் என்னும் புத்தநூல்களால் இராமாயணம் பெரிதும் பரவியது.

இங்ஙனம் கிழக்கு ஆசிய நாடுகளில் பட்டுமன்றி, மேலை ஐரோப்பிய நாடுகளிலும்கூட, இராமாயணம் பெரிதும் பரவி வருகின்றது. மாக்ஸ்முல்லர் (Max Mueller), கீத் (A.B. Keith), மாக்டனல் (A.A. Macdonnell) விண்டர்நிட்ஸ் (Winternitz) ஆப்கின்ஸ் (Hopkins), ஜேக்கோபி (Jacobi) முதலிய அறிஞர்கள் பற்பலர், இராமாயணத்தினை ஐரோப்பிய மொழி

(7) " Every page of Peruvian poetry bears the imprints of Ramayana and Maha Bharatha.... Shiva, Ganesha, Indra, the Sun, Hanuman, Vishnu and his tortoise-incarnation (Kurma Avatar), were some of the Hindu Gods worshipped in Central and South America.... 'After 17 years of research, I can now claim to have proved my theory of Hindu Colonisation of America. The stones in every corner of America speak of Hindu influences."

— *Chamanlal—Hindu America*

களில் மொழி பெயர்த்து இயற்றியுள்ளனர். அண்மையில் ரஷிய நாட்டிலும், இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எகிப்து நாட்டிலும், மெக்சிகோ, பெரு முதலிய அமெரிக்க நாட்டின் பகுதிகளிலும் இராமாயணம் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததற்குச் சரித்திரச் சான்றுகள் காணப்படுகின்றன.

இந்து சமயக் கடவுளர்க்கும், கிரேக்க உரோமக் கடவுளர்க்கும் இடையே பலதிற ஒப்புமைகள் காணப்படுகின்றன. இந்திரன் ஜுபிடர், சிவபிரான் ஜீயஸ், பார்வதி ஜுனோ, கிருஷ்ணன் அப்போல்லோ, இலட்சுமி செரெஸ், பிருதிவி கிருபலே, வருணன் நெப்ட்யூன் (யுரேனஸ்), சரசுவதி மினர்வா, கார்த்திகேயன் (முருகன்) மார்ஸ், இயமன் ப்ளூட்டோ (மினோஸ்), குபேரன் புளுட்டஸ், விசுவகர்மன் வல்கன், மன்மதன் கியூபிட், இரதி வீனஸ், நாரதர் மெர்க்குரி, ஆஞ்சநேயர் பான், உஷை ஈயோஸ், அருணன் அரோரா, வாயுதேவன் எயோலஸ், கணேசர் ஜேனஸ், அசுவினி குமாரர் டயோஸ்கரி (கேஸ்டர், பொல்லுக்ஸ்) என்று முறையே இணைத்துச் சொல்வதற்கு ஏற்றவகையில், இந்து சமயக் கடவுளர்க்கும் ஏனைய கிரேக்க உரோமக் கடவுளர்க்கும் பலவகை ஒப்புமைத் தன்மைகள் இருப்பதாக சர் மானியர் வில்லியம்ஸ் (1819-1899) என்னும் ஆங்கிலேய அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல பகுதிகளில் சிவலிங்கங்கள் :

நமது இந்திய நாட்டிலும், குறிப்பாக, இந்து சமயத்திலும், சிறப்பாகப் போற்றி வழிபடப் பெறும் தெய்வத் திருவுருவங்கள் அல்லது அடையாளங்களில், சிவலிங்கத் திருவுருவம் மிக்க சிறப்புடைய ஒன்றாகும். இமயம் முதல் குமரி வரையிலுள்ள எண்ணிறந்த எத்தனையோ பல தலங்களிலும் கோயில்களிலும் சிவலிங்கத் திருவுருவங்கள் சிறப்புற நிறுவப்பட்டு, தொன்னெடுங் காலம் முதல் இன்றளவும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமே, பலகோடிக்கணக்கான மக்களால் போற்றி வணங்கப்பட்டு வருகின்றன.

சிவலிங்கத் திருவுருவின் பழமையும் பெருமையும் எல்லையற்றன. மொகஞ்சதாரோ, ஆரப்பா முதலிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில், மிகப் பல சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. சிவலிங்கத் திருவுருவங்களும் சிவலிங்க வழிபாடும் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, எகிப்து சிரியா பாரசீகம் சிறியஆசியா கிரிசு இத்தாலி ஆஃப்பிரிக்கா, அமெரிக்கா திபெத்து சீனு ஜப்பான் சைபீரியா, சுமத்திரா ஜாவா போர்னியோ ஆஸ்திரேலியா முதலிய, உலகின் பல பகுதிகளிலும் ஒரு காலத்தில் பெரிதும் பரவியிருந்தது.[8] இதனை எச்.எம். வெஸ்ட்ராப், இ. பி. டெய்லர் ஆலன்கிராண்ட் முதலிய மேலைநாட்டு அறிஞர்கள் தத்தம் நூல்களில் ஆராய்ந்து விளக்கியுள்ளனர்.

முடிவுரை :

இந்து சமயத்தின் பலவகையான சிறப்புக்களையும் இயல்புகளையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளுதற்கு அதன் கோயில்கள் (Temples), அருளாளர்கள் (Saints), சாத்திரங்கள் (Scriptures) என்பன பெரிதும் துணைசெய்யும். இம் மூன்றுமே எண்ணற்றனவாய் எல்லையின்றி விரிந்து பரந்து விளங்குகின்றன. இந்து சமயக் கோயில்களையும் ஞானிகளையும் சாத்திரங்களையும் பற்றி நாம் அறிந்துகொள்ளுதற்குரிய, எத்தனையோ பல அரிய பெரிய செய்திகள், எல்லையில்லனவாய் விளங்குகின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து உணருந்தோறும், இந்து சமயமானது விரிந்து பரந்த பெருநோக்குடையது என்பதும், உலகளாவிய பெருந்தகைமை சான்ற உயர்ந்த சமயம் என்பதும், நாடு மொழி இனம் நிறம் முதலிய வேற்றுமைகளையெல்லாம் கடந்து விளங்கும் மாட்சிமையுடையது என்பதும், பிறவும் தெளியலாம்.

---

(8) "The practice of Linga-worship was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in Egypt, Syria, Persia, Asia-Minor, Greece and Italy. It sill is in vigour in India and many parts of Africa and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man"

—*H. M, Westropp,*



ஆதி சங்கரர்



பகவத் ராமானுஜர்

இந்து மதத்தின் சிறப்பியல்புகள்

வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன்

இந்து மதத்தின் சிறப்பியல்புகள் பல. யோகம் என்னும் முறையைச் சொல்லும் சிறப்பு இந்த மதத்துக்கு உண்டு. இராஜயோகம், ஹடயோகம் என்று வழங்கும் யோக முறைகள் இந்த நாட்டிற்கே உரியன. இதை அயல் நாட்டாரும் கற்றுப் பயின்று வருகிறார்கள்.

மற்றொரு சிறப்பியல்பு ஜீவன் முக்தி என்பது. ஆன்மா உடம்புடன் இருக்கும்போது ஜீவன் என்ற பெயருடையதாக இருக்கிறது. உடம்பில் ஆன்மா இருக்கும்போதே பேரின்ப அனுபவத்தைப் பெறுவது ஜீவன் முக்தி. எல்லாச் சமயங்களும் இறுதியாகக் கடவுளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடைவதைக் கூறுகின்றன. இறந்த பிறகு அடையும் நிலை அது. இந்து மதமோ, இந்த உடம்பில் இருக்கும்போதே ஆன்மா அந்த இன்பத்தை அடையும் நெறியைச் சொல்கிறது.

“இத்தேகமொடு காண்பனோ”

என்ற தாயுமானவர் வாக்கில் இந்த உண்மையைக் காண்கிறோம்.

“ நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்இந் திரியம் எல்லாம்நீத்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உவப்பில் அதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசைஅற்றால்
அன்றே அப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே”

என்று நம்மாழ்வாரும் இந்நிலையைக் கூறுகிறார். பற்றுக்களெல்லாம் அற்றபோது இந்த அனுபவம் கிடைக்கும். “அற்றது பற்றெனில் உற்றது வீடு” என்பதும் இதையே குறிக்கிறது.

இவ்வாறு இந்த உடம்புடன் வாழும்போதே, பழுத்த புளியம்பழத்தைப் போலப் பற்றெல்லாம் நீங்கி நிற்கும்போது பேரின்பத்தை நுகரலாம் என்பதை இந்து மதம் சொல்வது அதன் சிறப்பியல்புகளில் ஒன்று.

* * *

இனி, மற்றொன்றைப் பார்க்கலாம்: கடவுளை வணங்கி வழிபடுபவர்கள் பல மூர்த்திகளை வழிபடுகிறார்கள். இந்த உபாசனை முறையை வகைப்படுத்தி ஆறு என்று அமைத்தார் சங்கராச்சாரியார். அவை காணபத்தியம், கௌமாரம், சௌரம், வைஷ்ணவம், சாக்தம், சைவம் என்பன. கடவுளுக்கு வடிவங்கள் பல ஆனாலும் அவர் ஒருவரே என்பதை இந்து மதம் வற்புறுத்துகிறது. “ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி” என்பதும், “ஒன்றே குலம் ஒருவனே தேவனும்” என்னும் திருமூலர் திருமந்திரமும் இதையே காட்டுகின்றன.

கடவுள் நாமமும் உருவமும் அற்றவர். இந்து மதம் அல்லாத வேறுபல சமயங்கள் கடவுள் உருவம் இல்லாதவர் என்று சொல்லி, அவருக்கு வடிவம் அமைத்து வழிபடுவதை ஏற்றுக்கொள்வதில்லை. இந்து மதமும் இயல்பாகக் கடவுளுக்குப் பெயரோ வடிவமோ இல்லையென்பதை ஒப்புக்கொள்கிறது. ஆனால் பக்தர்களுக்குத் தியானம் செய்யும் பொருட்டுப் பெயரையும் வடிவத்தையும் எடுத்துக் கொள்வான் என்று இந்து சமயம் சொல்கிறது.

மனம் ஏதேனும் உருவம் இருந்தால்தான் அதைப் பற்றிக்கொள்ளும். பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய நெருப்பைத் தனியே நாம் பார்க்க முடியாது. ஏதேனும் கட்டையையோ திரியையோ பற்றிக்கொண்டால்தான் அதைப் பார்க்கமுடியும்.

ஐந்து பூதங்களில் ஒன்றாகிய தீயையே பற்றுக் கோடு இல்லாமல் பார்க்க முடியாது என்றால், யாவும் கடந்த பெருஞ் சோதியாகிய இறைவனை எப்படிக் காண முடியும்? அவனை அறிந்து போற்றாவிட்டால் பேரின்பம் பெற முடியாது. அவனே பொறிபுலன்களுக்கு எட்டாமல் அப்பால் நிற்கிறவன். அப்படியானால் இறைவனுடன் எவ்வாறு நாம் தொடர்பு கொள்ள முடியும்? இறைவனே கருணையினால் வடிவம் எடுத்துக்கொள்கிறான். மக்களின் மனத்திலே புகுவதற்காகவே அதை எடுத்துக்கொள்கிறான். அப்படியானால் அவன் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வரலாமே! பல வடிவங்களை மேற்கொள்வதனால் குழப்பம் அல்லவா உண்டாகும்? இவ்வாறு சில கேள்விகள் எழலாம்.

மனிதன் தான் நுகரும் பொருள்களை வெவ்வேறு வகையில் நுகர்கிறான். அவனுடைய உணவில் பல வகைகள் இருக்கின்றன. அவனுடைய உடைகளிலும் பல வகைகள் உண்டு. அவன் வாழும் வீடுகளும் பலவகைகளாக உள்ளன. ஒரேமாதிரி உணவு, ஒரேமாதிரி உடை, ஒரேமாதிரி வீடு என்று இருந்தால் மனிதனுக்கு இனிமை உண்டாவது இல்லை. பல்வகையாக இருப்பதே வாழ்வில் சுவை உண்டாக்குகிறது. அதனால் பலவகை வடிவங்களை வழிபடுவதனால் மேலும் மேலும் பக்தி பெருகுமேயன்றிக் குறைவதில்லை.

ஆண்டவன் தன் வடிவத்தைக் காட்டுவது அன்பர்கள் அதைப் பற்றிக்கொண்டு தியானம் செய்து உய்யவேண்டும் என்பதற்காகத்தான். மக்கள் பலவகை மனோபாவங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். 'லோகோ பின்ன ருசி' என்றபடி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வடிவத்தில் ஈடுபாடு உண்டாகிறது.

ஞானியர் இறைவனைத் தியானம் செய்து அவன் சுடருருவைத் தம்முள்ளே தரிசிக்கிறார்கள். அந்த உருவத்தைப் பிறரும் காணவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அதை உள்ளே காணுவதற்குரிய பக்குவம் எல்லோருக்கும் இருப்பதில்லை. ஆதலால் தாம் கண்ட உருவங்களுக்கு வடிவமைத்துத் தந்து நம்மை வழிபடும்படி செய்கிறார்கள். தம் உள்ளத்தில் கண்ட வடிவத்தை வெளிப்படையாக நாம் தரிசிக்கும்படி விக்கிரகங்களாக வடித்துத் தருகிறார்கள். அவ்வாறு செய்வதற்கு ஆகமங்கள் வழிகாட்டுகின்றன. அகத்தே கண்டதை ஒருவாறு புறத்தே அமைத்து அவர்கள் காட்டுகிறார்கள். நாம் புறத்தே கண்ட அந்த வடிவத்தை அகத்திலும் தியானித்துப் பயிற்சி செய்ய வேண்டும். அப்போது புறத்தே கண்ட அந்த உருவம் தேசு பெற்றுத் தோன்றும், நடனமிடும், நம்மோடு பேசும். இந்த உள்ளுணர்வாகிய ஆனந்தத்தைப் பெற்றவர்கள் பலர்.

"என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்"

என்று அப்பர் பாடுகிறார்.

"போக்கும்வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் மனமும் வடிவும் இல்லாதொன்று வந்து வந்து
தாக்கும்; மனோலயம் தானே தரும்; என்னைத் தன்வசத்தே
ஆக்கும்; அறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே"

என்ற அருணகிரியார் திருவாக்கில் இந்த அனுபவத்தைப் பார்க்கலாம்.

இவ்வாறு உள்முகத்தே வைத்துத் தியானிக்கவே கடவுள் பல உருவங்களை எடுக்கிறார். ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு வகையில் இருப்பதால் இறைவன் பலபல வடிவங்களை எடுக்கிறான். ஏதேனும் ஒன்றில் மனிதன் மனம் ஈடுபடவேண்டுமென்பதே அவன் திருவுள்ளம்.

தேங்காய், பழம், கற்பூரம், சாம்பிராணி முதலிய பண்டங்களைக் கோவிலுக்கு அருகில் விற்கிறார்கள். நவதானியக் கடையில் பலவகைத் தானியங்களையும் பெறலாம். ஜவுளிக் கடையில் பல வகையான ஆடைகளைப் பெறலாம். இப்படியே வெவ்வேறு வகையான பண்டங்களை விற்கும் பல்வேறு கடைகள் உள்ளன. எல்லாப் பண்டங்களையும் ஒரே கடையில் பெறுவதானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அப்படியும் சில கடைகள் உண்டு. அவற்றை உயர்ந்த கடை (Super Market) என்று சொல்கிறார்கள். பலவகைப் பண்டங்களையும் தரும் கடை உயர்ந்த கடையாகுமானால், பலவகை மனோபாவங்களையுடையவர்களுக்கும் ஏற்ற வகையில் பல வகையான வடிவங்கள் இறைவனுக்குரியவை என்று சொல்லும் இந்து மதம் மிகச்சிறந்த மதம் (Super religion) என்று சொல்லலாம் அல்லவா?

கிராமத்தில் உள்ள ஒரு பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகள் வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு

கல்லூரிகளில் படிக்கிருர்கள். விடுமுறையில் யாவரும் ஊருக்கு வருகிருர்கள். தாம் உண்ணும் உணவு விடுதிகளில் தம் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் சிற்றுண்டிகளைப் பெற முடியாமல் ஏங்கிய அவர்கள் ஊருக்கு வந்தவுடன் ஆளுக்கு ஒரு சிற்றுண்டி வேண்டுமென்று அன்னையிடம் சொல்கிருர்கள். அன்னை செல்வமுடையவளாதலாலும், தன் பிள்ளைகளுக்கு வேண்டியதைச் செய்துதரும் அன்பு உடையவளாதலாலும், அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து தருவதோடு, அவற்றிற்கு மேலும் சில சுவையான சிற்றுண்டிகளைச் செய்து தருகிருள். இது அவளுடைய வளவாழ்வையும் தன் மக்களிடம் உள்ள அன்பையும் காட்டுகிறது. ஏதேனும் ஒன்றைச் செய்து, இதைத்தான் யாவரும் உண்ணவேண்டும் என்று சொல்லமாட்டாள். வறுமையுடையவர்களே அப்படிச் சொல்வார்கள்.

அவ்வாறு வளம் பெற்ற இந்து மதம் வெவ்வேறுவகையான மூர்த்திகளைக் காட்டி, எப்படியாவது மக்கள் உய்யவேண்டும் என்று எண்ணும் வகையில் அமைந்திருக்கிறது. இதைச் சிறப்பான மதம், எல்லாவகையான மன இயல்புடையவர்களுக்கும் ஏற்ப வழிகாட்டும் மதம் என்ருல் பிழை உண்டா?

இவ்வாறுள்ள மூர்த்தி பேதங்களை வழிபடலாம் என்று சுருதி சொல்கிறது. மேலே சொன்ன காரணங்கள் யுக்திக்குப் பொருத்தமாக உள்ளன. சுருதி, யுக்தி, அனுபவம் என்று மூன்றைச் சொல்வதுண்டு. சுருதியாலும், யுக்தியாலும் பல வடிவங்களை வழிபடுவது நடைமுறைக்கு ஏற்றது என்பதை உணர்ந்தோம். அனுபவத்தில் அது சாத்தியமானதா என்று பார்க்கவேண்டும்.

இந்த மூர்த்திகளை வழிபட்டுப் பேரின்ப வாழ்வைப் பெற்றவர்கள் இந்த நாட்டில் உண்டு. சிவபெருமானை வழிபட்டுப் பேரின்ப வாழ்வு பெற்றவர்கள் நாயன்மார்கள். திருமாலை வழிபட்டு உய்தி பெற்றவர்கள் ஆழ்வார்கள். அம்பிகையை உபாசனை செய்து நலம் பெற்றவர்கள் இராமகிருஷ்ணபரமஹம்ஸர், அபிராமிபட்டர் முதலியோர். முருகப் பெருமானை வழிபட்டு இன்பம் பெற்றவர்கள் அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள் முதலியோர். இவ்வாறே ஒவ்வொரு மூர்த்தியையும் வழிபட்டவர்கள் பலர். ஆகவே பல உருவ வழிபாடு அனுபவத்துக்கும் துணை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒருவனே பல வடிவங்களையும் வழிபடலாமா என்ற கேள்வி எழலாம். எந்த வடிவத்தில் தன் மனம் ஈடுபடுகிறதோ அதைப் பற்றிக்கொண்டு தியானம் செய்யவேண்டும். இதனுல் மற்ற வடிவங்களைப் புறக்கணிக்கவேண்டும் என்பதன்று. கற்புடைய மங்கை ஒருத்தி புறத்தே அண்ணன், தம்பி, தந்தை, பிற உறவினர் ஆகியவர்களோடு பேசிச் சிரித்துப் பழகினுலும், இன்பத்தை விழையும்போது தனிமையில் தன் கணவனேடு இணைகிருள். அவ்வாறே எல்லா மூர்த்திகளையும் வணங்கினுலும் தனக்கு விருப்பமான மூர்த்தியை உண்முகத்தே தியானித்து வரவேண்டும். வீதியில் உள்ள வீடுகளெல்லாம் நன்ருக இருந்தாலும், தன் உறவினர் வாழும் வீடுகளுக்கு ஒருவன் அவ்வப்போது சென்று வந்தாலும், அவன் தன் வீட்டுக்கு வந்தே உண்ணுகிருன், உறங்குகிருன். அவ்வாறே எல்லா மூர்த்திகளையும் வேறுபாடின்றித் தரிசித்தாலும், தன்னுடைய உபாசனு மூர்த்தியை உள்ளத்தே வைத்துத் தியானம் செய்வதே அநுபவத்தைப் பெறுவதற்குரிய வழி.

வேற்றுமையில் ஒற்றுமையைக் காட்டும் இந்தச் சிறப்பியல்பு இந்து மதத்துக்கு உரியது.

பல கிளைகளும் வளரும் தன்மை உடைய ஆலமரத்தை பெரியதாகக் கருதுகிறேம். அது 'ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க' நிழல் தருகிறது. அத்தகையதே இந்து மதம். அதிகாரமோ, விளம்பரமோ இல்லாமல் இந்தமதத்தின் பெருமையை உணர்ந்து அமெரிக்கர்களும் வேறு நாட்டவர்களும் இதை விரும்புகிருர்கள். உண்மையான மதிப்பு இருப்பதால் அதைப் பலரும் விரும்புவது இயற்கை.

இதுவரைக்கும் கூறியவற்ருல், இந்து மதம் ஜீவன் முக்தியை அடைய வழிகாட்டுவது என்பதும், எப்படியேனும் மனிதன் தன் மன இயல்புக்கு ஏற்ற வடிவத்தைத் தியானித்து உய்யவேண்டுமென்று கருதிப் பல மூர்த்தி வழிபாட்டை வகுத்திருக்கிறது என்பதும் புலனுகும்.

யாவும் ஒரே பரம்பொருளின் தோற்றம் என்ற ஞானத்தின்மீது உன் கர்மங்களை அமைத்துக்கொள். அக்கருமத்தில் அடக்கம், அன்பு, அருள், அஹிம்சை என்பனவாகிய பக்தியம்சங்களைத் ததும்பி இருக்கச் செய். வெறும் பக்தி எந்த உணர்ச்சிக் காற்றாலும் அடித்துச் செல்லப்படுமாதலால், அந்தப் பக்தியில் ஞானத்தின் கனத்தை நிறைத்துக்கொள். வெறும் ஞானம் இதயத்தை வறட்சியாக்கும். பக்தியே அதை அனுதாபத்தால் மென்மையாக்குகிறது. கர்மம் என்பதோ கைக்கு ஒரு வேலையைக் கொடுத்து உனக்கு என ஏற்பட்ட வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் நீ புனிதப்படுத்திக்கொள்ளச் செய் கிறது.

— *சாயிபாபா*

திருமால் திருநெறி

நா.வேணுகோபால நாயகர், பி.ஏ.,பி.எல்.

வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக் செயலாளர்,
ஸ்ரீவைணவ மகாசங்கம், சென்னை.

"திருமால் திருநெறி" என்னும் தலைப்பு, திருமால் அருளும் திருநெறி என்றும், திருமாலை அருளும் திருநெறி என்றும் பொருள்தரும். திருமால் திருநெறி, ஸ்ரீவைணவ சமயம் என்றும் வழங்கப்படுகின்றது. திருமாலைத் தலைவராகக் கொண்ட திருநெறியே ஸ்ரீவைணவ சமயம்.

திருமால் திருநெறியில் தலையாய கொள்கை தத்துவத்திரயம் எனப்படும் முப்பொருள் உண்மையாகும். அதாவது இப்பிரபஞ்சம் மூன்று பொருள்களால் இயன்றது என்பது. இம்முப்பொருள்களின் இயக்கமே பிரபஞ்சம். இம்முப்பொருள்கள் நிலையானவை. நிகரற்றவை, நெடுமாலின் நெறியை நிலைநாட்டுபவை.

முதலாவது, உயிரற்றவைகளான ஐம்பெரும் சக்திகள் என்னும் பஞ்ச பூதங்களும், இவற்றின் சேர்க்கையால் ஏற்படும் பொருள்களும் ஆகும். இவைகளே அசித்து எனப்படும். இவைகள் தாமே இயங்க இயலாதவை. இரண்டாவது பொருள், சித்து என்னும் உயிர்த்திரள்கள். சீவாத்துமா என்றும் இதனைக் கூறலாம். மூன்றாவது பொருள் கடவுள், இறைவன் அல்லது ஈசுவரன் எனலாம்.

அசித்தாலான உடலுடன் கூடி, அதனைத் தொழிற்படுத்துகின்றது உயிர் என்னும் சித்து. இவ்விதமாகவே அசித்து ஆகிய உடலையும், சித்து ஆகிய உயிரையும் தனக்கு உடலாகக் கொண்டு, இறைவனாகிய நாராயணன் இயங்குகின்றான். நாரங்கள் என்றால், பிரபஞ்சத்தில் பரவியுள்ள அனைத்துப் பொருள்களின் தொகுதியும் உயிர்ப்பொருள்களின் தொகுதியும் ஆகும். அயனம் என்றால் இவைகளை இயக்குபவன் என்பது பொருள். எனவே இந்த நாரங்களை இயக்குபவனை, இவைகளுக்குத் தன் சக்தியை அருளுபவனை நாராயணன் என்று துதிக்கின்றோம். இவ்விதமாக உயிரற்ற எல்லாப் பொருள்களிலும், உயிர் தத்துவங்களிலும், இறைவன் பரவி நிற்பதைச் சேவித்த சான்றோர்கள், அவ் இறைவனை நாராயணன் விஷ்ணு என்னும் திருப்பெயர்களால் வணங்கினர். விஷ்ணு என்றால் எங்கும் பரவியிருப்பவன் என்று பொருள். இங்ஙனம் தாமே இயங்காத அனைத்துப் பொருள்களையும் உயிர்த்திரள்களையும் உடலாகக் கொண்டு இறைவன் இயங்குவதை, நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் பின்வருமாறு விளக்குகின்றார்.

திடவிசும்பு எரிவழி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே"

— திருவாய்மொழி.

வேதங்கள் நான்கு. அவைகளை விளக்க வந்த அங்கங்கள் ஆறு. நான்கு வேதங்களையும், நான்கு பிரபந்தங்களாகத் தமிழிலே அருளினார் நம்மாழ்வார். இந்நான்கு பிரபந்தங்களுக்கும், தமது ஆறு பிரபந்தங்களால் தமிழில் விளக்கம் தந்தருளிய திருமங்கையாழ்வார், இக்கருத்தையே அடியொற்றிப் பின்வருமாறு அருளுகின்றார் :

மண்ணாய் நீர்எரிகால்
மஞ்சுலாவும் ஆகாசமுமாய்ப்
புண்ணார் ஆக்கை தன்னுள்
புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன்
விண்ணார் நீள்சிகர
விரையார் திருவேங்கடவா
அண்ணா வந்தடைந்தேன்
அடியேனை ஆட்கொண் டருளே

— பெரிய திருமொழி.

உலகில் உள்ளன எல்லாம் இறைவனுன ஒரே தத்துவம் (அத்துவிதம்) என்று ஒரு சாராரும்! உலகில் உள்ளனவெல்லாம் இறைவன், உயிர்கள் என்ற இரண்டு தத்துவங்கள் (துவைதம்) இவ் இரண்டும் தனித்து இயங்குகின்றன என்று வேறொரு சாராரும் உலகினை விளக்க முயன்றுர்கள். இவ்விரு கொள்கைகளையும் சமன்செய்யும் வகையில், உலகில்உள்ள தத்துவங்கள் மூன்று என்றும், அவை கள் முறையே அசித்து, சித்து, ஈசுவரன் என்றும்; அசித்து சித்துக்கு உடலாக அமைந்துள்ளது போன்றே அசித்தவும் சித்தும் ஆகிய இரண்டும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்து ஒருமைப் பாட்டில் இயங்குகின்றது என்றும் முழுத்தெளிவை உண்டாக்கியது விசிட்டாத்துவிதம் என்னும் ஸ்ரீவைஷ்ணவத் தத்துவக்கொள்கை.

நம்மாழ்வார் தாம் அருளிச்செய்த திருவாய் மொழியின் முதற் பாசுரத்திலேயே,

"துயர் அறு சுடரடி தொழுதுஎழு என் மனமே" என்று, தன் திருவுள்ளத்திற்கு நியமித்தருள்கின்றுர். இதனுல் பெறப்படுவது துயரால் அவதிப்படும் மனம் வேறு; அதனை அவதிப்படுத்தும் துயர் வேறு: அத்துயரை அறுக்கின்ற சுடரடி வேறு என்பதாகும். தொழுது எழும் மனம், சித்து அல்லது உயிர். துயர் என்பது உடலும் ஐம்பூதங்களாலான உலகமும், அதாவது அசித்து; துயரறு சுடரடி என்பது, இறைவனுகிய ஈசுவரன். இறைவனுக்குத் திருமேனி உண்டென்பது இதனுல் தெளிவாகின்றது. இறைவன் அடி என்பார், தெய்வப் புலவரான திருவள்ளுவரும்.

உயிர் தத்துவங்கள் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து உழல்வதன் காரணம், அவைகள் செய்யும் வினைகளே. திருமாலும் அவ்வப்போது பிறந்தருள் கின்றுர். இதனை அவதாரம் என்பர். திருமால் தொடர்ந்து அவதரித்தருள்வதன் காரணம். அவனது ஒப்பற்ற கருணையே. நாம் பிறப்பது நம் ஞான ஒழுக்கக் குறைவுகளாலே. ஆனுல் திருமால் பிறப்பது உயிரினங்களாகிய நம்மை ஆட்கொண்டு காப்பதற் காகவே. உயிர்களாகிய நாம் வினைவசத்தால் பிறக் கின்றேம். ஆனுல் இறைவனுகிய திருமாலோ கிருபா வசத்தினுல் அவதரிக்கின்றனர். திருமால் நம் முடைய பிறவித் துயரை அறுப்பதற்காகவே பல பிறவிகளை எடுக்கின்றுர் என்பதனை நம்மாழ்வார் பின் வரும் திருவிருத்தப் பாடலில் அருளிச் செய்கின்றுர்.

"பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா
ஒழுக்கும் அழுக்குடம்பும்,
மந்நின்ற நீர்மை இனியான்
உராமை, உயிர்அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்
இமையோர தலைவா?
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன்
செய்யும் விண்ணப்பமே"
— திருவிருத்தம்.

திருமாலாம் எம்பெருமானுடைய அவதாரங் களில் சிறந்தவை பத்து. இவைகளைப் பின்வருமாறு பெரியாழ்வார் வரிசைப்படுத்தி அருளிச் செய்கிறுர்.

தேவுடைய மீனமா யாமையாய்
ஏனமா யாயாய்க் குறளாய்,
மூவுருவி ராமனுய்க் கண்ணனுய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்,
சேவலொடு பெடையன்னம் செங்கமல
மலரேறி யூச லாடி
பூவணைமேல் துதைத்தெழுசெம் பொடியாடி
விளையாடும் புனல் அரங்கமே
— பெரியாழ்வார் திருமொழி.

இதன்படி திருமால் மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், தசரதராமன் பல ராமன் கண்ணபிரான், கல்கி என்னும் பத்து அவ தாரங்கள் எடுத்தமைபற்றிய விவரம் தெரிகின்றது. திருமால் இதுவரை எடுத்தருளிய அவதாரங்கள் ஒன்பது தான். பத்தாவதாகிய கல்கி அவதாரம் என்பது இனி கலியுகத்தின் இறுதியில் நிகழவிருப்ப தாக நூல்கள் கூறுகின்றன எனவே இதுவரை எடுத்த அவதாரங்கள் ஒன்பது. மச்ச கூர்ம வராக நரசிம்ம அவதாரங்கண் முன் நான்காகவும், பரசுராம தசரத ராம பலராம கிருஷ்ண அவதாரங்களைப் பின் நான் காகவும், கொண்டால், நடுநாயகமாக அமைந்திருப்பது வாமன திரிவிக்கிரம அவதாரமேயாகும். "முன்னம் குறள் உருவாய் மூன்றடிமண் கொண்டு, அளந்த மன்னன் சரிதை" என்னும் வாமன திரிவிக்கிரம அவ தாரத்தின் அருமை பெருமைகள் அளப்பரியன; அதன் ஆழ்ந்த தத்துவ நுண்பொருள்கள் ஆராய்ந்து உணர்ந்து மகிழத்தக்கன.

உலகில் அசித்து எனப்படும் உயிரற்ற அசை வற்ற எல்லாப் பொருள்களுக்கும், சித்து எனப்படும் உயிருடைய அசையும் பொருளுக்கும் தலைவனுகி விட்டதால், மாபலி என்பவன் 'சக்கரவர்த்தி' என்னும் சிறப்பை அடைகின்றுன். இரணியனுக்கும் இராவணனுக்கும்கூட இப்பட்டம் கிடையாதே: குலந் தான் அசுரகுலம்,குணம் அசுர குணமல்லவே; இவன் 'செய்தொழில் வேற்றுமையால்' சிறப்படைகின்றுன். மாபலி செய்த தவறுதான் என்ன? தன்னிடம் உள்ள உலகப்பொருள்களையும், பொறுப்புக்களையும், உயர்ந் தோர்க்கு வழங்கிவிடவே, யாகம் செய்யத் தொடங்கு கின்றுன். இந்த யாகம், தியானம் தானே.

இத்தகைய நிலையில், தேவர்கள் என் தலை தெறிக்கத் திருமாலிடம் ஓடி முறையிடவேண்டும். மாவலிக்கு எதிராக! தேவர்கள் உயர்ந்தவர்கள் ஆயிற்றே! அவர்கள் மாவலிடம் ஏதோ ஒரு அவசிய மான, விலக்கவேண்டிய தவறு அல்லது செயலைக் கண்டார்கள் போலும். அதை அவர்கள் தேவாதி தேவனிடம்தேவரகசியமாகவே விண்ணப்பித்தார்கள். தேவர்களின் வேண்டுகோளைத் திருச்செவி சார்த்திய திருமால், அக்குறையைத் தீர்ப்பதாக ஒப்புக் கொண்டார்.

கவிச்சக்கரவர்த்தியாம் கம்பநாட்டாழ்வார் தேவர் கள் கூறிய மாவலியின் தவறான செயலை வெளிப் படையாகத் தம் பாடலில் கூறாமல், கம்பசூத்திர மாகவே சுட்டுகின்றார்:

> "ஆயது அறிந்தவர் வானவர் அந்நாள்
> மாயனை வந்து வணங்கி இறந்தார்
> தீயவன் வெந்தொழில் தீர்என நின்றார்.
> நாயகனும் அதுசெய்ய நயந்தான்"
> — வேள்விப்படலம், 20.

"அது செய்ய நயந்தான்!" எது செய்ய நயந் தான்? திருமால் வாமன உருவில் மாவலியிடம் எழுந் தருளி, தானும் ஒரு வேள்வி இயற்றுவதாகவும், அதற்கு மூவடி மண் தேவை என்றும் வேண்டினான். மாவலி திருமாலின் உட்கருத்தை உணராமல் ஒப் புதல் தந்துவிட்டான். "மூவடி மண்தா!" என்றதை மண்ணுலகச் சொற்களாகக் கருதிக்கொண்டான் மாவலி. மாவலியிடம் கேட்டுப் பெற்ற வேண்டு கோளைச் செயற்படுத்த முனைந்த திருமால், தன் கருத்துப்படி செயற்படலானார்.

பிரபஞ்சத்தில் உள்ளவை சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்றே. அசித்து, சித்து இவையே பிரபஞ்சம் என்று எண்ணி வாழ்ந்தான் மாவலி. சகல பிரபஞ்சத்தையும் வென்று, தன் ஆட்சியில் அடக்கி விட்டதாகவும் நினைத்திருந்தான். இவைகளுக்கெல் லாம் தானே உரிமையாளன் என்றும், தலைவன் என்றும் எண்ணி அவைகளைத் தானமாக வழங்கலா னான். இதற்கு மாறாக, அசித்து, சித்து அனைத்தும், ஈசுவரனாகிய தனக்கே அடக்கம் என்று அறிவுச் சுடர் கொளுத்தத் திருவுள்ளம் பற்றினார் திருமால் மாவலியும் இதை உடனே உணர்ந்து கொண்டான். தன் பிழையைத் திருத்திக்கொள்ள முற்பட்டான். அசித்து வடிவமான சகல உலகப் பொருள்களையும் திருமாலின் திருவடியிலே அர்ப்பணிக்கவும், திருமால் அவைகளைத் தன் திருவடியில் அடக்கிக் கொண்டான். அடுத்தபடி மாவலி தன் ஆட்சியில் இருப்பதாக எண்ணிய, சித்து வடிவிலான சகல உயிர் தத்து வங்களையும் திருமாலினுடையதே என்று மாவலி ஒப்புக்கொண்டான். அவைகளையும் திருமால் இரண் டாவதாகத் தன் திருவடியில் ஏற்றருளினான். மூன் றாவது தத்துவமான ஈசுவரன், தன் ஆளுகையில் இல்லை என்றும், எனவே ஈசுவரனைத் தானமாகத் தரு வதற்குத் தன் இயலாமையைத் தாழ்மையுடன் தெரி வித்துத் தலைவணங்கினான் மாவலி. உடனே திருமால், தானே ஈசுவரன் என்று தன் முழுவடிவம் காட்டியருளி தன்னை உணர்ந்து வணங்கித் தாழ்ந்து பணிந்த மாவலி யின் தலையைத் தன் திருவடியில் பொருத்தி, அவனை யும் ஆட்கொண்ட அதிசயத்தை வியந்து போற்று கின்றார் நம்மாழ்வார்.

> "ஆழி யெழச்சங்கும் வில்லு மெழ, திசை
> வாழி யெழத்தண்டும் வாகு மெழ, அண்டம்
> மோழை யெழமுடி பாத மெழ, அப்பன்
> ஊழி யெழவுல கங்கொண்ட வாறே"

மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தவரான அருள்மாரியான திருமங்கையாழ்வார்.

> வெந்திறல் வாணன் வெள்ளி யிடமெய்தி அங்கோர்
> குறளாகி மெய்ம்மை யுணர,
> செந்தொழில் வேத நாவின் முனியாகி வைய
> மடிமூன் றிரந்து பெரிதும்,
> மந்திர மீது போகி மதிநின்றி றைஞ்ச
> மலரோன் வணங்க வளர்சேர்
> அந்தர மேழி னூடு செலவுய்த்த பாதம்
> அது நம்மை ஆளும் அரசே

என்று, மாவலிக்குத் திருமால் அருள்புரிந்த மாட்சி மையினைப்பொருள் பொதுளப்பாடிப் புகழ்ந்துள்ளார்.

இங்ஙனம் இறைவன் 'முன்பு, தான் மிகத் தாழ்ந்த நிலையனதலை மாவலி உணர்ந்தது ஏன். எல்லாவற்றிற்கும் கீழான பாதாளம் சேர்ந்தான் என்ற குறிப்பாகக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் நிலவியுள்ள, சிரஞ்சீவியான இம் முப்பொருள் உண்மையாகிய தத்துவத் திரயத்தைச் செம்மை யுற உணர்ந்த மாவலியும் சிரஞ்சீவியாகத் திகழ் கின்றானும்.

அசித்து, சித்து ஈசுவரன் என்ற முப்பொருளால் ஆனதே உலகம் என்பதை உணர்த்த வந்த திரிவிக்கிரம அவதாரத்தின் மேன்மையை நெஞ்சை யள்ளும் செஞ்சொற் சிலப்பதிகாரம் என்ற செழுந் தமிழ்க் காப்பியத்தில் இளங்கோவடிகள் "மூவுலகும் ஈரடியால் முறைநிரப்பா வகைமுடியத் தாவிய சேவடி" என்று புகழ்ந்து துதிக்கின்றார். இத்தகைய திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே? கரியவனைக் காணாத கண் என் கண்ணே? நாராயணா என்னாத நாஎன்ன நாவோ?

திருக்குறளாம் தமிழ மறையை அருளிய செந்நாப்போதாரும், ''மடியிலா மனனவன் எய்தும், அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு'' என்று, இவ்வாமன திரிவிக்கிரம அவதாரத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டுப் போற்றியிருத்தல் காணலாம். ஆழ்வார் களும், கம்பரும், இளங்கோவடிகளும், தெய்வப் புலவர் திருவள்ளுவரும் வாழ்த்தி வணங்கிய மாண் புடையது வாமன அவதாரம். திருமால் நெறியின் அடிப்படையான கொள்கையை உலகோர் உணர்தற் பொருட்டுத் திருமால் உகந்தருளிய, நடுநாயகமான வாமன—திரிவிக்கிரம அவதாரத்தின் மாட்சிமைதான் என்னே!

சிற்றின்பப் பிரியன், கோபக்காரன். பேராசைக்காரன் இவர் களால் பக்தி செய்ய முடியாது. சாதி; வர்ணம், குலம் இவற்றை ஒழித்த சூரனுலேயே பக்தி செயய முடியும்.

— கபீர்



கீதை - ஒரு வாழ்வியல் நெறி

நாகராஜ ஐயர் சுப்பிரமணியம், எம்.ஏ.

தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இந்து மதம் ஒரு வாழ்வியல் நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே இந் நெறியின் குறிக்கோள். அவ்வாழ்க்கை மூலம் **ஆத்மா** அடையும் நிறைவே இதன் பயன். இக் குறிக்கோளையும் பயனையும் எய்து வதற்கு ஆத்மா மேற்கொள்ளும் முயற்சியில் தோன்றாத் துணையாக நின்றருளும் உயர் தனிச் சக்தி என்ற நிலையிலேயே **இறை** என்ற மெய்ப் பொருள் இந்து மதத்தில் இடம் பெறுகின்றது,

'வாழ்வாங்கு வாழ்தல்' என்றால் ஒருவர் தானும் வாழ்ந்து, ஏனையவர்களையும் வாழவைத்தல் என்பது பொருள். இதற்குத் தடையாக அமையும் பண்பு சுயநலம்; ''நான் மட்டுமே உலக நலன்களை முழுமை யாகத் துய்க்க வேண்டும்'' என்ற பேரவா. இது முதலில் உலகியல் அம்சங்களிற் 'பற்று' ஆக முளை கொண்டு வளர்ந்து ஈற்றில் 'துயர்' என்ற விளைவைத் தருகிறது. துயரத்திலிருந்து விலகவேண்டும்; ஆனால் வாழ்க்கையை விட்டு விலகக்கூடாது. இதற்கு ஒரே வழி பற்றை விடுதல்.

ஒரு பற்றினை விடுவதானால் இன்னொன்றைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்பது இயற்கை நியதி. துயரத்திற்கு மூலமான உலகியற் பற்றை விடு வதற்கு முயலும் ஆத்மாவுக்கு அதற்கு எதிரான இன்னொரு பற்று பேரானந்தமயமான பற்று — தேவைப்படுகிறது. அந்த இன்னொரு பற்றே 'கற்பனை கடந்த சோதி கருணையே வடிவமான' **இறை** பரம் பொருளான இறை மீது பற்று வைப்பதன் மூலம் உலகியல் துயரங்களிலிருந்து விடுபட்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பது இந்துமத வாழ்வியல் நெறியின் சாராம்சம்.

இதனைப் பேசும் வகையிலே இந்துத் திரு நூல்கள் பலவும் — வேத இலக்கியங்களிலிருந்து இன்றைய விளக்கவுரைகள் வரை — தாம் தாம் முக்கியத்துவப்படுத்தும் அம்சத்திற்கேற்ப ஓரளவு வேறுபடுகின்றன. இந்த வேறுபாடுகள் அவை எழுந்த காலச் சமூக சிந்தனை வளர்ச்சிப் போக்கு களைப் பிரதிபலிப்பவை. குறிப்பாக, உபநிடதங்களும் அவற்றினின்று ஊற்றெடுத்த தத்துவங்களும், **இறை** பற்றியும் **ஆத்மா** பற்றியும் அறிவுபூர்வமான விளக்கம் தரும் முயற்சியிலேயே அதிக கவனம் செலுத்தின. பக்தித் திருநூல்கள் பலவும் **இறையை** அடை முயலும் ஆத்ம வேட்கையினைப் புலப்படுத்துகின்றன.

உண்மையிலே, **இறை** பற்றி ஆராய்வதோ அல்லது அதை அடைய முயல்வதோ இவ்வுலக வாழ்க் கையை மறுத்துத் தப்பியோடிப் போதல் என்ற முடிவைக் கொண்ட முயற்சிகள் அல்ல. அப்படித் தப்பியோடும் முயற்சியான கோழைத்தனத்திற்கு இந்து மதத்தில் இடமில்லை. **இறைபற்றிய ஆய்வு அல்லது அடைவதற்கான முயற்சி என்பவை, இவ்வுலக வாழ்வில் எதிர்ப்படும் பிரச்சினைகளைத் துணிவுடன் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை அளிப்பன என்றே கொள்ளவேண்டும்.** மேற்படி நூல்களில் உயத்துணர் பொருளாக இருந்த இந்த உண்மையை வெளிப்படை யாக எடுத்துக் காட்டிய தனிப்பெருமை இதிஹாசக் கனியாகிய **பகவத் கீதைக்கே** உரியதாகும்.

கீதை எழுந்த இடம் ஒரு போர்க்களம். அங்கே முரண்பாடு கொண்ட இரு அணியினர் தத்தமது வல்ல மைகளைக் காட்ட முயல்கிறார்கள். அறம் சார்ந்த அணியினனான அர்ச்சுனன் பந்தபாசங்களாற் பாதிக்

கப்பட்ட நிலையில் கோழையாகி, போர்க்களத்தை விட்டுத் தப்பியோட முயல்கிறான்.

இந்த உலகமே ஒரு போர்க்களம்தான். இங்கு பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட பல அணியினர். உளராயினும் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட ஒரு விடயத்தில் இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்பர். இவற்றில் ஒரு அணி சமூக நலனை முதன்மைப்படுத்தி நிற்கும். மற்ற அணி சுயநலனைக் கருத்திற் கொண்டிருக்கும். சமூக நலன் கருதும் அணி அறச்சார்பானது. சுயநல அணி பொய், சுரண்டல் ஆகிய பண்புகளுடன் தொடர்பு கொண்டிருக்கும். இந்த இரு அணிக்கும் புறம்பாக நடு நிலை என்ற ஒரு அணி இருக்கமுடியாது. அப்படி நடு நிலை வகிப்பதாகக் கூறிக் கொள்பவர்கள் தமது சுய நலம் காரணமாக, பிரச்சினைகளிலிருந்து தப்பியோடும் கோழைகளேயாவர். எனவே அவர்களும் சுயநல அணியை ஆதரிப்பவர்கள் என்றே கொள்ளப்படவேண்டும். **நீதிக்கும் அநீதிக்கும் இடையில் எவரும் நடுநிலை வகிக்கமுடியாது.**

சமூக நலச் சார்பான அணியில் போராட வந்தவர்களை அவர்களது ‘சமூக உறவு’ நிலைகள் கட்டுப்படுத்த முயலும். உறவா ? அல்லது கடமையா ? என்ற வினா எழும். அர்ச்சுனனுக்கும் இதுதான் நிகழ்ந்தது. அன்றாட வாழ்வில் நாம் காணும் பலர் அர்ச்சுனர்களே. சமூக நலன், நீதி உரிமைப்போர், சுரண்டல் ஒழிப்பு என்றெல்லாம் முழங்கும் பலர் பிரச்சினை தமக்கு நேரே முகங்கொடுக்கும் வேளைகளில் பல்வேறு ‘தற்காப்பு உத்தி’களைக் கையாண்டு களத்திலிருந்து வெளியேறிவிடுகின்றனர். சந்தர்ப்பவாதமே அவர்களது ‘நீதி’யாக அமைந்துவிடுகின்றது. குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனன் மனம் பேதலித்து நின்ற நிலை இதுதான்.

> “உறவினர்களும் வணக்கத்துக்குரியவர்களும்
> நண்பர்களுமான எதிரணியினரை நான்
> எதிர்க்கலாமா ?” இது அர்ச்சுனன் உள்ளத்தில்

எழுந்த வினா. இத்தகையவர்களை அர்ச்சுனன் இப்பொழுதுதான் எதிர்க்கவந்துள்ளானா ? இல்லை. இதற்கு முன்பும் பலதடவை எதிர்த்துக் குரல் எழுப்பியவன். போர் புரிந்து தோற்கடித்தவனுங்கூட. அப்படியானால் இப்பொழுது மட்டும் இந்தப் பந்தபாச உணர்வு ஏன் ஏற்பட்டது ?

இது மனித இயல்பு. தன் சொந்த ஆளுமையைக் கட்டியெழுப்பிப் புகழடைய முயலும் ஒருவன் அதன் ஆரம்பக் கட்டத்தில் பந்தபாசங்களுக்கு அப்பால் தன் வளர்ச்சியிலேயே குறியாக இருப்பான் தனது சுய புகழுக்காக உறவினர், ஆசிரியர், நண்பர்கள் ஆகியவர்களைக்கூட எதிர்க்கத் தயங்கமாட்டான். ஆனால் பொது விடயம் என்ற நிலை வரும்பொழுது பந்தபாசங்களைக் காரணம்காட்டிக் களத்தைவிட்டு விலகமுயல்வான். இந்த மனித இயல்பின் உருவகமே அர்ச்சுனன்.

இந்த ‘மனித இயல்பே’ உலகியல் வாழ்க்கையில் மயக்கத்துக்கும் குழப்பத்துக்கும் துயரத்துக்கும் காரணமாகின்றது.

உலக நலன்கள் முழுவதையும் தானே துய்க்க வேண்டும் என்று முயல்பவன் துரியோதனன். அறச்சார்பான உரிமையை முன்வைத்துப் போராடுபவன் தருமன். ஒன்று பற்றின் வடிவம். மற்றது சமூக நலனின் வடிவம். இரண்டுக்கும் நடுவில் கோழைத்தனமாகத் தப்பியோட முயல்கிறது தனிமனித இயல்பு. பற்று அழிக்கப்படவேண்டியது. அறம் வெற்றி பெறவேண்டும். இதற்காக நடைபெறும் போராட்டத்தில் தனிமனிதன் கோழையாகிவிடக் கூடாது. அவனுக்கு ஒரு சமூகப் பணி உண்டு. அதை அவனுக்கு உணர்த்தவும் ஊக்கமளிக்கவும் ஒரு வழிகாட்டி தேவை. அந்த வழிகாட்டிதான் பார்த்த சாரதியாகிய கண்ணபிரான் ; **இறை** என்ற மெய்ப்பொருளின் அவதார நிலை.

“போர்க்களத்தை விட்டுவிட்டு என்னிடம் வா” என்று கண்ணன் அர்ச்சுனனை அழைக்கவில்லை. அதே போல “உலகத்தை விட்டுவிட்டு என்னிடம் வா” என இறை என்ற மெய்ப்பொருள் ஆத்மாவை அழைக்கவில்லை.

“நீ வாழவேண்டியவன். உன் வாழ்க்கைக்கு ஒரு நோக்கு உண்டு. அதுதான் சமூகத்துக்கு நீ ஆற்றவேண்டிய பணி. அந்தப் பணியைப் புரியும் பொழுது பந்தபாசங்களால் மயக்கமடையாதே. கோழைத்தனத்தால் வாழ்க்கையை விட்டு விலகியோட முயலாதே”. இது கண்ணன் காட்டிய வழி.

ஒரு செயலைச் செய்யும் பொழுது அதன் பலனையும் எதிர்பார்ப்பது மனித இயல்பு. இது தவறல்ல. ஆனால் இந்த எதிர்பார்ப்பு தனது நலனை மட்டுமே கருத்திற் கொண்டதானால் செயலில் குறைபாடு நிகழும் ; அச்செயலால் ஏனையவர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுவர். அதன் விளைவு துன்பமும் துயரமும் ஆகவே அமையும். எனவே பலனை எதிர்பார்க்காதே என்று கீதை போதிக்கிறது.

பலனை எதிர்நோக்காவிட்டால் செயலூக்கம் குன்றிவிடுமே என்ற வினா எழுகின்றது. உண்மையே. இதற்கு விடை ; செயற்பலனைத் துறப்பது என்பது

முற்றிலும் பலன் கருதாது செயல்புரிவது என்பது அல்ல. எந்தச் செயலும் அதற்கொரு விளைவையும் கொண்டே அமையும். எனவே, அந்த விளைவு அல்லது பலன் தனியொருவனுகிய தனக்கு மட்டும் கிடைப்பதாகக் கொள்ளுதல் வேண்டும். இதனையே **கீதை** உணர்த்துகிறது.

இப்படிச் செயற்பலனைத் துறந்து செயல்புரியும் போது ஆத்மாவுக்கு - தனிமனிதனுக்கு - ஒரு பற்றுத் தேவைப்படுகிறது. அதுதான் சமூகப் பற்று. சமூகம் என்றால் யார்?, கிராமம் என்றால் யார்? நாடு என்றால் யார்? உலகம் என்றால் யார்? இந்த வினுக்கள் எழுகின்றன. இந்த அனைத்தையும் இணைத்து இவற்றுக்கு அப்பால் இயற்கையையும் கடந்த ஒரு பொருளாகவே **இறை** என்ற மெய்ப் பொருள் அமைகின்றது. சமூகம், நாடு, உலகம் என்ற பெயர்களால் சுட்டியுணரப்படுவது இம் மெய்ப் பொருள்தான். கீதையில் கண்ணன் காட்டும்

விஸ்வரூபம் இதனை உறுதி செய்யும்.

"எல்லாக் கருமங்களையும் என் கருவியாக
நின்று செய்வாயாக!"
"என்னையே முழுமையாகச் சரணடைவாயாக. உன்னை
அனைத்துப் பாபங்களிலுமிருந்து நான் விடு விப்பேன்"

கண்ணன் அருச்சுனனுக்கு இட்ட கட்டளையும் அளித்த உறுதிமொழியும் இவை. சமூகமும் நாடும் உலகமும் தனிமனிதனை நோக்கி இடும் கட்டளையும் அளிக்கும் உறுதிமொழியும் இவைதான்.

இதனால் சுயநலம் வேரோடு களையப்படுகின்றது. 'நான் செய்தேன்' என்ற கருவத்திற்கு இடம் இல்லாமற் போகிறது. இன்பம் துன்பம் ஆகிய இரு விளைவுகளையும் சமமாக மதிக்கும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது. இந்த நிலை ஏற்பட்டால் குடும்ப உறவு நிலைகளை விட்டு ஓடும். 'சித்தார்த்தத் துறவு'க்கோ உலகியல் வெறுப்புக்கோ அடிப்படையே இல்லாமற் போகிறது. சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகுக்கும் ஆற்றும் கடமைகளே இறைவழிபாடு என்ற புனித நிலையை எய்துகின்றன.

கீதை சாங்கியம், கர்மம், பக்தி என்பவை பற்றி விரிவாகப் பேசும்.

சாங்கியம் — நிறையறிவு — இது சமத்துவ உளப் பாங்கு
கர்மம் — செயல்திறன் — சுயபலன் கருதாப் பணி.
பக்தி — அன்புள்ளம் — தன்னையே வழங்கும் நிலை.

இந்த மூன்றும் வாய்க்கப்பெற்றால் "வையத்துள் வாழ்வாங்கு வாழும் பேறு கிடைக்கும். இந்த வாழ்க்கை ஆத்மாவுக்கு நிறைவு தரும்.

நிறைவு — நிம்மதி — அமைதி — சலனமற்ற நிலை. இந்துத் திருநூல்களிலே பேசப்படும் வீடுபேறு (முத்தி) என்பதன் விளக்கம் இதுதான்.


இந்த வகையில் விளங்கிக்கொள்ளும்போதுதான் இந்துமதம், எல்லாச் சமூகத்துக்கும் எல்லாக் காலத்திற்கும் பயன்தரக் கூடிய ஒரு வாழ்வியல் நெறி என்பது புலப்படும்; இந்த வாழ்வியல் நெறியின் உயர்நிலையினை எடுத்துக் காட்டும் நூல் களில் தலைமையானது **பகவத் கீதையே** என்பதும் உறுதியாகும்.

குரு, கோவிந்தன் இருவரும் நிற்கின்றனர். யார் காலில் விழுவேன்? குருதான் போற்றத் தகுந்தவர். அவர் தானே கோவிந்தனைக் காட்டிக் கொடுத்தார்.

— கபீர்

பக்தன் ஒருவன் செய்யக் கூடிய உயரிய வழிபாடு, நடமாடும் தெய்வங்களை வழிபடுதலே ஆகும். ஆறு அல்லது பன்னிரண்டு ஏழை மக்களை உங்கள் இல்லத்துக்கு அழைத்து வந்து, தத்தம் சக்திக்கு இயைய அவர்களை உபசரியுங்கள். நாராயணர்களாகக் கருதி அவர்களுக்குச் சேவை செய்யுங்கள்

— *விவேகானந்தர்*



சங்கப் பாடல்களில் புராண மரபியல் கூறுகள்

டாக்டர் நா. செயராமன்

தமிழ் இணைப்பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,

(1) ''Mythology'' எனும் ஆங்கிலச் சொல்லைத் தமிழில் புராணமரபியல் எனலாம். அச்சொல்லை விளக்கும்போது ஒருசாரார் அது வெறும் பழைய மரபான கதை எனக் கூறுகின்றனர். மற்றொரு சாரார் மனித வாழ்விலும் உலக இயற்கையிலும் உள்ள அரிய உண்மைகளைச் சுமந்து வரும் வாகனங்களே புராணமரபியல் கதைகள் என விளக்குவர்.

(2) இவ்விரு கூற்றுக்களையும் உள்ளடக்கி வரையறை கூறும்போது, ''புராண மரபியல் என்பது மனிதர்கள், மனிதனுக்கு அப்பாற்பட்டவர் ஆகியோரின் அடிப்படைக் கூறுகளைக் குறியீடாகக் கொண்டு விளக்கும் கதை அல்லது கதைக்கூறுகளின் தொகுதி ஆகும்'' என்று கூறுவர்.

(3) ''தொடக்ககால எண்ணங்களுக்குக் கொடுத்த முதல் வடிவம் மரபுக் கதைகளாகும்'' என்பர். தொன்மைமிகு நாகரிகங்களைக் கொண்ட கிரேக்கம், எகிப்து, இந்தியா முதலிய நாட்டு மக்களிடையே இத்தகைய புராண மரபுக் கதைகள் வழக்கிலிருந்தன.

(4) இந்தியப் புராண மரபுக் கதைகள் வரலாற்றுச் சூழல்களையும் மன்னர் மரபு மாற்றங்களையும் படையெடுப்புக்களையும் பொருளாதார நிலைகளையும் சமுதாய அமைப்பினையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

(5) எகிப்து நாட்டுப் புராணங்கள் இயற்கைப் பொருள்களை விளக்கவே முதலில் எழுந்தன. பின்னர் அவை மன்னர் மரபுகளை விளக்கின; இறுதியில் மெய்யறிஞரது கருத்துக்களைக் குறியீடாக விளக்கத் தொடங்கின என்பர். ஆயின் இந்தியப் புராணங்கள் வழிபாட்டையும் மெய்ப்பொருளையும் விளக்கவே தோன்றின என விளக்குவர்.

புராண மரபியலைப் பொறுத்தவரை இந்தியா முழுவதும் பொதுவாக விளங்கக் காணலாம், காரணம் சமய அடிப்படையில் இந்தியா ஒருமைப்பாடுடன் விளங்குவதும் புராண மரபியல் பெரும்பாலும் சமய அடிப்படையில் விளங்குவதும் அதற்குக் காரணங்களாகும்.

(6) தொல்காப்பியர் கூறும் தொன்மை எனும் வனப்பு புராண மரபுக் கதையினையே குறிக்குமென்பார் தமிழண்ணல். தொல்காப்பியர் கருப்பொருளுள் தெய்வத்தை முதன்மையாக வைத்தபோதும் உள்ளுறை தெய்வம்ஒழிந்த கருப்பொருளில் அமையுமென இலக்கிய மரபினைக் கூறியமையால் அகப்பாடல்களில் தெய்வம் தொடர்பான கதைகள் நேரடியாக இடம்பெற இயலவில்லை.

மாயோன், சேயோன், இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களை நானிலத் தெய்வங்களாகத் தொல்காப்பியர் வகுத்துள்ளார். ஆயின் முருகன் மட்டுமே குறிஞ்சிப் பாடல்களில் அதிகம் பேசப்படுகிறான். ஏனைய திணைப் பாடல்களில் அவ்வத் திணைக்குரிய கடவுள் இடம்பெறுவது அரிதாக உள்ளமை குறிக்கத்தக்கது. புறத்திணையிலும் வெறியாடலைக் குறிக்கிறார் தொல்காப்பியர். அங்குக் கொற்றவைநிலை எனப் பெண்தெய்வ வழிபாட்டையும் குறிக்கிறார்.

சங்கப்பாடல்களில் புராண மரபியலை இரு வகைகளில் காணலாம்.

(1) கடவுள் பாடல்களில், (2) பிற அகத்திணை, புறத்திணைப் பாடல்களில் என இரு பிரிவுகளில் காணலாம். கடவுள் பாடல்களில் பரிபாடல் திருமுருகாற்றுப்படை, பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல்கள் ஆகியவை அடங்கும். ஏனைய தொகை நூல்களும் பத்துப்பாட்டும் தனிவகையாக அமையும்.

முன்னது கடவுளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருத்தலின் அவற்றுள்புராண மரபியல் கூறுகள் மிகுதியாகவும், நேரடியாகவும் அமைந்துள்ளன. பின்னது கடவுளோடு நேரடித் தொடர்பின்றியிருத்தலால் புராண மரபியல் கூறுகள் குறைவாகவும் உவமை முதலிய வழிகளிலும் அமைந்துள்ளன.

தமிழில் காணப்படும் புராண மரபியல் கூறுகளை இருவகைப்படுத்தலாம்.

(1) கடவுள், (2) பிற

கடவுள்களாக,

(1) திருமால், (2) முருகன், (3) சிவன், (4) பலராமன், (5) இந்திரன், (6) நான்முகன், (7) கொற்றவை.

ஆகியோர் பேரிடம் பெறுகின்றனர்.

இந்தியப்புராண மரபியலில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் முப்பெரும் கடவுளர் எனப் போற்றப்பெறுவர். அது ஞாயிறு வழிபாட்டின் வேறு வடிவமென மொழிவர். கதிரவன் தன் வெம்மையால் வளப்படுத்துகிறான்; ஒளியால் காக்கிறான்; நெருப்பால் அழிக்கிறான். இத்தகைய ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் முச்செயல்களே பின்னர் முக்கடவுளுக்குரியதாக வகுக்கப்பட்டன என்பர்.

(8) ஆயின் காலப் போக்கில் படைப்பாற்றல் தன் பெருமையை இழந்ததால் பிரமன் பெருமை இழந்து தலைமை நிலையிழந்தான். ஏனைய திருமாலும் சிவனுமே பெரும் கடவுளராக இரு பெரும் சமயத்தவரால் போற்றப்படுகின்றனர்.

நான்முகன் தலையைக் கொய்தல், நான்முகன் குட்டுப்படல், சிறைப்படல் போன்று நான்முகன் பழிப்புக்கும் ஆளாகும் நிலை பின்னர் ஏற்பட்டு விட்டது.

அதுபோலவே முதலில் இந்திரனே சிறப்பிடம் பெற்றிருந்தான் என்றும் இந்திரனுக்கும், வருணனுக்கும் போர் நிகழ்ந்தது என்றும் கூறப்படும். அக்குறிப்பு,

(9) அந்தணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரினையே குறிக்கிறது என விளக்குவர்.

இவ்வாறு ஒவ்வொரு கால கட்டத்தில் ஒரு தெய்வம் தலைமை பெற்றதாகவும் சிறப்புப் பெற்றதாகவும் கூறப்படும். இது மன்னர் மரபு மாற்றங்கள் போன்ற காரணங்களால் ஏற்படுகின்றதென்பர்.

திருமால்

திருமாலைப் பற்றி 7 பரிபாடல்கள் உள்ளன. (பரி 1, 2, 3, 4, 13, 15 பரி. திரட்டு. 1)

முப்பெரும் கடவுளுக்கு மேலானவன் திருமால் எனும் செய்தி ஈரிடங்களில் வலியுறுத்தப்படுகிறது (பரி. 3, 13). இவ்வாறு ஒவ்வொரு சமயத்தவரும் தம் கடவுளரே பெரியவரெனப் பேசும் மரபு முன்பே விளக்கப்பட்டது.

(10) திருமால் பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள நிலை (பரி. 1, 13) இரு பாடல்களில் குறிக்கப்படுகிறது. திருமால் இவ்வாறு கடலோடு இணைக்கப்பட்டுப் பேசப்படும் நிலை ஒரு குறியீடு என விளக்கப்படும். கடலுக்கு நடுவே நிலவுலகம் இருப்பதை விளக்கவே இது எழுந்ததென்பர்.

(11) திருமால் மூவடியால் உலகளந்தான் என்பது ஒரு புராணமரபுக் கதை (பரி. 3, முல்லைப் 3. கலித். 124) தொடக்க காலத்தில் சூரியனே முழுமுதற் கடவுளாகக் கருதப்பட்டான். அவன் மூன்று விதமாக உலகைச் சுற்றி வருவான் எனும் வானவியல் கருத்து உண்டு. அதனையே திருமால் மூன்றடியால் உலகளந்தார் என்ற கதையாக விளக்குவதாகக் கூறுவர். ஞாயிற்றின் மூன்று நிலைகளை விளக்குவதாகவும் கூறுவர்.

திருமாலின் கரிய நிறத்தைக் குறிக்கக் காயாம்பூ (பரி. 1) நீலமணி (பரி. 3) மேகம் (பரி. 15) ஆகியவை உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

திருமகள் அவனது மார்பில் வீற்றிருக்கும் செய்தி குறிக்கப்படுகிறது. (பரி. 1) காமன், சாமன் இருவருக்கும் அவன் தந்தை என்றும் (பரி. 1) சங்குநிற பலதேவனுக்குத் தமையன் என்றும் (பரி. 1, 15) உறவுகள் கூறப்படுகின்றன.

அவுணரை அழித்தான் என்றும் (பரி. 1) தேவர் முதலியோருக்குத் தலைவன் என்றும் (பரி. 3) பாற்கடலைக் கடைந்தான் என்றும் (பரி. 15) அவனது செயல்கள் கூறப்படுகின்றன.

இவைதவிரத் திருமாலின் பல்வேறு செயல்கள் அனைத்தும் ஒருங்கு திரட்டப்பட்டு அவதாரங்களாகத் தொகுத்து வழங்கப்பட்டன.

(1) மச்சாவதாரம், (2) கூர்மாவதாரம், (3) வராகம், (4) நரசிம்மம், (5) வாமனம், (6) பரசுராமன், (7), ராமன், (8) கிருஷ்ணன், (9) புத்தர் (10) கல்கி.

இவ்வாறு அவதாரங்களைத் தொகை செய்ததற்கு இருகாரணங்கள் கூறுவர்.

(1) கடவுளின் ஒருமைநிலையை நிலைநாட்டல். கடவுளுக்குப் பல வடிவம் தருவதைத் தவிர்த்து ஒன்றென நிறுவல்.

(12) 2. இந்துசமயத்தின் நெகிழ்ச்சியினை உணர்தல். யாராயிருப்பினும் எந்நிலையிலிருப்பினும் இறைநிலைக்கு உயர முடியுமென உணர்த்தல்.

(13) இவ்வவதாரங்களுள் கிருஷ்ணவதாரமே பொலிவும் சுவையும் உடையதாய்க் காதலும் வீரமும் கலந்ததாய் விளங்குகிறது. தமிழகத்து முருகன் போல வட நாட்டில் கிருஷ்ணன் சிறப்பிடம் பெற்றான் எனக் கூறலாம்.

(14) புராணங்களில் ஆயர்குலத்தலைவனாக விளங்கிய கிருஷ்ணன் மகாபாரதத்தில் ஆட்சி செய்யும் மன்னனாகவும் அறிவுறுத்தும் ஆசானாகவும் காணப்படுகிறான். இது காலப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம்.

ஏனைய அவதாரங்களை விடக் கிருஷ்ணன், இராம அவதாரங்களே பெரிதும் போற்றப்பட்டு இதிகாசங்களாக உருவெடுத்தன.

பரிபாடலில் திருமாலின் வராக அவதாரம் (பரி. 3, 13) நரசிம்ம அவதாரம் (பரி. 4; 10-24) ஆகியவை குறிக்கப்படுகின்றன.

வாமன அவதாரச் செய்தி ஓரிரு இடங்களில் குறிக்கப்படுகிறது. (பரி. 3; கலித். 124) திருமால் மூவடியால் உலகளந்த செய்தி ஞாயிற்றின் இயக்கத்தையே விளக்குமென முன்பு கண்டோம்.

இராமாவதாரமும், கிருஷ்ணவதாரமும் இராமாயண, மகாபாரதக் காப்பியங்களாக வடிவம் பெற்றதால் பெரிதும் பரவியது.

சங்கப் பாடல்களிலும் இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் உவமைகளாக வருகின்றன.

''வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே''
(அகம். 70)

(15) என்று இராமன் ஆலமரத்தில் உள்ள பறவைகளின் ஒலியினை அடக்கிய செய்தி அலர் அடங்கிய செய்திக்கு உவமையாக வருகிறது. இச் செய்தி கம்பராமாயணக் காப்பிய நிகழ்ச்சிகளில் காணப்படவில்லை; நாட்டுப்புறக் கதைகளில் வழங்கியிருக்கக்கூடும்.

இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட போது சீதை போட்ட அணிகலன்களை முறை மாற்றி அணிந்து கொண்ட குரங்குகள் உவமையாகக் கூறப்படுகின்றன (புறம். 378).

இராவணன் கைலையைப் பெயர்த்த காட்சி கலித்தொகையில் உவமையாக்கப்படுகிறது (கலித். 38).

பாரதக் கதை நிகழ்ச்சிகள் பல தொகை நூல்களில் குறிக்கப்படுகின்றன. கலித் தொகையில் பல நிகழ்ச்சிகள் உவமைகளாக வருகின்றன (கலித். 101, 104).

ஆயின் அகநானூறு, புறநானூறு, பதிற்றுப் பத்து ஆகியவற்றில் உள்ள குறிப்புக்களை நோக்கும்போது பாரத நிகழ்ச்சிகளைக் கதையாகக் கருதாமல் வரலாறாகக் கொண்டு தமிழ் மன்னர்களை அவ்வரலாற்றோடு இணைக்கக் காணலாம்.

பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனைப் பாடும் முரஞ்சியூர் முடிநாகராயர்,

''ஈரைம்பதின்மரும் பொருது களத்
தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்''
(புறம். 2)

என்று முன்னிலைப்படுத்திப் பாடுகிறார்.

பதிற்றுப்பத்தில்,

''பேஎ நலை மயங்கிய ஈரைம்பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை
யாண்மை''
(பதிற். 4)

என்று இச்செய்தி கூறப்படுகிறது. அகநானூற்றில்

''துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை''
(அகம். 233)

(16) என்று வரும் கூற்றினைக் கொண்டு சேரலாதன் பாரதப்போரில் பெருஞ்சோறு வழங்கவில்லை; பாரதப் போரில் மாண்ட முன்னோர்களுக்குப் பிண்டம் நல்கிய செய்தியையே இது குறிப்பதாக விளக்குவர்.

தமிழ் மக்கள் மகாபாரத நிகழ்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பர். வடவரது புராண நிகழ்ச்சியோடு தமிழரும் தங்களை இணைத்துக் கொண்ட நிலையையே இது விளக்குகிறது எனலாம்.

கண்ணனும் பலராமனும் பல பாடல்களில் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளனர் (நற். 32).

இவ்வாறு திருமாலின் செயல்களும் அவதார நிலைகளும் பரிபாடலில் கூறப்பட்டுள்ளன. இராமாவதார, கிருஷ்ணாவதாரச் செயல்கள் பரிபாடலில் காணப்படவில்லை; பிறதொகை நூல்களில் உவமைகளாக உள்ளன.

பாற்கடலில் துயில்கொண்டுள்ள திருமாலின் கொப்பூழிலிருந்து தாமரை மலர அதில் நான்முகன் உலகைப் படைத்தான் என்ற செய்தி கூறப்படுகிறது (திருமுருகு. 163-165).

'நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டின்''
(பெரும்பாண். 402-405)

இக்கதையில் படைப்பாளனாகிய நான்முகனை விடக் காப்பாளனாகிய திருமாலே உயர்ந்தவன் எனும் கருத்து குறியீடாக உளது எனலாம்.

சிவன் :

பரிபாடலில் சிவன் பாடப்படவில்லை. காரணம் மதுரைப்பகுதியில் சிவனது கோயில் இல்லாமையே எனலாம். தொகை நூல்களில் சிவனது பல்வேறு செயல்கள் கூறப்படுகின்றன.

சிவன் திரிபுரம் எரித்த செய்தி (புறம். 55) நஞ்சுண்ட செய்தி (புறம். 55) முக்கண் உடையவன் (புறம். 6, 55) கைலையில் இருத்தல் (கலித்.) ஆகிய நிகழ்ச்சிகள் உவமைகளாக வருகின்றன. (திருமுருகு. 151-154).

முப்புரம் என்பது மும்மல காரியம் என உள்ளுறையை விளக்குகிறது. பின்னர் எழுந்த திருமந்திரம்.

சிவன் திராவிட தெய்வம் என்று கூறுவர்.

(18) ஆரியருக்கு முந்திய சிந்துசமவெளி நாகரிகத்தில் வழிபாடு இருந்ததென விளக்குவர்.

(19) வேதகால உருத்திரரோடு சிவன் பின்னர் இணைக்கப்பட்டதாகக் கூறுவர். சிவனது காளை, வளத்திற்கு அறிகுறியாக உலகெங்கும் வழங்கப்படுகிறது.

(20) படைப்புக் கடவுளாகிய நான்முகன் செல்வாக்கிழக்கச் சிவன் முதலிடம் பெறுகிறான்; நான்முகன் இழிக்கப்படுகிறான்.

அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியதொகை நூல்களில் கடவுள்வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் சிவனையே பாடக் காணலாம். சிவனது கணிச்சி, மழு, வேல் முதலிய படைக்கலன்கள், காளை வாகனம், உமையுடன் இணைந்திருத்தல், திங்களணிந்த சென்னி, மணிமிடறு, நீண்ட சடை ஆகியவை இப்பாடல்களுள் விளக்கப்படும்.

(21) இவற்றுள் ஒவ்வொரு பொருளும் குறியீடுகளாக விளக்கப்படுவதுண்டு. காளை வளத்திற்குக் குறியீடு என முன்னர்க் கூறப்பட்டது. சிவனது நீண்ட சடை அவனது பேராற்றலுக்குக் குறியீடு எனக்கூறி சாம்சனது முடியாற்றலோடு அதனை ஒப்பிட்டு விளக்குவர். அவ்வாறே அவன் கையில் உள்ள உடுக்கையானது ஒலியின் அறிகுறியாக விளங்குகிறது என்பர்.

தொன்மைமிகு திராவிடக் கடவுளாகப் போற்றப்படும் சிவன் சங்கப் பாடலுள் குறிக்கப் பட்டுள்ள போதிலும் தொல்காப்பியத்தில் குறிக்கப்படவில்லை. அதனை விளக்க முற்படுவோர் தொல்காப்பியர் நானிலத்தெய்வங்கள் பற்றிக் குறிப்பிடுகிறாரே யன்றிப் பொதுவான தெய்வம் பற்றிக் குறிப்பிடும் வாய்ப்பு அவருக்கு இல்லை என்பர்.

முருகன் :

பரிபாடலில் முருகனைப் பற்றி (5, 8, 9, 14, 17,18,19, 21) எட்டுப் பாடல்கள் உள்ளன. ஆயின் அப்பாடல்களில் முருகனைப் பற்றிய செய்திகளைவிடப் பிற செய்திகளே மிகுதியான இடத்தைப் பெற்றுள்ளன.

அவன் அவுணரை அழித்தமை, குருகொடு பெயரியமால் வரை உடைத்தமை ஆகிய செய்திகள் குறிக்கப்படுகின்றன.

முருகனது பிறப்பு பற்றிய செய்தி மிக விளக்கமாகப் பேசப்படுகின்றன. சிவனது நெற்றிப் பொறியிலிருந்து தோன்றிக் கார்த்திகைப் பெண்டிரால் இமயமலைச் சரவணப் பொய்கையில் வளர்க்கப்பட்டான் என்று அவ்வரலாறு கூறப்படுகிறது.

அவன் தேவர் படைக்குத் தலைவனாகும் நிலையும் விளக்கப்படுகிறது (பரி. 5).

மற்றொரு பாடலில் வள்ளி, தேவசேனை இருவரது பாங்கியரும் ஏசிக் கொள்ளும் நிலை குறிக்கப்படுகிறது (பரி. 9).

ஓரிடத்தே 'மாஅல் மருகன்' (பரி. 19; 57) என்ற உறவு கூறப்படுகிறது.

அடுத்துத் திருமுருகாற்றுப்படையில் முருகனது பிறப்பு, அறுமுகம், பன்னிருதோள், சூர் தடிந்தமை, மாமரம் வெட்டியமை, அவுணரை அழித்து நான்முகனைச் சிறை வைத்தமை, திருமால், சிவன், இந்திரன் எனும் முப்பெரும் கடவுளரும் நான்முகனுக்காக முருகனிடம் சென்று வேண்டிக்கொண்டமை, ஆல்கெழு கடவுள் புதல்வன், மலைமகள்மகன், வானோர் தானைத் தலைவன் என்ற புராணச் செய்திகள் பலவும் கூறப்பட்டுள்ளன.

குறமகள் வெறியாடி வழிபட்ட நிலையும் விளக்கப்பட்டுள்ளது. தொகை நூல்களில்,

> ''சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
> சினமிகு முருகன்'' (அகம். 59)

> ''சூர்நவை முருகன் சுற்றத் தன்ன'' (புறம். 23)

> ''முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல'' (நற். 82)

> ''சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
> கடுஞ்சின விறல்வேள்'' (பதிற். 1)

> ''பைம்பூண் சேஎய் பயந்த....
> துணங்கையம் செல்வி'' (பெரும். 458-59)

என்று முருகன் குறிக்கப் படுகின்றான்.

குறுந்தொகையில் முருகனது உருவமும் குன்றெறிந்த செய்தியும் கடவுள் வாழ்த்தில் கூறப்பட்டுள்ளன.

இச்செய்திகளை நோக்க முருக வழிபாடு தமிழகமெங்கும் பெருவழக்கில் இருந்தது என்று உணரலாம். நாட்டுப்புறச் சிறுதெய்வ நிலையிலிருந்து பெருந்தெய்வநிலைக்கு உயர்த்தப்படும் மாற்றத்தைச் சங்கப் பாடல்களில் நாம் உணர முடிகிறது.

வெறியாடப்பட்ட நிலை, வீரனாக விளங்கும் நிலை (அகம். 1, 118, 181), வருத்தும் அணங்காகச் சுட்டும் நிலை (அகம். 98), அழகிய வடிவமும் மணமுமாகக் கூறும் நிலை (அகம். 288, 28) ஆகியவை காணப்படுகின்றன. எனவேதான் முருகன் படிப்படியே பெருந்தெய்வ நிலையடைந்த மாற்றம் காணப்படுகிறதென்கிறோம்.

முருக வணக்கம் தமிழர் வாழ்விலிருந்து முகிழ்த்துத் தமிழர் பண்பாட்டை விளக்கும் வகையில் மலர்ந்து பின்னர்ப் புராண மரபுடையபெருந் தெய்வமாக மலர்ந்ததெனலாம்.

முருகன் வள்ளி திருமணம், தமிழர் களவு மணமுறையாகவும், விநாயகர் யானையாக வந்தமை களிறு தரு புணர்ச்சியாகவும், தெய்வயானை மணம் கற்புமண முறையாகவும் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது.

(22) முருகன் வென்றதாகக் கூறப்படும் மாமரம், குருகு, குன்று முதலியவை பகை இனத்தவரின் குலக்குறிகள் எனவும் பின்னர் அவற்றை ஒன்றுக்கிச் சூரபன்மாவின் பல மாயா வடிவங்கள் எனப் புராணக்கதை புனையப்பட்டதென்றும் கூறுவர்.

(23) வடநாட்டுப் புராணக் கதைகளும் தமிழ்நாட்டுக் குழு நம்பிக்கைகளின் எச்சங்களும் கலந்து முருகன் என்ற கலப்புருவக் கடவுள் காலப்போக்கில் உருவாயிற்றென்பர்.

(24) வடநாட்டு ஸ்கந்தனும் தமிழ் முருகனும் பக்தி இயக்க காலத்தில் ஒன்றுபடுகின்றனர். 3-ஆம் நூற்றுண்டிற்கும் 7-ஆம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இது நிகழ்ந்திருக்குமெனும் வானமாமலையின் கருத்து ஒப்புநோக்கத் தக்கது.

முருகன் தாய்த் தெய்வத்தினின்று பிறந்த செய்தி தமிழ்நாட்டுக்கே உரியது என்றும் அவனுக்குத் தந்தைவழிப் பிறப்பும் வடநாட்டு முறை என்றும் அவர் கூறுவார்.

கொற்றவை :

திராவிடர்கள் உழவர் சமுதாயத்தவர்; எனவே நிலத்தோடு தொடர்புடைய கடவுளரைக் குறிப்பாகப் பெண்தெய்வத்தை வழிபட்டனர் என்பர்.

(26) பின்னர் அப்பெண்தெய்வம் விஷ்ணுவுக்கு இணையாகக் கருதப்பட்டது.

(27) அதுமட்டுமன்றி முருகனுக்குத் தாயாகவும் சிவனுக்கு மனைவியாகவும் விஷ்ணுவுக்குத் தங்கையாகவும் உறவுகள் காணப்பட்டன.

தமிழிலக்கியங்களில் முருகன் பெண் தெய்வத்தின் மகனெனப் போற்றப்படுவதைக் காணலாம்.

''கானமர் செல்வி'' (அகம், 345)

''விறல்கெழு சூலி'' (குறு. 218)

என்றும் காளி குறிக்கப்படுகிறாள். தொல்காப்பியரே, கொற்றவை நிலையைக் குறித்துள்ளமையும் பரிபாடலில் காளி பற்றிய பாடல் இருந்ததாகக் கூறப்படுவதும் குறிக்கத்தக்கவையாகும்.

இந்திரன் மருதநிலத் தெய்வமாகக் குறிக்கப்பட்ட போதிலும், இந்திரனைப் பாராட்டும் வகையிலமைந்த புராணமரபுக் கதைகளைக் காண இயலவில்லை. இந்திரவிழா (ஐங். 62; சிலப்பதிகாரம் பற்றிய குறிப்பு இருந்தபோதும் இந்திரன் அகலிகையுடன் உறவுகொண்ட செய்தி திருப்பரங்குன்றத்தே காணப்பட்டதெனப் பரிபாடல் கூறுகிறது. இந்திரனுக்குக் கோயிலும் வழிபாடும் விழாவும் இருந்தபோதிலும் பெருமையுறப் புராணக்கதை இல்லாமை குறிக்கத்தக்கது. காலப் போக்கில் இந்திரன் தலைமை இழக்க முருகன் தேவர் படைத் தலைமை பெற்ற நிலை முன்னர் விளக்கப்பட்டது.

பலராமன் வெண்ணிற முடையவன், நாஞ்சில் கொடியுடையவன் (புறம். 56; நற். 32) எனப் பலவிடங்களில் குறிக்கப் பெறுகிறான். வேறு பிற புராணக் குறிப்புக்கள் காணப்படவில்லை.

திருமால், பலராமன், சிவன், முருகன்ஆகிய நால்வரையும் இணைத்துப்பேசும் போக்கு (புறம். 56; கலித். 103) ஈரிடங்களில் காணப்படுகிறது.

இறப்புக் காலனைக உருவகித்துப் பேசப்படும் நிலை சங்கப்பாடல்களில் காணப்படுகிறது.

ஏனைய தொகை நூல்களைவிடப் பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலிய தெய்வப்பாடல்களில் புராணமரபியல் கூறுகள் மிகுந்திருப்பதற்குக் காரணம் இந்தியப் புராணமரபியல் கூறுகள் அனைத்தும் சமயச் சார்புடையனவாய் இருப்பதே ஆகும்.

ஆயினும் சில சமுதாயப் பண்பாட்டுடன் கூறிய புராணமரபியல் கூறுகளும் காணப்படுகின்றன.

அருந்ததி பற்றிய செய்தி அவற்றுள் ஒன்று. அத்திரி முனிவரின் மனைவியாய்க் கற்பறம் காத்ததால் விண்மீனாய் மாறினாள் என்று கூறுகின்றனர். எனவே தொகை நூல்களில் கற்பெனும் பண்பிற்கு அருந்ததியை உவமையாகக் கூறக் காணலாம் (அகம். 16, ஐங். 442; பதிற். 9,90).

ஆதிமந்தி வரலாறு சங்ககாலத்தில் நடந்து பின் சிலப்பதிகாரத்தில் புராண நிலையை அடையக்காணலாம்.

நிலவினைப் பாம்பு விழுங்கல் (நற். 2; கலித். 15, 62; அகம். 114) போன்ற அறிவியல் நடப்புக்குப் புராணக்காரணம் கூறும் நிலை காணப்படுகிறது.

(28) ஆரியர் வருகைக்கு முந்திய சிந்து சமவெளி நாகரிகத்தில் சிவவழிபாடு, சக்தி வழிபாடு முதலியன காணப்படுகின்றன. எனவே ஆரியர் வருகைக்குப் பின்னரே கடவுட் கோட்பாடும் புராண மரபும் திராவிடரிடம் வளர்ந்தன எனக் கொள்ளல் இயலாது. கி.மு. 2000இல் திராவிட மக்கள் இந்திய புராணமரபுக் கதைகளை உருவாக்கியிருந்தனர் என விளக்குகின்றனர்.

(29) இரண்டும் தனித்தனியே தமக்குரிய இயல்புகளுடன் வளர்ந்தன. சான்றாக நிலைத்து வாழத்தொடங்கிய திராவிடர்களது தெய்வங்கள் நிலத்தோடு தொடர்புடையவர்களாகவும் நாடோடி வாழ்வுடைய ஆரியர்களது தெய்வங்கள் விண்ணோடு தொடர்புடையனவாகவும் உள்ளமை குறிக்கத்தக்கது.

(30) மேலும் வேதகாலப் புராணமரபுக் கூறுகள் சில இன்றும் தமிழகத்து நிகழும் சடங்குகள், விழாக்கள் ஆகியவற்றை மறைமுகமாக விளக்குகின்றன என்பர்.

(31) சங்கப் பாடல்களில் புராணமரபுக் கூறுகள் காணப்படுகின்றனவே தவிரக் கதைகள் முழுமை பெற அமையவில்லை. அதற்குக் கார

ணம் சங்ககாலத்தே காப்பிய இலக்கிய வகை தோன்றாமல் தனிநிலைப் பாடலே இருந்து வந்தமை எனலாம். அதுமட்டுமின்றிச் சமயச் செல்வாக்குச் சங்க காலத்தே குறைவாக இருந்ததும் தொல்காப்பியர் தெய்வம் ஒழிந்த கருப்பொருளில் உள்ளுறை கூறலாமென விதிவகுத்ததுமே எனலாம்.

பக்தி இயக்கக் காலத்திற்குப் பின்னர்தான் சமயச் செல்வாக்கு மேலோங்கி ஆரிய திராவிட தெய்வங்கள் கலப்புற்றுப் புராணங்கள் செல்வாக்குப் பெற்றன. புராண இலக்கியங்களும் அதற்குப் பின்னரே தோன்றின.

குறிப்புகள்

(1) " Narrative as an essential part of meaning of mythology but distinguished from Chabe's position it insists that the original sources of such story telling lie somehow below or beyond the conscious inventions of individual poets and the stories themselves thus serve as partly unconscious vehicles for meaning that have something to do with the inner nature of the universe and of the human life."

—*Princeton Encyclopaedia, P. 538*

(2) " Myth can be defined as a story or a complex of story elements taken as expressing and therefore as implicitly symbolising. Certain deep lying aspects of human and transhuman existence."

—*Ibid.,*

(3) Mrs. Langer, Philosophy in *a* New Key, *P.* 201.

—*Quoted in 'Parakal'—1*

(4) " In some cases the changes advocated only foreshadowed the natural evolution of Indra's mythology as a consequence of historical circumstances; dynastic changes, invasions, economic conditions and the resultant social setting of the Indian peoples."

—*Indian Mythology, P.* 11.

(5) *Ibid., P.* 11.

(6) தமிழண்ணால், 'தொன்மைமிக்க புரணமரபுக் கதைகள்' ,வையை-3, பி. ப. 409.

(7) " As we have seen, the idea of a trail of gods is rooted in the earliest Indian beliefs and seems to have its origin in solar cults, for the 'three-bodied' sun created with his fertilising warmth, preserved with his light and destroyed with his burning rays."

—*Indian Mythology, P.* 40.

(8) (*a*) Indian Mythology, P. 41.

(*b*) " However, as he (Brahma) has completed his work of creation, it is argued that he has no further part to play for the time-being."

—*Hindu Epics, Myths and Legends in Popular Illustrations, P.* 13.

(9) " Indra's rivalry to Varuna which may be understood in terms of rivalry between the Bramin priest—Caste and Kshatriya warrior caste."

—*Indian Mythology, P.* 15.

(10) " Vishnu is the infinite ocean of the universe from which springs the entire world. Therefore his symbol is water 'Nara.'"

—*Hindu Epics Myths and Legends in Popular Illustration, P.* 3.

(11) " Vishnu is the cosmic ocean, Nara, which spread everywhere before the creation of the universe, but is also called Narayan, ' Moving in the waters ', in this character he is represented in a human form, sleeping on the coiled serpent shesha, or Ananta and floating on the waters."

—Indian Mythology, P. 46.

(11) " The correct explanation would be found on examining the annual passage of the Sun in the sky. Starting with the actual equinoctial position (AE), the Sun moves in three stages before returning to the same position, namely (1) from the Autumnal Equinox (AE) to the Winter Solstice (WS), (2) from the winter solstice (WS) to the summer solstice (SS) and (3) from the summer solstice (SS) to the Varnal Equinox (VE)."

—M. Sunder Raj 'Rig Vedic Mythology and Cultural History Mythology to History Through Astronomy P. 229

The Three steps are said to represent the place of the Sun's risin g ; its Zenith and the place of its setting."

— Indian Mythology, P. 23.

(12) " The avatara theory services two purposes. The first is to reconcile the fundamental concept of the oneness of the god-head with the pressing need at the popular level to give god different shapes. In the avatara theory, these two merge into one, the one and only God-head confides his duties and transfers them to some one else ; the avatara.

The Second purpose is to provide the structure of Hinduism sufficient flexibility to embrace and accept as divine whatever and whomsoever rises from within the soul of man to the status of the Divine."

—Hindu Epics, Myths and Legends in Popular Illustrations, PP, 15, 17.

(13) " The Mythology woven around Krishna the eighth avatara, is most colourful and perhaps the richest of all in lyricism, in adventure, and in love in all its forms from sensuous love to worship of the divine."

—Ibid. P. 38.

(14) " In the Puranas, Krishna appears as the symbolic cowherd, that is the leader of all those who worship him, and also as the heavenly musician whose flute enthrals and invites. But in the Mahabharata we find Krishna a grown man discharging his main task in this world ; fighting evil and teaching."

*—Ibid., P.*150

(15) *நா. செயராமன், நெய்தல் பாடல்கள், ப. 114.*

(16) *துரை. அரங்கனார்*, Proceedings of the I world Tamil Conference held at Malaysia.

(17) " Vyasa's Mahabharata relates that the Pandiyan King attended Draupadi Swayamvara; the Pandavas were helped by the Pandiyan, Chola and Chera armies in the great war.

—Mythology to History through Astronomy P. 36

(18) " The beliefs of these are roughby at the stage of the earliest Pre-Aryan largely Dravidian people whose contribution to the body of Indian mythology was made earlier than 2000 B. C.,but whose beliefs were later to be revived to some extent."

— Indian Mythology, P. 12.

(19) " Rudra's original character as God of cattle is extended by combining it with that of the Pre-Aryan Lord of the Beasts. The bull is ofcourse universally considered a symbol of fertility and this aspect of the lord of cattle had attached to Rudra."

—Indian Mythology, P. 42.


VINU

(20) " Shiva Bhairava, the Destroyer, is thus by extension Shiva the bringer of fertility, the coreater, the Auspicious. In this sense his activity as destroyer is essential to that of Brahma as creator and Brahma is thus sometimes said to be inferior to Shiva.

—*Ibid*, *P.* 42.

(21) Drum is the symbol of Rhythm and sound........The God's long mope never touched by the scissors and richly set high upon his head symbolises of course his power.

—*Hindus Epics, Myths and Legends, P.* 69.

(22) *தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 4.*

(23) *மேலது., ப 56,*

(24) *மேலது., ப. 32.*

(25) The Dravidians were an agriculture people who understandably defied the earth and worshipped, various deities connected with it, mainly the Mother Goddess.

—*Hindu Epics Myths and Legends Introduction, P.* 1.

(26) *Ibid. P.* 9.

(27) Parallel and on the same level of works of the Supreme triad (Brahma, Vishnu, Shiva) stands the female deity or the female. —*Ibid., P.* 69.

(28) An agricultural people, the Dravidians worshipped gods connected in one way or another with fertility. There were two main elements in this ; Phallic worship typified in the seals found at Harappa, which show a god seated with legs crossed and wearing bull's horns (the bull being a universal symbol of male fertility) ; and the cult of mother goddess most plainly depicted on seals which show plants growing from the womb of a Female deity, or which show a naked goddess before whom a human sacrifice is being performed. Such figures are accompanied by animal ministrants, the goddess by what appears to be half-bull, half-man and the god by deer, an eleplant a tiger, a rhinoceros and a buffalo in other cases by votive serpents.

— *Indian Mythology, P.* 13.

(29) *Ibis., P.* 12.

(30) *Ibid., P.* 14.

— — — —

அன்பர் அன்பர் என்று கூவு. தூங்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்காதே. இரவும் பகலும் கூவினால் எப்பொழுதாவது அழைப்புக் கேட்டுத்தானே ஆகும்.

— *கபீர்*

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி

— *திருவாசகம்*

திருமுறைகளில் இலக்கிய வளம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

(தமிழ்ப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்)

தோற்றுவாய் :

ஓவியம், சிற்பம், இலக்கியம், இசை, நாட்டியம், நாடகம் என்பன மக்களுக்கு இனிமையைப் பயக்கும் கலைகளாகும். இவற்றுள் இலக்கியம் என்பது மக்களின் பல்வேறு குறிக்கோள்களாகிய இலக்கினைக் கருத்திற்கொண்டு அறிஞரால் இயற்றப்படுவது ஆதலால் இலக்கியம் என்று பெயர் பெற்றுள்ளது. இலக்கினை உடையது இலக்கியமாகும்.

இலக்கிய வகை :

அறிஞர் இலக்கியத்தை உரைநடையாகவும் செய்யுள் நடையாகவும் இயற்றி வருகின்றனர். ஆனால், உரைநடை இலக்கியத்தைக்காட்டிலும் செய்யுள் நடையாக இயற்றப்படும் இலக்கியமே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

இலக்கியங்கள் நாடக வழக்கென்னும் புனைந்துரை, உலகியல் வழக்கென்னும் இயல்புரை என்னும் இவற்றை, இரண்டு கால்களாகக் கொண்டு இயங்குகின்றன. நாடக வழக்கென்னும் புனைந்துரைக்குக் கற்பனை என்றும் பெயர் உண்டு.

இலக்கியங்கட்கு இன்றியமையாததாய் வேண்டப்படுவது பொருட்பொலிவாகும். எடுத்துக் கொண்ட பொருளை ஆற்றல் வாய்ந்த நால் வகைச் சொல்லுள் அமைத்து, மோனை முதலான தொடையும் சினை முதலான தொடை விகற்பங்களும் சிறப்பாய் அமைய, தன்மை உருவகம் உவமை முதலான அணிகள் அமைந்து அழகு செய்ய, பல்வேறு ஓசைப் பொலிவு தோன்ற, உணர்பவர்கட்கு அமிழ்தம் போல் இனிய சுவையைத் தருவது இனிய செய்யுளாகும்.

> ''பொருளின் பொலிவும் சொல்லின் திறனும்
> தொடையும் தொடையின் விகற்பமும் துணை
> உருவகம் முதலாம் அலங்கா ரங்களை
> உட்கொண் டோசைப் பொலிவுடைத் தாகி
> உய்த்துணர் வோர்தம் உள்ளங் கட்கு
> மாக்கடல் அமிழ்தெனப் பாடுவது மதுரகவி"

என்று கூறுகிறது, **பிங்கல நிகண்டு.**

இலக்கியம் ஒவ்வொரு நாட்டிலும் அங்கு வாழும் மக்களின் தன்மைக்குத் தக்கவாற்போல் பலவகைத் தன்மையுடையனவாக அமைந்துவிடுகின்றன. அதுபோல் காலத்திற்குக் காலம் இலக்கியம் பல்வேறு மாற்றம் பெற்று வளர்ந்து வருகின்றது. வரலாற்றறிஞர் இடத்தாலும் காலத்தாலும் இலக்கியத்தைப் பாகுபடுத்தி வழங்குகின்றனர். எடுத்துக்காட்டாக, மேலைநாட்டு இலக்கியங்களின் தன்மை வேறு, நம் நாட்டு இலக்கியத்தின் தன்மை வேறு. அதுபோல, முற்கால இலக்கியத்தின் தன்மை வேறு, இக்கால இலக்கியத்தின் தன்மை வேறு.

தமிழ்நாட்டிலே மிகப் பழைய காலத்தில் தோன்றியவை வாய்மொழி இலக்கியமாகும். அவை அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் தோன்றியிருக்கலாம். அவற்றுள் வேலன் முதலியோர் வெறியாடும்பொழுது

கடவுள் மேல் பாடிய இலக்கியம் முதலாயின பழைய காலத்துத் தெய்வ இலக்கியமாகும். சங்க இலக்கிய காலத்தில் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் சில தெய்வ இலக்கியங்கள் தோன்றின. சங்ககாலத்திற்குப் பின் மிகுதியான தெய்வ இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் தலை சிறந்தன, சைவ வைணவ தெய்வ இலக்கியமாகும்.

திருமுறைகள் :

சைவ தெய்வ இலக்கியங்களில் மிகப் பழமை யானவை காரைக்கால் அம்மையார் பாடிய பாடல் களும், திருமூலர் பாடிய திருமந்திரமாலையும், சமய குரவர்கள் பாடிய பாடல்களுமாகும். இவற்றையெல்லாம் 'திருமுறை' என்ற பெயரால் சைவப் பெருமக்கள் பகுத்து முறைப்படுத்தி வழங்கி வந்தனர்.

திருமுறை என்ற பெயர் :

'திருமுறை' என்ற பெயர் திருமுறைவகுத்த நம்பியாண்டார் நம்பிக்கும் பல நூற்றாண்டுக் காலம் முன்பிருந்த திருமூலர் திருமந்திரத்தில் வந்துள்ளது.

''ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடும் **திருமுறை** பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம்
சொல்லுமே''. (1067)

மேற்கூறிய பாடல் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் 'சத்திபேதம்-திரிபுரைச் சக்கரம்' என்ற தலைப்பில் வந்துள்ளது.

திரிபுரை என்ற சத்தி அந்தரி, சுந்தரி, நாரணி, பரிவர்ணி, சுசி, மனோன்மணி என்னும் பல பெய ருடையவள் என்றும் (1048), அவள் பொன் னிறம் செந்நிறம் வெண்ணிறம் என்னும், மூன்று நிறமுடையவளாயிருந்து கல்வியையும் போகத் தையும் முத்தியையும் தருகிறாள் என்றும் (1047), அவள் அங்கையில் ஏட்டினை உடையவளாய்மூன்று விழியையுடையவளாய் விளங்குகிறாள். படிகம், போன்ற வெண்ணிறம் உடையவள். அவள் விரும்பி அமர்வது வெண்டாமரை மலர். அவள் பார்ப்பதி என்னும் பெயருடையவளா யிருந்து **திருமுறை**யைப் பாடிக்கொண்டுள்ளாள். அத்தகைய திரிபுரையின் திருவடியைச் சென்னி யிலே சூடுமின், அவளைத் தோத்திரம் செய்யுங்கள் (1067) என்று திருமூலர் உலக மக்களைத் திரி புரையிடம் ஆற்றுப்படுத்துகிறார். இங்கே திரி புரையால் பாடப்படும் திருமுறை உயர்ந்த அறிவு நூலாக இருத்தல் வேண்டும்.

திருமுறை என்ற சொல்லின் பொருள் :

இனித் திருமுறை என்ற சொல்லின் பொருளை ஆராய்வோம். ''திருவென்ப மேலை செல்வம் சிறப்பொடு முப்பேர் செப்பும்'' என்ற சூடாமணி நிகண்டின்படித் 'திரு' என்னும் சொல் 'இலக்குமி' 'செல்வம்' என்னும் பெயர்ப்பொருளிலும், 'சிறப்பு' என்னும் பண்புப் பொருளிலும் வரும். திருமுறை என்ற சொல்லில் வந்துள்ள திரு என் னும் சொல் இலக்குமி என்னும் பொருளில் வர வில்லை. செல்வம் சிறப்பு என்ற இரண்டு பொரு ளில் வந்ததாகவே அதனைக் கொள்ள வேண்டும். எனவே: செல்வத்தைத் தரும் முறை, சிறந்த தன்மையுடைய முறை என்ற இரண்டு பொருளில், திருமுறை என்னும் சொல் வந்துள்ளதாகக்கருத வேண்டும்.

'முறை' என்ற சொற்கு ''முறையென்ப கோசமே ஊழ் முறைமை இம் முப்பேர் என்ப'' என்ற சூடாமணி நிகண்டின்படி கோசம் (புத்த கம்) என்றும், ஊழ் என்றும் முறைமை என்றும் மூன்று பொருள் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில் வைத்துக் கொண்டு 'திருமுறை' என்ற சொற்குப் பொருள் உணர முற்படுவோம்.

முறை என்பது, இங்கே கோசம் அல்லது புத்தகம் நூல் என்ற பொருளில் வந்துள்ளது. திரு என்பதைச் சிறப்பு என்று பொருள் கொள் ளின் சிறந்த கோசம், சிறந்த புத்தகம், சிறந்த நூல் என்று பொருள்படும்.

திரு என்ற சொல்லிற்குச் செல்வம் என்று பொருள் கொள்ளின், செல்வத்தை உணர்த்தும் நூல் என்று பொருள் கொள்ளலாம்.

சைவ சமயத்தவர் பதி, பசு, பாசம் என்று முப்பொருளைக் கூறுவர். அம்முப்பொருளில் சிவமாகிய பொருள் சிறந்ததாகலின் சிவமாகிய திருவை உணர்த்தும் நூலினைத் திருமுறை என்று சைவப் பெருமக்கள் வழங்கலாயினர்.

மாணிக்கவாசகர் ''சிவமே பெருந்திரு எய்திற் றிலேன்'' என்று கூறுதலைக் காண்க. தொண்டர் பெற்றுள்ள சிவமாகிய செல்வத்தைக் 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு' என்று **சேக்கிழார்** கூறுவர். இறுதியும் தோற்றமும் இல்லாதவன் இறைவன். ஆதலின் அதனைக் 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு' என்று கூறுதல் பொருந்துமாறுணரலாம். எனவே சிவமாகிய செம்பொருளைப்பற்றிப் பேசும் இலக் கியம் திருமுறையாயிற்று.



திருநாவுக்கரசர்



திருஞான சம்பந்தர்



சுந்தரர்



மாணிக்க வாசகர்

திருமுறை என்ற இலக்கியத்தின் பாடுபொருள் திரு என்னும் சிவமே :

பழைய திருமுறையாசிரியரெல்லாம் சிவ பெருமான் ஒருவரைப் பாடுதலாகிய ஒரு நெறி யிலேயே இயங்கியுள்ளனர். தேவாரம், திரு வாசகம் என்னும் பழைய திருமுறைகளில் சிவ பெருமானைத் தவிர்த்து வேறு எந்தத் தெய்வத் தையும் பாடிய பாடல்களைப் பார்க்க முடியாது. எனவே, சிவம் என்னும் திருவைப் பாடு பொரு ளாக உடையது திருமுறையாயிற்று. 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என்ற திரு முறைப்பாடலின்படி இறைவன் திருவடியை வணங்கும் நெறியாகிய செல்வத்தைக் கூறுவதும் திருமுறையின் உட்கிடையாகும்.

எனவே, **திருமுறையிலக்கியத்தின் இலக்கு சிவம் என்னும் செம்பொருளைக் கூறுதலும்** வழி பாட்டு நெறியைக் கூறுதலுமாகும். எனவே நாம் திருமுறையின் பதியாகிய சிவத்தைப்பற்றி யும் அச்சிவத்தை அடையும் நெறிகளைப்பற்றி யும் அந்நெறி நின்ற அடியவர்தம் சிறப்புப்பற்றி யும் உணர்ந்து கொள்ளலாம்.

பதி இயல்பு :

மேற்கூறிய நான்கு பகுப்பினைப் பொரு ளாகக் கொண்டு திருமுறைகளில் உள்ள கருத்து களைத் திரட்டினால் ஒவ்வொன்றும் மிகப் பெரி தாக விரியும் ஆதலால் அவற்றுள் சிலவற்றை மட்டும் குறிப்பிடுவோம். இறைவன் ஒருவனே, அவன் அருவடிவினன், உயிர்கள் உய்யும் பொருட்டு அவற்றிற்கு அருள்செய்ய அவன் பல்வடிவையுடையவனாகின்றான் என்பது சைவ சமய உண்மைக் கருத்து. இக்கருத்தினை உடைய திருமுறை பாடற் கருத்தினைக் கீழே காண்க.

(1) இறைவனை 'ஞானத்திரளாய் நின்ற பெருமான்'' என்பர் **ஞானசம்பந்தர்**.

(2) **அப்பர்** ''மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெலாம் எல்லையான பிரானார்'' என்பர்.

(3) ஞானசம்பந்தர்,

''ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண்ஆண் குணம்மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே''

என்னும் பாட்டில், உலகத்திற்கு அழிவும் தோற்றமும் செய்யும் ஒருவனாய், ஆண் பெண் என்னும் இரு வடிவினனாய் சாத்துவிகம், முதலிய மூன்று குணத்தனாய் நான்மறையாய் ஐம்பூத மாய் ஆறுசுவையாய் ஏழோசையாய் (ஏழ் பண்) எட்டுத் திசைதான் ஆய் இவற்றின் வேறாய் இவற்றின் உடனாகி நிற்பான் இறைவன் என்று அவனுடைய மூவகை நிலையினைக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகரும்,

''பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான்''
(திருவெம்பாவை-18)

என்பர்.

பதியை அடையும் நெறி :

பதியாகிய இறைவனை அடைவதற்கு நான்கு நெறிகள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம்.

(1) திருநாவுக்கரசர்.

'தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினைப் பற்றற வேண்டுவீர்'

''தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
இண்டை கட்டி இணையடி ஏத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போவனே''

''அல்ல ரமகனும் பூதங்கள் ஆட்டினும்
பல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே''

'பொறிபு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவன் ஏகம்பம்
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே''

''அற்றுப் பற்றின்றி யாரையும் இல்லவர்க்
குற்ற நற்றுணை யாவான்''

அந்நெறி நின்ற அடியவர்தம் சிறப்பு :
திருநாவுக்கரசர் :

''அங்கமெல்லாம் குறைந்தொழுகு தொழு நோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பரா கில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.''

சேக்கிழார் :

> " பெருமையால் தம்மை ஒப்பார்
> பேணலால் எம்மைப் பெற்றார்.
> ஒருமையால் உலகை வெல்வார்
> ஊனமேல் ஒன்றும் இல்லார்,
> அருமையாம் நிலையில் நின்றார்
> அன்பினால் இன்பம் ஆள்வார்,
> இருமையும் கடந்து நின்றார்
> இவரைநீ அடைவாய் என்று."
> (பெரியபுராணம்-தடுத்தாட்-196)

பிற பொருள் :

திருமுறையுள் முதல் மூன்று திருமுறை திருஞானசம்பந்தர் பாடியவையாகும். அம்மூன்றில் முதல் திருமுறையுள் முதல் பதிகத்தில் முதற்பாட்டாய்ச் சிறந்து விளங்குவது "தோடுடைய செவியன்" என்ற பாடலாகும். இப்பாடல் சீர்காழிப் பதியில் பிரம தீர்த்தக் கரையில் இறைவன் திருவருளால் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் இறைவனைச் சுட்டிப் பாடிய முதற்பாட்டாகும். தோடுடைய செவியனாய் விடையை ஊர்ந்து தூய வெண்மதியைச் சூடிக்கொண்டுகாடுடையசுடலைப் பொடியைப் பூசினவனாய் இறைவன் என்முன் வந்து அருள் செய்தான். அக்காட்சி என் உள்ளத்தினைக் கவர்ந்துவிட்டது என்று அவர் கூறுகிறார். முதன் முதல் ஞானசம்பந்தப்பெருமான் கண்ட இறைக்காட்சியில் முதலில் தோன்றியது தோடாகும். சிவம் என்னும் ஆண்கூறும், சக்தி என்னும் பெண்கூறும் கலந்து ஒன்றான இறைவன் திருவுருவில் அருட்சத்தியின் பகுதியாகிய இடப்பாகத்தில் விளங்குவது தோடாகும். முதற்கண் தோட்டினையும், அதனை அணிந்த சக்தியையும் இறைவனுக்கு உடைமைப் பொருளாக்கி, இரண்டாவது விடையாகிய ஊர்தியையும், மூன்றாவது தூய வெண்மதியையும், நான்காவது சுடலைப் பொடியையும் உடைமையாக்கி, உடையவனாய் இறைவனைச் சிறப்பித்து அவ்வுடையவனாகிய **இவன்** உள்ளங்கவர் கள்வனாயுள்ளான் என்று கூறியுள்ளார்.

வடமொழியில் உள்ள ஸ்ரீருத்திரம் என்னும் சாமவேதப் பகுதியானது சிவபெருமானைப் பல வடிவினனாகக் கூறி வணங்குகின்றது. அவ்வணக்கத்தில் ஒன்று "தஸ்கராய நம, தஸ்கராணம் பதயே நம' என்னும் பகுதியாகும். "கள்வனுக்கு வணக்கம் கள்வர் தலைவனுக்கு வணக்கம்" என்பது அப்பகுதியின் பொருள். இறைவன் கள்வனாகவும் கள்வர்தம் தலைவனாகவும் விளங்குகின்றான் என்பது அப்பகுதியின் கருத்தாகும். அவ்வேதப் பகுதிக்கு விளக்கவுரையாக ஞானசம்பந்தர் "என் உள்ளத்தைக் கவரும் கள்வனாக இறைவன் உள்ளான்" என்று கூறுகிறார்.

உள்ளத்தைக் கவர்ந்த பொருளில் :

ஞானசம்பந்தர் சிறு குழந்தை. அவருக்கு இறைவன் திருமேனியில் விளங்கி அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்த பொருள் தோடும் பிறையும் திருநீற்றுப் பூச்சும் ஆகும். அவற்றுள் நடுநாயகமாயிருப்பது பிறை. இப்பிறையாகிய திங்களை முதல் திருமுறை தொடக்கத்தே 'தூ வெண்மதிசூடி' என்று குறிப்பிட்டார். இவர் பாடிய இரண்டாம் திருமுறை முதற்பாட்டிலும் இறைவனை நோக்கி, "நீ இளைய இனிய பிறையினைக் கொடிய பாம்புடன் சடையில் வைத்திருக்கின்றாயே! அதற்குக் காரணம் என்ன?" என்று வினவுகிறார்.

> "................... .... பூந்தராய்
> துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ
> லீர்சொலீர்
> மின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன்
> வைத்ததே"

என்பது அப்பாட்டு. இன்னும் அவர் பாடிய மூன்றாந் திருமுறை முதற்பாட்டிலும், 'திங்கள் சூடிய இறைவனே, எம் தொல்வினை சுருங்குமாறு அருள்செய்க" என்று கூறுகிறார். "பல்சடைப் பணி கால்கதிர் வெண்டிங்கள் சூடினாய் அருளாய் சுருங்கஎம் தொல்வினையே" என்பது அப்பாட்டு.

எனவே, அவர் முதல் திருமுறைத் தொடக்கத்தில் தூய வெண்மதியைச் சூடி உள்ளங்கவர் கள்வன் என்று கூறுதலையும், இரண்டாந் திருமுறைத் தொடக்கத்தே, "பூந்தராய் ஈசனே! இனிய பிறையை இன்னாமை செய்யும் பாம்புடன் வைத்த கருத்தென்னை?" என்று வினவுவதும், மூன்றாம் திருமுறைத் தொடக்கத்தே "வெண்டிங்கள் சூடினாய்! எம் தொல்வினை சுருங்க அருளாய்" என்று வேண்டுவதும் ஒப்பு நோக்கிப் படித்து இன்புறத் தக்கதாம்.

இறைவனை வடமொழிவாணர் சந்திரசேகரன், சோமசேகரன் என்று கூறுவர். தமிழறிஞர் பிறை சூடி முதலான பெயரால் கூறுவர். இறைவனை வழிபடுகின்ற தொண்டர்கட்கெல்லாம் அவன் திங்களைச் சூடியிருப்பது பற்றிப் பல்வேறு புனைந்துரை (கற்பனை) நினைவில் தோன்றுகின்றன. அவர்தம் நினைவுகளிற் சில கூறுவோம்.

அருங்கலம் :

அருங்கலம் என்பது பொன்னும் மணியும் கொண்டு இயற்றப்படுவதாகும். "அருங்கலம்

உலகின் மிக்க அரசர்க்கே உரிய'' (கல்யாண-184) என்று சூளாமணி கூறுகின்றது. இதனால் அருங் கலத்தின் சிறப்பினை உணர்ந்து கொள்ளலாம். இறைவன் திங்களைத் தலையிற் சூடியுள்ளான். அதனால், உலகத்தவர் இறைவன் தலைக்குத் திங்கள் அணிகலனாக அமைந்துள்ளது என்று கருதுவர். ஆனால், அப்பர் சுவாமிகள், திங்கள் இறைவன் முடிக்கு அணிகலனாக இல்லை, திங்களுக்கு இறைவன் முடியே அருங்கலன் என்னும் அணியாக உள்ளது என்று கூறுகிறார். ''திங்களுக்கு அருங் கலம் திகழும் நீண்முடி'' என்பது அவர் பாட்டு.

திங்கள், மின்னல் :

இறைவன் மார்பில் அரவினை அணிந்துள்ளான், அந்த அரவு இறைவன் தலையில் அணிந்துள்ள திங்களை மின்னல் என்று கருதி அடங்கியிருக்கிறதாம்.

''பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களைப் பிறையென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும் ஐயாற னார்க்கே''

என்பது அவர் பாடல்

மதியிலா அரவின் ஐயம் :

இறைவன் வெண்மை நிறமுடைய திங்களைச் சூடியுள்ளான். மார்பிடத்தே திருமாலாகிய பன்றியின் வெண்மை நிறமுடைய பல்லினையும் அணிந்துள்ளான். இறைவன் அணிந்துள்ள மதியில்லாத அரவு திங்களையும் எயிற்றினையும் பார்த்து அது திங்கள் என்று துணியாமல் ஐய உணர்வுடன் உள்ளது. **காரைக்கால் அம்மையார்** தாம் பாடியுள்ள **அற்புதத் திருவந்தாதியில்,**

'திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்—ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவும் தேரா
அதுமதியொன் றில்லா அரவு'' (48)

என்று பாடியுள்ளார்.

அரவும் மதியம் விளையாடுதல் :

ஞானசம்பந்தர் ஒரு பாடலில் இறைவன் திருமுடியில் அரவும் மதியும் விளையாடுவதாகப் பாடுகிறார்.

''துன்னார் புரமும் பிரமன் சிரமும் துணிசெய்ய
மின்னார் சடைமேல் அரவும் மதியும் விளையாட''

என்பது அப்பாடல்.

திருஞானசம்பந்தரும் இயற்கைப் புனைவும் :

திருமுறையில் வந்துள்ள பல புலவர்களின்பாடல்களெல்லாம் ஒரே தன்மை அமைந்தனவல்ல. ஒவ்வொருவருடைய பாட்டும் ஒவ்வொரு தன்மை உடையதாய் இருக்கின்றது. திருஞானசம்பந்தருடைய பாடல்களில் அரிய பெரிய சமயக் கருத்துகள் ஆங்காங்கே காணப்பட்டாலும் அவருடைய பாடல்களில் சிறப்பாகக் கருதத் தக்கது இயற்கைப் புனைந்துரை ஆகும். எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்குவோம்.

முதல் திருமுறையில் சீழைத் திருக்காட்டுப் பள்ளியைப் பற்றி அவர் பாடும் பதிகத்தில் ''வயல் அருகே புனல் பாய்கிறது, அப்புனலிலிருந்து செங் கயல் பாய்கின்றது, அவ்வயலிடத்தே சில மலர்கள் கைபோல் தேனுடன் மலர்ந்துள்ளன, அம் மலர்த்தேன் கையருகே வாழைகள் கனி ஈன் றுள்ளன! அந்த மலர் மணமும் கனிமணமும் கமழ்கின்ற காட்டுப்பள்ளி'' என்று பாடுகிறார்.

''செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங் கயல் பாயச் சிலமலர்த்தேன் கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப் பள்ளி'' என்பது அப்பாடலாகும்.

முதல் திருமுறையில் திருநள்ளாற்றையும், திருவாலவாயையும் சேர்த்துப் பாடும் பதிகத்தில் ''நள்ளாற்றுப் பெருமானைப் பூசிப்பவர் பூசிக் கின்றார். அவர் பூசிக்கும் பூவில் நறுமணம் கமழ் கின்றது. அபிடேகம் செய்யும் புனலில் தூய்மை யாகிய பொலிவு விளங்குகின்றது. திருமேனியிற் சாத்தும் சந்தனம் புதுவிரைச் சாந்தாய் இனிய மணத்தை வீசுகின்றது. பூசிப்பவர்தம் நாவில் இனிய பாடல்கள் எழுகின்றன'' என நள்ளாற்றுப் பெருமான் பூசைக் காட்சியை ஞான சம்பந்தர் பாடுகிறார்.

''பூவினில் வாசம் புனலில் பொற்பு புதுவிரைச் சாந்தின்இன் நாற்றத்தோடு நாவினிற் பாடல்அரு நள்ளாறுடைய நம்பெருமான்'' என்பது அவர்தம் பாடலாகும்.

அவர் முதல் திருமுறையில் சீர்காழியைப் பற்றிப் பாடிய பதிகத்தில் ''கடல் அலைகள் சங்கினைக் கொண்டுவந்து கடலுக்கு வெளியே எறிகின்றன. எறியப்பட்ட அச்சங்கு, பக்கத்திலே மருதநில வயலில் செந்நெற் காட்டுக்குள் புகுந்து முத்தினை ஈனுகின்றது'' என்று பாடுகிறார்.

''மாடே ஓதம் எறிய வயற்செந்நெல்
காடே றிச்சங் கீனும் காழியார்''

என்பது அப்பாடலாகும்.

அவர் சண்பை நகரைப் பற்றிய மற்றொரு பாடலில் ''மீனை உண்பவரும் சப்பலில் ஏறிச் செல்பவருமாகிய பரதவர் வாழும் மனையின்கண் நுனிமூக்குச் சங்கம் சென்று முத்தினை ஈனுதற்கு இடமாகிய சண்பை நகரார்'' என்று பாடுகிறார்.

''. . . . . மீனாரும்
''வங்கம் மேவு கடல்வாழ் பரதர் மனைக்கே நுனிமூக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும் சண்பை நகராரே''

என்பது அப்பாடலாகும்.

கோயில்களில் இசை :

மக்களிடத்தில் கடவுள் பக்தியை இசை—நாட்டியங்களால் முற்காலத்து மக்கள் உண்டாக்கி வந்தனர். திருக்கோவில்களில் இறைவனைப் பூசிக்கும்பொழுது மந்திர இசை, வீணை இசை, வேத அத்தியயனம், சாஸ்திரப்பாடல் முதலியன செய்வித்தல் வேண்டும் என்றும், இவற்றின் பின் கௌடமொழி முதலானவற்றில் இசையைத் தூபம் காட்டும் வரையிலும் அதற்கு மேல் தமிழ் மொழிக்கு உறுப்பாகிய இசையை நடனத்தோடு செய்வித்தல் வேண்டும் என்றும், அதன் பின் பிழையில்லாமல் சமஸ்கிருத மொழியிற் பாடப்படும் இசையையாவது அல்லது பதினெண் மொழிகளுடைய இசையையாவது பாட வேண்டும் என்றும் காமிகாகமம் அர்ச்சனவிதிப் படலம் கூறுகின்றது. இதனைப்போலத் திருக்கோவில்களில் தமிழ்ப்பாடல்களும் வெவ்வேறு திசைமொழிப் பாடல்களும் பாடப்படுவதை ஞானசம்பந்தர் கூறுகிறார்.

''ஊறுபொரு ளின்றமிழ் இயற்கிளவி தேருமட மாதருடனார்
வேறுதிசை யாடவர்கள் கூறஇசை தேருமெழில் வேதவனமே'
(3—78—4)

''தென்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி
நரம்பெடுத்து, துஞ்சு நெஞ்சினர் நீங்கத்
தொழுதெழு தொல்புக ழூரில்''
(3—71—1)

என்பவை அப்பாடலாகும்.

இறைவன் பாடும் இடத்தில் நீங்காது எழுந்தருளியிருப்பார் என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்.

''தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல
முழவம்மொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்''

என்பது அப்பாடலாகும்.

பாடும் தொண்டின் சிறப்பு :

திருக்கோவில்களில் செய்யப்படும் திருவலகிடுதல் (விளக்குதல்), மெழுகுதல், மலர் தொடுத்தல், திருவிளக்கிடுதல், என்னும் தொண்டுகள் ஒன்றுக்கொன்று உயர்ந்து என்றும், எல்லாவற்றிற்கும் உயர்ந்தது இறைவனைக் குறித்துப் பாடுதலாகும் என்றும் அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

''விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந் நெறி ஞான மாகும்
அளப்பில கீதம் சொன்னார்க் கடிகள்தாம் அருளு மாறே''

என்பது அப்பாடலாகும்.

பதினோராம் திருமுறையில் கபிலதேவ நாயனார் தாம் பாடிய சிவபெருமான் திருவந்தாதியுள் (100) ''நூறு ஆவின் பாலை இறைவன் திருமுடிக்கு ஆட்டி நூறு மலரைக் கொண்டு இறைவன் திருப்பெயர்களைக் கூறிக்கொண்டு அருச்சனை செய்தலைக் காட்டிலும் சிறந்ததாகும் அச்சிவன் மேல் ஒரு பாடல் பாடி வணங்குவது'' என்பர்.

''நூறான் பயன்ஆட்டி நூறுமலர் சொரிந்து
நூறு நொடிவதனின் மிக்கதே நூறு
உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளேறு
உடையானைப் பாடலால் ஒன்று'' (100)

என்பது அப்பாடலாகும்.

சம்பந்தர் இசையால் தமிழ் வளர்த்தார் :

திருஞானசம்பந்தர் தாம் வாழ்ந்திருந்த ஒவ்வொரு நாளும் இனிய இசைத்தமிழ்ப் பாடல்களை பாடி அச்செயலாலேயே தமிழ்மொழியினை வளர்த்து வந்தார் எனவும், அம்முயற்சிக்கு இறைவனும் உறுதுணையாகவிருந்து தாளம் என்னும் இசைக்கருவியைத் தந்து உதவி அவர் பாடிய பாடல்களுக்கு இரங்கி அருள் புரிந்தார் என்றும் சுந்தரர் பாடுகிறார்.

''நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்த னுக்குலகவர்முன், தாளம் ஈந்த வன் பாடலுக் கிரங்கும் தன்மை யாளனை'' (7-62-8) என்பது அப்பாடலாகும்.

சமணர், பௌத்தர் :

ஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் பத்தாவது பாட்டில் சமண சமயத்தவரையும் பௌத்த சமயத்தவரையும் பழித்துப் பேசும் செய்தி இடம் பெற்றுள்ளது. திருநாவுக்கரசரும் தாம் பாடிய பதிகத்தில் பலவிடத்தில் அவர்களைப் பழித்துப் பேசுகின்றனர். இவர்கள் இவ்வாறு பழித்துப் பேசுதற்குரிய காரணத்தைச் சேக்கிழார் கீழ்வருமாறு கூறுகிறார்:

'வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதனெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யெனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்''

''அறிவு நூலுக்குக் காரணமாய் விளங்கும் தலைவனுடைய நெறியை அறிந்து உய்யாராய் உயிர்களாகிய தமக்கு மேல் ஒரு தலைவன் உண்டென்பது இல்லை, உயிர்களாகிய தாமே உள்பொருள், தம்முடைய நலம் தீங்கிற்குத் தாமே காரணம் என்றுரைத்து, பௌத்தர் தம் சமய நெறி பழியாக்கும் ஏதமுடையதே எனக் கூறினர் எங்கள் பிரான் ஞானசம்பந்தர்'' என்பது அவர் தம் கருத்துரையாகும்.

சேக்கிழார் கூறுவதை நன்கு கருதினால் உயிர்களாய தாமும் தமக்கு மேல் தலைவனாகிய ஒருவனும் உண்டென்றுணர்வது சைவசமய உண்மை நெறி என்றும், தாம் என்னும் உயிர்களே உண்டு தமக்குமேல் தலைவனாகிய ஒருவன் உண்டு என்பது இல்லை. உயிர்களாகிய தாமே நலத்தைச் செய்து கொள்ளும் என்பது சமண பௌத்த சமய நெறி என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். ''பேராற்றலும் பேரறிவும் வாய்ந்த பதிப்பொருளாகிய ஒன்று இவ்வுலகிற்கு முதலாக உள்ளது, அதன் வழி உயிர்களாகிய நாம் இயங்கி உலக இன்பத்தையும் வீடுபேற்றையும் அடைகிறோம்'' என்னும் உண்மை நெறியைக் கருதி உணராமையால் ''போதமிலாச் சமண்கையர் புத்தர் வழி'' என்று சேக்கிழார் கூறுவாராயினர்.

அகப்பொருள் :

சங்ககாலச் செய்யுட்களில் அகத்துறைப் பாடல்களே மிகுதியாக உள்ளன. திருமுறைக் காலத்திலே அகத்துறைப் பாடல்கள் சுருங்கி வந்துள்ளன. அந்த அகத்துறைப் பாடல்களும் இறைவனைத் தலைவனாகவும் உயிர்களாகிய தம்மைத் தலைவியாகவும் கற்பனை செய்துகொண்டு பாடும் முறையாக மாறிவிட்டது. தலைவனின் பிரிவாற்றாத தலைவி தன் துயரத்தினைத் தலைவனிடம் கூறுமாறு வண்டு முதலானவற்றை விளித்துக் கூறுவது போல் அமைந்த அகத்துறைப் பாடல்களைத் திருமுறைகளிற் காணலாம்.

யாப்பு :

திருமுறையில் ஆசிரியம் வெண்பா என்னும் இயற்றமிழ்ப் பாக்களே இடம் பெற்றுள்ளன. கலிப்பா, வஞ்சிப்பா இடம் பெறவில்லை. தரவு கொச்சகம் வந்துள்ளதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார். ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புபவர்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட ஞானசம்பந்தர் பாடல்களெல்லாம் இசைத்தமிழ்ப் பாடல்களாகவே கருதப்படுகின்றன. இப்பாடல்கள் பண்முறையில் பாடப்படுவதால் இவற்றைப் பண்ணத்தி என்று வழங்கலாம்.

''பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே''

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையுள் ''இளம்பூரணர் பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன என்று கூறி,

''அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினும் கடிவரை யின்றே'

என்னும் நூற்பாவுரையில் பன்னிரண்டாவன ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடும் தாழிசை துறை விருத்தம் என்னும் மூன்றினையும் வைத்து உறழப் பன்னிரண்டாம். அவை ஆசிரியத் தாழிசை வஞ்சித்தாழிசை வெண்டாழிசை கலித்தாழிசை எனவும், ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை எனவும், ஆசிரிய விருத்தம், வஞ்சி விருத்தம், வெளிவிருத்தம் கலி விருத்தம் எனவும் வரும் என்பார். இவையெல்லாம் திருமுறைப் பாடல்களில் வந்துள்ளன. பிற்காலத்தார் இவற்றைப் பாவினம் என்பர். ஞான சம்பந்தர் பாடலில் வந்துள்ள இருக்குக் குறள்

என்னும் பாடல் வகையைப் பிற்காலத்தார் வஞ்சித்துறை என்பர்.

சித்திர கவி :

திருஞானசம்பந்தர் பாடலில் மிறைக்கவி என்னும் சித்திரகவி கொஞ்சம் மிகுதியாகவே உள்ளன. மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழி, மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை ஈரடி, ஈரடிமேல் வைப்பு, நாலடி மேல்வைப்பு, முடுகியலாகிய திருவிராகம், (அராகம் என்றும் வழங்கும்) சக்கரமாற்று, கோமூத்திரி என்ற பாடல் வகைகளைப் பாடியுள் ளார். பதினோராந் திருமுறையில் எழுகூற்றி ருக்கை வந்துள்ளது. அவர் தாண்டகம் என்னும் பாடலைப் பாடவில்லை. ஆனால் அவர் காலத்தில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் தாண்டகத்தை மிகுதி யாகப் பாடித் தாண்டக வேந்து என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

திருவாசக யாப்பு

திருவாசகத்தின் தொடக்கத்தில் கலி வெண்பா இடம் பெற்றுள்ளது. ஆசிரியப்பா, ஆசிரிய விருத்த வகை, கலித்தாழிசை, கலித் துறை, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, கொச் சகக் கலி, நேரிசை வெண்பா முதலியன இடம் பெற்றுள்ளன. திருச்சாழல் திருவுந்தி முதலிய நாடகப் பாடல்களும் திருவூசல் முதலிய இசைப் பாடல்களும் திருவாசகத்தில் உள்ளன.

திருமூலர் யாப்பு :

திருமூலர் யாப்பு ஒரே வகையானது. ஈர சைச்சீர் மிக்கு வரச் சிறுபான்மை முச் சீரும் வர நாற்சீர் கொண்ட அடி நான்கினைப் பெற்று நடக் கும். ஒவ்வொரு அடியிலும் பன்னிரண்டெ ழுத்தும், பதினேரெழுத்தும் வரும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அவர் பாட்டில் வரும் தளைகளாம்.

சிறப்புத் தன்மைகள் :

திருமுறைப் பாடல்கள் மூன்றும் நூற் றாண்டிலிருந்து சேக்கிழார் காலம் வரையில் வாழ்ந்த பல அறிஞரால் பாடப்பெற்றுள்ளன. அவர்தம் தன்மை இடத்தாலும் காலத்தாலும் வேறுபடுமாதலால் 'ஒவ்வொருவருடைய பாட்டும் ஒவ்வொரு விதமாக அமைந்துள்ளன. ஞான சம்பந்தர் பாடல்களில் வேதம், ஆறங்கம், வேத வேள்வி முதலானவற்றின் சிறப்பைக் காண முடி கிறது.

திருநாவுக்கரசர் :

''கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்''

''சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும்குல முங்கொண் டென்பயன்''

என்று வைதிகர் நெறியைப் பயனில்லை என்று கூறுகிறார்.

திருமந்திரத்தில் ஆகமக் கூறுகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பகுதிகளும் பலவகை மந்திரங்களும் இடம்பெற்றுள்ளன.

திருவாசகத்தில் பத்திச் சுவையொன்றே சிறப்பாய் விளங்குகின்றது.

முடிப்புரை :

திருமுறையைப் பல நிலைகளில் நின்று சிறிது சிந்தித்தோம். திருமுறை என்றது சைவப் பெரு மக்களின் அறிவுக் கருவூலமாய் விளங்குகிறது. அக் கருவூலத்தில் அடங்கியவை விலையற்ற 'அழிவற்ற உண்மைப் பொருளாகும். அவை நமக்கு அறி வினையும் பேரின்பத்தையும் தருகின்றன. திரு முறையின் பயன் கடவுள் இன்பமாம் என்பதைக் கூறி அமைகின்றேன்.

**கள்ளம் இல்லா அறிவும் அந்த அறிவுக்குள்ளே கலந்து
நிற்கும் பெரும் கருணையும்தான் இறைத் தத்துவம் ஆகும்.**

— இராமலிங்கர்

தாய்மையே இறைவனின் முதல் வடிவம்

'பண்டிதை சிவத்தமிழ்ச் செல்வி'
தங்கம்மா அப்பாக்குட்டி

> "தாயினும் நல்ல தலைவரென் றடியார்
> தம்மடி போற்றிசைப் பார்கள்
> வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
> மாண்பினர் காண்பல வேடர்
> நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
> நுழைதரு நூலினர் ஞாலம்
> கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
> கோண மாமலை யமர்ந்தாரே"

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்று பாலூட்டி தாலாட்டி தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த ஞான்று விளையாடவிட்டு பின் நின்று பார்த்து மகிழ்பவள் தாய். குழந்தை குறும்பு செய்யுமாயின் அச்சுறுத்தியும் பின்பு அணைத்தும் அறிவுரைகள் கூறியும் பேணுபவள் தாய். எவை எவை எப்பொழுது தேவை என அறிந்து கொடுத்து வளர்ப்பதுமின்றி அமைதியாக உறங்க வைப்பவளும் தாய். இதே நிலையிலேயே இறைவனும் தாயாக நின்று ஆன்ம கோடிகளைப் பேணி எடுத்துப் பிறப்பறுக்கின்றான் என்பது சைவ சித்தாந்த முடிபு. இறை நிலையில் இது ஒரு உயர்ந்த தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண் குலமே அமையவேண்டும். தர்மம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை தன்னடக்கம், ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்குப் பெருமை தருவன. பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் பெருமையைத் தேடி கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி விளங்க வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்து மதம். இதையொட்டியே சாக்தம் என்ற ஒரு பிரிவு ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனாகப் பேசி நிற்க, சாக்தம் எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்துவிடுகிறது.

தாய்மையருள் மீன் கண் பார்வைபோல் இரட்சிப்பது. அருளே உமையாகவும் அறிவே சிவமாகவும் இவ்வுலகை இயக்கிநிற்கும் நிலையை சைவத் திருமுறைகளில் பரக்கக் காணலாம்.

ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது திருக்கூத்து. இதனை ஆடுபவன் நடராசன். தாளம் போடுபவள் பராசக்தி. அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் பிழைத்துவிடும். தாண்டவம் பிழைத்தால் உலக இயக்கமே தாறுமாறாகிவிடும். இதனால் எம்பெருமான் அம்மையின் பக்கம் நோக்கி அமைதியாக ஆடுகிறான்.

"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்
கூத்தாடும் நாதனுர்"

என்று போற்றுகிருர் சேக்கிழார்.

சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றி வாழ்ந்த சிறப்புக்குரியவர்கள். தீயினில் தெறலாய், பூவினுள் நாற்றமாய், கல்லினுள் மணியாய், சொல்லினுள் வாய்மையாய் இறைப் பொருளை அனுபவித்தவர்கள்.

எனினும், பெண்மக்கள் திருவிளக்கேற்றியும், மலர் தூவியும், நெல் தூவியும், கோலமிட்டும் வழிபட்டமைக்குச் சான்றுகள் பலவுண்டு. வீட்டு முற்றத்து மல்லிகை, மலரும் மாலை நேரத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்வதில் அவர்கள் ஈடுபாடு கொண்டமையும், குரவைக் கூத்தாடி முருகனைப் பூசித்த முறைமையும் அக்காலப் பாடல்களில் காண முடிகிறது.

தை நீராடிப் பாவை நோன்பு அனுட்டித்த சிறப்புக்களையும் அகநானூறு என்ற நூலில் காணமுடிகிறது.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டும் முகமாகப் பூம்பாவையை எழுப்பிய இடத்தில் ஞானசம்பந்தர் வேண்டுதலைக் காண்கிறோம்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினுல் அவர் நல்விழாப் பொலிவு
கண்டார்தல்
உண்மையா மெனில் உலகர் முன்வருகென
உரைப்பார்"

அடியாரைப் போற்றலும் அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபடுதலும் பெண்குலத்தின் கடமைகள் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

இன்னும் பக்தி நெறியில் பெண்மக்கள் கொண்டுள்ள பங்கைக் கவனிப்போம். திருவாசகத்திலே மணிவாசகர் கூற்றென்றில் காணலாம்.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்
பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானுகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோ ரெம்பாவாய்"

கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப் பெறும் கணவன்மார் சிவதொண்டர்களாகவே அமைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர்.

ஏனென்ருல் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்ருய் அமையாவிடத்துத் திருப்தியாக இல்லற தர்மம் அமையாது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காரைக்கால் அம்மையார் வாழ்வு அமைகிறது. விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வளர்ந்தவர் அம்மையார். ஆனல் திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லையெனினும் கணவனுலேயே "தெய்வம்" எனப் போற்றப்படும் பெருநிலையும் இவருக்கு ஏற்படுகிறது. அந் நிலையிலே சிவநெறி யொன்றே கைவரப்பெற்றவராய் உற்பவித்தெழுந்த ஞானத்தொருமையிலே அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிருர் அதில் ஒரேயொரு பாடல் மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

"வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
தானத்தா னென்பாரும் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர்
கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான்"

இங்கே ஒரு பெருமிதம் தோன்றுகிறது. அதாவது ஆண்டவன் தன்னகத்திலே குடியிருக்கிருன் என்பதே அதற்குக் காரணமாகும்.

"ஒன்றே நினைத்திருந்தேன்", "ஒன்றே துணிந்தொழிந்தேன்", "ஒன்றே என்னுள்ளத்தினுள் அடைந்தேன்" என்று பாடிப் பேய் வடிவுடன் காற்றினும் கடிதாகச் செல்கிருர்.

"அண்டர் நாயகனுர் என்னை அறிவாரேல் அறியா
வாய்மை
எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயென்"

என்பது அவர் கருத்து.

தலையினுல் நடந்து திருக்கையிலையை அண்மித்த பொழுது "வருமிவன் நம்மைப் பேணும் அம்மை" என்று கூறி இறைவன் உமையம்மைக்கு அறிமுகம் செய்து வைக்கிருர். அதுவுமின்றி அம்மையே உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டஞான்று அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அருள் வாக்குகளை நாம் என்றென்றும் போற்றி ஓதுவேண்டியவர்களாக இருக்கிறோம். இறைவனை நோக்கி அம்மையார் வேண்டி நின்ற இவ்வரம் எம்மையும் தெருட்டுகிறது.

''இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு
கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்று
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க
என்றார்''

இறைவனால் ''அம்மையே'' என்று அழைக்கப் பட்ட பெருமையைச் சேக்கிழார் வியந்து போற்றி ''மடுத்த புனல் வேணியினார் அம்மை யென மதுர மொழி கொடுத்தருளப் பெற்றாரை, அடுத்த பெருஞ் சீர் பரவல் யாரளவாயினதம்மா!'' எனப் பாடியருளி னார்.

வீட்டிலே கணவன்மாருக்குப் பின்னணியாக நின்று பெருந் தொண்டும் தியாகமும் புரிந்த பல பெண்மணிகளைப் பெரிய புராணம் எடுத்துக்காட்டு கிறது. திருநீலகண்டம் என்ற சொல்லையே தனது மந்திர வாக்காகக் கொண்டு ஒழுகி அடியார்களுக்குத் திருவோடு செய்தளித்துவாழ்ந்தவர் திருநீலகண்டர். இவருடைய புறவொழுக்கங் காரணமாகக் கருத்து வேற்றுமை மனைவியாருக்கிருந்தது. சிவனடியார் ஒருவருக்கு இத்தகைய மாசு ஏற்படக்கூடாது என்பது அவருடைய மனைவியாரின் எண்ணம். ஒரு நாள் கணவனார் தீண்டப்போன சமயத்தில் ''எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்'' என்று சத்தியம் செய்தார். கணவனார் சிறந்த சிவ தொண்டராகை யால் அன்று முதல் தமது மனைவியையோ பிற பெண்களையோ சாரவில்லை. எவருக்கும் இச் செய்தி தெரியாவண்ணம் வாழ்க்கை நடாத்தினர் அவர் மனைவியார்.

'' கற்புறு மனைவியாரும் கணவனார்க்கான எல்லாம்
பொற்புறு மெய்யுறாமல் பொருந்துவம் போற்றிச்
செய்ய
இற்புறம் பொழியா தங்கள் இருவரும் வேறுவைகி
அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை
வாழ்ந்தார்''

கணவருடைய கடமைகளிலும் குடும்பக் கடமை களிலும் தவறு நேராமலும் வேண்டியாங்கு செய்து வேறு வாழ்ந்தமையைத் தெரிவிப்பது இப்பாடலாகும். இயற்பகையார் மனைவியும் சிறுத்தொண்டர் மனை வியும் புரிந்த தியாகம் அனைவரும் அறிந்ததே. ஏன்! பிற்காலத்திலே அன்னை சாரதாதேவியின் தியாகம் எம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறதே. தொண்டு நெறியில் தலைப்பட்டு தூண்டு தவ விளக்காக அமைந்து பிறந்த குடியையும் கூடிப்பிறந்த தம்பி யையும் பெருமைப்படுத்திய பணி திலகவதியா ருடையது. தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவு பெருகிச் சைவத்தையே வளர்த்த தொண்டரை ஆக்கித் தந்தது. திலகவதியாரின் தூய தொண்டு களுக்கு இது ஒரு பெரும் எடுத்துக்காட்டாகும்.

இவ்வழியில் நின்று நாட்டை மேலோங்கச் செய்த பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. நாட் டையும் குடி மக்களையும் நன்நெறியிற் செலுத்த வேண்டியது அரசியல் தர்மமாகும். அரசியற் பணியில் இது சிவதர்மமாகவே மாறிவிட்டது.

''மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்துவளை கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை
நங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
நம் தமிழ் நாடுற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே''

தம்மைப் பேணி தன் கணவனைப் பேணி சைவத்தைப் பேணி, பாண்டி நாட்டையே பேணிய பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. ஆன்மீகத்தோடு கலவாத அரசியல் அர்த்தமற்றது என்பதை மன்ன னுக்கு எடுத்துக்காட்டியவர் இவர். இடர்ப்பாடு மலிந்த காலத்திலே நெருக்கடிக்குள்ளே சைவத்தைப் பேணி வளர்த்த அம்மையார் ''தெய்வப் பாவை'' என்று போற்றப்படுகிறார். பெண் பிறந்தார் யாவரும் இத்தகைய பணிகளிலும் முன்னின்று நாட்டை ஆன்மீக நெறியில் நலனடையச் செய்தல் வேண்டும்.

இறைவன் தம் பெயர்களைப் பலவாக வெளியிட்டுள்ளார்.
தம் சக்தி அனைத்தையும் அந்நாமங்களுக்கு அளித்துள்ளார்.
அவற்றை உச்சரிக்கக் காலம், நியமம் ஏதுமில்லை.

— சைதன்யர்

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய்

— *திருவாசகம்*

இந்து சமயத்தில் பெண்களின் கடமையும் இடமும்

மனோன்மணி சண்முகதாஸ், எம்.ஏ.

ஆசிரியை, முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

மனிதன் அறிவுத் திறம் பெற்று வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே சமயம் என்ற கோட்பாடும் உடன் வளர்ந்து வந்துள்ளது. பழங்கால மக்களிடையே சமய உணர்வு குறைவாகக் காணப்பட்டாலும், ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் வாழ்வு நடத்தி வந்தனர்.

சமய உணர்வு என்பது பல்வேறு நிலைகளில் உலகின் பல பாகங்களிலும் காணப்பட்டு வந்துள்ளது. மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் இன்றும் சமய உணர்வு நிலைபெற்றிருப்பது இதற்குச் சான்று. மனித வாழ்வின் நெறி அல்லது வழி என்ற பொருளில் பல சமயங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

தமிழ் நூல்கள் பலவற்றில் சமயம் என்ற சொல்லுக்குத் திருநெறி, செந்நெறி என்ற சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. இதனால் மனிதனது வாழ்வை நெறிப்படுத்துகின்ற ஒரு பண்பினைச் சமயம் பெற்றிருந்ததை உணர முடிகிறது.

சமயம் என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கும் அப்பாற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது அந்த ஆற்றலுக்குள்ள தொடர்பு என்று கொள்ளலாம். இவ்வாற்றல் பற்றி அறிகின்ற உணர்வு மக்களிடையே தோன்றியபோதே சமயங்கள் பற்றிய கருத்துக்களும் உருவாகியிருக்க வேண்டும்.

சமயம் புனித உணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் ஓர் அம்சமாகவும் காணப்பட்டது. பொதுவாகச் சமயங்களிற் கடவுள் பற்றிய நம்பிக்கை காணப்பட்டாலும் வாழ்க்கையின் நன்னோக்கத்தை நிறைவேற்ற உதவும் கொள்கையாகவே சமயம் விளங்கி வருகிறது. இதனால் சமயம் மனித வாழ்க்கையில் "நெறிப்படுத்தல்" என்ற கோட்பாட்டை உருவாக்குகிறது. இந்நெறிப்படுத்தல் மனிதனுக்கு அவசியமானது என்பதை உணர்ந்த யாவரும் ஏதோ ஒரு சமயத்தைத் தமது வாழ்வின் ஆதாரமான நம்பிக்கையாக்கி வாழ்கின்றனர்.

உலகிலுள்ள பல்வேறு சமயங்களில் இந்து சமயம் தொன்மை வாய்ந்த சமயமாக விளங்குகின்றது. இந்து சமயம் என்னும்போது பொதுவாக இந்தியாவில் தோன்றிய சமயங்களைக் கருதலாம். ஆனால் இன்று இப்பெயர் சிறப்பாக சைவ வைணவ சமயங்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது.

சைவ வைணவக் கோட்பாடுகள் பற்றி அறிவதற்கு ஆதாரமாக உள்ள வேத இலக்கியங்களும், உபநிடதங்களும் தர்மசாஸ்திரங்களும் திவ்விய பிரபந்தங்களும் இந்து சமய நெறிகளை உணர்த்தும் சான்றுகளாக விளங்குகின்றன. மனித வாழ்வை நெறிப்படுத்தும் நோக்கத்திற்காகவே அவை எழுந்திருக்க வேண்டும் என்ற கொள்கை அவை கூறும் விடயங்களிலிருந்து இன்று வலுப்பெற்று வருகின்றது.

இவ்வாறாக வாழ்வை நெறிப்படுத்தும்போது இந்து சமயம் பெண்களுக்குரிய சமூக அந்தஸ்தினைப் பற்றிய தகவல்களையும் கூறியுள்ளது. பெண்களுக்கு இந்து சமயம் எத்தகைய கடமைகளையும் உரிமைகளையும் கொடுத்து வந்துள்ளது என்பதை நாம் இன்று உணர்வதற்கு மேற்கூறிய சான்றுகளே பெரிதும் உதவுகின்றன.

உபநிடதத்தில் பெண்கள் மேலான நிலையில் வைத்துக் கூறப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் புரோகிதர்களாகும் வாய்ப்புக் கொடுக்கப்படாவிட்டா

லும் தவ வாழ்வை மேற்கொள்ளும் உரிமை வழங்கப் பட்டிருந்தது. வேதங்களிலே சில சுலோகங்கள்கூடப் பெண்களால் இயற்றப்பட்டுள்ளன. பிரகதாரண்ய உபநிடதத்தில் கார்கி, வாஸக்னவி என்ற இரு பெண்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக் காலத்தில் பெண்கள் மிகுந்த கல்வியறிவுடன் இருந்ததை இவ்வுபநிடதம் உணர்த்துகின்றது. ஆனால், பிற்காலத்தில் பெண்களது நிலை தாழ்த்தப் பட்டதை அறியமுடிகிறது.

பெண்ணைத் தெய்வமாக்குகின்ற ஒரு நிலையும் தொடர்ந்தது. இந்த நிலையும் பின்னர் மாற்ற மடைந்தது. பெண் பெருமையும், மதிப்பும் உடையவளாக உயர்த்தப்பட்டாள். செல்வத்துக்கும், கல்விக்கும் அதிதேவதைகளாகப் பெண்கள் சரஸ்வதி யாகவும், லட்சுமியாகவும் கொள்ளப்பட்டனர். பக்தி நெறியிலே சக்தி என்ற புதிய கோட்பாடு உருவாகத் தொடங்கியது. ஆண்டவனுக்கே அர்த்தநாரீசுர வடிவம் கற்பிக்கப்பட்டது. இந்த உலகிலுள்ள அனைத்தையுமே படைத்தவள் சக்தி என்ற நம்பிக்கை உருவாகியது.

பல்லவர் காலத்தில் எழுந்த பக்திப் பாடல்கள் பெண்களுக்குச் சமய ரீதியாகச் சற்று மேலான தகைமைகளைக் கொடுத்தன. சைவ சமயத்தையே வளர்க்கின்ற அரும்பணியில் அவர்களை ஈடுபடுத்து கின்ற நிலையும் காணப்பட்டது.

காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் என்ற மூவரும் சைவசமயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்கு கொண்டவர்களாக அமைகின்றனர். திருத்தொண்டர் புராணத்தில் இவர்களுக்கு இடமளிக்கப்பட்டது.

''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே'' எனச் சிவனே காரைக்காலம்மையாரைப் புகழ்வதாகக் காணப்படுகின்றது.

''தூண்டு தவ விளக்கனையார்'' என்று திலகவதி யாரும், ''தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை'' என மங்கையர்க்கரசியாரும் போற்றப் பட்டுள்ளனர்.

இம்மூவருள்ளும் காரைக்காலம்மையார் தனிச் சிறப்புப் பெற்றவராகப் பெண்ணின் பெருமையை உலகுக்கு உணர்த்துபவராகச் சிருஷ்டிக்கப் பட்டுள்ளார். இறைவனைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் பெண்கள் புலமைக்கு எடுத்துக்காட்டாக மட்டுமன்றி, சைவ சமயத்தை வளர்ப்பதற்கு வித் திட்டவர் என்ற பெருமையையும் உணர்த்தி நிற் கின்றன.

பக்தி இயக்கம் பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டில் தோன்றுவதற்குக் காரணமானவராகக் காரைக்காலம்மையார் திகழ்கிறார். சைவ சமயத்தைப் பிற மதங்களின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற் காக எழுந்த பக்தி இயக்கம் இவரது பாடல்களினாலே வலுப்பெற்றது. பக்திப் பிரசாரஞ் செய்வதற்கான பக்திப் பாடல்களை இயற்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கியவரும் இவரே. மக்கள் மனதில் இறைவனைப் பற்றிய சிந்தனையை அவனுடைய கோலவழகு, அருட் சிறப்பு ஆகியவற்றைப் பாடுவதன் மூலமாக ஏற்படுத் தினார்.

பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் முக்கிய இடம் வகித்த சம்பந்தப் பெருமான் பணிக்குப் பெரிதும் உதவியவராக மங்கையர்க்கரசியார் விளங்குகின்றார். தம் கணவர் மதமாற்றத்தைத் தடுக்க மங்கையர்க் கரசியார் எடுத்த முயற்சிகள் இந்து சமயத்திற் பெண்கள் சமயப் பணியினை எடுத்துக்காட்டுகின்றன.

அதே போன்று திலகவதியாரும் திருநாவுக் கரசர் என்ற சைவ நாயனார் உருவாவதற்குத் தொண்டு புரிந்தவராக விளங்குகின்றார்.

குடும்ப நிலையிற் பெண்கள் சமயப் பணி செய்த வகையினைப் பெரியபுராணம் என்ற நூல் தெளி வாக விளக்குகின்றது. இந்து சமய வளர்ச்சிக்காகப் பெண்கள் தத்தமது குடும்ப நிலையில் இருந்தே பணி செய்யலாமென்பதைக் காலத்தின் தேவைக் கேற்ற வகையில் இந்து சமயம் உணர்த்தி வந் துள்ளது.

சமய நெறிகளுள் பெண்களுக்காக இந்து சமயம் வகுத்த சில நெறிமுறைகள் அவர்களை ஒழுக்கச் சீர்கேடுகளிலிருந்து பாதுகாக்கப் பெரிதும் உதவின. கணவனை இழந்துவிட்ட நிலையில் பெண்ணின் வாழ்வு சமயத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. துறவி யைப் போலத் தூய வாழ்வையே அவர் மேற்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

> ''வெறுந்தரையிலேதான் படுக்கலாம். ஒரெயொரு வேளை எளிய உணவுதான் கொள்ளலாம். வர்ண ஆடைகளோ, அணிகளோ பூணக் கூடாது. மலர் சூடவோ
> வாசனைப் பொருள்களை உபயோகிக்கவோ கூடாது. மறு
> பிறவியில் மீண்டும் தம் கணவருடன் சேரும் நம்பிக்கையுடன்
> கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்துஎஞ்சிய வாழ்நாளை
> ஓட்ட வேண்டும். இதற்கு மாறாக நடந்தால் மறு பிறவியில்
> கஷ்டப்பட நேருவதுடன் கணவனுடைய ஆத்மா விற்கும் கேடு
> செய்தவள் ஆவாள்.''

என்று சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன.

இத்தகைய ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை முறை பெண்களுக்கு அவை விதிக்கப்பட்ட காலத்தில் பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனல் தற்கா லத்தில் சமயம் பற்றிய நோக்கும் போக்கும் வேறு பட்டதனல் இக்கட்டுப்பாடுகள் பெண்களை அடிமை களாக்க முயல்வதாகச் சிலர் கருதுகின்றனர்.

பெண் தன் நிலையுணர்ந்து கடமையாற்றும் ஆற்றல் நிரம்பியவள். தன்னுற் பாதுகாக்கப்பட வேண்டிய ஒழுக்க நெறிகளை அவள் நன்கு உணர்ந் தவள் என்பதையே இந்து சமயம் பெரிதும் வலியுறுத்துகின்றது. திலகவதியார் வாழ்வு நெறி மூலம் இதனை உணரமுடிகிறது. பெற்ருேர் மறை வுக்குப் பின்பு தனக்குக் கணவனுக வரவிருந்தவரை யும் போரிலே பறிகொடுத்த திலகவதியார் தன் நம்பிக்கை வாழ்வு நடத்துகின்ருர். அவர் வாழ்வு சேவை நிலையில் அமைகின்றது. தனக்கென்று இன்பங்கள் கிடையாதவிடத்து மற்றவர்க்கு நலமளிக்கும் செம்மை வாழ்வாக மாறுகிறது. திருமணம் ஆகாமலே துறவு பூண்டு தவ வாழ்வு வாழும் அவர் வரலாறு பெண்கள் வாழ்வின் தத்து வத்தை விளக்குகின்றது. சமூகப் பணியிலே பெண் எத்தகைய நிலையில் ஈடுபடுகிருள் என்பதை அவர் வரலாறு உணர்த்துகின்றது.

இந்து சமயம் பெண்களின் கடமைகளைத் தெளிவாக வரையறை செய்துள்ளது. பழைய புராணக் கதைகளிலும் இதிகாசங்களிலும் பெண் களின் வாழ்வு நிலை சித்தரிக்கப் பட்டிருக்குமாற்றை நோக்குமிடத்து இது புலனுகின்றது.

மகாபாரதம் பெண்ணின் கடமைகளை வற்புறுத் தும்போது அவள் அடையக்கூடிய சில கஷ்டங் களையும் விளக்கிக் காட்டுகின்றது. குந்திதேவி தன் இளமைக் காலத்திற் செய்த காரியத்தால் தன் குடும்பத்தவர்க்கு எத்துணைக் கஷ்டங்களைத் தேடினுள் என்பதை மகாபாரதம் உணர்த்துகின்றது. பெண்ணுனவள் தன்கடமை எதுவென அறியாமல் இருப்பதால் ஏற்படக்கூடிய தீமையை இது விளக்கு கின்றது. இன்னும் அவளது செயல் அவளோடு சம்பந்தப்பட்ட பெண்களையும் எவ்வாறு பாதிக் கின்றது. என்பதையும் அது விளக்குகின்றது.

ஐவருக்கும் மனைவியாக வாழ்ந்த பாஞ்சாலி தன் கணவர்களைவிடக் கடவுளாலேயே காப்பாற்றப் பட்டாளென்ற தத்துவத்தையும் மகாபாரதம் எடுத்துக் காட்டுகின்றது. இராமாயணத்தில் சீதா தேவியின் குழந்தைமையால் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. இராம அவதாரத்தின் தேவையை உணர்த்தும் பாத்திரமாகச் சீதை உருவாக்கப்பட்டதோடு அல்லாமல் பெண்ணினத்தின் பண்புக்கு ஓர் எடுத்துக் கட்டாக வும் விளங்குகின்ருள்.

இந்து சமயம் பெண்களைப் பொறுத்த வரையில் கற்பு என்ற சிறப்பிலக்கணத்தைக் கொடுத்துள்ளது. கற்பினுல் எதையும் சாதிக்கும் ஆற்றல் பெண் களுக்கு உண்டு என்பதை இந்து சமயம் வலியுறுத்துகிறது. கணவனைத் தெய்வமாகப் பெண் வணங்கினுல் அற்புத ஆற்றல் படைத்தவளா கிருள். அந்த ஆற்றல் எதையும் அழிக்கும் தன்மை வாய்ந்தது.

பெண்களைப் பொறுத்த வரையில் இந்து மதம் ஒழுக்க நெறிகளைச் சமூகத்திற்கு ஆக்கிக் கொடுப்ப வர்கள் பெண்களே என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. பெண் தன் குடும்ப நிலையில் ஒழுக்கத்தைப் பேணினுல், நாட்டின் ஒழுக்கம் தானுகவே பேணப்படும். இதற்காகவே பெண்ணின் பெருமை பற்றிய பல கதைகள் புராணக் கதைகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய மதங்கள், பெண்கள் துயரத்துக்கே துணையானவர்கள் என்ற கோட் பாட்டைக் கொண்டிருக்க, இந்து சமயம் அவர்களது தனித்துவங்களை வெளிப்படுத்திக் காட்டியது.

வீட்டிலிருந்தே மனிதனை நெறிப்படுத்தும் வழி களை இந்து சமயம் கூறுகின்றது. அதனுல் குடும்பத் தில் செய்ய வேண்டிய பல்வேறு விதமான சடங்கு களையும் பெண்களுடனும் தொடர்புறுத்தி இந்து சமய நூல்கள் கூறலாயின.

குடும்பத்தில் நிகழும் எந்த விதமான முக்கிய நிகழ்ச்சியும் சமயச் சடங்கு இல்லாமல் நடைபெற மாட்டாது. குழந்தையின் பிறப்பு, குழந்தைக்குப் பெயரிடுதல், குழந்தைக்கு முதன் முதலாகத் திட உணவு கொடுத்தல், கல்விக்கு அனுப்புதல், திருமணம், இறப்பு ஆகிய பல்வேறு நிலைகளிலும் பலவிதமான சடங்குகளை இந்து சமயம் வகுத் துள்ளது. இச்சடங்குகளைச் செய்வதற்கு இல்வாழ் வான் தன் வாழ்க்கைத் துணையான மனைவியை நாடு கின்ருன். தான் செய்ய வேண்டிய ஐந்து நிவேதனங் களையும் ஒழுங்கு முறையிலே செய்வதற்கு ஆணுக்குப் பெண் உதவுகின்ற பணியினைச் செய்யும் படி இந்து சமயம் பெண்ணுக்குச் சில முக்கியமான கடமைகளை வகுத்துக் கூறியுள்ளது.

ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் ஆன்மீக நெறி யிலே செல்வதற்கு அப்பெண்ணின் கடமைகள் சரி வர நிறைவேற்றப்பட வேண்டும். உணர்வும், அறிவும் குழந்தை நிலையிலிருந்து ஒருவனுக்கு ஊட்டப்படு

வ்த்தற்கும் அவன் தொடர்ந்து தன் வாழ்நாள் முழுவதும் அந்நெறிச் செல்வதற்கும் பெண்ணே துணையாகின்றாள்.

இந்து சமயம் தன்னிலையைக் காலத்துக்குக் காலம் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றது. சமூக நிலைகளில் மாறுதல்கள் ஏற்படும்போது வாழ்க்கை முறையும் சிந்தனைகளும் மாறுபடுகின்றன. இதனால் வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு நெறியாகவும் இந்து சமயம் இன்று விளங்குகின்றது. பெண்களுக்கு உரியதாக இந்து சமயம் வகுத்த கடமைகளில் மாற்றம் ஏற்படவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதனால் இந்து சமயத்திலே சீர்திருத்தக் கொள்கைகள் பரவத் தொடங்கின.

ஆரிய சமாஜம் என்பதை நிறுவி, சுவாமி தயாநந்தா சில புரட்சிகரமான மாற்றங்களை இந்து சமயத்தின் நெறிகளிலே ஏற்படுத்தினர். அவற்றுள், பெண்களைப்பொறுத்த வரையில் விதவைகள் மறுமணம் செய்தல் பற்றிய சில கருத்துக்களை அவர் முன்வைத்தார். அவரைத் தொடர்ந்து பெண் மணியான திருமதி அன்னி பெஸண்டு அம்மையார் இந்து சமயத்தைப் பற்றிய சில சீர்திருத்தக் கருத்துக்களை இந்தியரிடம் கூறிச் சென்றார். "இந்து சமயமின்றி இந்தியாவிற்கு எதிர்காலம் இல்லை. இந்தியாவின் வேர்கள் ஆழமாகப் பதிந்துள்ள மண்ணை இந்து சமயமாகும். அதிலிருந்து அதை வேறுபடுத்தினால் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட மரம் போலவே இந்தியாவும் மடிந்து விடும்" என்று அவர் கூறிய கருத்து இந்து சமயத்தின் வளர்ச்சிப் பாதையில் சிந்தனைச் சிதறல்களை ஏற்படுத்தியது.

இந்து சமயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமைகளைப் பற்றி இன்று பலரும் அறியாததன் காரணத்தாலேயே இந்து சமயத்தின் மீதுள்ள நம்பிக்கை ஏனைய புதுமைக் கருத்துக்களால் தாக்கப் பெறுவதற்கும் காரணமாயிற்று. இந்நிலையைப் பாரதி நன்குணர்ந்திருந்தான். அதனால் தனது பாடல்களிலே பெண் தெய்வங்களைப் பற்றிய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் காட்டினன். பழைய இந்து சமய இலக்கியங்களை நன்கு பயின்றிருந்தமையால் அவற்றை மற்றவர்க்கும் உணர்த்த வேண்டிப் பாடல்களைப் பாடினன். சக்தியைத் தன் நம்பிக்கையின் ஆதாரமாக்கினன். பாரதியின் சக்திப் பாடல்கள் பாரதியின் சமய நம்பிக்கையினை மட்டுமன்றி மற்றவர்களும் அந்த உணர்வினை அறிவதற்குப் பெரிதும் உதவின. காளி, சரஸ்வதி, இலக்குமி என்னும் முப்பெரும் பெண் தெய்வங்களைப் பற்றிய பாரதியின் பாடல்கள் பெண் தெய்வங்களது கோட்பாட்டை மட்டும் விளக்குவதோடு அமையாது இந்து சமயத்திற் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பினையும் மறைமுகமாக உணர்த்துகின்றன.

அறிவு, ஆக்கம், அழிவு என்னும் முப்பெரும் சக்திகள் பெண்களிடம் உள்ளன. அச்சக்திகளை ஏற்ற சந்தர்ப்பத்தில் ஏற்றவாறு பயன்படுத்துவதால் பெண் தன் ஆற்றலை வெளிப்படுத்துகிறாள். தன் மென்மைக் குணங்களையும் அறிவுத் திறனால் வாழ்வு நெறிக்காக அர்ப்பணிக்கும் பெண்மையின் உயர்ந்த லட்சியம் இந்து சமயத்தின் கோட்பாடாகவே அமைந்து விட்டது. இந்த உலகையெல்லாம் காக்கின்ற அன்னை பராசக்தியாகப் பெண்களைப் போற்றும் மரபினை இந்து சமயமே ஆரம்பித்து வைத்தது. பாரதியின் பாடல் ஒன்று அதனை நன்கு விளக்குகின்றது.

மலையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலைபி லுயர்ந்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

புல்லைக் காட்டிலும் தாழ்மை கொண்டிரு. மரத்தைப் போல் பொறுமையாக இரு. உன்னை ஒரு பொருட்டாக எண்ணிக் கொள்ளாதே. பிறரை மதித்திடு ; ஹரி எப்பொழுதும் புகழப் பட வேண்டியவன்.

— சைதன்யர்

"பெண்ணென்றும் பெரும் பேறு"

விந்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே".

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியதாய் மூவா இளநலம் காட்டி, முதுமை அழகைக் கூட்டி, காலம் இறந்து நிற்கும் ஒப்பற்ற பழம்பெரும் மதம் இந்துமதம். இந்துமதம் என்ற நூலில் பல்வேறு வகைப்பட்ட பல்வேறு தனித் தன்மை கொண்ட சமயங்கள் மணிகள் போலக் கோக்கப்பட்டிருக்கின்றன. இந்துக்கள் என்றழைக்கப்படும் நாம், பல்வேறு தத்துவங்களை அநுசரிக்கின்றோம். பல்வேறு தெய்வ வழிபாடுகள். பல்வேறு சடங்குகள். ஆனாலும் எல்லோரும் ஒட்டு மொத்தமாக இந்துக்களே, உலகில் வேறு எந்த மதத்திலும் காணப்பெறாத புதுமை இது, விரிந்து கொடுத்துத் தன்னை அடைந்தோரைக் காக்கும் கருணையின் நெகிழ்ச்சிதான் இம்மதத்தின் ஆணிவேர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்ற திருமூலரின் ஓங்கிய குரலே இந்து மதத்தின் தாரக மந்திரம்.

இசை நிகழ்வில், வெவ்வேறு இராகங்கள், வேறு வேறு பாடல்கள். மனோரீதியான கற்பனைகள்,.....ஆனால் அத்தனைக்கும் ஓர் அடிப்படை நிர்ணயம் உண்டு. அதுதான் ஆதாரசுருதி. சுருதியிலிருந்து விலகாதவரை இசைக்கு மதிப்பு உண்டு. அதுபோல வேதம் காட்டும் வழியிலிருந்து விலகாதவரை இந்துவிற்கும் பெருமையுண்டு.

நாம் வாழும் வாழ்க்கை வேறு. நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை வேறு. நாம் இன்று சமயம் வேறு, வாழ்க்கை நடைமுறை வேறு என்ற சிந்தனையில் வாழ்கிறோம். ஆனால் நமது முன்னோர்களோ வாழ்க்கையைச் சமயமாக்கி வீரம், காதல், விளையாட்டு எல்லாவற்றிலும் ஆன்மீகப் புனிதங்களைக் காணும் பக்குவம் பெற்றிருந்தனர். இகம், பரம் என்ற வேற்றுமைகளில் ஒற்றுமையைக் கண்டனர். ஒவ்வொரு விநாடியும் இறை நினைவுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தனர். வேதகாலப் பெருமக்கள் ஒன்றேயான சக்தியைக் கண்டு ஆனந்தம் கொண்டனர், அதிலே மெய்ப்பொருளை, சத்தியத்தை, ஒழுங்கை உருக்கட்டினர். பிறப்பிலிருந்து இறப்புவரை வேத இசையிலேயே வாழ்ந்து மடிந்தார்கள். ஹிந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளையும் வேதம் என்ற கொடியால் கட்டி ஒருங்கிணைத்தார்கள்.

வேதத்திற்குப் பேதம் தெரியாது. தன்னை உயர்த்திக்கொண்டு மற்றவர்களைத் தாழ்த்தத் தெரியாது. வாழ்வின் ஜீவனான அறத்தையும் ஒற்றுமையும் அது வலியுறுத்துகின்றது. இது எல்லாக் காலத்திலும், எல்லா மதங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. மொழி, மத, இனங்களைக் கடந்து காலம் காலமாக நிற்கும் அதிசய மேல்வரிச் சட்டம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
இதுதான் வேதக் கொள்கை. இந்து மதத்தின் கொள்கை.

இந்து மதத்தில் காணும் மற்றுமொரு விழுமிய கொள்கை பெண்மையின் ஏற்றம். இதுவும் ஏனைய மதங்களின் அதிகம் சிறப்புறுத்தப் பெறாத செய்தி, அன்னையைத் தெய்வமாக மதிக்கும் பண்பு......இல்லை தெய்வத்தையே அன்னையாக மாற்றும் மாண்பு, இந்துக்களின் தனிப் பெருஞ் சொத்தும் அதர்வ வேதத்தில் நீ பெண்: நீயே ஆண் (த்வம்ஸ்திரீ த்வம் புமான்அஸி) என்று பரம் பொருளைப் பெண்ணாகப் போற்றும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அருள்மலரும் அதிகாலைப் பொழுதை "உஷை" என்ற பெண்ணாகக் கண்டவர்கள், அச்சம் தரும் இரவுப் பொழுதை "ராத்ரீ" என்ற பெண்ணாகக் கண்டு வழிபட்டனர். அதுமட்டுமல்ல இவ்வுலகைப் படைத்துக், காத்து, அழிக்கும் முப்பெருஞ் செயல்களைச் சக்தியின் உருவிலே வழிபட்டார்கள், அண்டாண்ட கோளங்களையும் ஆளும் ஆளுமையைப் பராசக்தியாக, இராஜராஜேஸ்வரியாக வணங்கி மகிழ்ந்தனர். கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும், கலைமகளையும், திருமகளையும், அலைமகளையும் அதிதெய்வமாக ஆக்கி உவந்தனர். வாழ்வின் எல்லாக் கோணங்களிலும் பெண்மைக்குப் பெருமை சேர்த்தனர் நம் முன்னோர். வாழ்வை வளமாக்கும் பாரிய பொறுப்பைப் பூவையரின் பூங்கரங்களிலே ஒப்படைத்தார்கள். ஒருபெண் இல்லறத்திலே மனைவியாக மட்டுமல்ல, மந்திரியாக, நண்பனாக, ஆசானாக இப்படிப் பல கோணங்களில் பணிபுரிகின்றாள் கணவன் தவறிழைக்கும் பொழுது இடித்துத் திருத்திய தையலார்களை நாம் அறிவோம்.

"தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்"

எனச் சிவன்மேல் ஆணையிட்டு அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாவகை வாழ்ந்து பண்பையும், பதியையும் காத்த திருநீலகண்டரின் மனைவி...

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறியறியாத் தவத்திருவாட்டி, தென்னவன் தேவி மங்கையர்க்கரசி, அன்பு ஒன்றையே ஆயுதமாக்கி, தவறிழைத்த கணவனைத் திருத்தி, சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வீரப்பெருந்திரு...

பிறர் பொருளை வெளவி வளர்த்த, கள்ளத் தொழில் கைதேர்ந்த நீலனை, யாருக்கும் பணியாத அந்த அஞ்சா நெஞ்சனை, தன் ஆடற் கலையால் வென்று, தன்னைப் போலவே மாலவன் அடியார்களிடம் மனம் கொளவைத்து, "பீதகஆடைப்பிரானார் பிரமகுருவாகி" வந்து அஷ்டாக்ஷரத்தை உபதேசிக்கும் பேறு பெறச்செய்து, நீலனைத் திரு மங்கையாழ்வாராக மாற்றியவள் குமுதவல்லி என்ற ஆடற்கலையரசி.

சிறுவயதில் பெற்றோர்களை இழந்து அன்பிற்காக ஏங்கித் தவித்தவள் இராம்போலா ...... அந்த அன்பினைத் தன் மனைவியின் வடிவத்தில் கண்டு ஆராக் காதல் அவள்மீது கொண்டான். ஓர்நாள்... அவனைப் பிரிந்து அவள் பிறந்தகம் செல்ல அவளின் பிரிவுத் துயர் பொறுக்காத இராம்போலா கொட்டும் மழை யென்றும் பாராது, வெட்டும் மின்னலென்றும் கருதாது ஓடோடி வந்து நள்ளிரவு நேரத்தில், பாம்பை மரவிழுதாக எண்ணி, அதன்வழி இறங்கி, வீட்டுற்குள் வந்து தனது மனைவியிடம் தன் காதலைப் புலப்படுத்துகின்றான். 'அழியும் தன் உடல்மேல் வைத்த இந்த ஆழ்ந்த அன்பை, அழியா அழகனை இராகவனிடம் வைத்தால் இப்பிறவிப் பயன் கிடைக்குமே' என்று பரிவாக எடுத்துரைத்தாள் இரத்தினாவளி. மறு வினாடியே இராம்போலா அழிந்தான் . ...துளசிதாஸர் உதயமானார். 'இராம சரிதமானசம்' என்ற அமரகாவியம் நமக்குக் கிடைப்பதற்கு அடி கோலியவள் ஒர் பெண்மணி.

அதுமட்டுமல்ல. உயர்ந்த நோக்கங்கள் உலகினில் நிறைவேறத் தியாகத் தீயில் தங்களை ஆகுதி ஆக்கிக்கொண்ட பெண்களும் உண்டு.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் வாசஸ்பதிமிச்ரர். அனைத்து சாஸ்திரங்களிலும் கரை கண்டவர், ஆதிசங்கரர் எழுதிய பிரம்ம சூத்திர பாஷ்யத்திற்கு மிக அரியமுறையில் விளக்கம் அருளியிருக்கின்றார். அதற்கு "வாசஸ்பதீயம்" என்று பெயர். அப்படி அவர் விளக்க உரை எழுதும் காலத்தில்தான் அவரது திருமணம் நிகழ்ந்தது. திருமணம் அவரது எழுத்துப் பணியைத் தடைசெய்யவில்லை. அப்பணி தங்குதடையற்ற பிரவாகம் போல் பொங்கிப் பெருகிக் கொண்டே போயிற்று. வாசஸ்பதி மிச்ரரின் இளம் மனைவியின் இளமை அனலின் மெழுகாகக் கரைந்தது. ஆனால் மிச்ரர் இதைக் கவனிக்கவில்லை. ஆண்டுகள் பல உருண்டன, புத்தகம் உருவாயிற்று. தலைநிமிர்ந்தார் வாசஸ்பதி மிச்ரர். அவர் கண்டது தலை நரைத்துத் தோல் சுருக்கமுற்ற மனைவியின் முதுமையையே. மிச்ரரின் மனம் உருகியது. தான் எழுதிய அப்புத்தகத்திற்குத் தனது பத்தினியின் பெயரான "பாமதி" என்றநாமத்தையே சூட்டித் தியாகத்தின் சின்னமாக அதனை நிலைநாட்டினார்.

தம்பியார் உளராக வேண்டும் என வைத்த திலகவதியாரின் தயர அவர் கழுத்தில் எற இருந்த மங்கல நாணைத் தடைசெய்தது. அம்பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கித் திரு நாவுக்கரசர் என்னும் ஞானச் செல்வத்தை அளிக்கத் திலகவதியார் செய்த தியாகம் ஒப்பற்றது.

தனக்குக் கிடைக்க இருந்த பொருட் செல்வத்தை விலக்கி, தன் கணவரான யாக்ஞவல்கியரிடமிருந்து ஞானச் செல்வத்தைப் பெற நிழல்போல் அவரைத் தொடர்ந்த வேதகால வனிதையான மைத்ரேயியின் மாண்பும் எண்ண இனிப்பவை,

இப்படிக் கல்வியாலும், ஒழுக்கத்தாலும், தியாகத் தாலும் இந்து மதப் பண்பாட்டைக் காத்த மங்கையர் களின் வரலாறுகள் எண்ண. எண்ண இனிக்கும் இன் சுவை ஊற்றுகள். இதைக் கருத்திற் கொண்டுதான் கவிமணி அவர்கள்,

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்று முழங்கினர் போலும்.

உண்மைதான். பெண்மையே ஓர் அரிய தவம்தான்.

தத்துவ ஞானிகள் கூறும் சச்சிதானந்தக் கடவுளும், பக்தர் கள் கூறும் ஆத்மார்த்தக் கடவுளும், தனித்தனிக் கடவுள் அல்லர். இருவரும் ஒருவரே. ஒருவர் அருவமானவர். மற்றவர் உருவமானவர். பக்தன் வணங்கும் கடவுளுக்கும், வேதாந்தம் கூறும் பிரமத்துக்கும் வேறுபாடு இல்லை.

— *விவேகானந்தர்*

தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடி
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ.

— *திருவாசகம்*

குரு அருளும் ஆழ்நிலைத் தியானமும்

திருமதி சந்திரா நல்லலிங்கம்

ஆன்மா பிரமத்தோடு கலத்தற்காகஇயற்றும் வழிபாடுகளைக் குரு, லிங்கம், சங்கமம் எனத் தத்து வார்த்த ரீதியில்மூன்ருக வகுப்பர் மெய்ஞானிகள். இவற்றுள் குருவே முதலில் வைத்துப் பேசப்படுவ தால் அதன் மேன்மை உற்று நோக்கற்பாலது.

குருவழிபாடு பற்றிப் பேசுங்கால் சிவனே திருநந்தி தேவருக்கும், சனற்குமாரருக்கும் குரு வாகியதும் வளவர்கோன் பாவையாம் மங்கை யர்க்கரசியாருக்குத் திருஞானசம்பந்தர் என்ற ஞானக்குழந்தை குருவாக விளங்கியதும், அப் பூதியடிகளாம் திருத்தொண்டருக்கு வாகீசர் குருவானதும் குறிப்பிடத்தக்கவை. இங்ஙன மாக நம் சமயத்தை நுணுகி ஆராயுங்கால் தெய் வத்தைக் குருவாகக் கொண்டொழுகி நற்கதி யடைந்தவர்களும் தெய்வானுபூதி பெற்ற மெய் யடியார்களைக் குருவாகப் போற்றி வழிபட்டுத் திருப்பேறடைந்தவர்களும் இடம் பெறக் காண லாம்.

பதினன்கு மெய்கண்ட சாத்திர நூல்களுள் ஒன் ருன திருவருட்பயனிலே குருவருள் பற்றி உமாபதி சிவாசாரியார் சுவைபடக் கூறிச் செல்லும் உவ மைகள் உய்த்துணரற்பாலன. ஞானசாரியன் இன்றி ஞானம் தோன்ருது என்பது இவர் கருத்து. எமது கண்ணுக்குத் தோன்ருமல் இதுவரை படைத்தல், காத்தல், அழித்தல்,மறைத்தல் ஆகிய கிருத்தியங்களைப் புரிந்த இறைவன் ஆன்மாவின் பக்குவ நிலை உணர்ந்து அருளையும் செய்ய வரு வான் என ஆணித்தரமாக இவர் எடுத்துரைக் கின்ருர். குருவுக்கு என்ன தெரியும், குருவினல் என்ன நன்மையுண்டு என்ற ஐயப்பாடுகளைக் குருவை நெருங்கு முன்பே ஆன்மா தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

காட்டு யானையைப் பொறிக் கிடங்கினுள் அகப்படுத்திய பின் அதனைப் பழக்கவும் பழக்கப் பட்ட யானையையே பயன்படுத்துவர். இதேபோல் ஆன்மாவின் ஆணவத்தை அகற்றவும் திருவருளை நல்க இட்டுச் செல்லவும் சகலருக்கும் இறைவன் குருவடிவிலே மானிட வடிவந்தாங்கி அருள் புரிவான்.

பாம்பினுற் கடியுண்டு விடம் ஏறப்பெற்ற மனிதனுக்குக் கடிவாயிலே கீரியைப் பொருந்த வைப்பதால் பயனில்லை. இங்ஙனம் செய்வதால் விடம் தீருமோயெனில தீராது. மாந்திரீகன் தன்னைக் கீரியாகப் பாவித்து, ஆதி தைவீகமாவிய நகுல மந்திரத்தை ஒவ்வொரு நாளும் உச்சரித்து வந்த பழக்கத்தினுலேயே, அந்த மந்திர ரூபமே தானுகப் பாவனை செய்து பார்க்க (நயனதீட்சை) விடம் அகலும். இங்ஙனமே ஆணவவிடம் ஏறிய ஆன்மாவுக்கு விடந்தீர்க்கும் மாந்திரீகனுக இறை வனே குரு வடிவந்தாங்குவான்.

சூரிய காந்தக் கல் என்ருெரு வகைக் கல் உண்டு. இதனையும் பஞ்சையும் சேர்த்துச் சூரிய ஒளியிலே வைப்பின் பஞ்சு தீப்பற்றி எரியும். சூரிய ஒளி இல்லாவிடத்துப் பஞ்சு தீப்பற்றிக்கொள் ளாது. எங்ஙனம் சூரியனுடைய ஒளி இன்றேல் பஞ்சு தீப்பற்றிக்கொள்ளாதோ அங்ஙனமே குரு அருளின்றேல் ஆன்மா திருவருளைப் பெற முடியாது.

மேற்கூறியவற்ருல், ஆன்ம ஈடேற்றம்பெறக் குருவருள் இன்றியமையாதது என்பது புலனு கின்றது. இவை பன்னிரண்டாம் நூற்ருண்டில் உமாபதி சிவாசாரியார் கண்ட தத்துவச் சிதறல் களாகும்.

இன்றைய விஞ்ஞான உலகிலே மறுமையை அன்றி இம்மையையும் பயனுள்ளதாக்க, வாழ்வை வளம் பெறச்செய்ய, புத்திக்கூர்மை பெற, ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்ய, புத்துணர்ச்சி பெற, புதிய சிந்தனைகள் முகிழ்க்க, நோயின்றி நீண்ட காலம் வாழ ஆழ்நிலைத் தியானம் என்ற அரிய சாதனம் சிறந்த ஊடகமாகப் பயன்படுகிறது. இதுவும் குருவருளினேடு சம்பந்தமுடைய தொன்று.

இத்தியானத்தின் மூல கர்த்தா மகரிஷி மகேஷ் யோகி அவர்கள் வடநாட்டவர்; ஜபல்பூர் என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அலஹாபாத் பல்கலைக் கழகத்தில் பௌதிக இயலில் சிறப்புப் பட்டம் வாங்கியவர். இவர் தமது குருவின் கீழ் பதின்மூன்றாண்டுகள் சீடராக இருந்து, ஓராண்டு இமாசலத்தில் குகையொன்றில் தனித்து வாழ்ந்து, தாம் கண்டறிந்த இத் தியான முறையை இக்காலத்திற்கேற்ற வகையில் விஞ்ஞானக் கலவையூடே இவ்வுலகுக்கு அறிமுகஞ் செய்யத் தொடங்கினர்.

மகரிஷியின் கொள்கைக்கு, அதாவது தியானத்திற்கு ஐரோப்பியநாடுகளும் சிறப்பாக அமெரிக்காவும் விளைநிலங்களாயின. மேற்கு நாட்டவர் கிழக்கில் காணும் ஆன்மிக வளர்ச்சிக்குரிய எதனையும் எளிதில் தள்ளிவிடுவதில்லை. போதைப் பொருள்கள், புலநுகர்ச்சி, போதிய செல்வம்—இவற்றால் உடலையும் உள்ளத்தையும் விரயஞ்செய்து நிம்மதியற்றுத் தத்தளித்த மேலை நாட்டவர்க்கு, அலைகடலிற் கலமுடையச் சிதறிய மக்கள் கூட்டம், சிக்கெனப் பிடித்து நீந்திக் கரை சேரக் கிடைத்த மிதவையாக இத்தியானம் பயன்பட்டது. ஆயிரமாயிரம் அமெரிக்கரும் ஐரோப்பியரும் இத்தியானத்தின் பயனை உணர்ந்து ஆன்மிக நெறியிலே வீறுநடை போடத் தலைப் பட்டனர். ஆகவே மகரிஷியின் தலைமைப் பீடம் சுவிற்சலாந்தில் அமைந்திருப்பதில் ஆச்சரிய மில்லை. மேரு (Meru—மகரிஷி யூரோப்பியன் றிசேச் யூனிவசட்டி) என்ற பல்கலைக் கழகம் ஐரோப்பாவிலும், (Meru—என்ற பல்கலைக்கழகம் (மகரிஷி இன்ரநேஷனல் யூனிவசிட்டி) வட அமெரிக்காவில் **Fair Field** லும் அமைந்திருக் கின்றன.

இது நம் பண்டைய ரிஷிகளின் சாதனை. முற்றிலும் உபநிடதத் தத்துவங்கள் நிறைந்தது சங்கராச்சாரியாரின் 16-ம் நூற்றாண்டு அவ் வைதக் கோட்பாடு. அதாவது, பரமாத்மாவாகிய பரம்பொருளும், ஜீவான்மாவாகிய ஆன்மாவும் அழிவற்றவை. ஜீவன் பரம்பிரம்மத்தை அடைய அவாவுகின்றது. ஈற்றில் ஜீவான்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலப்பதால் இரண்டிற்கும் பேத மற்ற நிலை காணப்படுகிறது. இதனை மகரிஷி இந்து மதத்திலிருந்து பிரித்தெடுத்து, மதபேத மின்றி இன்றைய விஞ்ஞான உலகுக்கு உகந்த வகையில் நம்மிடையே பயில விட்டுள்ளார். ஆழ் நிலைத் தியானத்தை மிகக் குறுகிய காலத்தில் மகரிஷியின் ஸ்தாபனத்தில் பயின்ற ஆசிரியர் களிடம் பயின்றுகொள்ளலாம்.

ஆழ்நிலைத் தியானம் என்னும்போது, எல் லோருக்கும் ஐம்புலனடக்கம் அவசியம் என எண்ணுகின்றனர். ஆகையால் தியானம், மிகக் கஷ்டமானது எனத் தீர்மானிக்கின்றனர். உண்மை அப்படி அல்ல. ஆழ்நிலைத்தியானம், பயில மிக இலகுவானது, நுட்பமானது, நவீன மானது, இயற்கையானது. தியானத்தின்போது எமது உள உடல் தொழிற்பாடுகள் இயற்கை யாகவே தணிவடைகின்றன. நாம் ஆழ்ந்த அமைதியை அநுபவிக்கின்றோம். அதாவது கனவு, நனவு, உறக்கம் அற்ற ஒரு நிலைக்கு நம்மை இத் தியானம் இட்டுச் செல்கிறது. இந்நேரத்தில் நரம்புத் தொகுதிகளிற் காணப்படும் அமுக்கம் (Stress) நிலைகுலைந்து அகன்று போகின்றது. இதனால் சிந்தனைப் பாதை சீர்ப்படுகிறது. நரம்பு சம்பந்தமான வியாதிகள் குணமடை கின்றன. சூரிய புத்தியும் ஞாபக சக்தியும் அதிகரிக்கின்றன.

சாதாரணமாக நாம் சுவாசிப்பதைவிடத் தியான நேரத்தில் மிகக் குறைந்த அளவு, அதாவது ஒரு நிமிடத்திற்கு 6-8 தடவைகளே சுவாசிக் கின்றோம். சுவாசப் பைகளின் குறைந்தளவு தொழிற்பாட்டால் இருதயத் துடிப்பு மட்டுப் படுத்தப்படுகின்றது. இதனால் சுவாசப்பை சம் பந்தமான வியாதிகளும், கூடிய குறைந்த இரத்த அமுக்கங்களும் குணப்படுத்தப்படுகின்றன. இத் தியான நேரத்தில் தலையினுட் காணப்படும் அல்பா, தீற்ரு, பீற்ரு என்ற கதிர்கள் வேறு கதியில் இயங்குவதால் கூடிய விழிப்புணர்வும் அறித லுணர்வும் அதிகரிக்கின்றன. அத்தோடு பதி னைந்து நிமிடங்கள் நாம் எடுக்கும் ஓய்வு, பின்னல் ஏற்படப்போகும் நடவடிக்கைக்கு நம்மைத் துரித கதியில் இயங்க வைக்க ஆயத்தம் செய் கின்றது.

இன்றைய உலகிலே கிளர்ச்சிகள் அதிகரித் துள்ளன. பஞ்சமாபாதகங்கள் தலைவிரித்தாடு

கின்றன. துவேஷம் வளர்கின்றது. இவை எல்லாம் நம்மிடையே அமுக்கம் (Stress) அதிகரிப்பதாலேயாம். மாணவன் ஒருவன் படித்தும் மேற்படிப்புக் கிடைக்கவில்லையே என்ற எண்ணத்தால் அமுக்கப்படுகின்றான். அடுத்தவன் படிக்கின்றானென்று படிக்க முடியாதவன் மனம் புழுங்கிப் பெருமூச்சு விடுகிறான். அந்த எண்ணமே அவனை அமுக்கி வதைக்கிறது. இதனால் நாட்டிலே போட்டி பொறாமை பூசல் என்பன வளர்கின்றன. இது தனி மனிதப் பாதிப்பு, நாட்டுப் பாதிப்பு, உலகப் பாதிப்பு என வளர்ந்து யுத்தமாக உயர்கிறது. அணுகுண்டுகளும், நவீன ஏவுகணைகளும் உலகை அழிக்க உருவாகின்றன. மனிதன் தன்னிடத்தே கடவுள் தன்மையைக் காண்பானானால் அதனைவிட மேலான செயல் வேறொன்றில்லை. என்னுள் இருப்பது கடவுள் தன்மை; இதுவே ஏனைய உயிர்களிடத்தும் காணப்படுவது, என்ற தத்துவத்தை மனிதன் உணர்ந்தால் அதுவே அவனை உயர்ந்த மனிதனாக்குகின்றது.

எனவே, மக்கள் போதைப் பொருள்களை மறக்க, பஞ்சமாபாதகங்களாம் வன்செயல்களை அகற்ற, சமாதானம் வளர, ஏற்றத் தாழ்வு அற்ற ஒருணர்வு மேலோங்க, நாட்டிலே சுமுக நிலையும் மகிழ்ச்சியும் நிலவ வழிவகுக்க வல்லது, குரு அருளால் வந்த ஆழ்நிலைத் தியானம் என்றால், மிகையாகாது.

மனசு பகவானின் இடம். அதைக் குப்பைத் தொட்டியாக்கியிருக்கிறோம். அதைச் சுத்தப்படுத்தி மெழுகி, பகவானை அமரவைத்து நாமும் அமைதியாக அமர்ந்துவிட வேண்டும். தினமும் ஐந்து நிமிஷங்களாவது இப்படித் தியானம் செய்ய வேண்டும். லோகமே முழுகிப் போனாலும் நிற்காமல் நடக்க வேண்டிய காரியம் இது. ஏனெனில், லோகம் முழுகும் போதும் நமக்குக் கை கொடுப்பது இதுதான்.

— காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி அம்பலத்
தாடும் நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

— *திருவாசகம்*

கோகழி

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

கோகழி என்ற சொல் மணிவாசகப் பெருமானால் ஐந்து இடங்களில் குறிக்கப்படுகின்றது.

1. கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க[1]

2. கோகழி மேவிய கோவே போற்றி[2]

3. கொம்பின் மிழற்றும் குயிலே
கோகழி நாதனைக் கூவாய்[3]

4. ....கடைய னேனைத்
தொண்டாகக் கொண்டருளும்
கோகழியெம் கோமாற்கு[4]

5. நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணியெழு கோகழிக் கரசைப்— பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்[5].

என்பன அவ்விடங்கள்.

இக் கோகழி என்பது, கன்னட நாட்டுப் பெல்லாரி மாவட்டத்திலுள்ள கோகழி என்ற ஊர் என்றும், சீகாழி என்றும், திருவாவடுதுறை என்றும், திருப்பெருந்துறை என்றும் பலர் பலவாறு கூறுவர்.

சைவப் பெரியார் மு. அருணாசலம்பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைக் கோயிலைக் குறிக்கும் என்பர்[6]. மேற்கண்ட ஊர்கள் பற்றிய கருத்துக்களைத் தெளிவுற மறுத்துள்ளார்கள். ஆதலின் அவைபற்றி ஆராயாமல் பிள்ளையவர்கள் கூறும் கருத்துப் பற்றி மட்டும் இக்கட்டுரையில் கருதலாம்.

திருப்பெருந்துறைக் கோயிலுக்கே கோகழி என்னும் பெயராகும் என்பதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் இரண்டு. அவை :

1. கோ என்பது பசுத்துவம்; கழி என்பது கழித்த இடம். எனவே மணிவாசகர் தமது பசுத்துவம் கழித்த இடம் திருப்பெருந்துறைக் கோயிலாதலின் அதனைக் கோகழி எனக் குறிப்பிட்டார்.

2. பல சிவ தலங்களில் தலத்துக்கு ஒரு பெயரும் கோயிலுக்கு ஒரு பெயரும் அமைந்திருப்பதை நாம் அறியலாம். வெண்ணெய் நல்லூர் அருட்டுறை ; சாத்தமங்கலம்-அயவந்தி; கருவூர்-ஆநிலை எனக் காணலாம். இங்ஙனமே பெருந்துறைக்கும் நாம் கொள்வோமானால் பெருந்துறை ஊர்ப்பெயராகவும் இறைவன் குருமணியாய் எழுந்தருளியாட்கொண்ட குருந்த மர நிழல் (ஆகிய கோயில்) கோகழியாகவும் கொள்ளலாம்.

இனி இவைபற்றிக் காண்போம். தமது பசுத்துவத்தைக் கழித்த இடம் என்று எவ்விடத்தையும் எவரும் கோகழி என்ற பெயரால் குறிக்கவில்லை. கோகழி என்ற ஆட்சி மணிவாசகப் பெரு

---

1. திருவாசகம்—சிவபுராணம். அடி 3.
2. போற்றித்திருவகவல். அடி 157.
3. குயிற்பத்து 6.
4. பண்டாயநான்மறை 1.
5. பண்டாயநான்மறை 5.
6. திருவாசக ஆராய்ச்சிக் குறிப்பு. பக்கம்-(30-52).

மாஞல் வெளிப்பட்டும் அவர்க்குப் பின்வந்தோர் யாரும் அதைக் கொள்ளவில்லை. அதனுல் முதற் காரணம் பொருந்துமா என்பது ஆய்வுக்குரியதே.

வெண்ணெய் நல்லூர் அருட்டுறை, கரு ஊர்த்திருவாநிலை என ஊரும் பேரும் சேர்த்துக் கூறப்படுதல்போலத் திருப்பெருந்துறைக் கோகழி எனச் சேர்த்துக் கூறப்படாமையின் இரண்டாம் கருத்தும் ஆய்வுக்குரியதே.

''நண்ணிப் பெருந்துறையை'' என்னும் பாடலில், பெருந்துறையைத் தனியாகவும் கோகழியைத் தனியாகவும் மணிவாசகர் கூறிஞரேயல்லாமல் பெருந்துறைக்கோகழி எனச் சேர்த்துக் கூறவில்லை. சேர்த்துக் கூறுவது வழக்கு என்பதை,

''கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே''[7] என அப்பரடிகள், பெண்ணுடகக் கோயிலைக் 'கடந்தையுள் தூங்கானை மாடம்' எனக் கூறியதாலும்,

''தக்கிருந்தார் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே''[8]

என ஞானசம்பந்தப் பெருமான் ஆக்கூரையும் தான்தோன்றி மாடக் கோயிலையும் இணைத்துப் பாடியதாலும்,

''வெண்ணெய் நல்லூர் அருட்டுறை''[9]

என ஆளுடை நம்பிகள் வெண்ணெய் நல்லூரையும் அருட்டுறைக் கோயிலையும் இணைத்துப் பாடியதாலும் அறியலாம்.

''கச்சித் திருவேகம்பன்''[10]

எனக் காஞ்சிபுரத்தையும் ஏகம்பக்கோயிலையும் இணைத்து மணிவாசகப் பெருமானே பாடியுள்ளாரே.

இனிக் கோகழி என்பது ஒரு தனிப்பட்ட ஊரே என்பதற்குத் திருவாசகத்திலிருந்தே சான்றுகள் காணலாம்.

1. சிவபுராண மூன்றும் அடியில் கோகழியைக் கூறியவர் அச்சிவபுராணத்தின் பதினைந்தாம் அடியில் பெருந்துறையைக் கூறியுள்ளார். ''சீரார் பெருந்துறைத் தேவனடி போற்றி'' என்பது அவர் வாசகம்.

2. ''போற்றித் திருவகவலில்,

பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்று லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி''[11]

என்ற அடிகளில் பராய்த்துறை, சிராப்பள்ளி, குற்றுலம் என முன்னரும், ஈங்கோய் மலை, பழனம், கடம்பூர் எனப் பின்னரும் ஊர்களைக் கூறி இடையில் கோகழியைக் கூறியிருப்பதால் கோகழியும் ஒரு தலமேயாகும்.

3. இறைவன் ஊராக உத்தரகோச மங்கையையே கூறிஞர் மணிவாசகர்.

''தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாளும் பாகத்தன் வாழ்பதியென்—
கோதாட்டிப்
பத்தரெலாம் பார்மேற் சிவபுரம்போற்
கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர்''[12]

எனவும்,

கீர்த்தித் திருவகவலில் 'உத்தரகோசமங்கை யூராகவும்'' (120) எனவும் கூறியமை காண்க. கோகழி கோயிலாயின் அங்கு குருமணியாய் வந்து இறைவன் ஆட்கொண்ட சிறப்பு நோக்கி அதனையுடைய திருப்பெருந்துறையையே இறைவன் ஊர் எனக் கூற வேண்டும்; அவ்வாறு கூருமையானும் கோகழி கோயிலாகாது.

4. ''கோகழி யாண்ட குருமணி'' என்றமை போலவே ''கூடல் இலங்கும் குருமணி''[13] என்றதும் நோக்கின் கூடல் போலவே கோகழியும் ஓர் ஊராகும் எனக் கொள்ளலாம்.

5. பெருந்துறையைச் சார்ந்த ஓர் ஊராகக் கோகழியைக் கொள்வதாலும் தவறில்லை. ஒரு நகரம் பல சிற்றூர்களைக் கொண்டு அமைதல் உண்டு. பெருந்துறை பெருவழக்காகவே கோகழி வழக்கிழந்திருக்கலாம்.

''ஆடக மதுரை அரசே போற்றி''[14] என மதுரையைக் கூறிய மணிவாசகர் மீண்டும் அடுத்த அடியில் ''கூடல் இலங்கும் குருமணி

7. திருமுறை 4. 110 : 1
8. திருமுறை 2. 178 : 1
9. திருமுறை 7. 1:1
10. திருப்பொற்சுண்ணம் 4.
11. போற்றி திருவகவல்-அடி 153-160.
12. திருத்தசாங்கம் 3.
13. போற்றித் திருவகவல், 91.
14. போற்றித்திருவகவல், 90.

போற்றி''[15] என மதுரையையே கூறினர். முன்னர் மதுரை என்றவர் அடுத்து அதன் வேறு பெயராகிய கூடல் என்பதைக் கூறுவானேன்? ஒரே ஊரை அடுத்தடுத்து அதன் பெயர்களால் குறிப்பிடுவதால் அவ்விரண்டும் தனித்தனியூர்களே எனக் கொள்ளலாம். மதுரை என்பது பெரிய நகரமாகவும் கூடல் என்பது அதன் உள் ஊராகவும் வழங்கியிருத்தல் வேண்டும். அவ்விரண்டிடங்களிலும் தனித்தனிக் கோயில் இருந்திருத்தல் வேண்டும். பொதுவில் மதுரைக்கு ஒரு கோயிலும் கூடல் என்னும் பகுதிக்கு ஒரு கோயிலும் இருந்திருக்கலாம். இப்படியே பெருந்துறையும் கோகழியும் அமைந்தனவாகலாம்.

(6) மணிவாசகர் தமது குயிற்பத்தில் 2-ஆம் பாடலில் ''பெருந்துறை மேய பிரானை'' எனவும், 3-ஆம் பாடலில் ''சீலம் பெரிதும் இனிய திருவுத்தரகோசமங்கை'' எனவும், 6-ஆம் பாடலில் ''கோகழி நாதனை'' எனவும் குறிப்பிடுவதால் பெருந்துறை உத்தரகோசமங்கை என்னும் ஊர்கள் போலவே கோகழியும் ஓர் ஊராகும் எனக் கொள்க.

7. பெருந்துறைக் கோயிலே கோகழி என்பதற்கேற்ப ''நண்ணிப் பெருந்துறையை'' என்ற பாடலுக்குப் பிள்ளையவர்கள் கூறும் உரையாவது,

''(நெஞ்சே முன்பு நம்பொருட்டு) பண்ணின்
மொழியாளொடு
உத்தரகோச மங்கை மன்னிக் கழியா
திருந்தவன் (இன்று)
பெருந்துறையை வந்து நம்மை யாட்
கொள்ளும் பொருட்டுக்
கோகழியில் உள்ளவனை நீ சென்று
தரிசிப்பாயாக''

என்பது. இவ்வுரையில் அரசை, இருந்தவனை என்னும் இரண்டாம் வேற்றுமை விரிகளுக்கு இயைபு இல்லையாகிறது. அதனால்,

''நெஞ்சே! நம் இடர்கள் போயகல
எழுந்தருளும்
கோகழிக் கரசை, உத்தரகோச மங்கையுள்
மன்னிக் கழியா திருந்தவனைப் பெருந்
துறையை
நண்ணிக் காண்''

எனப் பொருள் கொள்வது சிறக்கும் என்னலாம்.

மேலும் மதுரை, சிதம்பரம், குற்றாலம், பாவநாசம் முதலிய ஊர்ப் பெயர்கள் இறைவன் பெயர்களாகவும் வழங்கப்படுதல் போலப் பெருந்துறை என்பதும் ஊர்ப்பெயராகவும் இறைவன் பெயராகவும் வழங்கப்பட்டதாகலாம். 'பெருந்துறை' என்று சொல்வதன் மூலம் பிறப்பறுத்தேன் என்பார், ''பெருந்துறையே யென்று பிறப்பறுத்தேன்''[16] என்றார்.

அதனால், ''பெருந்துறையை, கோகழிக்கரசை, உத்தரகோசமங்கை மன்னியிருந்தவனை நண்ணிக் காண்'' எனவும் பொருள்கொள்ள அமைந்துள்ளது இப்பாடல்.

8. பெருந்துறைக் கோயிலே கோகழி என்றால், மணிவாசகர்,

''தில்லை நகர்ப்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானை''[16]

எனத் தில்லையில் சிற்றம்பலம் இருப்பதை விளக்கமாகக் கூறியதைப் போலப் பெருந்துறையில் கோகழியிருப்பதாகக் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறவில்லை.

9. ''வாதவூர் இறைவன் ஓதிய மொழிகளுள்
மூவரும் ஓதிய முதுபதி யொழியத்
தீதிலாப் பதிமற் றியாதென வினவின்
திருப்பெருந் துறையும் திருக்கோ கழியும்
கூர்புகழ் உத்தர கோச மங்கையும்''

என்று பெருந்துறை, கோகழி, உத்தரகோச மங்கை என்னும் மூன்றிடங்களும் அடுத்தடுத்துக் கூறுகிறது, 'மணிவாசகர் திருப்பதிகக்கொத்து' என்னும் பாடல். இப்பாடலைப் புறச்சான்றாகக் கொள்ளலாம்.

இதுகாறும் கூறிய சான்றுகளிலிருந்து கோகழி என்பது ஓர் ஊராகத்தான் இருக்க வேண்டும் என்பது புலப்படும்.[17] இனி அவ்வூர் எது எனக்காணல் வேண்டும்.

திருப்பெருந்துறைக் கோயிலின் குருந்தமர நீழலில் இருந்த குரு முனிவர் மூலம் உபதேசம் பெற்றவுடன் பாடியது சிவபுராணம் என்னும் பாடல். குருவின் உபதேசமொழி காதில் ஒலித்துக்கொண்டேயிருந்ததால் அம்மொழியின் மாற்று வடிவாகிய 'நமச்சிவாய' என்பதை முதலில் கொண்டு ''நமச்சிவாய வாழ்க'' எனத் தொடங்

15. போற்றித்திருவகவல், 91.

16. இக்கருத்து, சுப்பிரமணியபுரம், திருவடியாப் பிள்ளை மணிவிழா மலருக்கு யான் எழுதிய 'கோகழி' என்னும் கட்டுரையின் திரட்டாகும். வெளியீடு: இராமலிங்கர் உயர்நிலைப் பள்ளி, சுப்பிரமணியபுரம் - 607301. (1981)

கினர். அம்மொழிக்குரியவனை 'நாதன்' எனக் கொண்டு 'நாதன் தாள் வாழ்க' என வாழ்த்தினர். அந்நாதன் யார் எனின் அவனே குரு வடிவில் வந்து உபதேசித்தவன் என்பார் குருமணி எனக் கூறி, 'குருமணிதன் தாள் வாழ்க' என வாழ்த்தினர். அக்குருமணிக்குரிய இடம் கோகழி என்றார். திருப்பெருந்துறைக் குருந்தமர நீழலில் இருந்த குருவையே கோகழிக் குருமணி என்றார். அதனால், பெருந்துறைக்குரு கோகழிக் குருவாகக் காட்சிதந்தார் என்றும் அக்கோகழிக் குருவே மணிவாசகர்க்குக் குலகுருவாக அமைந்தவர் என்றும், பெருந்துறை உபதேசத்துக்கு முன்னர்—அதாவது ஞானம் எய்துவதற்கு முன்னர் கோகழிக் குருவிடம் குலகுருமுறையில் தொடர்பு கொண்டிருந்தவர் ஆவர் என்றும், பெருந்துறைக் குருவும் கோகழிக்குருவாகவே காட்சியளித்தார் என்றும் அதனால் அக்குருவைச் சிவனாகவே தேறினர் என்றும் அறியலாம்.

மணிவாசகர் காலம் சம்பந்தர் அப்பர் காலங்களுக்கு முற்பட்டதென்றும், சுந்தரர் காலத்துக்குப் பிற்பட்டது என்றும் பலவாறு கூறுவர். மேற்கூறிய மூவரும் ஓதாதபதிகளான சந்தீரதிபம், தேவூர்த்தென்பால் தீவு, மந்திரமலை, மயேந்திர மலை முதலிய ஊர்கள் 'மாணிக்கவாசகர் பாடல் திருப்பதிகக் கொத்து' என்ற தலைப்புப் பாடல் ஒன்றில் காணப்படுகின்றன. சந்திரதீபம் முதலிய ஊர்கள் திருவாசகத்தில் வைப்புத் தலங்களாக உள்ளன. இவை தமிழகத்துக்கு அப்பாற்பட்ட ஊர்கள். இவ்வூர்களை மணிவாசகப்பெருமான் ஆளுதற்குக் காரணம் இருக்க வேண்டும்.

கி. பி. ஆறும் நூற்றுண்டிற்கு முன்னர்—அதாவது அப்பர் சம்பந்தர் காலத்துக்கு முன்னரே வடக்கே மத்த மயூர சந்தானம் என்றொரு சைவாசிரிய மரபு விளங்கியதாகவும், அச்சந்தானத்தின் ஒரு கிளையினர் நருமதையாற்றங்கரையிலுள்ள 'கோகழி' என்ற சிறு குன்று ஒன்றின் மேல் ஒரு மடம் நிறுவினதாகவும், கோகழி பிற்காலத்தில் கோளகி என மருவியதாகவும், அதனால் கோகழி மடம் கோளகிமடம், என்றாயினதாகவும், கோளகி மடத்தார் தெலுங்கு, கன்னட நாடுகளில் ஆங்காங்கு மடங்கள் அமைத்துச் சைவநெறி விளக்கியதாகவும், தமிழகத்தில் திருக்காளத்தி, திருப்பாலைவனம், திருவொற்றியூர், திருநெல்வேலி, திருவாவீசுரம், காஞ்சீபுரம், தேவிகாபுரம், திருவண்ணுமலை, சிதம்பரம், திருவாரூர், திருவானைக்கா, திருக்கொடுங்குன்றம் (பிரான் மலை), திருப்புத்தூர், திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் கோளகி மடங்கள் அமைக்கப்பட்டுச் சைவநெறி வளர்க்கப்பட்டதாகவும், அம்மடங்களுக்கு அவ்வக்கால அரசர்களால் ஆதரவு இருந்ததாகவும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.[18]

மாணிக்கவாசகர் தாம் தோன்றிய திருவாதவூரிலோ, அல்லது சிதம்பரத்திலோ வேறெங்கோ ஒரு கோகழி மடத்தின் குருவைக் குல குருவாகக் கொண்டவராகலாம். கோகழியாண்ட குருமணி, கோகழிக்கரசு, கோகழிநாதன் என அவரையே குறித்தனர் என்றும் கொள்ளலாம்.

மத்த மயூர சந்தானத்தைச் சார்ந்த ஆமர்த்தக தீர்த்தநாதர் இருந்த ஆமர்த்தக மடத்திலிருந்து ஒரு கிளை தோன்றிச் சிவபுரி சந்தானம் என்ற பெயருடன் வட நாட்டில் சமயத் தொண்டு புரிந்தது (Epigraphica India Volum iv, p 266"[19] என்பது அறியப்படுகின்றது. தேவார முதலிகளால் அடிக்கடி பயிலப்படாத சிவபுரம் என்னும் ஊர் மணிவாசகத்தில் மிகுதியும் ஆளப்படுகின்றது. முதற் பாடலின் இறுதியில் ''சிவபுரத்தின் உள்ளார்'' என்ற தொடர் காணலாம். பல இடங்களில் சிவபுரத்தைக் கூறியுள்ளார். சிவபுரம் என்னும் ஊர் சிதம்பரத்தைச் சார்ந்துள்ளது. சிதம்பரத்தில் கோளகி மடம் இருந்ததாக அறிகிறோம். தமிழகத்தில் பல இடங்களில் சிவபுரி என்னும் ஊர்கள் இருந்தாலும் மணிவாசகரால் குறிக்கப்படும் சிவபுரி தில்லையைச் சார்ந்ததாக இருக்கலாம் என நினைப்பதில் தவறிராது.

அடிகள் கூறிய கல்லாடம்[20] பற்றி, ''இதைப் பாண்டிய நாட்டுப் பழம்பதிகளுள் ஒன்று எனவும், மேற்குக் கடற்கரையில் கொல்லத்துக்கருகில் இருந்தவூர் எனவும் வேறு வேறு கூறுவர். வீரசைவஞானசாரியர்களுடைய மரபு ஒன்று 'ஹல்லட' என வழங்கப் பெற்று வருவதாகவும், ஒருகால் 'கல்லாடர்' என்ற பெயரோடு ஒற்றுமையுடையதாக இருக்கக்கூடும் என்றும் சிலர் கருதுகின்றனர்''[21] எனக் கல்லாடமூலப்

18. ஞானமிர்த மூலமும் பழையவுரையும் —முன்னுரை. பக். 21-27 ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, அண்ணுமலைப் பல்கலைக்கழக வெளியீடு. (1954)
19. ஞானமிர்த மூலமும் உரையும்-முன்னுரை பக். 21.
20. கீர்த்தித் திருவகவல் 11.
21. கல்லாடமூலம் - பதிப்புரை பக்கம் 4. வெளியீடு: எஸ். ராஜம், 5, தம்புசெட்டி தெரு, சென்னை 1. (1957)

பதிப்பு ஒன்றின் பதிப்புரையில் காணப்படுகின்றது. இக்குறிப்பைக் கொண்டு கல்லாடம் என்னும் ஊரில் ஒரு (வீர) சைவ மரபு விளங்கியிருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம். அதுவும் கோகழி (கோளகித்) தொடர்புடையதாகலாம்.

அடிகள் குறிப்பிடும் சந்திரதீபம்(22) என்பது வங்காளத்தில் உள்ளதென்றும், அங்கு சந்திர கோமி என்னும் வடமொழியாசிரியர் இருந்தனர் என்றும், அவர் புத்த மதத்தினர் என்றும் அவர் பால் புத்த சமய அறிவு மணிவாசகர் பெற்றிருக்கலாம் என்றும் திரு. சு. நடேசபிள்ளையவர்கள் குறிப்பிடுவதாகத் திரு. மு. அருணசலம் பிள்ளையவர்கள் குறிப்பிடுவர்(23). முதல்வர் கருத்தைப் பின்னவரே மறுத்துள்ளார். எனினும் சந்திரதீபத்தில் புத்த சமய குரவர் ஒருவர் இருந்தார், அவர் காலம் கி. பி. 465-544 ஆகும்(24) என்பதால், ஓர் கருத்தை நாம் கொள்ளலாம். ''சந்திரதீபத்தில் புத்தமதப் பிரசாரம் இருந்தது போலவே சைவசமய பிரச்சாரமும் இருந்திருக்கலாம். அதன் தலைவர் சந்திரதீபத்துச் சாத்திரன் எனப்பட்டிருக்கலாம். அவர் கோளகி அல்லது சிவபுரி சந்தானத்தவராகலாம்'' என்பதுவே அக்கருத்தாம்.

அடிகளால் குறிப்பிடப்படும் 'தேலூர்த் தென் பால் திகழ் பெருந் தீவு'(25) என்பதை இலங்கை எனக் கருதுகின்றனர்(26). அங்கே இறைவன் கோலங்கொண்டு வீற்றிருக்கின்றார் என்றார் அடிகள். அதைச் சொல்வதன் நோக்கம் யாது?

> ''நிகய சங்கிரகம் என்னும் சிங்கள மொழி வரலாற்றுக் குறிப்பேடு, முதலாம் சேனனை, ஒரு சைவ சமயத் துறவி சித்துக்கள் பல செய்து காட்டி, சைவனாக மாற்றினார் என்று கூறுகிறது மேலும் ஊமையாக இருந்த அவ்வரசனுடைய மகளைப் பேச வைத்துப் பெரும்புகழ் பெற்றார் என்றும் அது குறிப்பிடுகிறது.''

இவ்வாறு எழுதி ஊமைப் பெண்ணை—ஈழத்திலிருந்து கொண்டு வரப்பட்டவளை மணிவாசகர் பேச வைத்த வரலாற்றோடு தொடர்புபடுத்திக் காட்டுவர் க. த. திருநாவுக்கரசு(27). இவர் கூற்று கால ஆய்வில் எப்படியாயினும் இலங்கையில் சைவ இயக்கம் பௌத்தர்களுக்கு எதிராக இருந்திருக்கிறது என்பது உறுதியாகும்.

தேலூர்த் தென்பால் திகழ் தீவு என்ற அடிகள் தேலூர் பற்றிச் சிறப்பிக்கவில்லை. ஆயினும் தீவுச்கு எல்லை காட்ட ஆளப்பட்டது. யாவருக்கும் அக்காலத்தில் தெரிந்த நகரமாகத் தேலூர் இருந்திருக்க வேண்டும். திருஞானசம்பந்தர் அவ்வூரைப் பற்றித் ''தென்தமிழ்க் கலை தெரிந்தவர் பொருந்திய தேலூர்''(28) என்றார். எனவே தமிழறிஞர் பெரு மக்கள் பெருக இருந்த ஊராக இருந்ததால் யாவர்க்கும் தெரிந்த ஊராகியிருக்கும்.

அடிகளால் கூறப்பட்ட மயேந்திரம்(29), மந்தரம் என்றும் வழங்கப்படும். கோளகி வழி வந்த விசுவேசுரசம்பு என்பார்க்கு கி. பி. 1261-ல் உருத்திராதேவி என்பவர் மந்தரம் என்னும் ஊரையும் அதன் அருகிலுள்ள தீவுகளையும் (இலங்கைகள்) வழங்கினார். வெலகபூடி(30) என்ற ஊரையும் கொடுத்தார் என்பது தெரிய வருகிறது(31) வெலகபூடி என்பது வேலம்புத்தூர் எனப்பட்டதோ? மயேந்திரம் மந்தரம்(32) என்னும் ஊர்களை அடிகள் குறிப்பிடுவதால் அடிகளுக்குள்ள கோளகித் தொடர்பு கருதலாம்.

மேலே காட்டப்பட்ட ஊர்களின் செய்திகளால் கோளகி சந்தானம், தெற்கே இலங்கை முதல் வடக்கே வங்காளம் வரை பரவி ஆங்காங்கே மடம் அமைத்துச் சைவ சமயத்தைப் பரப்பி வந்தது என்பதும், அக்கோளகி கோகழியின் திரிபே என்பதும், கோகழிக் குருவே மணிவாசகர்க்குக் குலகுரு என்பதும் ஓரளவு தெளியலாம்.

---

22. கீர்த்தித்திருவகவல் 97.
23. திருவாசகம்—ஆராய்ச்சிக் குறிப்புகள், பக். 35.
24. திருவாசகம்-ஆராய்ச்சிக் குறிப்புகள், பக். 35.
25. கீர்த்தித்திருவகவல்.
26. திருவாசகம்—ஆராய்ச்சிக் குறிப்பு, பக். 140.
27. இலங்கையில் தமிழ்ப்பண்பாடு, (பக். 70) வெளியீடு: சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு, சென்னை-600083. (1978)
28. திருஞானசம்பந்தர் திருமுறை 2. தேலூர்ப் பதிகம் 7.
29. கீர்த்தித்திருவகவல் 9.
30. கீர்த்தித்திருவகவல் 29.
31. ஞானமிர்த மூலமும் பழைய உரையும், முன்னுரை-பக். 23.
32. கீர்த்தித்திருவகவல் 100.

இதற்கு இக்கட்டுரை எழுதி முடிக்கும்போது கிடைக்கப் பெற்ற ஒரு குறிப்பும் துணை செய்கிறது.

தியாகராய நகரில் உள்ள டாக்டர் ரங்காச் சாரியார் ஓர் ஏட்டுச் சுவடியினை உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் பிரிவில் பணி புரியும் திரு. மு. கோ. இராமனிடம் கொடுத்து விளக்கம் கேட்டிருந்தார்கள். அச்சுவடியின் தலைப் பில் ''நந்தி தேவர் அருளிச் செய்த பிரணவம் 300'' என்று நூற் பெயர் அமைந்துளது. அதில் மாணிக்கவாசகர் சாபம் அறிதல் என்ற படலப் பிரிவு உண்டு. அதில் ஓர் பாடல்,

> கேளேமுன் சதுரத்தில் தவத்தைத் தாண்டில்
> சமையகுண பாஞ்சன்னிச் சித்த னுவான்
> வேளேசெய் மாணிக்க வாத வூரான்
> விடமுண்ட கண்டனடி விளங்கும் வெள்ளி
> கோளகிரி வாசமிட்டு வாழும் நாளில்
> கொடுமைசெயும் ஈரைந்து சிரசோ னுக்காய்
> மீளவுமை யரியயன்மால் விளம்பும் மூல
> வினவியவன் விண்டகனுல் விடுபட் டானே
> (67)

என்பதாகும். இதில் ''மாணிக்கவாதவூரான் கோள கிரி வாசமிட்டு வாழு நாளில்'' என்ற தொடரைக் காணும்போது மாணிக்கவாசகருக்கும் கோள கிரிக்கும் தொடர்பு உண்டு என்பது புலப்படுகின் றது. மணிவாசகர் சாபம் பற்றிய கதை ஆய்வுக் குரியது; கட்டுக்கதையாகவும் இருக்கலாம். ஆய்வே முடிவு செய்யும்.

இக்கட்டுரை, முடிபு கூற வந்ததன்று; கோகழி பற்றிய ஆராய்ச்சிக்கு ஒரு வழிகாட்டியே யாகும். கோகழி தமிழ் நாட்டகத்ததோர் ஊராக வும் ஆகலாம்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்

— திருமூலர்

மேற்கு நாட்டவர் நோக்கில் இந்து மதம்

க.சி.குலரத்தினம்

சுவாமி விபுலானந்தர் அமெரிக்காவில் இந்து மதம் பற்றிப் பேசுவதன் முன்னரே அமெரிக்கர் இந்து சமயத்தையும் இந்தியாவையும் இலங்கையையும் நன்கு அறிந்திருந்தனர். பழைய பாதிரிமார் தங்கள் ஆண்டறிக்கைகளில் இந்து சமயங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் இங்குள்ள சமயப் பிரசாரங்களைப் பற்றியும் இவர்தம் பெரு முயற்சிகளைப் பற்றியும் காலத்துக்குக் காலம் எழுதியுள்ளார்கள்.

19-ஆம் நூற்றூண்டில் இலங்கையைப் பொறுத்த அளவில் இங்கே வித்துவான்கள், புலவர்கள், பண்டிதர்கள் விவேக முறுக்கேறி மகா வித்துவான்கள் என்றும், தருக்க கோடரிகள் என்றும், இலக்கணக் கொட்டர்கள் என்றும், மாயாவாத தும்சகோளரிகள் என்றும் ஈழத்திரு நாட்டிலேயன்றித் தமிழ்த் திருநாட்டிலேயும் புகழ் பெற்று விளங்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றூண்டின் தமிழ் வரலாறு முறையாக எழுதப் பெறுமாயின், யாழ்ப்பாணத்தவரின் பாரிய முயற்சிகள் பெருமளவில் இடம்பெறத் தக்கனவாகச் சிறப்பிடம் பெறும் என்பதில் ஐயமில்லை, ஆட்சேபமும் இல்லை.

பத்தொன்பதாம் நூற்றூண்டின் ஆரம்ப ஆண்டுகளிலேயே அலைகடலில் மிதந்து வந்த அமுதம் எனத்தக்க ஆங்கில மொழியை இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் இங்கே பரப்பினார்கள். ஆங்கிலத்தைப் பரப்பிய போக்கில் அவர்கள் தங்கள் சமயத்தையும் பரப்புவதற்கு வசதியாகக் குருமாரையும் இங்கே வரவழைத்தார்கள். எங்கள் நாட்டுக்கு வருகைதந்த குருமார்களுள் அமெரிக்க நாட்டவர் காலத்திற்கு ஏற்ற முறையில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பையடுத்த கோட்டேயிலும் கல்விச் சங்கங்களை நிறுவினார்கள். யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்கள் வட்டுக்கோட்டையைத் தங்களுக்கு வசதியான இடமாகக் கொண்டனர். அமெரிக்க மிசனரிமார் வட்டுக்கோட்டைக்கு வருகை தந்தமையை ஒரு வரப்பிரசாதமாகவும் கருத இடமுண்டு.

இக்காலத்தில் ஆங்கிலேய புரட்சியில் இரண்டாவது பெரிய நகரம் எனப் புகழ் பெற்ற கல்கத்தாவில் ஆங்கிலம் வளர்க்கப் போனவர்களை அந்நகரத்தார் உபசரிக்காமை காரணமாக, அவர்கள் மோறிஸ்ரஸ் தீவில் சில காலம் தங்கிவிட்டுப் பம்பாய் நகரை நோக்கிப் பிரயாணமான போது, கடலலைகள் அவர்களை இலங்கையில்காலித் துறைமுகத்தில் கரை சேர்த்தன. காலியில் ஒதுங்கிய கல்விமான்கள் கொழும்பில் சில நாட்கள் தங்கியபோது யாழ்ப்பாணத்தின் பெருமையைக் கேட்டறிந்து இங்கு வட்டுக்கோட்டையை அலங்கரிப்பராயினர்.

வட்டுக் கோட்டையில் வந்தேறிய கல்விமான்களுள் வாரன், றிச்சாட்ஸ், பூர், மெயிக் முதலானோர் குறிப்பிடத்தக்க பெரியவர்களாவர். இவர்கள் முதலில் தெல்லிப்பழை, மல்லாகம் முதலிய இடங்களில் பாடசாலைகளமைத்துக் கல்விப் பணிபுரிந்தபின், 1823-ஆம் ஆண்டளவில் வட்டுக்கோட்டையில் செமினரி என்னும் சர்வ சாத்திரக் கலாசாலையை ஆரம்பித்தார்கள். அதன் பின்னரே 1827-ஆம் ஆண்டில் கொழும்பு நகரையடுத்த கோட்டே என்னும் பழைய இராசதானியிலும் செமினரி ஒன்றை நிறுவினார்கள் என்ப.

இப்பால் வட்டுக்கோட்டைக் கல்விக் கழகம் நாளொரு வண்ணம் வளர்ச்சியடைந்த காலத்தில் இங்கு பயின்றவர்கள் பன்முக ஞானம்பெறக் கூடியதாகப் பாடத்திட்டமும் அமைக்கப் பெறலாயிற்று. ஏட்டிலிருந்த வடமொழி நூல்களையும் தமிழ் நூல்களையும் மாணுக்கர் கற்றுத் தேறுமளவில் பேராசிரியர்கள் கண்ணும் கருத்துமாகக் கற்பித்தார்கள், வழிகாட்டினுர்கள். அமெரிக்க நாட்டுச் செல்வப் பிரபுக்களின் பெயரால் எம்மவர் பலருக்குக் கிடைத்த புலமைப் பரிசில்கள் காரணமாக இவர்களுக்கு அவர்களின் பெயர்களும் வழங்கப் பெற்றன. இவர்கள் பெற்ற பெயர்களுள் வைமன், பிரவுண், கரோல், வில்லியம், போர்ட், ஏபிரகாம், குக், வின்ஸ்லோ முதலானவை இன்றும் பாரம்பரியமாக வழக்கில் நிலவுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வளரத் தொடங்கிய விஞ்ஞானத் துறையில் நம்மவரும் ஈடுபாடு கொள்ளும் வகையில் பாடங்களைக் கற்பித்த பேராசிரியர்கள் தாமும் தம் ஓய்வு நேரங்களில் எம் நாட்டவரின் இலக்கிய இலக்கண சமய நூல்களையும் வடமொழி தென் மொழியாகிய இரு மொழிகளையும் கற்றுத் தேர்ந்து விற்பத்திமான்களாயினர்.

வடமொழி தென்மொழிகளில் கிடைத்த அறிவு நூல்களையும் ஞான நூல்களையும் எழுத்து எண்ணிப் படித்த அமெரிக்கர் சிலர் சைவசித்தாந்தத் துறையில் பெரிதும் ஈடுபடுவாராயினர். இன்னும் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களிலும், கந்தபுராணம் முதலாய புராணங்களிலும் தத்துவக் கட்டளை, திருக்குறள் முதலாய நூல்களிலும் பாண்டித்தியம் பெறுவாராயினர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் குறிக்கோளுக்கமையப் பண்பட்ட பேராசிரியர்கள் தங்கள் மாணுக்கர்களையும் பெரும் பண்டிதர்களாக உருவாக்கினுர்கள்.

இவ்வாறு சென்ற நூற்றுண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தவர் விவேக முறுக்கேறிய செம்மையை இலங்கைத் தேசாதிபதி, பிரதம நீதியரசர், பிரதம பிசப்பாண்டவர் முதலாஞேர் மெச்சியதோடு அன்று இலங்கை அரசியல் முறைகளில் திருத்தம் செய்யவந்த கோல்புறுக் குழுவினரும் பெருமளவில் பாராட்டியுள்ளார்கள்.

வட்டுக்கோட்டையில் சகலாகம சாத்திரங்கள் வளர்ச்சியுற்று வந்த காலத்தில் 1835-ஆம் ஆண்டில் வணக்கத்திற்குரிய ஏச். ஆர். ஹொஸிங்ரன் என்பார் வட்டுக்கோட்டைச் சாத்திர சாலையின் அதிபராயினுர். கலாநிதி ஹொஸிங்ரன் கணிதம், வானநூல், சைவ சித்தாந்தம் முதலிய துறைகளில் வெகுவாக ஈடுபட்டு இந்து சமய முறைப்படி வான சாத்திரத்தைத் துறைபோகப் பயின்று அது சம்பந்தமாகப் பெரு நூலொன்றை எழுதினுர். அந்நூல் அக்காலத்தில் கல்கத்தா சர்வசாலையில் எம். ஏ. என்னும் முதுமானிப் பட்டப் படிப்புக்குப் பாடநூலாய் விதிக்கப் பெற்றிருந்தது.

கலாநிதி ஹொஷிங்கரனின் பெருமையை அக்காலத்தில் தேசாதிபதியின் பிரதம காரியதரிசியாயிருந்த எமெர்சன் தென்னென்ற் என்னும் பிரபு வெகுவாகப் பாராட்டி அறிக்கை எழுதியுள்ளார். கீழைத் தேயக் கலைத்துறைகளிலும் ஞானத் துறையிலும் மேலும் ஈடுபட்டிருந்த கலாநிதி அவர்கள் மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதம் என்னும் சித்தாந்த நூலையும், உமாபதி சிவாசாரியார் அருளிய சிவப்பிரகாசம் என்னும் நூலையும், கட்டளை நூல்களுள் தத்துவங்களைப் பற்றி விரிவாக விளம்பும் தத்துவக் கட்டளை என்னும் நூலையும் யாழ்ப்பாணத்துச் சைவப் பெரியார்கள் உதவியுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பாராயினுர்.

இம்மூன்று நூல்களையும் அவர் மொழி பெயர்த்ததோடு, அவற்றை ஆங்கிலம் வல்லார் முட்டின்றி முறையாக அறிந்துகொள்ளும் வகையில் முன்னுரையும் குறிப்புரையும் அருமையாக எழுதி, மூன்று நூல்களையும் ஒரே தொகுதியாக 1854-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

இந்து சமய மெய்யுணர்வுக் கோட்பாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் என்னும் பொருளமைந்த தலைப்பில் அவர் தயாரித்த தொகுதிகள் அமெரிக்காவின் கிழக்குத்தேச நாகரிகத்திற்குரிய சங்கத்துச் சஞ்சிகை மலர்களில் சிறப்பிடம் பெற்றன. அன்றி அவை ஒரு தொகுதியாக நியூஹாவன் என்னும் பெயரிடப் பெற்று, ஹாம்லன் என்பவரால் அச்சிடப்பெறுள்ளன.

இந்நூலின் முன்னுரையில் கலாநிதி ஹொஸிங்ரன், ''இது உலகத்துக்கே உரியது என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன். இதனைப் பெரிய உபகரிப்பு என்றே உவகையுறுகிறேன். இதில் வருகின்ற பரிபாஷைகள் இந்து சமய தத்துவங்களுக்கேயுரியனவாகும். இவற்றுக்கு எளிதில் ஐரோப்பிய மொழிகளில் பதங்களைக் காண முடியாது; இவை குருமுகமாக அறிய வேண்டிய நுட்பங்களாகும் என்பேன். சாதாரணமாகப் பொது

மக்களால் தீண்டற்கரியனவாய்ப் புனிதமாசப் பேணப்பெற்று வந்த தெய்வீகம் பழுத்த நூல்கள் இவை. இவற்றை அறிந்து கொள்வதற்கு முன்னறிவாக இந்துசமய அடிப்படைத் தத்துவங்களை ஒருவர் அறிந்திருத்தல் வேண்டும். இந்நூல்களை உணர்தல் ஆலய வழிபாடு செய்வதையொக்கும். இவற்றை நானறியக் கிடைத்தமை எனக்குக் கிடைத்த கடவுட் கொடை எனவே நான் கருதுகிறேன். இவற்றை விளங்கிக் கொள்வதற்கு மனப் பூட்டைத் திறப்பதற்குத் திறவுகோலாய் அமைந்துள்ளது பஞ்சாட்சர மந்திரம் என வழங்கும் திருவைந்தெழுத்தேயாம். இவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதில் எனக்கு உறுதுணையாயிருந்தவர்கள் வட்டுக்கோட்டைச் சாஸ்திரசாலையில் உருவான யாழ்ப்பாணத்து அறிஞர்களாவர். இவர்களோடு நீண்டகாலம் நான் கொண்டிருந்த தொடர்பு காரணமாகவே இத்தகைய ஞான நூல்களை நானறியும் தகமை எனக்குக் கிடைத்தது என்பேன்'' என்று அவர் ஆராமையோடு எழுதியுள்ளார்.

இனி தத்துவம் என்றால் என்ன என்பதை விளக்குகையில் கலாநிதி ஹொஸிங்ரன் அது உண்மைப் பொருள்களின் உண்மை இயல்பு என்பர். தத்துவக் கட்டளையை அவர் நானூற்றுப் பதினறு புல்ஸ்காப் தாள்களில் மொழி பெயர்த்ததாகக் கூறுவர். இது இந்து மதத்தில் சைவ சமயத் திறத்தைக் கூறும் என்பர். இதனோடு அடைவுடைய தத்துவப் பிரகாசத்தின் சிறப்பையும் ஈண்டுக் குறிப்பிடுவர். இவை உலக உற்பத்தியோடு மனித இயல்புகளையும் முறையாக விளக்குவன என்பர். இவற்றுக்கெல்லாம் விளக்கங்கள் அகலவுரைகள் தமிழ்மொழியிலேதான் உள்ளன என்று தமிழைப் போற்றுவர்.

தத்துவக் கட்டளையின் தனிப் பெருமையைக் கூறும்போது, தத்துவங்களைச் சாங்கோபாங்கமாகப் படிக் கிரமத்தில் கூறும் நூல்களில் விரிவாக அத்தனை தத்துவங்களையும் விளக்கும் தகுதி வாய்ந்த ஒரேயொரு நூல் இதுதான் என்று பெருமைப்படுவர். இதன் பெருமையை நன்குணர்ந்தவர்கள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழுகின்ற சுத்தாத்துவித சைவ சித்தாந்திகளான செந்தமிழ்ப் பெரியார்கள் தாம் என்பர்.

தத்துவங்கள் எல்லாமாகத் தொண்ணூற்றாறு என்பதையும் அவை முதலிலமைந்த முப்பத்தாறும் அடுத்துவந்த அறுபதும் என்றும் விளக்கிய கலாநிதி, முதல் தத்துவம் மூன்றாயிருந்து விருத்தியடைந்த விதத்தையும் விரித்து விளக்கியுள்ளார். இன்னும் தத்துவத்தைக் குறிப்பதற்கு நேரொப்பான ஆங்கிலப் பதங்கள் பலவற்றைக் கூறியவர் அவையாவும் தமிழன் கண்ட தத்துவத்தின் உண்மையியல்பை உணர்த்த மாட்டா என்பர். கலாநிதி ஹொஸிங்ரன் சிவஞானபோதம் என்னும் சிவம் பழுத்த சாத்திர நூல் முகஞ் செய்தபோது, இதிலுள்ள அளவையின் அமைவையும் அருமையையும் அதிகமாகப் பாராட்டுவார். ஞானம் கைவரப் பெற்ற பழுத்த அருளாளரின் அறிவை வெகுவாக வியந்துபோற்றுவார். இந்து மதத்தவரின் பரந்துபட்ட பன்முக ஞானத்தைப் புகழ்ந்து நயப்பர். உண்மையை உணர்த்துவதற்கு ஞானிகள் அளவை ஞானத்தை அமைவாகக் கையாண்ட சிறப்பினைப் புகழ்வர். அளவை நூலறிவில்லாமல் சிவஞானபோதச் செழும்பொருளை உணரமுடியாது என்று விளக்கி அதனை ஆங்கிலம் வல்லார்க்குப் பெரிய தொரு முன்னுரையில் விரித்தெழுதுவர். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை விளக்குவதற்கு அளவை உபயோகமாயமைந்த முறையையும், அளவை என்பது செந்தமிழ்ப்பதம் என்பதையும் அது நீதியை அறிவதற்கு அனுகூலமாயுள்ளதையும் விளக்குவர்.

அளவைப் பிரமாணங்களை ஆறாகவும், பத்தாகவும், பத்துக்கு மேற்பட்டவைகளாகவும், மூன்றாகவும், கூறுவார்களும் உளரென்பதை விளக்கியவர், மெய்கண்டார் காட்டிய வழியிற் பத்துப் பிரமாணங்களை விளக்குவர்.

காட்சி என்பது காண்டல் எனப்படும். Perception in a large sense அனுமானம் என்பது கருதல் எனப்படும். Inference உரை என்பது ஆகமம். Revealing including different classes of professedly divine books

அபாவம்	— Negation Denial of a thing based on the known absence of some quality or on the non-excistence of some other thing
பொருள்	— Impleeation
ஒழிவு	— Exception
ஐதீகம்	— Tradition
ஒப்பு	— Similitude

உண்மை — Truth or Essential Property

இயல்பு — Naturalness

இனி காட்சி நால்வகைப்படும் என்றும் அவை இந்திரியக் காட்சி perception by organs of sense that is sensation,

மானதக் காட்சி — perception,

வேதனைக் காட்சி — experimental perception what one learns from experience,

யோகக் காட்சி — transcendental perception or vision had by religious meditation.

இன்னும் சாதாரணமான இலகுவானகாட்சி எனப்படும், மூவகைக் காட்சிகளை விளக்கும்போது

ஐயக்காட்சி — doubtful perception,

திரிபுக் காட்சி — mistaken perception,

சவிகற்பக் காட்சி — analytical perception.

சைவசித்தாந்திகளின் யோகக்காட்சியை விளக்கும்போது அது ஐயத்தின் நீங்கியதாய் மறு வற்றதாயிருக்கும் என்பர். அன்றி அது முன் சொன்ன சாதாரண காட்சிகளில் தங்கியிராது பூரணமானதாயிருக்கும் என்பர். இத்தகைய காட்சி வல்லார் சித்தர்கள் என்றும், சித்தி எண் வகையினதென்பதையும் விளக்குவர்.

சித்தி — miraculous gifts obtained by several ascetic observances.

அணிமா — The power of rendering one's bulk to the size of an atom

மகிமா — The power to increase one's bulk illimitably

இலகுமா — The power to make oneself so light as not to feel the influence of gravity.

கரிமா — The power to make oneself so heavy as not to be effected by any attracting forces.

பிராத்தி — The power to obtain whatever one desires.

பிராகாமியம் — The power of penetrating everywhere without regard to natural obstacles.

ஈசத்துவம் — The power to act as God or to constrain everything in obedience to one's will.

வசித்துவம் — The power to assume any form, and the proper functions of that form

இவை முதிர்ந்த யோகியின் ஆற்றல்கள் என்றும் இவை ஈசனோடு இணைவதற்கு உபயோகமானவை என்றும் விளக்குவர்.

இதன்பின் தன்பொருட்டனுமானம், பிறர் பொருட்டனுமானம், என்பனவற்றை inference for one's self, or inductive inference என்றும், inference for the sake of others or declarative inference என்றும் விளக்குவர். பின்னர் மூவகைப்பட்சம், மூவகை ஏது என்பனவற்றையும் முறையாக விளக்குவர்.

பட்சம் — The simple statement of a fact or truth. It is a proposition.

சபட்சம் — A specific statement of a known fact or truth

விபட்சம் — A negative proposition, the reverse of sapaksham

ஏது என்றால் என்ன என்பதை விளக்கும்போது அது reasons என்பர்.

அதுதானும் மூவகை முறைமையில் இயல்பேது, காரியஏது, அனுபலத்தி ஏது, என்றும் இவற்றை விளக்கும்போது natural reason, an effect showing a cause, arguing from the want of any cause, to the non existence of any effect என்பர்.

மேலும் அன்னுவயம் என்பது direct or positive statement of the argument with the conclusion என்பர்.

திருட்டாந்தம் — proof by example

உபநயம் — application of the reason to the simple proposition

நிகமனம் — the conclusion or proposition proved

ஏது அனுமானம் — Reasoning from a natural cause

பொது அனுமானம் — Reasoning from the common or customary connection of things

சாதனம் — Logical premise

சாத்தியம் — Logical conclusion

எச்ச அனுமானம் — reasoning from any phenomenon to its natural antecedent, or cause.

காரியம் — the common logical term for effect or result.

முதல் அனுமானம் — reasoning from a cause to its Common effect, or from an antecedent to its usual consequent

காரணம் — cause

பூர்வக் காட்சி அனுமானம் — inference of some previous sensation or perception

கருதல் அனுமானம் — inference involving reflection

ஆகம அனுமானம் — inference from revealed doctrines

இறைவன் இயம்பியவை என்னும் அருள் வாக்கியங்களை Revelations என்பர்.

தந்திரக் கலை — Is the course of instruction embraced in thanthiram which is to be perused with desire. Thanthiram are portion of Akamam. They treat of the mystic philosophy of the divine operations especially as concluded, as they always are, through the agency of Satthi the Female Energy of Deity

தந்திரம் என்பது சரியை, கிரியை என்பனவற்றைக் கூறுவது என்று விளக்குவர்.

மந்திரகலை — Is a course of knowledge obtained by means of manthiram—mystic formulas. By the proper utterance or manthiram, manam and rest of the Intellectual Organic Faculties are subdued. Manthirams are a sort of organized divinities or divine emanations, which are capable of communicating the highest knowledge and power to those who have attained to a correct understanding and proper use of them. Hence they illuminate the Soul—give it a sort of trancendental understanding. They therefore, become an important means of establishing the assumed doctrines.

Manthirakalai is confined chiefly to the third stage in divine life of men called Yogam—Meditation

உபதேசகலை — This is a course of sacred learning which reveals the true nature of the eternal God. Upathesakalai or divine instruction belongs exclusively to gnanam the last and highest stage in human progress. This cause of instruction includes all those works that treat of Gnanam or divine wisdom, such as Siva Gnana Potham and others, one of the Agama doctrines. None but the highest Gurus can teach in this department.

இனி நியாயித்தல், நிர்ணயித்தல், சம்பந்தமாக மெய்கண்டார் செய்தருளிய சிந்தனுவழியில் பிரமாதா, பிரமாணம், பிரமேயம், என்பனவற்றைக் கலாநிதி ஹொஸிங்ரன் விளக்குவர்.

பிரமாதா — The one who understands or thinks, the agent in reasoning. This is the soul, less or more enlightened, according to its progress in divine knowledge.

பிரமாணம் — the principle or method by which the soul reasons.

பிரமேயம் — the object sought or that which is known by course of reasoning that which is contained in any logical conclusion

பிரமேயத்தில் தன்னியல்புப் பிரமேயம், பொதுவியல்புப் பிரமேயம் என இரண்டு வகையினையும் முறையாக விளக்குவர். சீவன் முத்தனைப் பற்றிக் கூறும்போது "The soul still in the body, and yet prepared for final emancipation, at death, is attributed to any one, the term at once distinguishes that soul as freed from the influence of Malam, and as distinct from all other souls."

சிந்தாந்தத்தில் வருகின்ற போலிகளை விளக்கும்போது அவை நான்கையும் General Classes of fallacies in Inference.

பக்ஷப் போலி, ஏதுப்போலி உவமைப்போலி, தோல்வித்தானம், என்பனவற்றுக்குப் பொருத்தமான விளக்கம் கொடுப்பர்.

இங்ஙனமாகச் சிவஞானபோதத்தை ஏற்ற முறையில் மொழி பெயர்த்து விளக்கிய கலாநிதி ஹொலிங்ரன் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த சாத்திரத்திற்கும் முன்னுரையும், விளக்கமும், மொழி பெயர்ப்பும், உதவித் தமிழர் கண்ட தெய்வநெறிக் கோட்பாட்டை உலகமறியச் செய்தமை செயற்கரிய சீரிய செய்கையாகும்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்!

— திருவாசகம்

Gopuram at Mariamman Temple, Singapore



பூர் ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த இந்தியக் கலைச் சின்னங்கள் அழிந்துவிட்டன.

இன்று சிங்கப்பூரின் கடற்பகுதிகள் கற்களால் தூர்க்கப்பட்டு பெருநகராக விரிவடைந்து வருகிறது.

இப்போது மாரியம்மன் கோயில் இருக்கும் பகுதி 1823 வரை தெருவே போடப்படவில்லை. தெலுக்காயர் வீதிவரை கடற்கரை இருந்தது. தெலுக்காயர் என்னும் மலாய் மொழியின் பொருள் நீர்க்கரை என்பதே. இந்தக் தெலுக்காயர் வீதியில்தான் நாகையிலிருந்து வந்த முஸ்லீம் தமிழர்கள் நாகப்பட்டினம் தர்கா அமைப்பில் 1850-ல் எழுப்பிய ''குச்சுப் பள்ளி'' எனப்படும் அல் அப்ரார் பள்ளி வாசல் இன்னும் உள்ளது.

சிங்கப்பூர் ஆற்றைக் கடந்து ஒற்றையடிப் பாதை வழியாகவேதான் மாரியம்மன் கோயிலுக்கு வரவேண்டியிருந்தது. அப்போது கூரை வேயப்பட்ட மரக் கட்டிடமாகவே மாரியம்மன் கோயில் இருந்தது. 1840-ல் மாரியம்மன் கோயிலுக்கு வருவதற்கான சௌத் பிரிட்ஜ் ரோடு போடப்பட்டது.

நாராயண பிள்ளை

1819-ல் ராபிள்சுடன் ''இந்தியானா''என்ற கப்பலில் வந்தவர் நாராயணபிள்ளை என்ற வணிகர்.

கிழக்கிந்தியக் கம்பெனியுடன் தொடர்பு கொண்டிருந்த வணிகர்கள் நாராயணபிள்ளையும் வையாபுரியும் தமிழர்கள் வழிபடுவதற்கு ஓர் இடத்தைத் தரவேண்டுமென்று விண்ணப்பித்தனர். ஸ்டாம்போர்டு ரோடும் ஹில் வீதியும் சந்திக்கும் இடத்தில் ஓர் இடத்தை வழங்குமாறு நாராயணபிள்ளை கேட்டார். அது கிடைக்கவில்லை. அரசாங்கம் வழங்க முன்வந்த வேறொரு இடத்தை அவர் ஏற்க விரும்பவில்லை. இறுதியில் இப்போதுள்ள இடத்திலேயே மாரியம்மன் கோயிலை வைத்திருக்க அனுமதி தரப்பட்டது.

இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தேசியவாதிகள் நாடுகடத்தப்பட்டனர். அவர்களில் பலர் சிங்கப்பூருக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இந்தக் கைதிகள்தான் சிங்கப்பூரின் சதுப்பு நிலங்களையும் காடுகளையும் அழித்து சாலைகளை அமைத்தனர். துறைமுகங்களை ஏற்படுத்தினர். மாரியம்மன் கோயிலையும் இவர்களே கட்டினார்கள்.

இந்த மாரியம்மன் கோயிலை மட்டுமல்லாது, சிங்கப்பூர் நகரின் நடுவில் இன்று ஓங்கி உயர்ந்து நிற்கும் செயின்ட் ஆண்ட்ரு மாதா கோயிலையும் தமிழர்களே கட்டினார்கள். மேல்நாட்டார் இன்றும் கண்டு வியந்து பாராட்டி எழுதி வரும் நாடாளுமன்ற மாளிகை, அதிபர் மாளிகை, எம்பிரஸ் பிளேசிலுள்ள அரசாங்க அலுவலகங்கள், சிறைச்சாலை, ராணுவக் கட்டடங்கள் ஆகியவற்றையும் இந்துத் தமிழர்களே வரைபடம் தயாரித்து, சூளைபோட்டு செங்கற்கள், ஓடுகள் யாவும் சொந்தமாகவே செய்து மிகக் குறைந்த செலவில் இவற்றைக் கட்டினார்கள். பிரிட்டனிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு நாடுகடத்தப்பட்ட 'பிரிட்டிஷார் எப்படி சிட்னி நகரை உருவாக்கினார்களோ அதேபோன்று சிங்கப்பூரும் தமிழர்களின் உழைப்பில் உயர்ந்தது. 1860-ல் 2275 தமிழ்க் கைதிகள் சிங்கப்பூரில் இருந்தனர். இவர்களில் பலர் தண்டனைக் காலம் முடிந்த பிறகு சிங்கப்பூரையே தாயகமாக்கிக் கொண்டனர்.

1844 முதல் படிப்படியாக வளர்ச்சி கண்ட மாரியம்மன் கோயில் மிகப் பெரிய சுற்றுமதிலுடன், அன்று முதல் இன்று வரை அதே பரப்பளவில் இருந்து வருகிறது.

சீன நகரில்....

ஆனால் இந்தக் கோயில் அமைந்துள்ள பகுதியில், சுற்று வட்டத்தில் தமிழர்களே இல்லை.

சைனா டவுன் எனப்படும் சீனர்களின் பிரபல வணிக மையமாக விளங்கும் பகுதியில் இந்த மாரியம்மன் கோயிலும் அதையடுத்து நாகப்பட்டினம் முஸ்லீம்கள் கட்டிய மசூதியும் உள்ளன.

மூன்று பெரிய விமானங்கள், உயர்ந்து கம்பீரமாக விளங்கும் ராஜகோபுரத்துடன் திகழும் மாரியம்மன் கோயில் சிங்கப்பூர் அரசாங்கம் அமைத்துள்ள இந்து அறக்கட்டளை ஆட்சிக் குழுவின் நிர்வாகத்தில் உள்ளது.

தீமிதி திருவிழா

இந்த மாரியம்மன் ஆலயத்தில் 1840 முதல் தீமிதி உற்சவம் மிகவும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. ஐப்பசி மாதத்தில் நடைபெறும் இந்தத் தீமிதி விழாவில் நூற்றுக்கணக்கானோர் தகிக்கும் அனலில் நடந்து போவதைக் காணப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடுவார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஐரோப்பியச் சுற்றுப் பயணிகள்.

இந்தத் தீமிதி விழா, தைப்பூச அலகுக் காவடி ஆகியவை பற்றி வெளி நாடுகளில் சிங்கப்பூர்ச் சுற்றுப்பயண வாரியம் விளம்பரப்படுத்தி வரு

வதால் அதைக் காண மேல்நாட்டார் விரும்பி வருகின்றனர்.

திருப்பணி:

1934-ல் திருப்பணி நடைபெற்றபோது ராஜகோபுரம் திருத்திப் பெரிதாகக் கட்டப்பட்டது.

காலஞ்சென்ற பி. கோவிந்தசாமி செட்டியார், ஜே. பி. வி. பக்கிரிசாமிப்பிள்ளை, ஏ. தர்மலிங்கம்பிள்ளை, எம். வைத்தியலிங்கம்பிள்ளை, டி. வி. குமாரசாமி தேவர் போன்றோர் முன்னைய நிர்வாக சபையில் அரும்பங்காற்றியவர்கள்.

சிங்கப்பூர்க் கோவில்களின் நிர்வாகத்திலும் இந்து ஆலோசனை மன்றத்திலும் நெடுகிலும் பணியாற்றி வந்த திரு. வி. பக்கிரிசாமிப்பிள்ளை அவர்களை இந்தச் சிறப்பு மலருக்காகப் பேட்டி காண அவர்கள் இல்லம் சென்றிருந்தேன்.

11-12-1894-ல் பிறந்த திரு. பக்கிரிசாமிப் பிள்ளை அவர்கள் *87* வயதில், மிகவும் தளர்ச்சி கண்டு, சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி பேட்டியளித்தார். *1976*-ல் அறுவைச் சிகிச்சையில் அவரது கால் துண்டிக்கப்பட்டதால் நடக்கமுடியாமல் போய்விட்டது.

மாரியம்மன் கோயில், பெருமாள் கோயில், மன்மதன் கோயில், கிருஷ்ணன் கோயில் ஆகியவற்றில் தவறாமல் பூஜைகள் நடக்கவும் மற்றும் ஆலய நிர்வாகப் பணிகளைக் கவனிக்கவும் தமது வாழ்நாளை அர்ப்பணித்த விவரங்களைத் திரு. பக்கிரிசாமி நினைவுகூர்ந்தார்.

ஒழுங்கான வழிபாடுகள்

''கோவில் கட்டுவது பெரிதல்ல. கட்டிய கோவில்களில் அர்ச்சகர், பண்டாரம் ஆகியோருக்கும் மற்றும் மேளம், நாதசுரம் இதர பணியாளர்களுக்கும் ஒழுங்காக ஊதியம் கிடைக்கவும் நைவேத்தியம், பூசைகள், திருவிழாக்கள் நியமப்படி நடக்கவும் வழிவகைகள் செய்ய வேண்டும். கோவில் வெறும் வழிபடும் தலம் மட்டுமல்ல, நம் மொழி, பண்பாடு, சமய நெறி ஆகியவற்றை வளர்க்கும் நிலையமுமாகும். அதை நம் இளைஞர்களுக்கு உணர்த்தி அதில் அவர்கள் அதிகமான பங்கு வகிக்க வழி செய்ய வேண்டும்'' என்கிறார் திரு. பக்கிரிசாமிப்பிள்ளை.

மாரியம்மன் கோயிலில் தீமிதி விழாவுக்கு முன்னதாக மகாபாரதம் படித்து, அர்ச்சுனன் தபசு போன்ற நாடகங்களை நடத்தியதையும் பின்னர் இளைஞர்கள் பலர் விரும்பியதற்கிணங்க விடியும்வரை புராணத்திரைப் படங்களைத் திரையிட்டதையும் நினைவுபடுத்தினார் திரு. பக்கிரிசாமி அவர்கள்.

தேசிய நினைவாக

சிங்கப்பூர் மாரியம்மன் கோயில் நமது பண்பாட்டின் தேசிய நினைவுச் சின்னமாகப் பாது காக்கப்படும் எனச் சிங்கப்பூர் அரசாங்கம் *18-6-1973*-இல்வெளியிட்ட அரசாங்க கெசட்டில் குறிப்பிட்டுள்ளது. இது தமிழர்கள் பெருமிதப் படக்கூடியதொன்றாகும். காலத்தால் அழியாத தமிழர்களின் கலாச்சார, சமய நினைவுச் சின்னமாக மாரியம்மன் ஆலயம் திகழும்!

சிங்கப்பூரின் மிகப் பழமையான மற்றொரு ஆலயம் பரபரப்பான ஆர்ச்சார்ட் தெருவில் அமைந்துள்ள சிவன் கோயில்.

நவநாகரிகமான கடைத்தொகுதிகள் அமைந்ததும் அமெரிக்க, ஐரோப்பிய வணிக மையமாக விளங்குவதுமான ஆர்ச்சார்ட் தெருவில் அழகும் அமைதியும் கொண்ட இந்தச் சிவன் ஆலயம் அமைந்துள்ளது.

எந்த நேரமும் இந்தக் கோயிலில் கூட்டம் நிறைந்து இருக்கும்.

நீத்தார் வழிபாடுகள் பெரும்பாலும் இந்தக் கோயிலில்தான் செய்யப்பட்டு வருகின்றன.

தீபச் சுடரில் ஒளிவிடும் இந்த ஆலயத்தின் சிவலிங்கம், வழிபடும் உள்ளங்களுக்கு உவகை அளிக்கும் மூர்த்தமாகத் திகழ்கிறது.

160 ஆண்டுகள்

160 ஆண்டுகளாக இருந்து வரும் இந்தச் சிவன் கோயில் வளர்ந்துவரும் சிங்கப்பூர் நகரின் விரிவுப் பணிகளுக்கு வழிவிட வேண்டிய நிலைக்கு உள்ளாகிவிட்டது.

1822-ல் கட்டப்பட்ட இந்த சிவன் கோயிலை வேறு இடத்தில் அமைக்க அரசாங்கம் இடம் கொடுத்துள்ளது.

முன்பு இந்தக் கோயிலின் முன்னால் நன்னீர் ஓடை (இன்று ஸ்டாம் போர்ட் கால்வாயாக இருப்பது) இருந்தது. கோயிலின் பின்னால் ரயில்வே நிலையம் இருந்தது. ரயில் நிலையம் வேறு இடத்திற்குப் போய்விட்டது. கோயில் முன்னாலிருந்த நதி, காங்கிரீட் கால்வாயாக உள்ளது.

சந்தடி நிறைந்த, பரபரப்புமிக்க ராஜ பாட்டையிலிருந்து ஒதுக்கி, வேறு இடத்தில் கோயில் கொள்ள சிவனார் திருவுளம் கொண்டாலும் பக்தர்கள் உள்ளம் அதை விரும்பவில்லை.

சிங்கப்பூர் நகராக உருவாகும்முன் அமைந்த ஆலயம் என்பதை உணர்ந்து, நகர வளர்ச்சிக்குத் திட்டமிடுவோர் அதற்கு இடம் ஒதுக்கிச் செய்ய வேண்டும்! நவீனம், வளர்ச்சி என்று 'புல்டோசர்களை' ஏவிவிடுமுன் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

பெருமாள் கோயில்

சிங்கப்பூர் நகரின் உயிர் வாழ்விற்கு வாணிபச் சந்தைகள் தேவை என்பதால், அதைப் பிரதிபலிப்பது போல் 60, 70 என மாடிக் கட்டிடங்கள் உயர்ந்து கொண்டே போகின்றன.

சுற்றுப் பயணிகள் மூலமே கணிசமான வருவாயைப் பெற்று வருகிறது சிங்கப்பூர் அரசு. மேல் நாட்டினர் சிங்கப்பூரில் காண விரும்புவது உயர்ந்த கட்டிடங்களை அல்ல. ஆசிய மக்களின் கலாச்சாரங்களையும் அவர்களின் பாரம்பரியங்களையுமே. அதை சிங்கப்பூர் அரசினரும் உணர்ந்து அவற்றிற்கு ஆக்கமூட்டி வருகின்றனர்.

''ஆசியக் கலாச்சாரங்களின் மையம் சிங்கப்பூர்'' என்பதைக் காட்டத் தமிழர்களின் கோவில்கள், கலைகள் ஆகியவற்றையும் விளம்பரப்படுத்திச் சுற்றுப் பயணிகளைக் கவர்கிறார்கள்.

மாரியம்மன் ஆலயத்தை அடுத்து, அழகிய, உயர்ந்த ராஜகோபுரமுடன் சிங்கப்பூரில் விளங்குவது ஸ்ரீனிவாசப் பெருமாள் ஆலயம்.

நூறாண்டுக்கு மேலாக

நூறாண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஆலயம் இது.

தமிழர்கள் மிகுதியாக வாழும் சிராங்கூன் தெருவில் அமைந்துள்ள இந்தக் கோயில், 20-7-1855-ல் திரு. நரசிங்கம் என்பவருக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி வழங்கிய மூன்று ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீநரசிங்கப் பெருமாள் கோயில் முன்புறம் பெரிய திருக்குளம் அமைந்திருந்தது. அந்தக் குளம் இப்போது இல்லை.

இந்தக் கோயிலை விரிவுபடுத்த மேலும் நிலங்கள் 1894, 1912-ம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஆட்சியில் வாங்கப்பட்டது.

1907-ம் ஆண்டு முதல் அரசினர் அமைத்த இந்து அறக்கட்டளை வாரியத்தின் கீழ் இந்த ஆலயம் நிர்வகிக்கப்படுகிறது.

நரசிங்க அவதாரமுடன் ஆரம்பத்தில்இருந்த மூல விக்ரகம் 1966-ல் அகற்றப்பட்டு, திருப்பதி வேங்கடாசலபதி உருவத்தை ஒட்டிய கருங்கற் சிலைகள் இங்கே வைக்கப்பட்டன.

ஐந்து மாடங்களுடன் 21.4 மீட்டர் உயரத்தில் இந்தக் கோயிலின் ராஜகோபுரம் 4 லட்சம் வெள்ளி செலவில் 1966-ல் அமைத்தவர் காலஞ்சென்ற திரு. பொ. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள். இரு மாடிகளுடன் நவீன கல்யாண மண்டபம் ஒன்றையும் இவர் இங்கே கட்டியுள்ளார். இதை அப்போதைய சிங்கப்பூர் அதிபர் இஞ்சேயகுப் 1965-ல் திறந்து வைத்தார்.

கோவிந்தசாமிப்பிள்ளை

1887-ல் தஞ்சையில் பிறந்த திரு. பொ. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் 1905-ல் சிங்கப்பூருக்கு வந்தார். மாதம் 4 வெள்ளி சம்பளத்திற்கு ஒரு பலசரக்குக்கடையில் ஊழியராகப் பணியாற்றினர். உழைப்பினுல் உயர்ந்து பல வர்த்தக நிலையங்களின் உரிமையாளரானர்.

தனி மனிதர் ஒருவர் சமயத்திற்குச் செய்யக்கூடிய சேவைக்கு வள்ளல் கோவிந்தசாமிப்பிள்ளையின் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டாகும்.

சிங்கப்பூரில் பெருமாள் கோயிலின் ராஜகோபுரமும் கல்யாணமண்டபமும் மட்டுமல்லாது ராமகிருஷ்ணர் மண்டபம் ஒன்றையும் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். பல திருப்பணிகளுக்கும் கணிசமான பணம் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலும் மலேசியாவிலும்கூடப் பல கோவில்களின் திருப்பணிகளுக்கு உதவிய இப்பெரியார் 1980-ல் இறைவனடி சேர்ந்தார்.

தேசிய சின்னம்

ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயிலைச் சிங்கப்பூரின் தேசிய நினைவுச் சின்னமாக 1978-ல் சிங்கப்பூர் அரசாங்கம் அங்கீகரித்துப் பாதுகாக்க முன் வந்துள்ளது.

சிங்கப்பூர் தமிழர்களிடையே சைவ-வைணவ வேறுபாடு கிடையாது என்பதற்கு இந்த ஆலயம் ஓர் எடுத்துக்காட்டு.

ஆண்டு தோறும் தைப்பூசத்திற்கு இந்தக் கோவிலிலிருந்துதான் காவடிகள் எடுக்கப்பட்டு தண்டாயுதபாணி கோயிலில் நிறைவேற்றப்படுகின்றன.

ஸ்ரீ செண்பக விநாயகர் கோயில்

''...சீர் சிங்கைநகர் காத்தோனே தமக்கிடமாய்
நின்று குன்று
திலகியருள் சுரப்போனை சண்பகப் பேர்
தரித்தோனை யேத்துவோமே''

என்று போற்றப்படும் காத்தோங் ஸ்ரீ செண்பக விநாயகர் கோயில் ஈழத் தமிழர்களால் நிர்வகிக்கப்பட்டு வருவது.

சிலோன்தெருவில் இந்தக் கோயில் அமைத்த காலத்தில் ஒரு திருக்குளமும் செண்பக மரமும் இருந்தது. செண்பக மலர் சொரிந்து பூசிக்கப் பட்ட விநாயகர் செண்பக விநாயகரானர். இன்று திருக்குளத்தையும் செண்பக மரத்தையும் காண வில்லை என்றாலும் அழகிய ராஜகோபுரமும் விமா னங்களும் பளிங்குத்தரையுடன் அமைந்த மண்ட பங்களும் கொண்ட பெரிய ஆலயமாக இந்த விநாயகர் ஆலயம் திகழ்கிறது.

1875-ல் இலங்கையிலிருந்து அரசாங்க அலுவ லகங்களில் பணியாற்ற யாழ்ப்பாணத் தமிழர்களை பிரிட்டிஷார் வரவழைத்தனர்.

ஈழத் தமிழர்கள் தங்கள் பாரம்பரியப்படி வழிபாடுகளை நடத்த ஆலயம் எழுப்ப விரும்பிய போது, அப்போது கூரை வேய்ந்த குடிலில்இருந்த விநாயகப் பெருமானுக்குக் கோயில் கட்ட முடிவு செய்தனர்.

கோயில் கட்ட பிராங்கல் பிரதர்ஸ் நிறு வனத்திடமிருந்து நிலத்தைப் பெற்றனர். ஆல யத்தை உருவாக்க அன்று முன்னின்று முனைந்த வர்கள் சோ. முத்துக்குமாரு, ஜே. பி., இ. இ. முதலியார் நாகலிங்கம், டாக்டர் க. இராமாதி பதி, ஜே. பி. டாக்டர் ச. நாகலிங்கம் ஜே. பி. தி. எதிர்நாயகம்பிள்ளை, ச. அம்பலவாணர், த. முத்துத்தம்பிப்பிள்ளை, அ. இளையதம்பி, மு. செல்லையா, சு. சண்முகம் மா. தில்லையம்பலம், டி. ஏ. மாணிக்கம்பிள்ளை, சு. வல்லிபுரம், இ. ரங்கசாமிப் பிள்ளை, கு. மயில்வாகனம், வ. சுப் பிரமணியம், மு. வேலுப்பிள்ளை, நி. கணபதிப் பிள்ளை, நா. மார்க்கண்டு, சு. விசுவநாதர், சு. சுந்தரம்பிள்ளை, வ. கயிலாச பிள்ளை, ஆ. கந் தையா ஆகியோரும் மற்றும் சில அன்பர்களும் ஆவர்.

பல மண்டபங்கள்

1913-ல் சிங்கப்பூரில் 300 இலங்கைத் தமிழர் களே இருந்தனர் என அரசாங்க கெசட்டில் அறி கிறோம். ஆயினும் சிங்கப்பூரில் தமிழும் சைவமும் தழைக்க இலங்கைத் தமிழர்கள் அப்போதே அரும் பணியாற்றி வந்துள்ளனர்

1909-ல் இலங்கைத் தமிழர் சங்கம் சிங்கப் பூரில் அமைந்தது.

ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலயம் 1923-முதல் இன்று வரை இலங்கைத் தமிழர் சங்கத்தின் நிர் வாகத்திலேயே இருந்து வருகிறது.

தெய்வீகப் பொலிவும் எழிலும் கொண்டு விளங்கும் செண்பக விநாயகர் ஆலயத்தில் கர்ப் பக்கிரகம், அர்த்தமண்டபம், நிருத்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், சோபன மண்டபம், சுப்பிரமணியர் வெளி மண்டபம், இராசகோபுரம், மணிக்கோபுரம், ஆகியவை கவினுடன் அமைந்துள்ளன.

திருப்பணி வேலைகள் முடிந்ததும் 1930-ல் யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் ஆதீன குருசிரோ மணி பிரம்ம ஸ்ரீ ச. செல்வக்குமாரசுவாமி குருக் கள் அவர்கள் குடமுழுக்கை நடத்தினர்கள்.

திரு. ச. அம்பலவாணர் அவர்கள் தலைமை யில் பரிபாலன சபையார் 1939-ல் அர்ச்சகர் இல்லத்தையும் வாசகசாலையும் அமைத்தனர். 1940 முதல் தமிழ்ப் பள்ளிக் கூடத்தையும் நடத்தி னர்கள்.

1941-ல் இரண்டாவது உலகப் போரின் போது குண்டு வீச்சில் ஆலயத்தின் ஒரு பகுதியும் செண்பக மரமும் சேதமுற்றன.

டாக்டர் தில்லைநாதன்

உலகப் போரினல் ஏற்பட்ட கொந்தளிப்பு களிடையேயும் இந்த ஆலயம் செவ்வனே நடந் தது.

காலஞ் சென்ற டாக்டர் ப. தில்லைநாதன் அவர்கள் ஆற்றிய அரும் தொண்டும் பொருள் உதவியும் சிங்கப்பூர்த் தமிழர்களால் மறக்கமுடி யாதவை.

ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலயத்தில் மேலும் பல திருப்பணிகள் செய்யப்பட்டு 7-7-1955-ல் குடமுழுக்கும் நடைபெற்றது.

திரு. எஸ். எம். வாசகர் அவர்களின் தலை மையில் அமைந்த குழுவினர் இந்தக் குடமுழுக்கு விழாவைச் சிறப்பாகச் செய்தனர்.

இரண்டாவது உலகப் போருக்கு முன்னர் இந்த ஆலயத்தின் அருகிலுள்ள கடற்கரையில் அமைக்கப்பட்ட மண்டபத்தில் ஆடி அமாவாசை யின்போது, விநாயகப் பெருமான் அருளாணையத் தில் எழுந்தருளி, தீர்த்தோற்சவத் திருவிழா கோலாகலமாக நடைபெற்றுள்ளது.

நவீன நகராக உருவாகி வரும் சிங்கப்பூரில் திருவிழாக்கள் கோவில்களுக்குள்ளேயே நடை பெறுகின்றன.

சதுர்த்தி விழா

ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலயத்திற்கான அர்ச்சகர்கள், மேள நாதசுரக் குழுவினர் ஈழத்தி லிருந்து ஒப்பந்தத்தில் வந்து பணியாற்றுகின்றனர்

மாதந்தோறும் விநாயகருக்கு உகந்த சதுர்த்தி திதியில் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

1937-ல் யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்டுத் தருவிக்கப்பட்ட சப்பிரமஞ்சத்தில் விநாயகப்பெருமான் சதுர்த்தித் திருவிழாவின் ஆலயத் திருவீதியில் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலயம் இலங்கைத் தமிழர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும்ஆண்டுதோறும் இரு இந்தியத் தமிழர்களும் சபைக்குத் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். இது 1927 முதல் நடைமுறையிலிருந்து வருகிறது.

1963 முதல் தமிழும் சமய பாடபோதனைகளும் இந்த ஆலயத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும் ஆலய நிர்வாகத்தில் இன்றைய இளைஞர்களின் பங்கைத்தான் காணமுடியவில்லை. இந்த இடைவெளியைச் சரிசெய்தால் நம் சமயம் எல்லோருக்கும் பயனளிக்கும் பங்கை ஆற்றியதாக அமையும். இளைய தலைமுறையினரிடம் அதிக பொறுப்புக்களைத் தந்து அவர்களையும் ஆலயப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.

ஸ்ரீதண்டாயுதபாணி ஆலயம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எந்த நாட்டில் இருந்தாலும் திருக்கோயில் எழுப்பிச் சமய வழிபாடுகளை ஒழுங்கான முறையில் நடத்தி வருவார்கள் என்பது நாம் அறிந்த ஒன்று.

அதுபோல் சிங்கப்பூர்க் குடியரசிலும் தண்டாயுதபாணி கோயிலையும், லையன் சிட்டி விநாயகர் கோயிலையும் நகரத்தார்கள் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

சிங்கப்பூர் நகராக உருவாகும் முன்பே தண்டாயுதபாணி கோயிலும் அமைந்துவிட்டது.

123 ஆண்டுகள்

ஸ்ரீதண்டாயுதபாணி கோயில் 123 ஆண்டுகளுக்கு முன்னர் டேங்க் ரோடில் அமைந்தது.

4-4-1859-ல்-அதாவது 123 ஆண்டுகளுக்கு முன்னர் - இந்தக் கோயில் ஸ்தாபனம் ஆனதாகக் கோயில் தர்மகர்த்தாவைப் பேட்டி கண்டபோது கூறினார்.

பல லட்சம் வெள்ளி செலவில் ராஜகோபுரம் மண்டபங்கள் கருவறை விமானங்கள் யாவும் இப்போது கட்டப்பட்டு வருகின்றன.

தென்கிழக்காசியாவிலேயே அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கோயிலாகத் தண்டாயுதபாணி கோயில் திகழும் என எதிர் பார்க்கலாம். மாமல்லபுரத்திலிருந்து வந்துள்ள 20 சிற்பிகள் இரவு பகலாகச் சிற்பங்களை உருவாக்கி வருகின்றனர்.

கண்ணாடியில் செதுக்கப்பட்ட கடவுளரின் உருவங்களைப் பம்பாயிலுள்ள கை தேர்ந்த சிற்பிகள் உருவாக்கி அனுப்பி வருகின்றனர். இவை ஒவ்வொன்றும் ஐந்தடி உயரம் உள்ளன. இவை கோயிலின் விமானத்தில் சுற்றி அமைக்கப்படும். கதிரவனின் ஒளி அதனை ஊடுருவி வரும்போது தனிச் சோபையுடன் காட்சியளிக்கும்.

தைப்பூசம் :

மூலவர் தண்டாயுதபாணி, சிவன், அம்மன் கோயில்கள் தனித்தனி விமானங்களுடன் கட்டப்பட்டு வருகின்றன. 20 லட்சம் வெள்ளி செலவில் நடத்தப்படும் திருப்பணி வேலைகள் பூர்த்தியாகி 1983-ல் குடமுழுக்கு நடைபெறும்.

ஸ்ரீதண்டாயுதபாணி கோயிலில் தைப்பூசத் திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுகிறது.

முதல் நாளிரவு வெள்ளிரதத்தில் திருமுருகன் லையன்சிட்டி விநாயகர் கோயிலிலிருந்து தண்டாயுதபாணி கோயிலுக்குப் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

மறு நாள் தைப்பூசத்தன்று விடியற்காலை முதல் நள்ளிரவு வரை ஆயிரக்கணக்கான அலகுக் காவடிகள் பெருமாள் கோயிலிலிருந்து (3 மைல் தூரம்) ஊர்வலமாக வருவதைக் காணவும், படம் எடுக்கவும் ஏராளமான சுற்றுப் பயணிகள் கூடி விடுவார்கள்.

தைப்பூசம் முன்பு பொது விடுமுறை நாளாக இருந்தது. இப்போது விடுமுறை இல்லை என்றாலும் கூட, தைப்பூசத் திருவிழாவுக்கான மகத்துவம் குறையவில்லை.

''தைப்பூசத்திற்கு மீண்டும் விடுமுறை விட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுள்ளோம். அவர்கள் அதைப் பரிசீலனை செய்து வருகிறார்கள்.'' என்றார் கோயில் கார்வார்.

அநேகமாக அடுத்த ஆண்டில் கோயில் திருப்பணிகள் முடிந்ததும் தைப்பூசம் பொது விடுமுறையுடன் இன்னும் சிறப்பாக நடத்தப்படும் என எதிர்பார்க்கலாம். சுற்றுப் பயணிகளைக் கவர்ந்து ஈர்க்கும் விழாவாக இது இருப்பதால் அரசாங்கம் அதனால் பலன் அடைகிறது.

தண்டாயுதபாணி கோயிலில், தேசிய அரங்கம், தேசியப் பூங்கா எதிரே பசுமையான சூழலில்

அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் பணியாற்றும் அர்ச்சகர்கள் பண்டாரங்கள், மேள, நாதஸ்வரக் கலைஞர்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுகின்றனர்.

இந்தக் கோயிலில் இரண்டு அழகிய வெள்ளி ரதங்கள் உள்ளன. தங்க மயில்வாகனம், வெள்ளி மயில் வாகனம், வெள்ளிக் குதிரை வாகனம் ஆகியவையும் உள்ளன.

மாடுகள்

வெள்ளி ரதத்தை இழுத்துச் செல்வதற்கென்றே இரு மாடுகளை இந்தக் கோயிலில் வைத்திருந்தார்கள்.

சல், சல் என மாடுகளின் கழுத்திலுள்ள மணிகள் ஒலிக்க ஒளிவிளக்குகளுடன் ரதம் செல்லும் அந்த இனிய காட்சியை இப்போது சிங்கப்பூரில் காண முடியவில்லை. மாடுகளை நகருக்குள் வைத்திருக்கக்கூடாது என்ற அரசாங்க உத்தரவினால் தைப்பூசத்தின் போது ஜீப்பில் கட்டியே ரதத்தை இழுத்துச் செல்கின்றனர்.

பால் அபிஷேகத்திற்கென்று இரு கறவைப் பசுக்களையும் முன்பு இந்தக் கோயிலில் வைத்திருந்தனர். 1979-க்குப் பிறகு இதற்கும் அரசினர் அநுமதிக்கவில்லை.

நகருக்கு வெளியே சாங்கிரோடு ஒன்பதாவது மைலில் 20 ஏக்கர் பசுமை நிலத்தில் 30 பசுமாடுகளை இந்தக் கோயிலுக்காக வைத்திருந்தனர். யூச்சுங்காங் என்ற இடத்தில் கோவிலுக்கான நந்தவனமும் இருந்தது. இவை யாவும் அண்மையில் அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டது.

குதிரைப் பந்தயம் நடத்தக் குதிரைகளை வைத்திருக்கிறார்கள். போலோ விளையாட்டு நடத்தக் குதிரைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் தூய்மைக்கேடு ஏற்படும் என்று கூறிப் பசுக்களையும் ஆண்டுக்கொரு தடவை இரதத்தை இழுக்கும் காளைகளையும் அனுமதிக்க மறுப்பது சரியல்ல. இதை இந்து ஆலோசனை மன்றம் போன்ற அமைப்புகள் அரசினருக்கு எடுத்துக்கூற வேண்டும்.

நவராத்திரி விழா

ஸ்ரீதண்டாயுதபாணி கோயிலில் நவராத்திரியின்போது வசந்த மண்டபத்தில் அன்றாடம் ஒவ்வொரு விதமான அலங்காரமுடன் அம்மன் கொலுவிருக்க உள்ளூரின் பாடகர்களின் இன்னிசையும் நடனமணிகளின் ஆடல்களும் பத்து நாட்களும் நடைபெறும்.

கார்த்திகைதோறும் அன்னதானமும் சுவாமி எழுந்தருளலும் நடைபெறுகின்றன.

நால்வர் குருபூசையும் இந்தக் கோவிலில் நடைபெறுகிறது.

இரண்டு அடுக்கு மாடிகளுடன் நவீன வசதிகள் கொண்ட கல்யாண மண்டபமும் இங்கே கட்டப்பட்டு வருகிறது.

வருகிற ஆகஸ்ட் மாதத்தில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் கல்யாண மண்டபத்தில் வைப்பதற்கென அழகிய பெரிய மணவறை இந்தியாவில் செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளது. கல்யாண மண்டபத்தின் முன்னால் சிற்ப வேலைப்பாடுகளுடன் எழில்மிக்க தோரண வாயிலும் உருவாக்கப்பட்டு வருகிறது.

சிங்கப்பூரில் இப்போது ஏறத்தாழ 500 நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் உள்ளனர். இவர்களின் இட்டாங்கிகள்-அல்லது பெட்டிக் கடைகள் வரிசையாக அமைந்திருந்தன. மார்க்கட் வீதியில் இந்தக் கடைகள் யாவும் கடந்த ஆண்டில் இடிக்கப்பட்டு நகரப் புனரமைப்புக்கு வழிவிடப்பட்டுள்ளன.

வட்டித் தொழில் செய்யும் நகரத்தார்இன்று அருகி விட்டாலும் பல்வேறு தொழில் துறைகளில் அவர்கள் முன்னேறி வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஒரே வித வாழ்க்கை முறையிலிருந்து மாறி இன்று நவீன போக்கில் சிங்கப்பூர் முன்னேறினாலும் நகரத்தார் தங்களின் பாரம்பரிய தெய்வப்பணிகளைக் குறைவின்றித் தொடர்ந்து செய்தே வருவார்கள்.

லையன் சிட்டி விநாயகர்

சிங்கப்பூரில் நகரத்தாரின் நிர்வாகத்திலுள்ள மற்றொரு கோயில் லையன் சிட்டி விநாயகர் ஆலயம்.

இந்த ஆலயம் முன்பு சிங்கப்பூரின் பொது மருத்துவமனை அருகே இருந்தது.

கிழக்கிந்தியக் கம்பெனியாரின் இராணுவ வீரர்கள் தாங்கள் வழிபடுவதற்கென சிப்பாய்லைன் எனப்படும் இடத்தில் இந்த விநாயகர் கோயிலை அமைத்திருந்தனர். பொது மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்காக இந்தக் கோயிலை 60 ஆண்டுகளுக்கு முன்னர் இப்போதுள்ள இடத்தில் கட்டினார்கள். 14-11-1975-ல் இதன் திருப்பணிக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சைனாடவுன் பகுதியில் தமிழர்களின் கலாச்சாரச்சின்னமாக, இந்தக் கோயில் திகழ்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆலயம்

சிங்கப்பூரில் வாட்டர்லூ தெருவில் அமைந்துள்ள ஸ்ரீகிருஷ்ணபகவான் கோயிலும் நூறுண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தது.

இந்தக் கோயிலே குஜராத்திகள் முன்பு நிர்வகித்து வந்தனர்.

பின்னர் 1928-ல் பெரியார் திரு. வி. பக்கிரிசாமிப் பிள்ளை அவர்கள் இந்தக் கோயிலின் நிர்வாகத்தை மேற்கொண்டார். 1818-இல் கல் கட்டிடமாக இந்தக் கோயில் உருவானது.

குழலூதும் கண்ணனும் ராதையும் சேர்ந்திருக்கும் பளிங்கிலான இந்த ஜெய்ப்பூர் விக்ரகங்கள் உள்ளத்தை ஈர்க்கும் தன்மை வாய்ந்தவை. மூலவருக்கு அபிஷேகம் கிடையாது அலங்காரப் பிரியர்.

இந்த ஆலயத்தின் பின்னுல் இரண்டு அடுக்கு மாடிகளுடன் கல்யாண மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளது.

சுண்ணும்புக் கம்பம் காளியம்மன் கோயில்

தமிழர்களின் வணிக மையமான சிராங்கூடன் தெருவில் நான்கு கோயில்கள் உள்ளன.

ஒன்று வட இந்திய பாணியில் அமைந்த ஆரிய சமாஜம் நடத்தும் கோயில். மற்றும் இரு காளியம்மன் கோயில்களும் ஒரு பெருமாள் கோயிலும் உள்ளன.

சுண்ணும்புக் கம்பம் காளியம்மன் கோயிலும் நெடுங்காலமாக இருந்து வருவது. இந்தக் கோயிலேப் புதிதாகத் திருத்தி அழகிய கோபுரங்களுடன் கட்டும் திட்டமிருந்து வருகிறது.

நவராத்திரி விழா இங்கே சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலயம்

முன்பு ஒரு சிறு கிராமமாக இருந்த இடத்தில் உருவானது ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலயம்.

கடந்த நூற்றுண்டில் பொத்தோங்பாசீர், மண்மலே வாழ் தமிழர்களால் நடத்தப்பட்டு வந்த இந்த ஆலயம் 1930-க்குப் பிறகு காலஞ்சென்ற கொட்டகை பாலகுரு கோவிந்தசாமி செட்டியார், ஜே. பி. அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1948 ஏப்ரலில் அவர்கள் காலமானபிறகு அவர்களின் மருமகன் திரு. எஸ். எல். பெருமாள் அவர்கள்நிர்வகித்து வருகிறுர்கள்.

தண்ணீர்க் கம்பம் காளியம்மன் ஆலயம் என்று போற்றப்படும் இந்தக் கோயிலில் முன்பு வற்றுத குளம் இருந்தது. அந்த வட்டாரத்து மக்களின் குடிநீர்க் குறையை இந்தக் குளம் தீர்த்தது.

இந்த ஆலயத்தின் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறிக் கடந்த 1978-இல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இதன் கும்பாபிஷேகச் சிறப்பு மலரைத் தயாரிப்பதில் நானும் முக்கிய பங்காற்றினேன்.

சிறந்த சிற்ப வேலேகளுடன் அமைந்த இந்த ஆலயத்தின் அழகிலும் பொலிவிலும் நம் மனம் லயித்துவிடும்.

ஆண்டுதோறும் ஆடி மாதம் 30 நாட்களும் இந்த அம்மனுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இறுதி நாளில் அம்பாள் ரதத்தில் பவனி வந்து அருளுகிறுள்.

இப்போது இந்த ஆலயத்தின் ராஜகோபுரப் பணி நடந்து வருகிறது. மதுரை மீனுட்சியம்மன் ஆலயத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள் இங்கே பணியாற்றுகின்றனர்.

சிங்கப்பூரின் மிகப் பழமையான ராஜபஜனை மடம் (நூறுண்டுகளுக்கு முன்னர் கிராஸ் வீதியில் உள்ள கட்டிடத்தில் இருந்தது) இப்போது இங்கே இயங்குகிறது.

மன்மதன் கோயில்

சிங்கப்பூர் காலாங் தெருவில் உள்ளது மன்மதகாருணீஸ்வரர் ஆலயம்.

இதுவும் பெரியார் திரு. வி. பக்கிரிசாமிப் பிள்ளை அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காலாங்கில் அமைந்துள்ள மிகப் பெரிய தொழில் கூடமான எரிவாயு (கியாஸ் வொர்க்ஸ்) நிலேயத் தமிழ் ஊழியர்கள்வழிபடஅமைந்த இந்த அழகிய வேலேப்பாடமைந்த கோயிலின் மூலவர் சிவலிங்கம்.

மன்மதனே எரித்த திருவிழா-"காமதகனம்"- இந்தக் கோயிலில் சிறப்பாக நடந்து வருவதால் மன்மதன் கோயில் என்ற பெயரே அமைந்துவிட்டது. மன்மதனே எரித்தவர் உக்கிரமூர்த்தி ஆகையால், இந்தக் கோயிலில் திருமணம் செய்கிறவர்களுக்கு காமனின் அருள் கிடைக்காது என்று யாரோ கட்டிவிட்ட கதையால் இந்தக் கோயிலில் திருமணங்களே நடப்பதில்லே.

திரு. எஸ். எஸ். பெருமாள் அவர்களின் நிர்வாகத்தில் மற்றொரு மன்மதன் கோயில் அமைந்துள்ளது கெண்டோமென்ட் தெருவில்.

சிராங்கூன் சிவன் கோயில்

சிராங்கூன் சாலையில் அமைந்துள்ள சிவன் கோயில் சிறிய ஆலயமென்றாலும் நிறையப் பேர் வழிபட வருகின்றனர்.

தமிழகத்திலிருந்து வந்துள்ள அர்ச்சகர்கள் ஆகம விதிப்படி பூசைகளை நடத்துகின்றனர்.

ஆறுமுகங்கள் பன்னிரு திருக்கரங்களுடன் முருகனின் ஐம்பொன் விக்கிரகம் சிறந்த வேலைப் பாடுடன் இங்கே உள்ளது. இது ஈழத்தில் உரு வாக்கப்பட்டது.

ஸ்ரீருத்ர காளியம்மன் ஆலயம்

சிங்கப்பூரில் பல வீடமைப்புப் பேட்டைகள் உருவாகி வருகின்றன.

அந்தந்தப் பேட்டைகளில் வழிபாட்டுத் தலங்களுக்கென இடங்களையும் வீடமைப்புக் கழகம் ஒதுக்கி வருகிறது. ஆனால் தமிழர்கள் சிறு பான்மையராக இருப்பதாலும் பொருளாதார நிலையில் தாழ்ந்த நிலையில் இருப்பதாலும் அப்படி ஒதுக்கப்படும் இடங்களை ''டெண்டர்களில்'' போட்டி போட்டு வாங்கும் நிலையில் இல்லை. இதனால் கிடைக்கும் வாய்ப்புக்களை இழந்து வரு கின்றனர்.

சிங்கப்பூரில் மிகப் பெரிய குடியிருப்புப் பேட்டைகளான தோப்பாயோ, ஜூரோங், தெலுக் பிளாங்கா, ஆங்மோகியோ போன்ற புதுநகர்களில் கோயில்கள் கட்டப்பட்டு வரு கின்றன.

தெலுக் பிளாங்கா புதுநகரில் டெப்போ சாலையில் ஸ்ரீருத்ர காளியம்மன் கோயில் ஐந்து லட்சம் வெள்ளி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

கோவில் மண்டபங்கள், கோபுரங்கள், சிற்ப வேலைப்பாடுகள் யாவும் பொது மக்கள் வழங்கிய நன்கொடைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டு வருகிறது. ஓர் இந்து அன்பரின் 2,70,000 வெள்ளி நன்கொடையைக் கொண்டு எல்லா வசதிகளும் கொண்ட கல்யாண மண்டபமும் இந்த ஆலயத்தை ஒட்டிக் கட்டப்பட்டு வரு கிறது. நூல் நிலையம், அலுவலகம், சிப்பந்திகளுக் கான குடியிருப்புகள் ஆகியவையும் கட்டப்பட்டு வருகின்றன.

1983-இல் ருத்ர காளியம்மன் கோயில் கம் பீரமாகக் காட்சியளிக்கும்.

வைராவிமட காளியம்மன் கோயில் :

சிங்கப்பூரின் வர்த்தக கேந்திரமான ஆர்ச் சார்டு ரோடு அருகில் சோமர்செட் தெருவில் அமைந்துள்ள வைராவி மடகாளியம்மன் ஆலயம் சிறியதாயினும் கீர்த்தி பெற்றது.

தமிழர்களின் குடியிருப்பாக ஒரு காலத்தில் விளங்கிய சோமர்செட் பகுதியில் தங்கள் வழி பாட்டுக்கென இந்தக் கோவிலை அமைத்தனர். இன்று இந்தப் பகுதியிலிருந்த தமிழர்களின் குடி யிருப்புகள், வான் உயர்ந்து நிற்கும் அலுவலக, வணிக மையங்களுக்கு இடம் தரவேண்டிய தாகியது.

வைராவி மடகாளியம்மன் ஆலயம் இந்து அறக்கட்டளை வாரியத்தின்கீழ் இயங்குகிறது.

இந்தக் கோயிலை தோப்பாயோ எனப்படும் குடியிருப்புப் புதுநகருக்கு மாற்றுகிறார்கள். இதற் கான அடிக்கல் போடும் விழா சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

இப்போது தகரக் கொட்டகையில் அமைந் துள்ள இந்தக் கோயில் அழகிய கோபுரங்கள் மண்டபங்களுடன் தோப்பாயோ நகரில் அமையவிருக்கிறது. சமூகத் தேவைகளைக் கவனிக்கக்கல்யாண மண்டபமும்இந்தக் கோயிலை ஒட்டி எழவிருக்கிறது.

புனிதமரம் சுப்பிரமணியர் கோயில்

நீசூன் எனப்படும் பகுதியில் அமைந்துள்ளது சில ஆண்டுகளுக்கு முன்னர்த் திருப்பணிகள் செய் யப்பட்டு புதுப் பொலிவுடன் திகழும் புனிதமரம் சுப்பிரமணியர் கோயில்.

நீசூன் வட்டார இராணுவக் கடற் படைத் தளங்களில் பணியாற்றும் தமிழர்கள் வழிபட அமைத்த கோயில் இது.

இந்தக் கோயிலில் புத்தருக்கும் தனிக் கோயில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

பங்குனி உத்தரத் திருவிழாவின்போது முருகன் ரதத்தில் பவனி போவார்.

நீசூனில் உள்ள மற்றொரு கோயில் மாரியம்ம னுக்காக அமைந்தது.

சிங்கப்பூர் சுவாசூகாங்சாலைக்கு அப்பால் சுங்கைதெங்கா மலைமீது ''திருக்குன்றம் முருகன்'' கோயில் உள்ளது.

''இயற்கை எழில்மிக்க சூழலில் குன்றின்மீது இந்தக் குமரன் கோயில் இருப்பது மிகவும் பரவச மூட்டுகிறது'' என்று குன்றக்குடி அடிகள் இந்தக் கோயிலுக்குக் கடந்த நவம்பர், 1981-ல் வருகை யளித்தபோது பாராட்டினார்.

அரசகேசரி சிவன் கோயில்

சிங்கப்பூரின் எல்லையில், ஜோகர் பாலத்தை எட்டு முன் அமைந்துள்ளது. அரசகேசரி சிவன் கோயில்.

இலங்கைத் தமிழர்களின் நிர்வாகத்திலுள்ள இந்தக் கோயிலுக்கு அண்டை நாடான மலேசியா ஜோகூர் பாருவிலிருந்தும் மக்கள் வந்து வழிபடு கிறார்கள்

அரசும் வேம்பும் பிணைந்துள்ள மரத்தை ஒட்டி இந்தக் கோயில் இருப்பதால் அரசகேசரி சிவன் கோயில் என்ற பெயர் பெற்றது.

சிங்கப்பூரில் மற்றும் குயீன்ஸ்வே தெருவில் உள்ள முனீஸ்வரன் கோயில், கம்பம் பாரு தெருவில் ரயில்வே ஊழியர்கள் அமைத்த முனீஸ்வரன் கோயில், சாங்கியிலுள்ள இராமர் கோயில், மற்றும் பல கோயில்களும் சிங்கப்பூர்த் தமிழர்களின் வழிபாட்டுத் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.


தமிழ்நாட்டிற்கு வெளியே ஈழத்தை அடுத்து, சிங்கப்பூரும் மலேசியாவும் இந்து சமயத்தைப் பேணுவதில் சிறப்பான பங்காற்றி வருகின்றன என்றே கூற வேண்டும்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ !


— திருவாசகம்

Front view of Nallur Kandaswamy Temple, Jaffna.

Photo : V. Sundharalingam



இலங்கையில் முருக வழிபாடு



க. சொக்கலிங்கம், எம்.ஏ.

(சொக்கன்)

முருக வழிபாட்டின் தொன்மை :

சிலகாலத்தின் முன்பு தமிழகத்தில் திருநெல்வேலி, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களிலே புதைபொருளாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டபொழுது ஈமத்தாழிகள் சில கண்டெடுக்கப்பட்டன, இவற்றிலிருந்து கி. மு. 2,000 ஆண்டுக்குரிய பெருங்கற் பண்பாடு இங்கெல்லாம் நிலவியிருக்கலாம் என்ற உண்மை பெறப்பட்டது. இவற்றோடு சேவற் சிலை, காவடிச் செதில்கள், வேல் என்பனவும் கிடைத்தன. இவை கொண்டு முருகவழிபாடு இவ்விடங்களிலே அந்தத் தொன்மைக் காலத்திலேயே நிலவியிருத்தல் வேண்டும் என்று புதைபொருளாய்வாளர் முடிவு செய்தனர். இஃது உண்மையாயின் முருக வழிபாடு கி. மு. 2000 ஆண்டுக்கு முந்திய தொன்மையை உடைத்து என்று கொள்வதிலே தவறில்லை. பெருங்கற் பண்பாடு தமிழர்க்குரியதென்பர். எனவே மிகப் பழமையான முருக வணக்கத்திற்கு உரியவர் தமிழர் என்ற உண்மையும் பெறப்படும். அவ்வாறாயின் ''முருகன் தமிழர்தம் தெய்வம்'' என்று நாம் பெருமை கொள்வதும் நியாயமானதே.

முருகன் பற்றிய செய்திகள் கி. மு. 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்டன எனக் கொள்ளப்படும் சங்க நூல்களிலும் காணப்படுகின்றன.

> மணிமயில் உயரிய மாறா வென்றிப்
> பிணிமுக வூர்தி ஒண்செய் யோனும்
> (புறநானூறு-56)

> முருகன் அன்ன சீற்றத்து
> (அகநானூறு-158)

> முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்
> (பொருநராற்றுப் படை)

> பெரும்பெயர் முருக
> (பரிபாடல் - 5)

> முருகென மொழியும் வேலன்
> (ஐங்குறுநூறு - 249)

என்பன மேற்கூறிய கூற்றிற்குச் சில சான்றுகளாகும். சங்ககாலத்தின் பிற் பகுதியிலே தோன்றியதாகக் கொள்ளப்படும் பரிபாடலிலே முப்பத்தொரு பாடல்கள் முருகனைப் போற்றிப் பாடியன. பத்துப்பாட்டின் முதல் நூலாய்த் தொகுக்கப்பட்டுள்ள திருமுருகாற்றுப்படை, முருகப் பெருமானிடத்து அவன் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளுக்கும் அடியவனை வழிகாட்டிப் புலவனொருவன் செலுத்துவதாய் ஆக்கப்பட்டுள்ளது. இதன் சொல்லாட்சி, முருகனின் திருவவதாரம் பற்றிய செய்திகள் முதலியன கொண்டு இப்பிரபந்தத்தைக் காலத்தாற் பிற்பட்டது என்று ஆய்வாளர் கொள்வர். எனினும் இது கி. பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதே என்பதற்கு அகச்சான்றுகள் உள. 'இழையணி சிறப்பின் பழையோள் குழவி' என்று திருமுருகாற்றுப்படையில் ஓர் அடி வருகிறது. இதுகொண்டும் பிற சங்கநூற் சான்றுகள் கொண்டும் முருகன் வெற்றித் தெய்வமாகிய கொற்றவைக்கு மகன் எனக் கொள்ளப்பட்டான் என்பதும் புலனாகின்றது. பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முருகனைக் குறிஞ்சி நிலத் தெய்வமாகக் கொண்டு போற்றும். 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்பது தொல்காப்பியக் கூற்று.

வீரம், வெற்றி, சீற்றம் ஆகிய திறன்களோடு இளமை, அழகு, மணமுடைமை, தெய்வத்

தன்மை, அருளும் இயல்பு என்னும் பண்புகளுக்கும் உறையுளாகக் கொண்டு முருகனைப் பழந் தமிழர் போற்றி வந்தனர்.

இலங்கையில் முருக வழிபாட்டின் தோற்றம் :

1955-ஆம் ஆண்டிலே புத்தளம் மாவட்டத்திலே நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சியின் பயனைத் திருநெல்வேலி, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களிலே கிடைத்த ஈமத்தாழிகளும் சேவற் சிலை முதலியனவும் அங்குக் கண்டெடுக்கப்பட்டன. எனவே பெருங்கற்பண்பாட்டுப் பிரதேசமாய் இலங்கையும் விளங்கியது என்பதும், இங்கு அக்காலத்திலேயே முருக வழிபாடு நிலவியது என்பதும் மறுக்க முடியா உண்மைகளாயின. அன்றியும் இத்தகைய சின்னங்கள் பொன்பரிப்பு (மேல் கரையோரம்), வளவகங்கைப் பள்ளத்தாக்கு (தென்கரையோரம்) கதிரைவெளி (கீழ்க்கரையோரம்), வல்லிபுரம், வரணி (வடகரையோரம்) மாதோட்டம் ஆகிய இடங்களிலும் காணப்பட்டமை கொண்டு, முருக வழிபாடு இலங்கை முழுவதும் மிகத் தொன்மைக் காலத்திலேயே நிலவியது என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது.

கதிர்காமமும் இலங்கையின் பண்டைய மன்னரும் :

இலங்கையின் முதற் சிங்கள மன்னன் விஜயன். இவன் மனைவியான குவேனி என்ற இயக்கி, இவனைக் கொலைசெய்ய முற்பட்ட பொழுது கதிர் காமத்துறை தெய்வமான கந்த குமாரன் விஜயனைக் காப்பாற்றியருளினான் என்ற செய்தி **'இராஜவலிய'** என்ற இலங்கை வரலாற்றிலக்கிய நூலிலே காணப்படுகின்றது. துட்டகாமினி, தன்பகைவனும் தமிழ் மன்னனுமான எல்லாளனை வென்றால் நிறைவேற்றுவதாகக் குறித்த நேர்த்திக்கடனை எல்லாளனைக் கொன்று வெற்றி பெற்றபொழுது நிறைவேற்றிக் கதிர் காமத்துக் கந்தனைத் திருப்தி செய்ததாய்க் **'கந்த உபத'** (கந்தனின் தோற்றம்) என்ற சிங்கள நூல் கூறுவதும் குறிப்பிடத்தக்கதே.

முருகனும் வேடரும் :

முருகனுக்கும் வேட்டுவர்க்கும் எப்பொழுதும் தொடர்பு உண்டு. குறிஞ்சி நிலத்து மக்கள் வேடர்களே. வேடரிடமிருந்து அவன் பெற்ற மனையாட்டியே வள்ளியம்மை. வள்ளி என்பது தூய தமிழ்ப் பெயர். கதிர்காமத்தில் முருகனோடு எழுந்தருளியுள்ள சக்திகளில் ஒருத்தி 'வள்ளியம்மா' என்றே அழைக்கப்படுகின்றாள். ஆக, கதிர்காமத்திற்கும் தமிழர்க்கும் உள்ள பழைமையான தொடர்பும் புலனாகின்றது. இன்றும் வேட்டுவ பரம்பரையினரான கப்புறாளைகளே கதிர்காமக் கோயிலின் பூசகராயும் அறங்காவலராயும் விளங்குவது, வேடர்க்கும் கதிர்காமத்துக் கந்தனுக்கும் உரிய தொடர்பினை வெளிப்படுத்து கின்றது.

முருகனை வழிபடும் முறைமைகள் :

வைதிக மரபு தமிழரிடையே வந்து கலந்த பொழுது முருகன் சுப்பிரமணியனாகி அவன் சிவபெருமானின் திருப்புதல்வனாகவும் கொள்ளப் படலானான். வடமொழிப் புராணக் கதைகள் அவனைப் படிப்படியாக ஆரியத் தெய்வமாக்கி விட்டன. இன்று முருகனைக் கந்தசுவாமி, சுப்பிரமணியன், சரவணபவன், குமாரன் என்ற வடமொழிப் பெயர்களால் அழைக்கும் மரபும் அவனுக்குரிய கோயில் அமைப்பு, பூசைகள் என்பன குமாரதந்திர ஆகம முறையிலே நிகழ்வதும் வழக்கமாய் விட்டன. ஆகம மரபு வழிப்பட்ட முருக வழிபாடு தமிழகத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்து வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கும் குமாரதந்திர முறை வழிபாடு பரவலாய்க் காணப் படுவதொன்றாயினும் இங்கு பிரசித்திபெற்றுள்ள முருகவழிபாடு, பழைமையான தமிழ் மரபு முறையாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர் திருக்கோயில் ஆகிய பிரசித்தி பெற்ற முருகத் தலங்களிலெல்லாம் வாயைத் துணியாற் கட்டி மௌன பூசை செய்யும் முறையே காணப்படுகின்றது. இதனை நோக்கும்பொழுது,

> 'சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
> வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
> ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
> என்னும் அடிகளும்,
> 'ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
> வேலன் தைஇய வெறியயர் களனும்
> காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
> யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
> சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
> மன்றமும் பொதியிலும் கந்துடை
> நிலையினும்
> . . . .
> . . . .
> வேண்டினர் வேண்டியாங் கெய்தினர்
> வழிபட'

என்னும் அடிகளும் திருமுருகாற்றுப் படையினின்றும் எமது நினைவிற்கு வராது போகா. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பூசை, கிரியை முறைமைகளை ஆகம

வழிப்படுத்த அரிதின் முயன்றனர். எனினும் ஆகமமுறைமைக்கும் மடாலய முறைமைக்கும் இடைப்பட்ட பூசை, கிரியைகளே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் நிலவி வருகின்றன.

இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது முருக வழிபாடு மக்களிடையே பிரசித்திபெற்றுள்ளமைக்கு அதன் நெகிழ்ச்சித் தன்மையும் ஒரு காரணம் எனக் கொள்ளலாம். செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன் அன்றோ? அன்றியும் இலங்கையில் முருக வழிபாடு எவ்வளவு பழைமையானது என்பதனை அறிந்து கொள்ளவும், பழைமை வாய்ந்த ஆலயங்களில் நிலவும் வழிபாட்டு முறைகள் எமக்குத் தக்க ஆதாரங்களாகின்றன.

காங்கேசன்துறை, கந்தரோடை, கந்தவனக் கடவை, குமாரபுரம் ஆகியன வடக்கிலங்கையில் முருகன் பெயரோடு சார்ந்த பழம்பெரும் ஊர்களாயுள்ளன. கிழக்கிலங்கையிலே மண்டூர் திருக்கோயில், வெருகல் என்பன இத்தகைய பழைமை வாய்ந்த முருகத்தலங்களாம். திருக்கோயிலுக்குக் கந்த பாணந்துறை (கந்தனது அம்புத் துறை) என்றதோர் பெயரும் உண்டு என்பர். இவ்விடங்களின் மகிமையை எடுத்தியம்பும் வகையிலும் முருகனது வழிபாட்டினைப் புலப்படுத்தும் வகையிலும் பல கல்வெட்டுக்கள், மான்மியங்கள், பிரபந்தங்கள் என்பன பெறப்பட்டுள்ளன.

முருகன் ஆலயங்களின் மீது பாடப்பெற்ற பத்திப்பனுவல்கள்:

முருகனின் அருள்பெற்றுக் கடல் மடை திறந்தாற் போலச் சந்த இசைப் பாடல்களாய்த் திருப்புகழை யாத்தருளியவர் அருணகிரியார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. தமிழகம் எங்ஙனுமுள்ள முருகத்தலங்கள் மீது திருப்புகழ் மாலை பாடிச் சாத்திய இப்பெருந்தகை இலங்கையிலே கதிர்காமக் கந்தன் மீது பதின்மூன்று திருப்பாடல்களும் திருக்கோணமலை முருகன் மீது ஒரு திருப்பாடலும் பாடியுள்ளார். இவை முருக அடியார்களின் பாராயணத்திலே இடம் பெறுவனவாகும். கி. பி. 1478 தொடக்கம் 1515 வரை நல்லூரிலிருந்து யாழ்ப்பாண ராச்சியத்தினை ஆண்ட பரராசசேகரன் காலத்திலே கதிரைமலைப்பள்ளு என்ற பிரபந்தம் ஒன்று பாடப்பெற்றது. பள்ளுப் பிரபந்த வரிசையிலே இதுவே முதலிலே தோன்றியது என ஆய்வாளர் சிலர் உரைப்பர். இதனைப் பாடிய ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் புகழ் வாய்ந்த முருகத் தலங்களான கதிர்காமம், மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, நல்லூர், மண்டூர், வெருகல் திருக்கோயில் ஆகியவற்றில் எழுந்தருளியுள்ள பெருமான்மீது எண்ணக் கணக்கற்ற பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் புலவர்களாலே பாடப்பட்டுள்ளன. இன்றும் இப் பத்திப் பாடல் மரபு தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மேற்குறித்த ஆலயங்களில் நிகழும் மகோற்சவங்களையொட்டிச் செய்திப் பத்திரிகைகைகள் சிறப்பிதழ் வெளியிடுவதும் அவ்விதழ்களிலே இவ்வாலய மகிமைகள் பற்றிய கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவருவதும் வழக்கமாயிருந்து வருகின்றன. இவை தவிர்ந்த சிறிய முருகனாலயங்களுக்கும் பிரபந்தங்களும் பத்திப் பாடல்களும் உள.

கந்தபுராண கலாசாரம் :

இலங்கையிலே சிறப்பாக யாழ்ப்பாணத்திலே கந்தபுராணம் சைவ மக்களிடையே பெரும் பிரசித்தி அடைந்துள்ளது. முருகனாலயங்களிலே மட்டுமன்றிச் சிவாலயங்களிலும் கந்தபுராணம் கந்தசஷ்டி விரதகாலங்களிலும், பிற விரத காலங்களிலும் படிக்கப்பட்டுப் பொருள் கூறும் வழக்கமும் நிலவி வருகின்றது. இவ்வாறு படித்துப் பொருள்கூறுவதைப் புராணபடனம் என்பர். இந்நாட்டிற்கே உரியதான இம்முறைமை பற்றி இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது கட்டுரை ஒன்றிலே பின்வருமாறு கூறுகிறார்கள்.

''சந்நிதி விரோதமின்றி ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லுகின்ற இந்த முறை, யாழ்ப்பாணத்துக்கே உரியதொரு சிறப்புமுறை. இந்த முறை யார் எப்பொழுது வகுத்தமைத்தது என்பது ஆராயத்தக்கது.''

''கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணம் பாடிய காலத்திலேதானே, கந்தபுராண படனம் யாழ்ப்பாணத்தில் தொடங்கிவிட்டது. அப்பொழுதுதானே தனிச்சிறப்பு முறையான புராணபடன முறையும் இங்கே அமைந்துவிட்டது போலும்'' என்று எண்ண இடமுண்டு.

இன்று திருத்தொண்டர் பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியனவும் புராண படனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றபோதிலும்,புராணபடனம் என்றவுடனே கந்தபுராணமே சைவர்கள் நினைவில் வரும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அவர்தம் மருகர் வித்துவசிரோமணி. ச. பொன்னம்பலம்பிள்ளை முதலியோர் கந்தபுராண படனத்தை அத்துணை மகிமைப்படுத்திவிட்டனர். இப்புராண படனங்காரணமாகப் படித்தறியா மிக ஏழைப் பாமரருக்கும் முருகனின் மகிமையை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கந்தபுராணத்தைப் பதிப்பித்தார். அவர் வசன உருவிலே கந்த புராணத்தை எழுதத் தொடங்கி, அஃது அவரின் மாணாக்கரும் சிதம்பரம் சைவப் பிரசாச வித்தியா சாலையின் முகாமையாளருமாயிருந்த ச. பொன்னம்பலம்பிள்ளை அவர்களாலே முற்றுவிக்கப்பட்டு நூலாய் வெளிவந்தது. அண்மையில் இதன் இரண்டாம் பதிப்பு ஆறுமுக நாவலர் சபையினாலே வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. நாவலரவர்களின் நன்மாணாக்கரான காசிவாசி செந்திநாதையர் அவர்கள் கந்தபுராணசாரத்தைத் திரட்டிக் 'கந்தபுராண நவநீதம்' என்றதோர் நூல் எழுதினார்கள். பின்வந்த சைவப் பெரியார் ச. சிவபாதசுந்தரனார் அவர்களும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களும் கந்தபுராண உட்பொருளை விளக்கி நூல்கள் யாத்துள்ளார்கள். இந்நூல்கள் யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம் பெற்றுள்ள முதன்மையைப் புலப்படுத்துகின்றன.

கந்தபுராணம் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளை உருவக வாயிலாக எடுத்தியம்பும் அதிமதுரத் திவ்விய நூல் என்பதால் அதனைக்கற்று அது காட்டும் நெறிமுறையை அணுவும் பிசகாது ஒழுகும் சான்றோர்கள் பலரை யாழ்ப்பாணம் உடைத்தாதலின் இங்கு நிலவுவது **'கந்தபுராண கலாசாரமே'** என்று பண்டிதமணியவர்கள் விதந்துரைத்துள்ளார்கள்.

முருக வழிபாட்டில் இடம்பெறும் சில முக்கிய அம்சங்கள் :

எத்தலங்களிலும் இல்லாத அளவு சிறப்பாக இலங்கையிலே, முருகத் தலங்களிலே மகோற்சவங்கள் நிகழ்வது வழக்கம். பல்லாயிரக்கணக்கான முருகனடியார்கள் அக்காலங்களிலே குறித்த ஆலயத்திற்கு வந்து பத்திபரவசராய் முருகப் பெருமானை வள்ளி தெய்வானை சமேதராய் வழிபட்டு உய்வர். தமிழ்ச் சைவர் மட்டுமன்றி பௌத்தர்களான சிங்கள மக்களும் இவ்விழாக்களிற் கலந்து வழிபாடு ஆற்றுவது உண்டு. (கதிர்காமம் இலங்கையர்க்கு மட்டுமன்றித் தமிழகத்துச் சைவருக்கும் யாத்திரைத் தலம்). மகோற்சவத்திற்குரிய தலத்தின் சூழல் எங்கும் செப, தவ, விரதாதிகளின் புனிதம் புலப்பட்டுக் கொண்டே இருக்கும். சுவாமி திருவுலா வருகையில், பஜனைக் குழுக்கள் தொடர்ந்து கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுறைகளை ஓதிச் செல்லும். அங்கப் பிரதட்சணம், அடியழித்து வணங்கல், காவடி எடுத்து ஆடல், கர்ப்பூரச் சட்டி சுமந்து செல்லல், கலைகொண்டு ஆடல் ஆகிய வழிபாடுகளை அடியார்கள் நிகழ்த்துவர். தீக்குளிப்பும் கதிர்காமம் முதலிய தலங்களில் நிகழ்வதுண்டு. செதில்குத்திக் காவடி, ஆட்டக்காவடி, பாட்டுக்காவடி என்பவற்றோடு தூக்குக் காவடி, துலாக்காவடி முதலான பயங்கர நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் வன்தொண்டர்களுக்கும் குறைவிராது. ஆலயங்களின் சூழல்களில் மட்டுமன்றித் தொலை தூரங்களிலும் தண்ணீர்ப்பந்தல் வைத்து வருகின்ற அடியார்களை உபசரிக்கும் சிவபுண்ணியம், அன்னதானம் ஆகியனவும் இடம் பெறும். மதுமாமிச பட்சணம் இக்காலத்தில் பலரால் கைவிடப்பட்டு விரதம் அனுட்டிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதே. ''முருகா முருகா'' என்ற கோஷம் இடைவிடாது ஆலய வீதிகளிலே ஒலிப்பது பத்திக் கனிவினையூட்டும் நிகழ்ச்சியாகும்.

முருகனுக்குரிய கார்த்திகை நட்சத்திரங்களின்போதும், சிறப்பாகக் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தின்போதும், மாவிளக்கிட்டு வழிபாடு நிகழ்த்துவர். கந்தசஷ்டி ஆறு தினங்களிலும் சங்கற்பம் செய்துகொண்டு முருகனாலயங்களிலேயே தங்கியிருந்து உபவாசம் மேற்கொண்டு தமது ஆன்மாவைப் புனிதம் செய்வோரும், இட்டபூர்த்தியை எதிர்நோக்குபவரும் இலங்கையிலே எண்ணிலர். கலியுகவரதனாகிய முருகனையே சரணாகதியடைந்து நலந்தீங்கில் அவனை மறவாதிருக்கும் சைவமக்களே இந்நாட்டில் பெரும்பான்மையர் என்று கூறின் அது மிகையன்று.

முருகன் திருநாமங்கள் பெறும் இடம் :

இன்று பெரும்பாலான மக்கள் கருத்துணர்வோ குறிக்கோளோ இன்றி ஓசைச் சிறப்பினை மட்டுமே நோக்கித் தம் பிள்ளைகளுக்குப் பெயர்கள் வைப்பதை நாம் பரவலாகக் காண்கிறோம். இவர்களை ''நீங்கள் வைத்துள்ள பெயரின் பொருள் உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டால் அநேகமாகப் பொருள் தெரியாது விழிப்பதும் அனுபவ உண்மையாகும்.

ஆனால் எம்முன்னோர் தம் பிள்ளைகளுக்கு இறைவன், இறைவியோடு தொடர்புள்ள திருநாமங்களையே சூட்டி வந்தனர். இவ்வாறு சூட்டுவதற்கு உளவியல் ரீதியான காரணமும் இருந்தது. பெற்றோரும் மற்றோரும் பிள்ளையின் பெயரைச் சுட்டி அழைப்பதால் அடிக்கடி இறை நாமத்தைக் கூறும் புண்ணியம் அவர்களுக்குக் கிட்டுகிறது; பெயர் சூட்டப்பட்டவரும் தமது பெயரை எழுதும்போது அந்தப் புண்ணியத்தைப் பெறுகிறார். பெயருக்கேற்ற உத்தமராய் வாழ முயல்வதும் நிகழல்கூடும். அன்றியும், தம் பெயர்மூலம் தமது சமயத்திலே ஈடுபாடும் குறித்த தெய்வத்திலே பத்தியும் வளரவும் வாய்ப்பு உண்டாகும்.



VEL

Moola / Utsava moorthy at Nallur Kandaswamy Temple, Jaffna.

Photo : S. Cunjithapatham

இலங்கையிலே சைவ மக்கள் சூட்டிக்கொண்டுள்ள பெயர்களை எடுத்து ஆராய்கையில் இப்பெயர்களிற் பெரும்பாலான, முருகனைச் சார்ந்தவையாகவோ அவனோடு தொடர்புடையனவற்றைச் சார்ந்தவையாகவோ விளங்கல் காணலாம். இங்கு இத்தகைய பெயர்கள் சிலவற்றை வகை செய்து காட்டுகின்றேன். (இது முழுமையான பட்டியல் அன்று என்பதையும் சுட்டிக் காட்ட விழைகின்றேன்.)

முருகனின் திருநாமங்கள் பெயர்களாய் அமைந்துள்ள வகை

ஆண்கள்

முற்காலம் :

1. சுப்பிரமணியம், கந்தப்பிள்ளை, கந்தப்பு, கந்தையா, முருகையா, முத்தையா, முத்துவேற்பிள்ளை, சுப்பையா, ஆறுமுகம், சண்முகம், வேலாயுதம், வேலாயுதபிள்ளை, முத்துச்சாமி, குமாரசாமி, முத்துக்குமாரசாமி, கந்தசாமி, பழனிச்சாமி, வேலுச்சாமி, சரவணமுத்து, சிவகுரு, குமரகுரு, கார்த்திகேசு, கதிர்காமு, கதிர்காமத்தம்பி, மயில்வாகனம், சூரசங்காரம் இன்ன பிற.

இக்காலகட்டத்தில் முருகன், வேலன், கந்தன் முதலான திருநாமங்களைத் தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கப்பட்டிருந்த மக்களே தமக்குரிய பெயர்களாகக் கொண்டிருந்தமையும் உயர்சாதியார் எனத் தம்மைக் கருதியோரின் பெயர்கள் பெரும்பாலும் அஃறிணை முடி கொண்டுள்ளமையையும் அவதானிக்கலாம்.

இடைக்காலம் :

2. இக்காலத்தில் அஃறிணை முடிவுகளுக்குப் பதில் 'அன்' ஈறு பெறப் பெயர்கள் மாற்றப்படுகின்றன. சண்முகம், ஆறுமுகம் என்பவற்றோடு ராசா, சாமி, நாதன் முதலான விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. உ-ம்: குருநாதன், சிவகுருநாதன், சண்முகராசா (ராசன்) ஆறுமுகராசா, சண்முகநாதன், ஆறுமுகநாதன், மயில்வாகனன், ஆறுமுகன், வேலாயுதன், கதிர்காமநாதன், கதிரைமலைநாதன், செந்திநாதன், அருணகிரிநாதன், சிவகுருநாதன், குகநாதன், மயூரநாதன், குருபரன், வடிவேல், முத்துவேல், சித்திரவேல் (வேல் என்பது வேலு எனவும் அமையும்), சூரசங்காரன், நல்லைநாதன், திருச்செந்தூரன், கார்த்திகேயன், கதிரேசன் இன்ன பிற.

இக்காலம் :

3. (அ) சிறிய சுருக்கமான பெயர்களே இக்கால நாகரிகம். இந்நாகரிகத்தினிடையேயும் முருகனின் பெயர்களே பிரசித்தி பெற்றிருத்தல் காணலாம். உ-ம்: குகன், குமரன், கந்தன், சரவணன், முருகன், ஸ்ரீமுருகன், செந்தூரன், விசாகன், இன்ன பிற.

இக்கால நீண்ட பெயர்கள் :

(ஆ) சரவணபவன், செந்தில்நாதன் செந்திற்குமரன், சேவற்கொடியோன், திருமால் மருகன், சிவகுமாரன் (இப்பெயர் விநாயகரையும் குறிக்கும்) செந்தூர்ச்செல்வன், செந்தில் குமரன், நல்லைக் குமரன் இன்ன பிற.

பெண்கள்

முற்காலம் :

வள்ளிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, வள்ளி, தெய்வி,

இடைக்காலம் :

வள்ளிநாயகி, தேவநாயகி, தெய்வநாயகி.

இக்காலம் :

ஸ்ரீவள்ளி, ஸ்ரீதெய்வி, வள்ளி, தெய்வி.

இவற்றிலிருந்து இந்நாட்டில் முருகப்பத்தியின் சிறப்பினை ஓரளவு அறிந்து கொள்ளலாம். அன்றியும்,

"காலம் என்பது கறங்குபோற் சுழன்று
கீழது மேலாய் மேலது கீழாய்
மாறிடும் தோற்றம் என்பது மறந்தனை"

என்று மனோன்மணீய அடிகளின் உண்மையையும் உணர்ந்து கொள்ளலாம்.

இதுவரை கூறியவற்றிலிருந்து இலங்கைச்சைவ மக்களிடையே பெரும்பாலும் முருக வழிபாடே நிகழ்ந்து வருகின்றது என்பதற்கு ஐயமில்லை.

இக்கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்களும் சஞ்சிகையும்

1. ஆறுமுகநாவலர் (1979) — இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.
2. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966)—தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம்.
3. உடுவில் கிழக்கு ஸ்ரீகற்பகப் பிள்ளையார் கும்பாபிஷேகச் சிறப்பு மலர் **'இலங்கையில் முருக வழிபாடு'**—கட்டுரை (1979)— க. சொக்கலிங்கம் (சொக்கன்)
4. பரிபாடல் சொற்பொழிவுகள்— (1961) — கழக வெளியீடு.
5. A Short History of Hinduism in Ceylon 1964 — C. S. Navaratnam

சீரார் பவளங்கால் முத்தம் கயிருக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ !

— திருவாசகம்



இலங்கையில் இந்து சமயம்

முன்னாள் வித்தியாதிபதி கி. லக்ஷ்மண ஐயர்

இலங்கையில் இந்து சமயம் மிக நீண்ட வரலாற்றையுடையது. உலகில் இந்து மதம் நிலவும் வேறு எந்த நாட்டிலும் இல்லாத தனியம்சங்கள் இங்கு காணப்படுகின்றன.

திருநீற்றின் மகிமையைக் கூற வந்த திருஞானசம்பந்த சுவாமிகள் இலங்கை வேந்தனைக் கருதப்பட்ட ''இராவணன் மேலது நீறு'' எனப் பாடியதன் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட இதிகாச காலத்திலேயே இலங்கையிலே நிலவிய சிவ வழிபாட்டு மகிமையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

வரலாறு, அகழ்வாராய்ச்சி, ஆலயங்கள், விழாக்கள், இலக்கியம், கல்வி இன்னும் என்ன என்ன துறைகளை எடுத்து ஆராய்ந்தாலும், மிகப் பழைய காலத்திலே சிங்கள மக்களே விஷ்ணுவை இலங்கையின் காத்தற் கடவுளாகக் கொண்டு விஷ்ணுவுக்குத் தென்னிலங்கையின் கோடியாகிய தேவந்துறையிலே அற்புதமான ஆலயத்தை அமைத்தது தொட்டு, கல்வித்துறையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துப் பண்பாட்டுக்கென அமைக்கப்பட்ட பீடம்வரை இலங்கையிலே இந்துசமயம் உலகில் வேறெங்கும் காணாத பல தனியம்சங்களைக் கொண்டுள்ளது என்பது புலனாகும்.

நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களைக் கொண்ட இந்திய நாட்டிலேகூட ஒரு பல்கலைக்கழகத்திலாவது இந்துப் பண்பாடு என்ற பெயரில் பீடமெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. காசிப் பல்கலைக்கழகத்திலே மட்டும் இதுவரை இருந்த சைவ சித்தாந்த பீடத்தைக் கூட தத்துவத்துறையின் ஓர் அங்கமாக மாற்றி விட்டார்கள்.

இந்து சமயம் என்னும் தலைப்பில் இக்கட்டுரையைத் தொடங்கும்போது சென்னையில் நடைபெற்ற இந்துமத மாநாட்டிலே வரவேற்புரை நிகழ்த்திய பேராசிரியர் டி. எம். பி. மகாதேவன் வெளியிட்ட கருத்தொன்றினை இங்கு குறிப்பிடுவதும் பொருத்தமாகும். ''ஏனைய நாடுகளில் வாழும் எங்கள் சகோதரர்கள் எங்கள் பழம் பாரம்பரியத்திலே வைத்திருக்குமளவு நம்பிக்கையை இந்திய நாட்டிலே வாழும் நாம் வைத்திருக்கிறோமா என்பதையிட்டு ஐயப்பட வேண்டியிருக்கிறது.'' இதுவே பேராசிரியர் வெளியிட்டகருத்து. இவ்வாறு பேராசிரியர் கூறியதன் மூலம் இந்து மதத்தின் தாயகமாகக் கருதப்படும் இந்தியாவிலும் பார்க்க ஏனைய நாடுகளிலே இந்து மதத்தின் பிடிப்பு மிகவும் இறுக்கமாகவுள்ளது என்ற ஒரு தொனியை வெளியிட்டு ஏனைய நாடுகளைப் பாராட்டி வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றார். பேராசிரியர் வெளியிட்ட கருத்து இலங்கையர்களாகிய எமக்கும் மகிழ்ச்சி தருவது மட்டுமன்றிப் பெருமையையும் தருகிறது.

கல்வித்துறையில் தனிச்சிறப்பு :

கல்வித்துறையில் இலங்கைக்கேயுரிய தனிச்சிறப்பையும் குறிப்பிடலாம். உலகம் முழுவதிலும் இலங்கையில் மட்டுமே சமய பாடம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதனால் இந்து மாணவர் அனைவரும் இந்து சமயத்தைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சமயத்துக்குப் பெயர் பெற்ற இந்திய தேசத்தில் கூட அது மதச்சார்பற்ற நாடு என்ற காரணத்தால் இத்தகைய வாய்ப்புக் கிடையாது.

இலங்கைக்குச் சிவபூமி என்ற பெயர் :

ஈஸ்வரங்கள் என்ற பெயரில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டே நிலவி வந்தவை என்ற பெருமைக்குரிய சிவஸ்தலங்களாக ஐந்தைக் குறிப்பிடுவது வழக்கம். இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் என்பனவே அந்த ஐந்து சிவஸ்தலங்களுமாகும். இராமேஸ்வரம் தவிர்ந்த

ஏனைய நான்கும் இலங்கையில் இடம் பெற்றுள்ள சிறப்பொன்றே இலங்கையில் இந்து சமயத்தின் பழமைக்கும் பெருமைக்கும் போதிய எடுத்துக் காட்டாகும். இவற்றுள் முன்னேஸ்வரமே ஏனைய எல்லாவற்றையும்விட மிகப் பழையது என்பது அதனுடைய பெயரிலிருந்தே புலப்படுகின்றது என்பது அறிஞர் சிலருடைய கருத்து.

இந்த நான்கு புராதன சிவஸ்தலங்களுள் நகுலேஸ்வரம் வட இலங்கையிலும், திருக்கேதீஸ் வரமும், முன்னேஸ்வரமும், மேற்கிலங்கையிலும், கோணேஸ்வரம் கிழக்கிலங்கையிலும் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, வட மத்தியில் தான்தோன் றீஸ்வரமும், தென்கோடியில் தேவந்துறையில் சந்திரசேகரம் என்ற பெயரில் ஒரு சிவஸ்தலமும் குறிப்பிடத்தக்கவை.

தேவந்துறையிலே சந்திரசேகரம் என்ற சிவா லயத்தைக் கட்டுவித்தவன் விஜயன் எனவும் போர்த்துக்கேயரால் அவ்வாலயம் அழிக்கப்பட்ட தெனவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு மிகப் பழங்காலத்திலேயே எல் லாத்திசைகளிலும் முக்கியமான சிவஸ்தலங்கள் இருந்த காரணத்தாற் போலும் திருமந்திரத்தை இயற்றிய திருமூலர் தமது திருமந்திரத்திலே நமது இலங்கையைச் ''சிவபூமி'' எனக் குறிப்பிட் டுள்ளார்.

நாடு முழுவதும் இந்துசமயம் :

இதுவரை உதாரணத்துக்காக இரண்டொரு தனிச்சிறப்புக்களைக் குறிப்பிட்டோம். இனி, மேலே நாம் குறிப்பிட்ட ஒவ்வொரு துறையை யொட்டியும் சிற்சில கருத்துகளைத் தெரிவிப் போம்.

வரலாற்றையொட்டி இலங்கையில் இந்துசமய வரலாற்றை இதிகாச காலம், ஆதிக்குடிகள் காலம், விஜயன் முதல் தேவநம்பியதீசன் வரை யுள்ள சிங்கள இந்து அரசர்கள் காலம், பௌத் தம் வந்ததன்பின் ஏற்பட்ட சிங்கள பௌத்த அரசர்கள் காலம், சோழ பாண்டிய அரசர்கள் காலம், போத்துக்கேய ஒல்லாந்தர் காலம், யாழ்ப் பாண அரசர் காலம், பிரித்தானியர் காலம், தற் காலம் எனப் பலவகையாகப் பிரிக்கலாம்.

எவ்வாறாயினும் மக்கள் இந்த நாட்டில் வாழத்தொடங்கிய காலந்தொட்டுப் பௌத்தம் இந்த நாட்டுக்கு வந்த நாள்வரை இந்த நாடு முழுவதும் வழங்கி வந்தது இந்துமதமே எனக் கொள்வது தவறாகாது.

இந்நாட்டு ஆதிக்குடிகளாகக் கருதப்படும் வேடர்கள்கூட மலைத் தெய்வத்தையும் கடல் தெய்வத்தையும் வழிபட்டு வந்தனர் என ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளனர். முருக னும், திருமாலுமே இங்கு குறிப்பிடப்படும் மலைத் தெய்வமும் கடற்றெய்வமும் எனக் கொள்ள இட முண்டு. பௌத்தம் இலங்கைக்கு வரும்வரை இலங்கையை ஆண்ட அரசர்கள் இந்து சமயத் தைப் பின்பற்றியவர்களே என்பது தெளிவு. அவர்களுட் பலர் பெரும் சிவாலயங்கள் பலவற் றைக் கட்டுவித்தார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

பௌத்தம் இலங்கைக்கு வந்தபின் பௌத்த மதத்தைத் தழுவிய சிங்கள அரசர்களுள் மகா சேனன் தவிர ஏனையோர் யாவரும் இந்துமதத் துக்கும் பலவித ஆதரவு கொடுத்திருக்கிறார்கள் என்பதையும், சிவாலயங்கள் பலவற்றைக் கட்டு வித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். இவர்களுள் 2ஆம் விக்கிரமபாகு, 2-ஆம் கஜபாகு, 1ஆம் பராக்கிரமபாகு, 1ஆம் ராஜ சிங்கன், புவனேகபாகு போன்றவர்கள் குறிப் பிடத்தக்கவர்கள்.

1ஆம் பராக்கிரமபாகு 13 இந்து ஆலயங் களைக் கட்டுவித்தான் எனவும், பழுதடைந்த 79 ஆலயங்களைத் திருத்திப் புதுப்பித்தான் எனவும் கூறப்பட்டுள்ளது. 1ஆம் ராஜசிங்கனே கதிர்காம முருகன் ஆலயத்தைக் கட்டுவித்தான் எனவும், அவன் தன் ஆட்சிக்காலத்திலே 48 பத்தினிக் கோயில்களை அதாவது கண்ணகி அம்மன்கோவில் களைக் கட்டுவித்தான் எனவும் கூறப்படுகின்றது. 1450இலே நல்லூரிலே முருகனுக்கு ஒரு கோயில் கட்டுவித்தவன் புவனேகபாகு.

இவையாவும் இந்துமதத்தின் சிறப்புக்கும் அக்காலச் சிங்கள பௌத்த அரசர்களின் பரந்த மனப்பாங்குக்கும் நல்ல எடுத்துக்காட்டுகளா கும். இவை பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரி யவை. சிங்கள அரசர் பலர் தமிழக இளவரசி யரை மணஞ் செய்துகொண்டமை, பிராமணர் பலர் சிங்கள அரசர்களுக்கு ஆசிரியர்களாகவும் ஆலோசகர்களாகவும் அமர்த்தப்பட்டமை, சமஸ் கிருதக் கல்விக்கு இடமளிக்கப்பட்டமை போன்ற பல காரணங்களே அக்கால அரசர்கள் இந்துசம யத்திலே ஈடுபடவும், அதனைப் பேணிப் பாது காக்க முன்வரவும், இந்து கலாசாரங்களையே தாமும் பெரும்பாலும் அனுட்டிக்கவும் செய் தவை எனலாம்.

சிங்கள அரசர்கள் இந்துமதத்துக்கு ஆதரவு நல்கியது போலவே தமிழரசர்கள் ஆட்சி செய்த

காலங்களில் பௌத்த மதத்துக்கு நீதி வழங்கி, வேண்டிய ஆதரவுகளையும் நல்கியுள்ளார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இழைத்த இன்னல்கள் :

இவ்வாறு சிங்கள அரசர்கள் ஆண்ட காலமாயினும் சரி, தமிழரசர்கள் ஆண்டகாலமாயினும் சரி, பல நூற்றுண்டுகளாக இலங்கையிலே சிறப்புற்று விளங்கி வந்த இந்துசமயத்துக்கு, என்று போர்த்துக்கேயர் இந்த நாட்டிலே கால் வைத்தனரோ அன்று தொடங்கியது அதன் துன்ப காலம்.

போத்துக்கேயரும் அவருக்குப்பின் வந்த ஒல்லாந்தரும் இந்துமதத்தை இந்நாட்டில் இருந்து அழித்தொழிப்பதிலே காட்டிய வேகத்தையும் அதன்பொருட்டு அவர்கள் இழைத்த கொடுமைகளையும் நோக்கும்போது இந்துசமயம் இந்நாட்டிலே மீண்டும் ஒரு போதுமே தலையெடுக்க முடியாமல் முற்றுக அழிந்துபோயிருக்குமென்றே சொல்ல வேண்டும்.

அவ்வாறு அழிந்தொழியாது தப்பிப் பிழைத்தமைக்கு இரு வித காரணங்களைக் கூறலாம். ஒன்று இந்து மதத்தின் மகிமையும் உள்ளார்ந்து அமைந்துள்ள அதன் ஜீவ சக்தியும்; மற்றது அதனை அனுட்டித்து வந்தவர்களுக்கு அதன்பாலிருந்த தீவிரமான பற்றும் நம்பிக்கையும் என அனைத்துலக இந்துமத நாட்டிலே பேராசிரியர் மகாதேவன் குறிப்பிட்டவை எனக் கொள்ளலாம்.

அகழ்வாராய்ச்சிகள் :

இலங்கையில் இந்துமத வரலாற்றைப் பற்றிய கருத்துகளை இம்மட்டில் நிறுத்திக்கொண்டு, இந்துமத அகழ்வாராய்ச்சிகள் பற்றி இரண்டொரு குறிப்புகள் தெரிவிப்போம்.

காலத்துக்குக் காலம் இலங்கையிலே பற்பல இடங்களிலே இந்துமத சின்னங்களும் விக்கிரகங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில மிகப் பழங்காலத்தவை. பல போத்துக்கேயர் இந்துக் கோயில்களை அழித்தபோது மண்ணுள்ளே புதைந்தவையும் புதைக்கப்பட்டவையுமாகும். திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், பொலநறுவை ஆகிய இடங்களிலே கண்டெடுக்கப்பட்டவை குறிப்பிடத்தக்கவை. 1908-ஆம் ஆண்டு பொலநறுவையிலே கண்டெடுத்த சோமாஸ்கந்த மூர்த்தி, சிவகாமி, நடராஜர் ஆகியன மிக அற்புதமானவை. இவ்வகழ்வாராய்ச்சிகள் பற்றியும் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களின் அமைப்புகள், அவற்றின் காலம், அவற்றை அமைத்தோர் பற்றியும் அறிஞர் பலர் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டுள்ளனர்.

ஆலயங்கள் :

இனி, இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களையும், விழாக்களையும் எடுத்துக்கொள்வோம்.

வடகோடியில் உள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தொடக்கம் தென்கோடியிலுள்ள கதிர்காமம் வரையும், வடமேற்கில் திருக்கேதீஸ்வரம் முதல் தென் கிழக்கே கோணேஸ்வரம் திருக்கோவில் ஈறுக இலங்கை எங்கணும் பெரியதும் சிறியதுமாக எத்தனையோ கோவில்கள் உள்ளன. இவை சிவன் கோவில், அம்மன் கோவில், பிள்ளையார் கோவில், முருகன்கோவில், பெருமாள் கோவில் எனப் பல வகையின. இவற்றுள் எத்தெய்வத்துக்குரிய கோவில்கள் எண்ணிக்கையில் மிகக்கூடியவை என்பதைக் கணக்கிட்டுச் சொல்வது சிரமமான காரியம்.

இக்கோவில்கள் தமிழகத்திலுள்ளவை போலப் பிரமாண்டமான கோபுரங்களையோ, விமானங்களையோ கொண்டிராதபோதும், இவற்றுள் பல நல்ல வேலைப்பாடுகளும் அழகிய தோற்றமும் உடையன. பல கோவில்களிலுள்ள மூலமூர்த்தி, நந்தி முதலியன நல்ல கலையும், கலைநுட்பமும், பொருந்தியனவாயுள்ளன. இவற்றுள் பல இந்த நூற்றுண்டுத் தொடக்கத்திலும் சென்ற நூற்றுண்டு இறுதியிலும் தமிழகத்திலுள்ள தேவகோட்டை போன்ற இடங்களிலுள்ள சிற்பிகளால் செய்யப்பட்டு இங்குக் கொண்டு வரப்பட்டவை.

விழாக்கள் :

கோவிலிலே விழாத் தொடங்கிவிட்டால் ஊர் முழுவதிலுமே பரபரப்பு ஏற்பட்டுவிடும். ஊர் முழுவதுமே புனிதமாகி விடும். விழாக்காலம் முடியும்வரை மக்கள் விரதம் அனுட்டிப்பதும், மாமிச உணவை முற்றுகத் தவிர்த்து, சைவ போசனத்தைக் கைக்கொள்வதும் வழக்கமாகும்.

யாழ்ப்பாணத்துக் கோவில்களில் வருடவிழாக்கள் சித்திரை மாதத்திலே தொடங்கி ஆவணி மாதத்தோடு முடிந்துவிடும். இந்தமாதங்களைத் தெரிந்ததற்குரிய காரணங்கள் ஆராயத்தக்கன. பெரும்பாலான கோவில்களில் 10 நாள் விழாவே நடைபெறும். சுதுமலை அம்மன் கோவில் போன்ற கோவில்களில் 18 நாள் திருவிழாவும், மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய முருகன் கோவில்களில் 25 நாள் விழாவும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. கடைசி நாள் தீர்த்தத் திருவிழாவும் அதற்கு முதல் நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறுவது யாவரும் அறிந்தது.

பெரும்பாலான கோவில்களில் ஒரு தேரும், சுதுமலை அம்மன் கோவில் போன்ற கோவில்களில் மூன்று தேர்களும், மாவிட்டபுரத்தில் 5 தேர்களும் தேர்த்திருவிழாவில் வீதிவலம் வருகின்றன. இந்த வித்தியாசங்கள் ஆரம்பத்திலே எப்படித் தொடங்கின என்பன தெரியவில்லை. அவ்வக் காலத்தில் அவ்வவ்வூர்களிலிருந்த வசதிகள் தான் காரணமோ அல்லது வேறு காரணங்களும் உண்டோ என்பது தெரியவில்லை. சில கோவில்களில் தீர்த்தம் பௌர்ணமி தினத்திலும், சில கோவில்களில் தீர்த்தம் அமாவாசை தினத்திலும் நடைபெறுவதையும் குறிப்பிட வேண்டும்.

கொடித்தம்பம் உள்ள கோவில்களிலேகொடியேற்றித் தினமும் கொடித்தம்பத்துக்கும் முறையாகப் பூசைகள் நடைபெறும். கொடித்தம்பம் இல்லாத கோவில்களில் ''அலங்காரத் திருவிழா'' என்ற பெயரில் கொடியேற்றுமலே 10 நாட்கள் விழாக்கள் நடைபெறும். இவ்விழாக்களின் உட்கிடைகளையும் தத்துவக் கருத்துக்களையும் சைவ சித்தாந்த அடிப்படைகளோடு இணைத்துக் காலஞ்சென்ற அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் தாம் எழுதிய மகோத்ஸவ விளக்கம் என்னும் நூலிலே விளக்கியுள்ளார்.

ஆலயங்களில் நுண்கலைகள் :

கோவில்களே பலவித கலைநுட்ப வளர்ச்சிக்கும் வழிகோலுவனவாக அமைந்துள்ளன என மேலே குறிப்பிட்டோம். எழுந்தருளிய விக்கிரகங்கள் வீதி வலம் வருமுன் அவற்றுக்குச் செய்யப்படும் அலங்காரத்தைச் ''சாத்துப்படி'' எனக் குறிப்பிடுவது வழக்கம். இந்த அலங்காரமும் ஒரு கவின் கலையேயாகும்.

அலங்காரத்தைப் பற்றிப் பேசும்போது நல்லூர்க் கந்தசாமி கோவில் தண்டிகைத் திருவிழாவிலே தண்டிகையிலேசுப்பிரமணிய சுவாமி வீதி வலம் வரும் அழகையும் தேர்த்திருவிழாவிலே தேரில் ஏற வரும்போதும் தேரைவிட்டு இறங்கி வரும்போதும் ஆறுமுக சுவாமியின் அழகையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். அவற்றைக் கண்டவர் எவரையும் அவை கவராமல் விடா. நம் நாட்டிலே 'சாத்துப்படி' கட்டுவதிலே பிரபல்யம் அடைந்த பலர் இருந்திருக்கிறார்கள்.

கோவில் விழாக்களிலே மேள வாத்தியம் முக்கிய இடம் பெறுவதைச் சொல்லத் தேவையில்லை. இதன் விளைவாக நம் நாட்டிலே தவில் வாசிப்பதிலும், நாதஸ்வரம் வாசிப்பதிலும் அதிவிற்பன்னரான ஒரு பரம்பரையே இணுவில், அளவெட்டி போன்ற கிராமங்களில் ஏற்பட்டு வருவதையும், அவ்விற்பன்னருட் சிலர் உலகப் புகழ் பெற்று நம் நாட்டுக்கே பெருமை தேடித் தருவதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

விசேஷ விழாக்கள் :

வருடாந்த விழாக்களை விட, சிற்சில கோவில்களில் மட்டுமே சிறப்பாக இடம்பெறும் சில விழாக்களையும் குறிப்பிட வேண்டும். நல்லூர்ச் சிவன்கோவிலில் யமசங்காரம், வண்ணை பெருமாள் கோவிலில் உறியடி உற்சவம், ராவண சங்காரம், முன்னேஸ்வரத்தில் நவராத்திரி விழா ஆகியன நினைவுக்கு வருகின்றன. காலஞ்சென்ற சோமாஸ்கந்தகுருக்கள் என்பவர் முன்னேஸ்வரத்திலே நவராத்திரி நாள்களிலே அம்மனுக்குப் பூசை செய்வது பார்ப்பதற்கு ஒரு தனி அழகாக இருக்குமெனப் பலர் சொல்வதுண்டு.

அர்ச்சகர்கள் :

இந்த இடத்திலே சைவாலயங்களிலே பணிபுரியும் அர்ச்சகர்களைப் பற்றியும் இரண்டொரு கருத்துக்கள் தெரிவிப்பது பொருத்தமாகும். அர்ச்சகர்களின் சிறப்பைப் பொறுத்ததே இந்து சமயத்தின் மதிப்பும் வளர்ச்சியும் என்று கொண்டாற் கூட மிகையாகாது. அறிவு, ஆசாரம், பக்தி ஆகியன நிரம்பிய அர்ச்சகர்கள் பலர் நம் நாட்டிலே இருந்திருக்கின்றனர். இப்போதும் இருக்கின்றனர். இவர்களுடைய சமய அறிவையும் கிரியைகளில் இவர்களுக்குள்ள திறமையையும் விருத்தி செய்வதன் பொருட்டுக் காலத்துக்குக் காலம் பெரியோர் பலர் பல நன்முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றனர். அவற்றுள் காலஞ்சென்ற சதாசிவ ஐயரும், வித்துவான் கணேச ஐயரும் சுன்னாகத்தில் நடத்திய பிராசீன பாடசாலையும் அகில இலங்கை இந்து மாமன்றம் இப்போது யாழ்ப்பாணத்தில் நடத்திவரும் குருகுலமும் குறிப்பிடத்தக்கவை.

இக் குருகுலம் முன்பு திருக்கேதீஸ்வரத்தில் நடத்தப்பட்டு இப்போது யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. நம் நாட்டிலே இந்துமத வளர்ச்சிக்கு இக் குருகுல விருத்தி எவ்வளவு முக்கியமானது என்பதைப் பலர் இன்று போதிய அளவு உணராமலிருக்கக் கூடும். ஆயினும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்து கலாசார அமைச்சு இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

சில தனி அம்சங்கள் :

நம் நாட்டு ஏனைய முருகன் கோவில்களிலே காணாத ஓர் அம்சத்தைத் தெற்கே கதிர்காமத்திலும், வடக்கே செல்லச் சந்நிதியிலும், கிழக்கே

மண்டூர் கந்தசுவாமி கோயிலிலும் காண்கின்றோம். இம்மூன்று இடங்களிலும் பூசை செய்யும் பூசாரிகள் மந்திரம் சொல்லாது தங்கள் வாய்களைத் துணியாற் கட்டிக் கொண்டு பூசை செய்கின்றனர். இதன் தொடக்கம் ஆராய்ச்சிக்கு உரியது.

அம்மன் கோயில்களுள் நம் நாட்டிலே பல இடங்களிலே கண்ணகி அம்மன் கோவில்கள் மிகுதியாக உள்ளன. கண்ணகி தோன்றிய தமிழ் நாட்டை விட நம் நாட்டிலேயே கண்ணகிக்கு அதிகமான கோவில்கள் இருக்கின்றன என்று கூடச் சொல்லலாம். சில கண்ணகி அம்மன் கோவில்களிலே நடைபெற்று வருகின்ற மாற்றம் ஒன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆகம விதிப்படி கண்ணகியை உத்ஸவ மூர்த்தியாகக் கொள்ள இடமில்லை, என்ற காரணத்தால் சில கண்ணகி அம்மன் கோவில்களிலே கண்ணகி அம்மனையும் வைத்துக்கொண்டு ராஜராஜேஸ்வரி அம்மனையே மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இக்கோயில்களின் பெயர் தொடர்ந்து கண்ணகி அம்மன் கோவிலென்றே இருந்த போதும் மூலமூர்த்தி ராஜராஜேஸ்வரியேயாகும்.

விஷ்ணு ஆலயங்கள் :

நம் நாட்டு விஷ்ணு கோவில்களைப் பற்றியும் ஒன்று சொல்ல வேண்டும். இந்தியாவிலே வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்தவர்கள் பெருந்தொகையினராக இருக்கின்றனர். அவர்கள் தொகைக்கேற்ப அங்கு விஷ்ணு ஆலயங்களும் பெருந்தொகையாக இருக்கின்றன. ஆனால் இலங்கை இந்துக்களுள்ளே வைஷ்ணவரே இலர் என்று கூடச் சொல்லுமளவுக்கு மிகச் சிலரே உளர். இருந்தும் விஷ்ணு ஆலயங்கள் பல இருக்கின்றன. இதிலே விசித்திரம் என்னவெனில் இவ் விஷ்ணு ஆலயங்களிலே பூசை செய்யுயும் அர்ச்சகர்களும் சைவர்கள். அங்கு சென்று வழிபடுவோரும் சைவர்கள். இலங்கையிலே இந்து சமயத்தில் அன்றாட வாழ்விலும் சமய நிலையிலும் சைவத்துக்கும், வைஷ்ணவத்துக்கும் அதிகவேற்றுமை பாராட்டப்படுவதில்லை என்பதையே இந்தநிலைமை எடுத்துக்காட்டுகின்றது.

தலைநகர் ஆலயங்கள் :

இலங்கையின் தலைநகரம் கொழும்பு. இங்கு பல்வேறு இன மக்கள் வாழ்கின்றார்கள். பௌத்தர் தர்கள், இந்துக்கள் முஸ்லீம்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்க இனத்தவர்கள்.

கொழும்பில் இந்துக் கோயில்கள் கணிசமான அளவு உள்ளன. இந்து சமய விழாக்களும் பெருமளவு நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக ஆடி மாதத்தில் வேல்விழா என்று ஒரு பெரிய விழா நடைபெறுகின்றது. இந்தவிழாவினை நகரத்தார் எனப்படும் தென்னிந்திய வணிகப் பெருமக்கள் நடத்தி வருகின்றார்கள். அவர்களுடைய நிருவாகத்தில் மூன்று நான்கு பெரிய கோயில்கள் கொழும்பில் இருக்கின்றன.

வேல்விழாக் காலத்தில் தங்கரதம், வெள்ளி ரதம் என்ற இரு பெரிய அலங்கார ரதங்கள் சுமார் ஏழு மைல் தூரம் சென்று வருகின்றன. இந்த விழாவிலே இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களும், இனத்தவர்களும் வெகு உற்சாகத்தோடு கலந்து கொள்கின்றார்கள்.

கொழும்பிலே சேர், பொன். இராமநாதன் என்ற ஒரு பெருமகனாரால் நிருமாணிக்கப்பட்ட பிரம்மாண்டமான சிறந்த கோயில் ஒன்று உண்டு. கருங்கற் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும் இந்தக் கோயில் ஸ்ரீபொன்னம்பலவாணேசர் கோயில் என வழங்குகின்றது. இங்கே திருவிழாக்களும், தேர்த் திருவிழாக்களும் இடம்பெற்று வருகின்றன. மார்கழி மாதத்தில் இந்த ஆலயத்திலிருந்து ஒலி பரப்பப்படும் திருவெம்பாவைப் பாடல்கள் அன்னிய நாடுகளிலுமுள்ள இந்துப் பெருமக்களும் கேட்கும் வண்ணம் அதிகாலையில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படுவது உண்டு. கொழும்பிலே மேற்குறிப்பிட்ட ஆலயத்தை விட விநாயகர் ஆலயங்களும் முருகன் ஆலயங்களும், அம்மன் ஆலயங்களும் பல உள.

கதிர்காமம் :

இலங்கையிலே தலைசிறந்த தலங்களிலே ஒன்றாக விளங்குவது கதிர்காமத் திருத்தலம் ஆகும். கதிர்காமத்தில் இருக்கின்ற முருகன் ஆலயத்திற்கு அருகில் மாணிக்கப் பிள்ளையார் ஆலயமும் இருக்கின்றது. இந்த ஆலயத்தை அரவணைப்பதுபோல மாணிக்க கங்கை இங்கு ஓடிக் கொண்டிருக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளையுடைய இந்தத் தலத்தில் இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள் ஆகிய மூன்று இன மக்களும் ஒன்று சேர்ந்து வணங்குவது ஒரு சமய ஐக்கிய அறிகுறியாக விளங்குகின்றது.

பௌத்த இந்து இணைப்பு :

இந்து ஆலயங்களைப் பற்றி ஆராயும் இச்சந்தர்ப்பத்திலே இந்து சமயத்துக்கும் பௌத்தத்துக்குமுள்ள ஓர் இணைப்பையும் இங்குக் குறிப்பிட வேண்டும். இந்துக் கோவில் எதிலும் பௌத்த சிலை எதையும் வைக்கும் வழக்கம் கிடையாது. ஆயினும் பௌத்தக் கோவில்கள் பலவற்றிலே விநாயகர், முருகன், விஷ்ணு கண்ணகி ஆகிய தெய்வங்களை வைத்து வழிபடுகின்றனர். அதைப் போலவே பௌத்த கோவில்களுக்கு வழிபடுவதற்

காக இந்துக்கள் எவரும் செல்லும் வழக்கம் இல்லை. ஆயினும் பௌத்தர்கள் பலர் இந்துக் கோவில்களுக்குச் சென்று வழிபடும் வழக்கம் உண்டு. முக்கியமாகக் கதிர்காமம், முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய கோவில்களுக்குப் பெருந்தொகையான பௌத்தர்கள் சென்று வழிபடுகின்றனர். இவை தவிர, கண்டியிலே நடைபெறும் பெரகராவில் கதிர்காமத் தெய்வமும் முக்கிய இடம் பெறுகின்றது. இவை யாவும் நம்நாட்டுப் பாரம்பரியத்தில் இந்து மதத்துக்கும் பௌத்தத்துக்குமுள்ள நெருங்கிய இணைப்புக்கும், இந்துக் கலாசாரமும் வழிபாட்டு முறைகளும் பௌத்தத்தில் எவ்வளவு தூரம் செறிந்துள்ளன என்பதற்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

புராணப் படிப்பு :

கோவில்களோடு ஒட்டிய அம்சங்களிலே இலங்கைக்கே தனிச் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய இன்னொரு அம்சம் புராணப் படிப்பு. இங்கு நடைபெற்று வரும் இப்புராணப்படிப்பு இந்திய மக்களாலும் பாராட்டப் பெற்றது. முக்கியமாகக் கந்தபுராணமே படித்துப் பயன் சொல்லப்படுவது. இதன் மூலம் சமய அறிவு மட்டுமன்றி எழுத வாசிக்கத் தெரியாத கிராம மக்கள் ஓரளவு இலக்கண, இலக்கிய அறிவைக்கூடப் பெற்று வந்திருக்கின்றனர். இதனை இப்போது ஆங்கிலத்தில் (Adlut Education) எனக் குறிப்பிடப்படும் முதியோர் கல்வியின் ஓர் அம்சம் என்றுகூடக் கருதலாம்.

மார்கழி மாதத்திலே வரும் திருவெம்பாவை நாள்களிலே சில கோவில்களிலே திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன்சொல்லுவதுஉண்டு. பிட்டுக்கு மண்சுமந்த சருக்கம் படித்துப் பயன் சொல்லப்படும் நாளன்று சர்க்கரைப் பிட்டையே சுவாமிக்கு நைவேத்தியமாக வைத்துப் பின்னர் புராணப் படிப்பைக் கேட்க வந்தவர்களுக்கு வழங்குவது வழக்கம். இவ்வாறு சிந்தனைக்கும் நாவுக்கும் ஒருங்கு விருந்தளித்து வந்த அரிய மரபுகள் படிப்படியாக அருகி வருகின்றன.

இதுவரை, கோவில்களைப் பற்றிக் குறிப்பிடத்தக்க விபரங்கள், சிறப்பான அம்சங்கள் ஆகியன குறிப்பிடப்பட்டன.

நூல்கள் :

இந்துசமய வாழ்விலே கோவில்கள் முக்கிய இடம் வகிக்கும் காரணத்தால் கோவில்கள் பற்றிய விவரங்கள் பலவற்றை இதுவரை குறிப்பிட்டோம். இவற்றுள் பெரும்பாலானவை நம் நாட்டுக்கேயுரிய தனியம்சங்களாகும். இனி, இந்து சமய இலக்கியப் பணியிலே நம் நாட்டவர் ஆற்றிய பணிகளுட் சிலவற்றைக் குறிப்பிடுவோம். இவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று இந்து தத்துவம் (Hindu Philosophy) மற்றது இந்து சமயம். (Hindu Religion) இவற்றை மேலும் இரண்டாகப் பிரிக்கலாம். தமிழில் இயற்றப்பட்டவை ஒரு பிரிவு. ஆங்கிலத்தில் இயற்றப்பட்டவை மற்றப் பிரிவு. எல்லாப் பிரிவுகளிலும் நம் நாட்டவர் காலத்துக்குக்காலம் இயற்றிய நூல்கள் தொகையால் ஒருவேளை குறைவாயிருப்பினும் வகையாலும் தரத்தாலும் உயர்ந்தவை எனக் கருதலாம். எல்லாவற்றையும் இங்கு குறிப்பிடுவது இயலாது. சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிடுவோம்.

தத்துவ நூல்கள் :

தத்துவத் துறையிலே முதலிலே மனத்துக்கு வருவது நீலகண்டபாஷ்யத்துக்குப் புன்னாலைக் கட்டுவனிலே பிறந்து காசியிலே வாழ்ந்த காசிவாசி செந்திநாதையர் செய்த மொழி பெயர்ப்பே யாகும். பிரம்மசூத்திரம் எனப்படும் நூலே இந்திய தத்துவ ஞானத்துக்கு முக்கியமான ஒரு மூலநூல். அதற்குப் பலர் சமஸ்கிருதத்திலே பெரிய விளக்கங்கள் எழுதியுள்ளனர். அந்த விளக்கங்களே பாஷ்யங்கள் எனப்படும். பாஷ்யங்களை எழுதினோர் வேதாந்தச் சார்பாகவே எழுதியுள்ளனர். நீலகண்டர் என்பவர் மட்டுமே சைவ சித்தாந்தச் சார்பாக விளக்கம் எழுதியுள்ளார். அவருடைய பாஷ்யத்தைத் தமிழாக்கி அதன்மூலம் சைவ சித்தாந்தத்துக்கு வலுவூட்டிய பெருமைக் குரியவர் செந்திநாதையர்.

இவர் இம்மொழிபெயர்ப்பின் முகப்பிலே எழுதிய இரண்டு உபக்கிரமணிகைகளைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை தாம் எழுதிய கந்தபுராண கலாசாரம் என்னும் நூலிலே குறிப்பிட்டு ''ஒவ்வொன்றும் தனித்தனி கோடி பொன் பெறும்'' எனக் கூறுகின்றார். சித்தாந்த சாத்திரங்களுள் முக்கியமான சித்தியார் சுபக்கத்துக்கும் சிவப்பிரகாசத்துக்கும் திருவிளங்கம் எழுதிய உரைகள் ஆகியன தமிழில் நம் நாட்டவர்கள் செய்த தத்துவப் பணிகளுக்குச் சில உதாரணங்கள்.

ஆங்கிலத்தில் எத்தனையோ நூல்களைக் குறிப்பிடலாம். சேர். பி. இராமநாதனின் மாமனார் முத்துக்குமாரசாமி 1857-இல்வெளியிட்ட (Synopsis of Saiva siddhanta) தொடக்கம் அண்மையிலே காலஞ்சென்ற கே. ராமச்சந்திரா இயற்றிய 'Hinduism in a nutshell' வரை அவை வளரும்.

கலாயோகி ஆனந்தக்குமாரசாமி இயற்றிய பல நூல்கள், முக்கியமாக 'Dance of shiva'

சேர் பி. அருணாசலம் அவர்கள் இயற்றிய ‘ **Studies and Translations Philosophical and Religious**’ கலைப்புலவர் நவரத்தினமவர்கள் இயற்றிய ‘**Studies in Hinduism**’ சிவபாதசுந்தரமவர்கள் இயற்றிய ‘**Saiva School of Hinduism**’ போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இத்தொடர்பிலே சிவபாதசுந்தரமவர்கள் ஆற்றிய பணியொன்றையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். சென்னையிலேயிருந்து வயலற் பரஞ்சோதி என்பவர் சைவ சித்தாந்தம் என ஆங்கிலத்தில் தம் ஆராய்ச்சியாக வெளியிட்ட நூலில் சிற்சில இடங்களிலே வேதாந்தத்தோடு ஒப்பிட்டுச் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைச் சாடியிருப்பதைக் கண்டபோது சிவபாதசுந்தர மவர்கள் வயலற் பரஞ்சோதியின் கருத்துக்களின் பொருந்தாமையைக் காட்டி அவற்றுக்கு மறுப் பெழுதியமையையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

சமய நூல்கள் :

சமய நூல்களைப் பொறுத்த மட்டில் இலங்கை அறிஞர் இயற்றியவற்றைப் பல பிரிவு களாகப் பிரிக்கலாம். தலபுராணங்கள், உரைகள், வசன நூல்கள், கட்டுரைகள், கிரியா விளக்கங்கள், மறுப்புகள், கண்டனங்கள், என இந்நாட்டு அறிஞர் காலத்துக்குக் காலம் இயற்றிய நூல்கள் எண்ணிலடங்கா. இலங்கையிலுள்ள பல ஆலயங் யங்கள் பெயரில் இயற்றப்பட்ட உலா, ஊஞ்சல், பிள்ளைத்தமிழ், தலபுராணங்கள் அனைத்தையும் கணக்கெடுக்கின் அவை பெருந்தொகையின வாகும்.

தலபுராணத்துக்கு உதாரணமாகக் காலஞ் சென்ற இளமுருகனார் இயற்றிய ஈழத்துச் சிதம் பர தலபுராணத்தைக் குறிப்பிடலாம். உரை களுக்கு உதாரணமாகப் பருத்தித்துறை சுப்பிர மணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்துக்கு எழுதிய உரை, பண்டிதர் அருளம்பலவனார் செய்த திரு வாசக ஆராய்ச்சியுரை, பண்டிதமணி கணபதிப் பிள்ளையின் தட்சகாண்ட உரை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

புராண வசன நூல்களுக்கு நாவலர் பெரு மானுடைய பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் ஆகி ய்வை சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கட்டுரை நூல்களுக்குப் பண்டிதமணி கணபதிப் பிள்ளை யவர்களின் ‘‘சமய கட்டுரைகள்’’ மட்டக்களிப்பு அருணாசல தேசிகரவர்களின் ‘‘சைவ சமய சிந்தா மணி’’ போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சைவாலயங்களிலே நடைபெறும் கிரியா விளக்கங்களுக்கு அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் இயற்றிய மகோற்சவ விளக்கமும், கலாநிதி கைலாசநாதக் குருக்கள் இயற்றிய ‘சைவத் திருக்கோவிற் கிரியை நெறி’யும் பய னுள்ள ஆக்கங்களாகும்.

மறுப்புகள் கண்டனங்களின் விளைவாக எழுந்தவற்றுக்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். சென்ற நூற்றாண்டிறுதியிலும் இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தும் தமிழகத் தில் இந்து சமயம் பற்றிக்காலத்துக்குக்காலம் எழு பப்பட்ட ஒவ்வொரு பிரச்சனையிலும் ஈழநாட்டறி ஞர்களும் ஈடுபட்டு, ஒட்டியும் வெட்டியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதனால் சமயக் கருத்துக்கள் தெளிவு பெற்றது மட்டு மன்றிச் சமய இலக்கியங்களும் வளர்ச்சி பெற் றுள்ளன.

உதாரணத்துக்கு இரண்டைக் கூறுவோம். வடமொழி வேதங்கள் வேறு, தமிழ்மறைகள் எனப்படுவன வேறு; இரண்டுக்கும் தொடர்பு கிடையாது என்ற கருத்தைத் தமிழ்நாட்டிலே சிலர் எழுப்பியபோது, அவை இரண்டும் கூறுவன ஒன்றே என்று நிலைநாட்டி வேதங்களிலிருந்தும் தேவாரங்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டிச் செந்திநாதையர் எழுதிய நூலே ‘தேவாரம் வேத சாரம்’ என்ற நூலாகும். ‘‘சிவஞான போதம்’’ முதல்நூலா அல்லது வடமொழியிலுள்ளதன் தமி ழாக்கமா என எழுந்த பிரச்சனையிலே அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் போன்றோரும் ஈடுபட்டுத் தம் கருத்துக்களை வெளியிட்டமை குறிப்பிடத் தக்கது.

இந்துசமய வளர்ச்சிக்கு நம் நாட்டவர் ஆற் றிய பணியை விளக்கும்பொருட்டுச் சில பெயர் களையும் நூல்களையும் மட்டுமே இங்கு குறிப்பிட் டோம். இங்கு குறிப்பிடப்படாத முக்கியமான பெயர்களும் நூல்களும் இன்னும் எத்தனையோ உள. இலக்கியங்களைப் பற்றி ஆராயும்போது இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் சமயத்துக்குக் கொடுத்து வரும் ஆதரவும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலே தோன்றி, கதாப்பிரசங்கத் துறை யிலே முன்னோடியாகத் திகழ்ந்து ஈழத்தில் மட்டு மன்றித் தமிழகத்திலும் புகழ்பெற்ற திருவாலங் காடு சங்கரசுப்பையர் நினைவுகூரத்தக்கவர். மாணிக்கத் தியாகராச பண்டிதரும் இத்துறை யிலே குறிப்பிடத்தக்க மற்றொருவராவர்.

ஆதீனம் :

சங்கரசுப்பையரைப் போலவே கதாப்பிர சங்கம், புராணப் பிரசங்கம் ஆகிய துறைகளிலே திறமை பெற்று, ஈழத்திலும் தமிழகத்திலும் மட்டுமன்றி, மலாயாவிலும் புகழீட்டிவந்து சென்றாண்டு பரிபூரணநிலையெய்திய **நல்லை ஆதீனத் தலைவர்** இந்துசமய விருத்தியின்

பொருட்டு ஆற்றிவரும் அரும்பணிகள் யாவும் பாராட்டுக்குரியன.

இராமகிருஷ்ண மிஷன் :

நம் நாட்டிலே இந்துமத வளர்ச்சிக்கு அரும் பணி ஆற்றிவரும் நிறுவனங்களுள் இராம கிருஷ்ண மிஷனுக்குச் சிறப்பான தனியிடமொன்றுண்டு. சுவாமி விபுலானந்தர் அவர்களின் முயற்சியினால் வடக்கில் வைத்தீஸ்வர வித்தியாலயம் உட்பட எத்தனையோ இந்துக்கல்லூரிகளைத் தொடங்கி நடத்திய பெருமை இராமகிருஷ்ண மிஷனுக்குரியது. கிழக்கிலங்கையில் ஆரம்பித்த இந்துக் கல்லூரிகள், அங்கு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்ற அநாதை இல்லம், தென்னிலங்கையில் கதிர்காமத்தில் மடம், கொழும்பிலிருந்து பற்பல பணிகள் என இராமகிருஷ்ண மிஷன் ஆற்றிவரும் அரும்பணிகள் யாவும் பாராட்டத் தக்கன.

இலங்கை வானொலி :

ஈழத்துப்பாரம்பரியத்தில் இந்துமதம்பற்றிக் குறிப்பிடும்போது இலங்கை வானொலியும் கட்டாயம் இடம் பெற்றேயாக வேண்டும். சைவ நற்சிந்தனையோடு தொடங்கி எத்தனையோ சமய நிகழ்ச்சிகள், பல ஆலயங்களில் நடைபெறும் எத்தனையோ விசேஷங்களின் நேர்முக வர்ணனைகள் யாவும் வானொலியில் இடம் பெறுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளை இலங்கை வானொலியில் கேட்ட இந்திய அன்பர் பலர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்ததாகக் குறிப்பிட்டனர். சைவ நற்சிந்தனை என மதத்தையும் சேர்த்துக் கூறுவதே குறிப்பிடத்தக்க செயல். மதச்சார்பற்றதெனக் கருதப்படும் தமிழகத்திலே இவ்வாறு பெயரிடுதல் இயலாது.

இன்றைய நிலை :

கடைசியாக இன்றைய நிலை பற்றிச் சில வார்த்தைகள். இந்து சமயம், "ஆன்மா நிலையானது; இறைவன் ஒருவனுளன்; கர்ம பலன், மறுபிறப்பு என்பன நிச்சயம்" என்ற அடிப்படைக் கொள்கைகளையுடையது. இவற்றுக்கு அனுசரணையாகவும் இவற்றுக்கு வடிவம் கொடுக்குமுகமாகவும் அமைந்தவையே விழாக்கள், வழிபாடுகள் சமயச்சடங்குகள் ஆகிய அனைத்தும். இன்றைய நிலையில் பலவித போக்குகளைக் காண்கிறோம். ஒரு சிலருக்குச் சமய வாழ்வில் சிறிதாவது ஈடுபடுவதற்கு வேண்டிய பொறுமையுமில்லை; விருப்பமுமில்லை; அக்கறையுமில்லை. இன்னும் சிலர் சமய சம்பந்தமான எதுவும் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தவர்கள். இவருள் சிலர் வெளிப்படையாகவே தம் முடிவைத் தெரிவிப்பவர்கள். வேறு சிலர் உபசாரத்துக்காக வெளிப்படையாக எதையும் பேசாத போதும், மௌனமாகத் தம் முடிவைச் செயல்களிலே சாதிப்பவர்கள். வேறு சிலர் சாரத்தைத் தவறவிட்டுச் சக்கையைப் பிடித்துக் கொண்டவர்கள் போலச் சமயத்தின் உள் நோக்கங்களை உணராது புறவேடங்களிலும் வெற்றாரவாரங்களிலும் மட்டுமே ஈடுபடுகின்றனர்.

அண்மைக் காலத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சமய மன்றங்கள் தொடக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மத்தியில், குறிப்பாக உயர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரதான வளாகம் பேராதனை என்ற இடத்திலே அமைந்திருக்கின்றது. அங்கு கல்வி பயிலச் சென்ற பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் பக்கத்தில் இருந்த குன்றின் மீது குமரனுக்கு அழகிய ஆலயம் அமைத்துள்ளார்கள்.

இவ்வாறு புத்துணர்ச்சி ஏற்பட்டு வருகின்ற இந்த வேளையிலே எந்த நாட்டிலும் இல்லாத, இந்து சமயத்திற்கான ஒரு தனி அமைச்சு ஈழ நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். நேபாளத்தைத் தவிர உலகில் இந்துசமயம் அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் நாடு இலங்கை மட்டுமே எனலாம். இலங்கை பௌத்தர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட நாடு. இந்த நாட்டிலே இந்து சமயத்திற்கு மதிப்பளித்து அதற்கென ஓர் அமைச்சை உண்டாக்கி, அதன் மூலம்சமய சமரசத்தைக்காண்பதற்கு வழி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தப் பின்னணியில்தான் இலங்கையில் முதன் முதலாக ஓர் அகில உலக இந்து மாநாடு நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றது. பல இடங்களில் இந்து மாநாடு இடம்பெற்றபோதிலும் அரசாங்க ஆதரவில் நடைபெறுகின்ற முதலாவது இந்து மாநாடு இலங்கையில் நடைபெறுகின்றது என்பது இலங்கைவாழ் இந்துப் பெருமக்களுக்குப் பெருமைதரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அயல் நாடுகளில் நமது பண்பாட்டு நிலையங்கள்

வை. கணபதி ஸ்தபதி

சைவமும் வைணவமும் பாரதநாட்டில் உயிருள்ள இருபெரும் சமயங்களாகும். அவை மிகத்தொன்மையும் சிறப்பும் வாய்க்கப்பெற்றவை. இவற்றை அழியாமல் காத்து வருபவை நமது திருக்கோயில்கள் தான் எனில் மிகையன்று. வானுயர்ந்த கோபுரங்களும், விண்ணளவும்—விமானங்களும், எழில்மிகு சிற்பங்களும் இச்சமயத்தின் பேராற்றலை, பெருஞ் சிறப்பைப் பறைசாற்றிடும் சின்னங்களாய் விளங்குகின்றன.

சைவ வைணவக் கொள்கைகள் தத்துவங்கள் மிக ஆழ்ந்தவை. அவற்றை ஆதாரமாகக்கொண்டு தொகுக்கப்பெற்ற வாழ்க்கை முறைகள் மிக உயர்ந்தவை. மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தும் ஆற்றல் கொண்டவை. நமது அன்றாட வாழ்க்கையோடு இரண்டறக்கலந்து நின்ற அச்சீரிய வாழ்க்கை, மேலை நாகரிகத்தின் தாக்குதலால் நிலை குலைந்து, மக்களிடையே நல்ல பிடிப்புக் கொண்டிருந்த, நெறிமுறைகள் தளர்ச்சியுற்றன. மதத்துறையில் ஈடுபட்டிருந்த பெரியோர்கள் தத்துவஞானம், மதக் கொள்கைகள் ஆகியவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக நழுவவிட்டு, காலப்போக்கில் எஞ்சியவையும் மறந்து போய், வெறும் நடைமுறைகளையும் சடங்குகளையுமே ஓரளவு காத்து, சமய வாழ்க்கையில் ஒழுகி வந்தனர்.

மதத்துறையில் முறையான போதனை, சமய ஒழுக்கம், தியாக உணர்வு ஆகியவை சிதைந்து போய், நிராதரவான சூழ்நிலையில் சிக்கி, மயக்கமுற்றிருந்த நிலையில், தமிழகத்துப் பேரறிஞர்களும் மதவாதிகளும் பிரசங்கிகளும், பல்வேறு சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டு ஓரளவு மயக்கமுற்றிருந்த சமுதாயத்திற்குத் தக்க விழிப்புணர்ச்சியூட்ட முற்பட்டனர். விஞ்ஞானம் கற்ற இந்தத் தலைமுறையினருக்கு ஏற்றவாறு ஆலய பிம்பங்களைப் பற்றியும், கட்டடங்களைப் பற்றியும், புராண இதிகாசக் கதைகளின் உட்கருத்துக்கள் பற்றியும் வெகுவாகப் பிரச்சாரம் செய்ததின் விளைவாக, இன்றைய இளம் தலைமுறையினர் மேலும் புத்துணர்ச்சி பெறுவாராயினர்.

பண்டைய தத்துவஞானக் கருத்துக்கள் விஞ்ஞானத்தை ஒட்டிச் செல்வதையும், சுட்டிக் காட்டினர். இத்துடன் நின்றுவிடாமல், சைவ, வைணவ, ஆகமக் கொள்கைகளை—வழிபாட்டு விதிமுறைகளை கோவில் திருவிழாக்கள் நடைபெறும் காலத்திலும், கோவில் குடநீராட்டு விழாக் காலங்களிலும் விசேடச் சொற்பொழிவுகள் மூலமாகவும், பொதுமக்களிடையே பரப்பிட மேலான முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். இவை இங்ஙனமிருக்க, மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள் நமது கலைச் சின்னங்கள் அறிவுறுத்தும் மேலான தத்துவச் செய்தியினை வியப்புடன் நோக்குவதோடு அல்லாமல் அத்தத்துவக் கொள்கைகள் பின்னிப் பிணைந்து கிடக்கும் நமது வாழ்க்கை முறையினையும் ஆராய்ந்து, அவை காட்டும் ஆன்மீக வாழ்க்கை நெறியினையும், அவ்வாழ்க்கையினின்று தோன்றும் அமைதி, இன்பம் ஆகியவற்றைத் தாமும் உணர்ந்து துய்க்கவும், தொடங்கியிருக்கிறார்கள்.

நமது நாட்டின் ஆன்மீகக் கொள்கைகளான துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்துவைதம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றை விளக்கிடும் ஞான நூல்களையும் கற்றுத் தேறி, இவ்வுலக வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கும் தகுந்த விடையளிக்கும் ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிக்கவும் தொடங்கியிருக்கிறார்கள். வெறும் கலைக் கட்டிடங்களாகத் தென்பட்ட நமது கோயில்கள், தத்துவச் சோலையாகப் பிறவிப் பிணிகளைத் தீர்த்திடும் மருத்துவ நிலையமாக இன்று அன்னாருக்குக் காட்சியளிக்கின்றன. நவ நாகரிக

வாழ்க்கையில் வெறும் சூன்யத்தைக் கண்ட அவர் தம் கண்களுக்கு அமைதி தரும் நிலையங்களாக அவை காட்சி தருகின்றன.

ஜீவான்மா, பரமான்மா, ஆன்மாக்களின் அழியாத்தன்மை, உருவ வழிபாடு அதற்குரிய சடங்குகள், நெறிகள் ஆகியவற்றின்மீது அளவற்ற ஈடுபாடு கொண்டு நாம் ஒதுக்கிவிட்ட அனைத்தையும், அவர்கள் ஏற்று, நமக்கு வழிகாட்டிகளாக மாறி வருகிறார்கள் என்றால், அது மிகையன்று. இவர்களிடம் காணப்படும் தனிச்சிறப்பு யாதெனில் மூலஞான நூல்களைக் கற்று, ஆகமக் கொள்கைகளைத் தெரிந்து நெறிமுறைகளையும் புரிந்து, அவர்தம் தாயகத்தை— ஞானபூமியாக மாற்றிட உறுதி பூண்டிருப்பதாகவே நமக்குத் தெரிய வருகின்றது. சமய வாழ்க்கையில் ஈடுபட்ட அம்மேலை நாட்டு உத்தமர்களின் ஒற்றுமையும், மற்றும் உறுதியும் நம்மை வியக்கச் செய்கின்றன. அவர்கள் காட்டும் பண்பாடு நமது பாரத நாட்டின், பண்டைப் பண்பாட்டினை நினைவுறுத்துகின்றன.

நம்மிடையே காலத்தால் — பழுதடைந்த கொள்கைகள் வேண்டா நெறிகள் அவர்களிடம் காணப்படவில்லை.

அதுமட்டுமல்ல, நமது ஆலயக் கட்டிடங்களை மற்றும் கடவுட்படிமங்களை, தெய்வீகத் தன்மை வாய்ந்தனவாகவே கொள்ளுகின்றனர். நமது ஞானியர்களிடம் பண்டு தோன்றிய அதிசயங்கள் அவர்களுக்கு ஏற்பட்ட இறை அனுபவங்கள், இன்றும் அவர்களிடையே ஏற்பட்டு வருகின்றன என்று அங்கிருந்து வரும் செய்திகள் நம் மனதிற்கு இதமளிக்கின்றன. இதனால் நமது சமயச் செந்நெறிகள் மேலை நாட்டிலே வெகுவாகப் பரவி வருகின்றன. அதன் விளைவாக, நம்நாட்டுக் கோயில் கட்டிட அமைப்புகளுக்கும் தெய்வீகப் படிமங்களுக்கும், ஏராளமான பெருமையும் அதற்கிடான வரவேற்பும் ஏற்பட்டிருப்பதையும் அறிகிறோம்.

சமயத்தைப் பேணி வளர்த்துக் காத்த சோழ மன்னரகளையும், அவர்தம் வழித் தோன்றல்களையும், அவர்தம் காலங்களில் தோன்றிய கோயில்களையும், கடவுட் படிமங்களையும், அம்மேலை நாட்டினர் மிக மதித்துப் போற்றி அவர் தம் மண்ணில் அத்தகைய நிலையங்கள் பல தோன்றிட அரிய பெரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

நல்லஞானம், நல்ல எண்ணம், நன்னடத்தை, நல்லொழுக்கம், சமய ஆசார அனுட்டானங்கள் எல்லாம் ஒருங்கே அவர்களிடம் நல்ல முறையில் காணப்படுகின்றன. அவர் தம் முகங்களில் தெய்வீக ஒளி தவழுகின்றது. அத்தகைய குணநலன்கள் கொண்ட ஒரு பெரியவர் ஹாவாய்த் தீவில் சுப்பிரமணிய சுவாமி என்ற திருநாமம் பூண்டு, சைவ சித்தாந்தக் கொள்கையினைக் கடைப்பிடித்து, சிவப் பழமாக, சிவநெறியில் திளைத்து, சிவஞானத்தைப் பரப்பி வருகின்றார். தன்னைச் சேர்ந்த மக்களையே குருக்கள்களாகவும், சீடர்களாகவும், ஆக்கிச் சிவயோகியாகத் திகழ்ந்து வருகின்றார். அத்தகைய பெரியவர்க்கு நமது மணிவாசகப் பெருமானுக்கு ஏற்பட்ட சிவானுபவக் காட்சியொன்று அண்மையில் கிடைக்கப்பெற்று, சிவபெருமான் காட்சி கொடுத்த அத்திருவிடத்தில் மாபெரும் சிவாலயம் ஒன்றைச் சோழர் கலைப்பாணியில் நிர்மாணித்திட வேண்டும் என்று பேரார்வம் கொண்டு, சென்ற மாதம் மாமல்லபுரத்தில் எனது சிற்பக்கலைக் கல்லூரிக்கு அவரது சீடர்கள் வருகைதந்து, அவர்தம் விருப்பங்களை என்னிடம் கூறக் கேட்டிடும் பேறு பெற்றேன். அம்மகானையும் சந்தித்தேன்.

அவர்தம் எழில் முகமும் இனிய பார்வையும், கூரியமதியும், இன்சொல்லும், என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவர்தம் இன்முகத்தைக் கண்ட என் உள்ளத்தில் மேலான பரவசமும், வளமான கற்பனைகளும், பெருக்கெடுத்தன. பெரிய மனிதர்களைச் சந்திக்கும் காலத்தில் உயர்ந்த எண்ணங்களும் அவ்வெண்ணங்களால் திறமைப் பெருக்கமும் ஏற்படுவதை அனுபவபூர்வமாக இரண்டு முறை என் வாழ்நாளில் அனுபவித்த எனக்கு, இது மூன்றாவது இனிய வாய்ப்பாகத் தோன்றியது.

எத்தகைய திட்டங்களை அம்மகானிடம் நான் சமர்ப்பித்தேன் ; எங்ஙனம் அவற்றை முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதைப் பிறிதொரு சமயம் வெளியிடலாம் என்று அவற்றை இப்பொழுது ஒத்தி வைக்கிறேன். மிக விரைவில் அத்திட்டங்கள் அம்மகானின் திருவாய்வழி வருவதே மேல் என நான் கருதுவதே காரணம்.

அத்திட்டப்படி மாபெரும் சிவாலயம் ஒன்று ஹாவாய் மண்ணில் விரைவில் தோன்றிட இருக்கின்ற நற்செய்தியினை இங்கு கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பாரத மண்ணிலே பிறந்து, பல்வேறு பணிகளை முன்வைத்து, பல்வேறு நாடுகளைச் சென்றடைந்து, அந்நாட்டு வாழ்க்கை முறைகளை ஏற்று, பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்து, அவ்வாழ்க்கையின் பொருளற்ற நோக்கற்ற போக்கினைக் கண்டு, வெதும்பிய உள்ளத்துடன் தாயகப் பண்புகளையும் மாற்றார் வியக்கக் கேட்ட நமது மண்ணின் மைந்தர்கள் நமது சமய நெறி பெற்றுத் தந்த சீரிய வாழ்க்கையினை மீண்டும் தாங்கள் தங்கியுள்ள இடங்களில் அமைத்துக் கொள்ளத்துடிதுடித்து வருவதை இந்நாளில் பெரிதும் காண்கின்றோம். பிஜித் தீவில் இந்தியக் குடியினர் பல தலைமுறைகளுக்கு முன்பு சென்று அந்நாட்டு மொழி கலாச்சாரம் ஆகியவற்றில் மூழ்கி, பல

தலைமுறை ஆனபின் நமது கலாச்சாரத்தின் மேன்மையினை உணர்ந்து, அது சமயத்தின் வழியாகத்தான் கிடைக்கும் — தழைக்கும் — என்று அறுதியிட்டு உறுதி பூண்டு, அங்குள்ளோர் தமிழகக் கோயிற்பாணியில் ஒரு சுப்பிரமணியர் ஆலயம் நிர்மாணித்திட நான் ஓர் அரிய அழைப்பினைப் பெற்றுச் சென்று வந்தேன்.

அம்மண்ணிலே நம் கலாச்சாரப்பயிரை ஊன்றி வளர்த்திடத் துடியாய்த் துடிக்கின்றனர். அத்தகைய மக்களின் தேவைகளை உணர்ந்து, தமிழ்நாடு அரசு பொருளுதவியும் அளித்துள்ளது. கருவறை, விமானம், முகமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, கோபுரம், சுற்றுக் கோயில்கள் இவற்றுடன் கூடிய ஒரு மாபெரும் மாடக்கோயில் பிஜித் தீவில் நாண்டி என்ற இடத்தில் அமைப்பதற்கான திட்டமொன்றைச் சமர்ப்பித்து வந்திருக்கின்றேன். அத்திட்டத்தில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்குரிய நெடிய மண்டபம், சமயக்கல்வி போதிப்பதற்குரிய கல்வி நிலையம், இசைப்பள்ளி, கலைப் பொருட் காட்சிக் கூடம், தத்துவ சமய நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஆகியவை அம்மாடக் கோவிலின் அடித் தளத்தில் அமையுமாறு இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

மற்றும் பிஜித் தீவில் வாழும் மக்கள் தொகையில் 40% பாரத நாட்டுப் பெருமக்களாகவும், கல்வி நலம் பொருள் நலம் வாய்க்கப்பட்டவர்களாகவும், அம்மக்கள் ஓங்கி வளர்ந்திருப்பதால் அத்தீவில் சுமார் 50 சிறுசிறு கோயில்களைத் தாமாகவே அமைத்துக் கொண்டு இயன்ற அளவு வழிபாடுகளும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அக்கோயில்களை எல்லாம் தமிழகக் கோயிற் கட்டிடப் பாணியில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நிரம்பவும் விரும்புகின்றனர்.

மாடக்கோயிலை நடுவண் நிலையமாகக் கொண்டு அச்சிறு சிறு கோயில்களை அக்கோயிலோடு இணைத்து நிர்வகிக்கும் முறைகளையும் எனக்குத் தெரிந்த அளவில் சொல்லியும் வந்திருக்கின்றேன். வருங்காலத்தில் நமது சமயப்பயிர் விளைநிலமாக அது ஆகக்கூடும் என்று கருதுகிறேன்.

சிங்கப்பூரில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழ்ச் சமய நெறிகளுக்கும் நல்ல வரவேற்பு அங்கு இருக்கின்றது. வாணிப நோக்கோடும், வேலை வாய்ப்புப் பெறும் நோக்கோடும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் சென்றடைந்த தமிழ்க்குடி மக்கள், சிறு சிறு கோயில்களை அமைத்து, அவர்தம் வழிபடுதெய்வங்களை ஸ்தாபித்து வழிபாடும் நிகழ்த்தி வந்தார்கள். அக்கோயில்கள் இக்காலத்தில் பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகி, தமிழகச் சிற்பக்கலைப் பாணியில் வானுயர்ந்த கோபுரங்களும், விமானங்களும் ஒருங்கேயமைந்த நல்ல ஆலயங்களாகத் திகழ்கின்றன. அங்ஙனம், ஏற்பட்ட கோயில்களில், நாட்டுக்கோட்டைச் செட்டியார் மரபினர் சிங்கப்பூரில் சுப்பிரமணிய சுவாமிக்கு ஒரு பெரிய கோயிலை சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவி ஆகம முறைப்படி வழிபாடுகளும் விழாக்களும் நடத்தி வந்தார்கள். பெரிய கோயிலாக இருப்பினும் எளிமையான தோற்றமுடையதாக இருந்த அக்கோயில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் சிங்கப்பூரிலேயே மிகப்பெரிய ஆலயமாகப் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

தமிழக சிற்ப ஆகம விதிகளுக்கு ஏற்பக்கோயில் திட்டமிடப்பட்டு சுமார் 75 லட்ச ரூபா அளவின தான பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அப்பணி மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அப்பணிஇன்னும் ஓராண்டுக்குள் முடிவு பெற்று சிங்கப்பூர் நகரத்திற்கே ஓர் அணியாகத் திகழும் என்று சிங்கப்பூர் அரசும், அந்நாட்டு மக்களும் அந்நாளை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

இக்கோயில் அமைப்பினை சிங்கப்பூரில் பிறிதொரு இடத்தில் செய்யக்கூடாது என அவ்வரசும், அம்மக்களும் தீர்மானித்திருக்கிறார்கள். அக்கோவில் பணியை திட்டமிட்டு செய்வதற்குரிய நல்வாய்ப்பினை அம்மக்கள் எனக்கு அளித்ததைப் பெருமையோடு இங்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே சிங்கப்பூரில் அருள் மிகு ருத்ரகாளியம்மன் கோயில் என்ற ஒரு சக்தி கோயில் ஓர் ஒதுக்கிடத்தில் இருந்ததை அரசு வேறிடத்தில், அழகிய தோற்றததில், பெரிய அளவில் செய்து கொள்ளுமாறு பணித்து, அக்கோயிலுக்கும் ஏற்ற ஒரு திட்டத்தை வழங்கிட தமிழ்நாடு அரசின் அனுமதி பெற்றுச் சென்று வந்தேன். அப்பணி 25 லட்ச ரூபாய் மதிப்புடையதாகும். அக்கோயிலும் தமிழகச் சிற்ப ஆகம முறையில் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு சுமார் 60% பணி முடிவடைந்து எஞ்சிய பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. சிங்கப்பூரில் காளியம்மன், மாரியம்மன், மகாகாளியம்மன் ஆகிய சக்திகோயில்கள் நிரம்ப இருக்கின்றன.

மேற் குறிப்பிட்ட ருத்ரகாளியம்மன் கோயிலை விடுத்து, வீரமாகாளியம்மன் கோயில் ஒன்று மிகப் பெரிய அளவில் கட்டுவதற்கான அடிப்படைத் திட்டங்கள் வகுக்கப்பெற்று, அப்பணியும் விரைவில் துவங்க விருக்கின்றது. இக்கோயிலில் அமைப்பு மேற்குறிப்பிட்ட கோயிலின் அமைப்பிலிருந்து மாறுபட்டதாகவும் ஆகம விதிகளுக்கு ஏற்புடையதாகவும் அமைய விருக்கிறது. கிட்டத்தட்ட 75 லட்ச ரூபாய் மதிப்பில் இப்பணி முற்றுப்பெறும்.

சிங்கப்பூர் அரசு தன் செலவிலேயே காளியம்மன் கோயில் ஒன்றை நிர்மாணித்து அப்பகுதியில் வாழும்

தமிழ் மக்களுக்கு உடமையாக்க இருக்கிறது. இதற்குரிய புதியதொரு திட்டத்தையும் அவ்வரசுக்கு சமர்ப்பித்திருக்கிறேன். மிக அழகிய இயற்கைச் சூழ்நிலையுடைய ஓர் இடத்தை அம்மாநில அரசு வழங்கியிருக்கிறது. இக்கோயில் நிர்மாணமும் விரைவில் தொடங்கும்.

இவற்றைத் தவிர, ஏனைய கோயில்களில், இலங்கைத் தமிழர்களால் நிர்மாணிக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வரும் சண்பக விநாயகர் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட கோயில்களுக்குச் சிங்கப்பூர் தமிழ் மக்களை விடுத்து, சீனமக்களும் வேறின மக்களும் வந்து போகும் ஒரு பொது நிலையமாகவும் அவை திகழ்கின்றன. நமது ஆகம ரீதியில் செய்யப்படும் வழிபாட்டு முறைகளை அந்நாட்டு மக்கள் வியந்து ரசிப்பதுடன் அவ்வழி பாட்டில் வசீகரிக்கப்பட்டவர்களாகவும் ஆகிறுர்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும்.

மலேசியாவில் தமிழகச் சிற்பக் கலைப்பாணியில் ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குரிய திட்டங்களை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்திருந்தேன். சுப்பிரமணிய ஸ்வாமி கோவில் என அழைக்கப்படும் அக்கோயில் சிகாமெட் என்ற இடத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. மலேசிய மக்களும் அங்கு வாழ் தமிழ் மக்களும் ஒருங்கிணைந்து வழிபடும் பொது நிலையமாக அஃது இருந்து வருகின்றது.

தமிழ்நாடு அரசு மற்றும் ஆந்திர அரசு பொருளாதார உதவிபெற்று இலங்கையில் திருக்கேதீஸ்வரம் என்ற தொன்மைச் சிறப்புவாய்ந்த கோவிலின் மகா மண்டபம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. தமிழகச் சிற்பக்கலைப்பாணியில் குதிரைத் தூண்கள், சிம்மத் தூண்கள், சிற்பத்தூண்கள் என எண்பது தூண்கள் நிரம்பிய பெரு மண்டபமாக அஃது அமையவிருக்கின்றது. அதற்கான கருங்கற் பணிகள் அனைத்தும் மாமல்லபுரத்தில் அரசினர் சிற்பக்கலைக் கல்லூரியின் உற்பத்திப் பிரிவில் நடைபெற்று வருகின்றன.

மேலும் தென் ஆப்பிரிக்காவில் முருகன் ஆலயம் ஒன்றும், மொரீஸியஸ் நாட்டில் புராதன ஆலயமாக ஸ்ரீ மீனுட்சி சொக்கலிங்கேஸ்வரர் கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ஒன்றும் எழுப்பப்பட இருக்கின்றது. இவ்விருநாடுகளில் தோன்றவிருக்கும், திருக்கோயில்களுக்கான அடிப்படைத் திட்டங்கள் தயாரிப்பதில் தற்பொழுது ஈடுபட்டிருக்கிறேன்.

அமெரிக்காவில், ஆந்திர மாநில அரசின் பெரும் பொருளுதவியினுல் விநாயகர் ஆலயம் ஒன்றும், ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில் ஒன்றும் நிறுவப்பெற்று மிகச் சிறப்பாக வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

பாஸ்டன் நகரிலும், ஆஸ்திரேலியாவில் சிட்னியிலும் ஆந்திர மாநில அரசின் பொருளுதவி கொண்டு, ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில்கள் ஏற்படவிருக்கின்றன.

லண்டனில் முருகன் கோயில் ஒன்று தோன்றவிருக்கும் செய்தியினையும் இங்குக் குறிப்பிடலாம்.

எதிர்வரும், காலத்தில், தமிழகப் பாணிக்கோவில்கள் உலகநாடுகளில் பெருமளவில் தோன்றிடும் சாத்தியக்கூறுகள் பெருகிவருகின்றன. நமதுகலாச்சாரத்தை அந்நாடுகளில் புகுத்தி நாம் பெருமையடைய வேண்டும் என்ற நோக்கோடு அல்ல ; நமது சமயம் நல்கும் அமைதிகலந்த இன்ப வாழ்க்கையை உலக மக்கள் அனைவரும் பெற்றுய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கே காரணம். இவ்வழியில் செல்ல, இந்துசமய மாநாடு வழிவகைகளைத் திட்டமிடவேண்டுமென்று கூறி முடிக்கின்றேன்.

இறைவா ! மகிழ்வோம் ! உனக்குப் பணிவிடை செய்யும் பக்தர் வீட்டில் நான் புழுவாகவாவது பிறப்பெடுப்பேனுக ! ஏனையவர் வீட்டில் நான்முகப் படைப்புத் தெய்வமாகவும் நான் பிறப்பெடுக்கலாகாது.

— யமுனுச் சார்யார்

சமய ஒருமைப்பாடு தேவை

எஸ். சீனிவாசராகவன்

சமஸ்கிருத பண்டிதர் அரசினர் சிற்பக்கலைக்கல்லூரி
மாமல்லபுரம்

இந்துமதம் மிகப் பழமையானது. சாசுவதமானது. ஜாதிமத இனவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. சமூகத்திலுள்ள அனைவரின் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இதைச் சைவ வைணவ, நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவர்களது ஆழமுள்ள கருத்துச் செறிவுள்ள தத்துவங்களை விளக்குகின்ற தேனினுமினிய தமிழ்ப் பாக்களால் நாடெங்கிலும் பரப்பி வந்திருக்கிறார்கள்.

மிகப் புராதன சமயமாகவும், வழிபாடாகவும், இந்து மதம் தோன்றிவளர்ந்திருக்கிறது. உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு மதத்திற்கும் ஸ்தாபகர் என்று ஒருவர் இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் இந்து மதத்திற்கு ஸ்தாபகர் கிடையாது.

புத்தமதம் புத்தரால் தோன்றுவிக்கப்பட்டது. சமணமதம் மகாவீரரால் தோற்றுவிக்கப்பட்டது. இஸ்லாம் நபிகளால் தோற்றுவிக்கப்பட்டது. கிறிஸ்துவமதம் ஏசுநாதரால் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இந்து மதத்தை யாரும் தோற்றுவிக்கவில்லை. அநாதியானது. ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமயாசாரியர்கள் தத்துவ விளக்கம் கொடுத்தார்களே தவிர இந்து சமயத்தைத் தோற்றுவிக்கவில்லை.

இந்த தேசம் மிகப் பழமையானது. இதன் சரித்திரம் எவ்வளவு பழமையானது என்பதைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. இதில் மற்றொரு விசேஷம் என்னவென்றால் நம் பண்பாட்டின் கட்டுப்பாட்டு முறையாகும். நம் ஆசார அனுஷ்டானங்களை, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இன்னமும் நம் மக்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். கலாசாரத்தில் இதுபோன்ற ஒரு தொடர்ச்சியான நிலைமை உலகத்தில் வேறு எங்கும் காண முடியாது. மற்ற நாடுகளில் பழைய கலாசாரங்களை மியூஸியங்களில் தான் காண முடியும். மக்களின் அன்றாட வாழ்க்கையில் அது ஜீவனுடன் இல்லை. ஆனால் இந்தியக் கலாசாரம் முன் இருந்தபடியே இருப்பது பெருமைப் படவேண்டிய விஷயம். இதுவே இந்து மதத்தின் பழமைக்கும் சிறப்பிற்கும் முதல் எடுத்துக்காட்டாகும்.

வேதங்கள் இயற்கையை வழிபடக்கூடிய ஒரு முறையைக் கொண்டதாகும். பொதுவாகப் பார்க்குமிடத்து வேத மந்திரங்களனைத்தும் உலகில் வாழ்கின்ற அனைத்து மக்களின் நலனைக் கருதியே இயற்கை தெய்வங்களைத் துதிக்கின்றன. இயற்கை தெய்வமான மழை தெய்வம் இந்திரன், அக்னி, இவர்கட்குத் தான் முக்யத்வம் கொடுக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் தான்சிவன்விஷ்ணு முதலியோர்கட்கு முக்யத்வம் ஏற்பட்டது.

தத்துவங்களைப்பற்றி வேதத்தின் பகுதியாகக் கருதப்படும் உபநிடதங்கள் பேசுகின்றன. இவைகள் இயற்கை சக்திகளை விட்டு ஜீவாத்மா பரமாத்மா பற்றிய உண்மைகளை விளக்குகின்றன. உபநிடதங்கள் கதைகள் மூலமாக பரமாத்ம தத்துவத்தை விளக்குகின்றன. கடோபநிடதத்திலுள்ள நசி கேதா-யமன் இருவருடைய உரையாடல்களின் மூலம் ஜீவாத்ம-பரமாத்ம தத்துவங்கள் வெகு அழகாகத் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

சைவ வைணவ சமயங்கள் ஆராய்ந்து முடிவுக்கு வரக்கூடிய பொருள் ஒன்று தான். அதை சைவம் சிவன் என்று பேசுகிறது. வைணவம் விஷ்ணு என்று பேசுகிறது. துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் இம் மூன்றுக்கும் அடிப்படை

விஷயம் ஒன்றுதான். அணுகும் முறைகளில் தான் வேறுபாடு. சைவத்தில் பஞ்சாக்ஷரத்தைச் சிவ மந்திரமாக மேற்கொண்டால், வைணவத்தில் அஷ்டாக்ஷரத்தை வைத்துக் கொண்டார்கள். சைவத்தில் சிவத்தையின்றி தனியே சக்தி என்பது இல்லை. அங்ஙனமே வைணவத்தில் லக்ஷ்மியின்றி விஷ்ணு வில்லை. பிரகிருதி, புருஷன், பஞ்சபூதங்கள், தன்மாத்திரைகள் போன்ற தத்துவங்களும் அநேகமாக ஒன்றே.

சமயாசாரியர்களும், நால்வரும், நாயன்மார்களும் வேதங்களிலும் உபநிடதங்களிலும் கூறப்பட்ட தத்துவங்களை எளிய தமிழில் பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய தேவாரம் திருமுறைகள், திருவாய் மொழி மூலம் பரப்பினர்கள். இவர்கள் தாம் பெற்ற ஆத்மானுபவத்தை இறையனுபவத்தை நல்லாசானக இருந்து பரப்பினர்கள்.

நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் நமது இந்து சமயம் எவ்வளவு வளர்ந்தது? நமது பண்பாடு எவ்வளவு பெருகியது ? மக்கள் எங்ஙனம் உயர்ந்தார்கள் ? என்பதை அறிய வேண்டும்.

களப்பிரர்களாட்சியில் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட சமயச்சீர்கேடு காரைக்காலம்மையார், ஞான சம்பந்தர் போன்றவர்களால் சீர்திருத்தப்பட்டது.

பல்லவர்காலத்தில் களப்பிரர்கள் போன்றவர்களால் ஏற்பட்ட ஆபத்துக்கள் அப்பர் போன்றவர்களால் களையப்பட்டன.

குறிப்பாகத் திருஞான சம்பந்தர் பல கோயில்களுக்குச் சென்று அங்குள்ள தெய்வங்களைப் புகழ்ந்து பாடினர். மக்களைக் கோவில்களுக்குத் திருப்பினர். ஆகவே புதியதாகப் பல கோவில்கள் எழுந்தன. அக்கோவில்களைக் கட்டியதால் சிற்பக் கலை வளர்ந்தது. அது மட்டுமல்லாமல் கோவில்களனைத்துமே ஜாதி இனவேறுபாடற்ற சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைக்கப் பட்டன. முதலாவதாகச் சிற்பிகள் வளர்ந்தார்கள். பலவகைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றார்கள், இசை வல்லுனர்கள், நாட்டியமாடுபவர்கள், நடிகர்கள், பாண்டம் செய்யும் குயவர்கள், நிரந்தரப் பணிகளைப் பெற்றூர்கள். பூசகர்கள், பரிசாரகர்கள், பூக்கட்டுபவர், தையற்காரர்கள் இப்படிப் பல்வேறு மக்களும் அக்கோவில்களால் நன்மையடைந்தார்கள்.

நாயன்மார்களில் சிலரும் ஆழ்வார்களில் திருப்பாணுழ்வார் போன்றவர்களும் தாழ்ந்த வகுப்பில் தோன்றியவர்களே. ஆயினும் அவர்களையெல்லாம் கோவில்களில் பிரதிஷ்டை செய்து வணங்கி வருகிறேம்.

ஆகவே அக்காலத்தில் ஞானத்திற்கு முக்கிய இடமளிக்கப்பட்டது. ஜாதிகள் அங்கே குறுக்கே தடையாக இல்லை.

வைணவ சமயத்தில் முக்யஸ்தரான இராமானுஜரைப் போல சமதர்மவாதியை எங்கும் காண முடியாது. அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் பல உண்மைகள் விளங்கும்.

ஆகவே மிகப் பழமையான இந்துமதம் இன்று வரை எவ்விதக் குறைகளுமின்றி சைவ வைணவ சமயப்பிரசாரகர்களாலும், மிகப்பழமையான கோவில்களாலும், ஆசார அனுஷ்டானங்களாலும், விசாலமான சமதர்ம நோக்கத்தாலும் சீரும் சிறப்பும் பெற்று வருகின்றது

முக்கியமாக கவனத்திற்கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. அதாவது காலம் என்பது தேங்கி நிற்பதல்ல. மாறிக் கொண்டேயிருக்கிறது. அதனுல் நாட்டிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. மாறுதல் கூடவே கூடாது என்போர் சிலர் இருக்கின்றனர். ஆனுல் அவ்விதம் இருப்பது சாத்யமில்லை. மாறுதலே வாழ்க்கையின் நியதி. ஆகையால் பழமைக்குப் புது உருவம் கொடுப்பதும் அவசியம்.

பலநூற்றுண்டுகளாக அனுஷ்டானத்தில் இருந்து வரும் நம் இந்து மதத்தில் வேற்றுமைக் கருத்துக்கள் வந்து புகுந்து விட்டன. இனி ஒற்றுமை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும். பிறர் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பது சிறப்பான அம்சமாகும்.

உதாரணமாக சிவன் கோவில்களில் விஷ்ணுவையும், விஷ்ணு கோவில்களில் சிவனையும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

இந்துமதத்தின் பல உயரிய இலட்சியங்களும் கோட்பாடுகளும் அனைத்து மக்களும் எளிதாகப் புரிந்து கொள்ளும் பாங்கில் அமையாததுதான் ஒரு குறைபாடாகத் தெரிகிறது. இக்குறையைப் போக்க, காலத்திற்கேற்ப இந்து மதத்தின் அரிய, உயரிய கோட்பாடுகளை இனிய எளிய தமிழில் அச்சிட்டு, மலிவு விலையில் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும்படி செய்யலாம் என்கின்ற என்கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத்தள்

வைத்திய கலாநிதி இந்திரா சிவயோகம்

பர்வத ராஜனின் புத்திரியாகி, பூரணியாகி, புரந்தரியாகி, ஆயிரம் திருநாமங்களுக்கு உரியவளாகி, கன்னியாகி, அந்நிலேயிலும் அகிலாண்ட கோடியை ஈன்ற அன்னேயாகி, எக்கணத்திலும் 'அருள்பாலித்துக் கொண்டே இருக்கின்ருள் சக்தி.

''சிவப்'' பொருளின் ''அருளே'' சக்தி வடிவமாகியது. அரனே என்ன தோற்றத்தில் கற்பனே செய்தாலும் அதற்கு அமைந்த முறையில் சக்தியும் மாறுகின்ருள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பெண் அம்சத்தின் மென்குணங்களுடன் வீரம் துலங்கவும் காட்சியளிக்கின்ருள். ஒவ்வொரு தோற்றத்திற்கேற்ப சக்தியின் திருவுருவங்கள் கரங்களின் எண்ணிக்கையிலும் தாங்கிய ஆயுதங்களிலும் வேறுபடுகின்றன.

லாவண்யமிக்கதும், ஒளிப்பிழம்பாகியதுமான தோற்றம் திரிபுரசுந்தரியாகிய எழில் தோற்றம்.

''அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தரவல்லி'' என்றும்

''வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லே'' என்றும்

சக்தி உபாசகரான அபிராமிப்பட்டர், ஆதிசங்கரத் தத்துவங்களேத் தழுவி எழுதியுள்ளார்.

அம்பிகையே எழுதாமறையாகி, ஆதி அந்தயற்ற வேதங்களின் உருவத்தோற்றமாகி நிற்கின்ருள் என்பது ஆதிசங்கரரின் கொள்கை. ''அகில அண்டமும் நின் ஒளியாக நின்ற ஒளிர்த் திருமேனியை, உள்ளுந்தோறுங், களியாகி அந்தக்கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு''

அப்பேர்ப்பட்ட ஒளித்திருமேனியைத் தியானிக்குந்தோறும், அதைப்பார்த்த கண்கள் ஆனந்த வெள்ளக்களிகூர்வனவாகி பெருகும் என்ற அனுபவத்தை எடுத்து அபிராமிப்பட்டர் சொல்கின்ருர்.

தேவியின் திருவுருவம் சாத்திரப்பிரகாரம் இயந்திரங்கள் மீதோ சக்கரங்கள் மீதோ அமைக்கப்படுகின்றன. இயந்திரங்கள் ஆகியவை பல தத்துவங்களே உள்ளடக்கி வரையப்பட்ட கேத்திர கணக்கியல் ரகத்தில் அமைந்த ஒரு சக்தி. (Cosmic Force.)

அதற்கேற்ப அம்பிகையின் பாதாரவிந்தங்களிலேயே அருள் அதிகம் உண்டு, என பதாம்புயங்களுக்கே வணக்கம் செலுத்தப்படுகின்றது.

அதற்கேற்ப அண்ணலின் பாதாரவிந்தங்களேத் தெள்ளு தமிழில் கல்மனமும் நெக்கி நெக்கி உருகுமாறு மணிவாசகப் பெருந்தகை மீண்டும் மீண்டும் ''தாள்களேயே'' குறிப்பிடுகின்ருர்.

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகங்கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநத் தேவன் அடி போற்றி''

என்று அடுத்தடுத்து வார்த்தைகளில் மாதேவனுடைய திருவடிக் கமலங்களேயே சிந்தையிலடக்கி வாதவூரர வருணிக்கிருர் சிவபுராணத்தில். திருவெம்பாவையில்,

''அண்ணுமலேயான் அடிக்கமலம்'' என்றும்,
''போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்.
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்'' என்றும்


சிவப்பரம்பொருளின் அருமை பெருமையை எடுத்துக் காட்டுகிருர். திருவண்ணுமலேயின் ஒளிப் பிழம்பாகிய காலே பிரம விஷ்ணுக்களே அடிமுடி தேடிக் காணுது தவித்தார்கள்.

அந்தகைய எம்பிரானின் கருணைகடாட்சத்தைப் பெற்றவர்களுக்கு அந்த ஆனந்தத்தில் திளேத்திருப்பவர்களுக்கும் அந்த அனுபவம் தனிப்பட்டது. வேத சாஸ்திரப் புராணங்களே வருடுவதால் சிவந்த, அழகிய பாதாரவிந்தங்களேத் தொழுது நம் காணிக்கையைத செலுத்துவோமாக.

ஈச னேஎன் எம்மானே
    எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன்
    றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு
    நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே
    செய்வ தொன்றும் அறியேனே.

— திருவாசகம்

Revel in luxury and unravel the South





TTC takes you all round Tamil Nadu (Meenakshi Temple—Madurai), Andhra Pradesh (Tirupathi), Pondicherry (Auroville), Karnataka (Garden City—Brindavan Gardens), and Kerala (Guruvayur Temple).

The beauty of the South which abounds with greenery and its rich cultural heritage can be enjoyed; courtesy—


Thiruvalluvar Transport Corporation

SPECIAL FEATURES:

Luxury Super Deluxe coaches providing taped music and well cushioned reclining seats with foot-rests.

We also have Air-conditioned buses equipped with closed circuit T. V. reclining seats and taped music.


Advance booking facilities
Cloak and resting rooms,
Day & Night service.



The Public Relations Officer
Thiruvalluvar Transport Corporation Limited
(An Undertaking of the Govt of Tamilnadu)
Thiruvalluvar House, MADRAS-600 002
PHONE: 846351 Extn 28

DIPR/Sobhagya

From textile trade and export of textile machinery and engineering equipment...



Today ELTEEYEE offers turn-key projects for composite textile mills, with optimum mill economics.

Founded on 1st April 1968. In just 14 years LTE have expanded and diversified, earning sizable foreign exchange for the country. Success which is perhaps due to a blend of traditional values, a modern outlook and professional skills. LTE have handled consultancy work on turn-key and joint venture basis both in India and abroad. To name a few—

Asian Cotton Mills Ltd., Sri Lanka

Chempaka Negri Lakshmi Textiles Sdn Bhd., Malaysia

National Textile Corpn., Tanzania (under execution)

Sitaram Textiles Ltd., India

Adilabad Cotton Growers' Co-op Spg Mills Ltd., India

Pasupati Spinning & Weaving Mills Ltd., India


Terry Towel Project, Tanzania

A 7 year contract for management of Pugoda Mills, Sri Lanka

Best wishes from LTE to the delegates to the World Hindu Conference, Sri Lanka.

Lakshmi Textile Exporters Private Limited
341, Avanashi Road, Coimbatore 641 037.
Phone: 24051—52, Telex 0855—380.

FDS LTE 3193 R



DONORS

★

THIRUVAVADUTHURAI ADEENAM MUTT	Rs	10,000	00
SAKTHI SUGARS LTD.		10,000	00
M/s. NALLI CHINNASAMY CHETTY, Madras-17.		6,000	00
DHARMAPURAM ADHEENAM, Mayuram.		5,001	00
Shri SIVAJI GANESAN, Madras		5,000	00
Shri K. BALAJI,Madras.		5,000	00
AIYARI DOLIA ADVOCATES, Madras-104.		3,500	00
M/s. GAJALAKSHMI ENTERPRISES, Coimbatore		2,000	00
Shri G. RAMASAMY, Advocate, Madras.		1,500	00
SOUTHERN AUTOMATIC INDS. PVT LTD, Madras-32		1,000	00
FOUNDATION GARMENTS PRIVATE LTD., Madras-32.		1,000	00
STANDARD PENSILS PRIVATE LTD., Madras-32.		500	00
OVERSEAS FILM TRADERS, Madras-28.		500	00

அகில உலக இந்து மாநாடு — 1982

குழு

தலைவர்

P. மருதைப் பிள்ளை

துணைத்தலைவர் & அமைப்பாளர்

M. ரெங்கசுவாமி

உறுப்பினர்கள்

N. மகாலிங்கம்

K. ஈஸ்வரன்

P. கோவிந்தசாமி

M. சரவணன்

THANKS TO....

Contributors

Advertisers

The media

The Asian Printers

and

Shri S. Cunjithapatham
Shri N. R. Murugavel
Smt. Parasakthy Sundharalingam
Shri M. V. Ranganathan
Dr. S. V. Subramanian

} **for the production of this Souvenir**

6. To bring about greater harmony among the various sects of Hinduism and also to bring about better understanding between Hinduism and other great Religions of the World.
7. To bring about a scientific understanding of the practice of Meditation and Yoga in Hindu Spiritual Development.
8. To emphasise the development, achievements and distinctive features of Hinduism prevailing in Sri Lanka.
9. To explore means of establishing an international Hindu Centre in Sri Lanka for the promotion of Hinduism through advanced study research publication computerisation and dissemination of information on the state of Hinduism in the World.

IMPLEMENTATION

The objectives of the Conference are to be achieved by :

1. Inviting Religious and State Dignitories, Scholars and delegates from various parts of the world to participate and deliberate.
2. Inviting Research Papers on special topics or on the state of Hinduism and distinctive features prevailing in respective countries.
3. Inviting articles to suit the occasion for the publication of a Souvenir.
4. Discussions and Seminars.
5. Interpreting Hindu rituals in the accepted and prescribed forms in the performance of Pujas, Yagas,Yagnas etc
6. Demonstration of Veda Chanting and "Pannisai" (Devotional Hymns)
7. Demonstration lectures on Meditation and Yoga.
8. Cultural programmes on Music, Dance, Drama, etc. based on Hinduism.
9. Exhibition pertaining to various aspects of Hinduism. viz, Sculpture, painting etc.
10. Collecting details of Hindu temples and Institutions in Sri Lanka and presenting them at the Conference
11. Collecting the Hindu Religious works produced by Sri Lanka authors and holding an exhibition.
12. Telecasting important festivals in popular temples in Sri Lanka and sponsoring short documentary films to depict important rituals and ceremonies in Hindu Society and interpreting their symbolism.